# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 31 | கதிர் 360 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 05, ஞாயிற்றுக்கிழமை 20.11.2016


## புதிய அரசமைப்பு விவாதம் ஜன. 9 இல்

கொழும்பு, நவ. 20
அரசமைப்புச் சபையின் அடுத்த அமர்வு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற வுள்ளது. இதை யடுத்து, ஜனவரி 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் புதிய அரச மைப்பு குறித்து நாடாளு மன்றத்தில் விவாதம் இடம் பெற வுள்ளது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரி வித்தார்.
அரசமைப்புச் சபை நியமித்த வழிநடத்தல் குழுவினால் நிய மிக்கப்பட்ட ஆறு உபகுழுக்க ளின் அறிக்கை களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க >> 53

## மாவீரர் வாரம் நாளை ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ. 20
தமிழீழ இலட்சியத்துக்காகப் போராடி களமாடி, வீரச்சாவடைந்த வீர மறவர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளது. கடந்த காலங்களைப் போலல் லாது தமிழர் தாயகப் >> 50

## தமிழ்க் கலாசாரம் மிக்க கல் வீடுகளே வேண்டும்

ஜனாதிபதியிடம் வலியுறுத்தியது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 20
மக்களுக்குப் பொருத்தமற்ற பொருத்து வீடுகள் கட்டுவதை விடுத்து, >> 53



## தேசிய ஒற்றுமையை சீர்குலைப்போர் மீது இனி சட்டம் பாயும்

நாடாளுமன்றில் பிரதமர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 20
நாட்டின் தேசிய ஒற்றுமையைச் சீர் குலைக்க எவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்று நேற்றுச் சபையில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, அவ்வாறான முயற்சி >> 50

## மத்தி- மாகாணம் இடையிலான
# ஒருங்கியை நிரல் அதிகாரங்களை நீக்கப் பரிந்துரை

கொழும்பு, நவம்பர் 20
மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மாகாணப் பொலிஸை நெறிப்படுத்த சுயாதீன மாகாணப் பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்படவேண்டும். மத்தி கோரும் காணிகளை மாகாணம் வழங்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் காணி அதிகாரங்கள் முழுமையாக மாகாணங் களிடம் ஒப்படைக்கப்படவேண்டும், மாகாண ஆளுநரின் அதி காரங்கள் கிட்டத்தட்ட முழுவதுமாகக் குறைக்கப்படவேண்டும், >> 51

## உப குழு அறிக்கைகள் பற்றி கலந்துரையாடித் தீர்மானம்

பிரதமர் ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20
உப குழுக்களின் அறிக்கைகளில் உள்ள சகலவிடயங்களும் அரசமைப்பில் உள்ள டக்கப்படாது. இவற்றின் அடிப்ப டையிலான பின்புலத்துடன் விடயங் களைக் கலந்துரையாடியே வழிநடத்தல் குழுவின் அறிக்கையைத் >> 51

## இந்திய மீனவர் 11 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற் பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் இந்திய மீனவர் கள் 11 பேர் நேற்றுக் கடற்படையினரால் கைது செய்யப்பட் டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது.
இராமேஸ்வரம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கப் புறப் பட்ட படகுகளில் இரு படகு >> 50

## ஜனாதிபதி, பிரதமருடன் கூட்டமைப்பு நேற்று பேச்சு

புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 20
ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோரைச் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முக்கிய பேச்சு நடத்தினர். எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் தமிழ் அரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பி னர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து >> 51

## புதிய அரசமைப்பு மீது பொது வாக்கெடுப்பு அவசியம்

அனைத்துக் கட்சிகளும் கூட்டாக வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 20
புதிய அரசமைப்பை நாடாளுமன் றத்தில் மூன்றிலிரண்டு பெரும் பான்மையுடன், பொது >> 50

## ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரலாம்

என்கிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

யாழ்ப்பாணம், நவ. 20
தேசிய அரசு ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப் பதற்கு இணங்கியுள்ளதாக, அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் >> 51

## வடக்கு மாகாண பாடசாலைகள் ஜனவரியிலிருந்து 7.30 க்கு ஆரம்பம்

எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் வடக்கி லுள்ள அரச, தனி யார் பாடசா லை கள் காலை 7.30 மணிக்கு ஆரம் பித்துப் பிற்பகல் 1.30 மணிக்கு நிறை வடையும்.
இதற்கான சுற்ற றிக்கை வடக்குமாகா ணக்கல்வி அமைச் சினால் அனுப்பப் பட்டுள்ளது.
(த-4)

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதனால் பிரச்சினை

கூறுகிறார் தினேஸ் குணவர்த்தன

யாழ்ப்பாணம், நவ. 20
அதிகாரத்தை ஒழிக்கும்போது, ஜனாதி பதிக்குக் காணப்படும் அதிகாரங் களுக்கு என்ன நடைபெறும்? >> 50

## இறுதித் தருணத்தில் உரையை திடீரென தவிர்த்தார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 20
நாடாமன்றில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி அலுவலகத்துக்கான செல வினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்ற நேற்றைய நாள் முழுவதும் சபையிலிருந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இறுதிச் சந்தர்ப் >> 51

## தமிழர்களும், முஸ்லிம்களும் கள்ளத்தோணியில் வந்தோர்

உறுமுகிறார் ஞானசார தேரர்

யாழ்ப்பாணம், நவ. 20
சிங்கள பௌத்தர்கள் எதிர்நோக் கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணாவிட்டால் நாட்டில் மோசமான வன்முறைகள் வெடிக்கும். தமி ழர்களும், முஸ்லிம்களும் இந்தி யாவிலிருந்து கள்ளத் தோணிக ளில் வந்தவர்களே. >> 51




அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...

24 கெரட் இற்கு ரூ.36,000

22 கெரட் இற்கு ரூ.33,000

011 5 411 411

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411

ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை

SDB வங்கி



## மகிந்த சீனா பயணிக்க அரசு ஏற்பாடுகள்

### பிரதமர் ரணில் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் வேண்டுகோளுக்கு அமைவாக, அவரது சீனப் பயணத்துக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சீன அரசின் அழைப்பில், மகிந்த ராஜபக்ச எதிர்வரும் 23 ஆம் திகதி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஒரு வார காலப் பயணமாகச் சீனா செல்லும் அவர், டிசெம்பர் முதலாம் திகதிவரை பீஜிங்கில் தங்கியிருப்பார். இதன்போது அவர் சீன அரசின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

சீன அரசின் அழைப்பில் இடம்பெறும் பயணம் என்பதால், முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் தமது பயணத்துக்கான வசதிகள், ஏற்பாடுகளைச் செய்து தருமாறு, பிரதமரிடம் மகிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையில், மகிந்த ராஜபக்சவின் சீனப் பயணத்துக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அயலுறவுத்துறை அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (த-5)

# அரிய வகை நோயால் பீடிக்கப்பட்ட சிசுவுக்கு சத்திர சிகிச்சை வெற்றி

### யாழ். போதனா வைத்தியசாலையின் முதல் முயற்சி

4 ஆயிரம் குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு ஏற்படும் அரிய வகை (Congenital Diaphragmatic Hernia) நோய்க்கு யாழ். போதனா வைத்தியசாலை யில் வெற்றிகரமாகச் சிகிச்சையளிக்கப்பட்டது. இந்த நோய்க்குச் சிகிச்சையளிக்கப் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி இதுவாகும்.



யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 3 ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. சரியான காலத்தில், சரியான நிறையுடன் பிறந்த இந்தக் குழந்தையின் நிலை படிப்படியாக மோசமடைந்தது. குழந்தை வைத்திய நிபுணர் சி. ஜெயபாலன் தலைமையிலான குழுவினர் குழந்தைக்கு அதிதீவிர சிகிச்சையை மேற்கொண்டனர். குழந்தை செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டது. எக்ஸ்-கதிர் படத்தின் உதவியுடன் குழந்தையின் இடது பிரிமென் தகடு வளர்ச்சி குன்றிக் காணப்பட்டதும், குடலின் ஒரு பகுதி இடது சுவாச அறையினுள் ஊடுருவி இருப்பதும் மருத்துவக் குழுவால் கண்டறியப்பட்டது.

குழந்தைக்குச் செயற்கைச் சுவாசம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. மறுநாள் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் மத்துவ கெட்டியாராச்சி அறுவை சிகிச்சையை மேற்கொண்டார். அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 16 நாள்களாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தை தற்போது நல்ல ஆரோக்கியமான நிலையில் உள்ளது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

"4 ஆயிரம் குழந்தைகளில் ஒரு குழந்தைக்குத்தான் இந்த அரிய வகை நோய் காணப்படுகின்றது. பிறந்த உடன் சிகிச்சை மேற்கொண்டால் குழந்தையைப் பாதுகாக்க முடியும். ஆரம்பத்தில் யாழ். போதான வைத்தியசாலையில் இந்த நோய் இனங்காணப்படும் சந்தர்ப்பங்களில் கொழும்புக்கு அனுப்பப்பட்டே சிகிச்சை வழங்கப்பட்டது. தற்போது முதல் தடவையாக யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது"- என்று குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவர் சி. ஜெயபாலன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் புத்தூர், கலைமதி வீதியில் வாழ்ந்து வருகின்றோம். திருமணம் நடந்து 10 வருடமாக குழந்தைகள் இல்லாமல் நான்கு வருடங்களுக்கு முன் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தற்போது பெண் குழந்தை பிறந்தது. கூலித் தொழிலை நம்பிக் குடும்பத்தை நடத்தும் நாங்கள் கொழும்பு சென்று வரும் செலவை நினைத்து பார்க்கவே இயலாமல் இருந்தது. யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையால் எமது குழந்தை ஆபத்தில் இருந்து மீண்டது. நாங்கள் மிகவும் சந்தோசமாகவுள்ளோம். மருத்துவர்களுக்கும் நன்றியை தெரிவிக்கின்றோம்'' என்று குழந்தையின் பெற்றோர் தெரிவித்தனர். (ற-7)

## இராணுவச் சூழ்ச்சி ஏற்பட இடமுண்டு

### மகிந்த ஆதரவு அணி எச்சரிக்கை

எமது உரிமைகள் மறுக்கப்பட்டு ஜனநாயகம் பேணப்படாவிட்டால், இராணுவச் சூழ்ச்சி ஏற்படுவதற்கு இடமுள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன சபையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

தினேஷ் குணவர்தன உரையாற்றிக் கொண்டிருந்த போது ஆளுந் தரப்பினர் இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இதனால், அதிருப்தியடைந்த தினேஷ், பொது எதிரணியினராகிய எமது உரிமைகள் நாடாளுமன்றத்தில் மறுக்கப்படுகின்றன. எமக்குப் பேசுவதற்குக் கூட உரிய நேரம் வழங்கப்படுவதில்லை. எமக்குரிய சிறப்புரிமைகள் கிடைப்பதில்லை. ஜனாதிபதியும் இப்போது இங்குள்ளார். அவர் உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டும். இங்கு பேசிய அமைச்சர் விஜித்விஜிதமுனிசொய்ஸா, பண்டாரநாயக்கவைக் கொலை செய்தவர்கள் சுதந்திரக் கட்சியினர் என்று கூறினார். நாம் அவ்வாறு செய்யப் போவதில்லை. எமது உரிமைகள் தொடந்தும் மறுக்கப்படுமானால், இராணுவச் சூழ்ச்சிக்கான அச்சுறுத்தலொன்றை எதிர்கொள்ள நேரிடும். நிலமையைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பார்த்துக் கூறினார். இவரின் இந்த அறிவிப்பால் கொதித்தெழுந்த அரச தரப்பினர், கூச்சலிட்டதுடன், எதிராகக் கோசமிட்டனர். இதனால் சபைக்குள் சிறிது நேரம் சர்ச்சை ஏற்பட்டது. (த-4)

## இதழியல் டிப்ளோமா மாணவருக்குச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இதழியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான சான்றிதழ்கள் நேற்று வழங்கப்பட்டன. மு.ப. 10.30 மணிக்கு யாழ்.நகர் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள ஊடக வளங்கள் பயிற்சி மைய மண்டபத்தில் பயிற்சி மையப் பணிப்பாளர் தே.தேவானந்த் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.



நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி க. சுதாகரும் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினர். இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த ஐந்தாம் மற்றும் ஆறாம் அணி முழு நேர மாணவர்கள் 15 பேர் மற்றும் மூன்றாம் அணி பகுதி நேர மாணவர்கள் இருவர் உட்பட தொத்தம் 17 பேர் இதழியல் டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். (ற-21)

## மாணவர்களிடம் பரிசுகள் பெறலாகாது ஆசிரியர்கள்

### கல்வி அமைச்சர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 20

பாடசாலை ஆசிரியர்களுக்கு பரிசில்களை வழங்குவதற்காக மாணவர்கள் நிதி சேகரிப்பதைத் தடுப்பதற்காக புதிய சுற்றறிக்கை வெளியிட இருப்பதாகக் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். அத்துடன் பாடசாலை ஆசிரியர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாணவர்களிடமிருந்து பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடாது எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

குளியாப்பிட்டிய, நக்காவத்தை தேசிய பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

பாடசாலை ஆசிரியர்களுக்கு பரிசில்கள் வழங்க நிதி சேகரிப்பது இலவசக் கல்விக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது. பாடசாலைக்குள் மாணவர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பெற்றோர்களிடம் இருந்து கிடைத்த கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்தன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றார். (த-5)

## 13 ஊடகவியலாளர்கள் மகிந்த ஆட்சியில் கொலை

### அவர்களில் 10 பேர் தமிழர்கள்

கடந்த 9 வருடங்களில், இலங்கையில் 10 தமிழ் ஊடகவியலாளர்கள் அடங்கலாக 13 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 87 ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க சபையில் தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது, ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பியிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது சாகல ரட்ணாயக்க மேலும் தெரிவித்ததாவது:

2006 ஜனவரி மாதம் தொடக்கம் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலான காலப் பகுதியிலேயே 13 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 87 ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். இந்தக் காலப் பகுதியில், 5 ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன-என்றார். (த-4)

# இன்று பல இடங்களில் மின் தடை

யாழ்ப்பாணம், நவ.20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



யாழ். பிரதேசத்தில் இரும்பு மதவடி, மனோகராச் சந்தி, சக்களாவத்தை, தேவரையாளி, திக்கம், மட்டுவில், கல்வயல், முத்துமாரி அம்மன் கோயிலடி, சரசாலை வடக்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் நாச்சிக்குடா, நாகபடுவான், முழங்காவில், குமுழமுனை, பல்லவ்ராயன் கட்டு, வெள்ளாங்குளம், மூன்றாம் பிட்டி, எஸ்.எல்.எல்.ஐ கணேசபுரம், வெள்ளாங்குளம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652ஆவது படைப்பிரிவு முகாம், 2ஆவது அதிரடிப்படை முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

வவுனியாப் பிரதேசத்தில் நெளுக்குளத்திலிருந்துஇராசேந்திரன்குளம் வரையும், மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து தலை மன்னார் வரை, வங்காலைக் கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத்திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, மன்னார் வைத்திய சாலை, விசேட அதிரடிப்படைமுகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி பம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் கடற்படை முகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிர தேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக காலை 8.30 மணியிலி ருந்து மாலை 5 மணி வரை,

யாழ்.பிரதேசத்தில் திருநெல் வேலி ஒருபகுதி, தலங்காவல், கந்தர்மடச் சந்தி, இலுப்பையடி, பருத்தித்துறை வீதியில் பாரதியார் வீதிச் சந்தியிலிருந்து நாகவிகாரை வரை, அன்னசத்திர வீதி, ஆரிய குளம் சந்தி, மின்சார நிலைய வீதியின் ஒருபகுதி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் முதலாம், 2ஆம், 3ஆம் குறுக்குத் தெருக்கள், புகையிரத நிலையப் பிரதேசம், பலாலி வீதி, ஓ.எல்.ஆர். பிரதேசம், வெலிங்டன் சந்தி, கஸ்தூரியார் வீதி ஒருபகுதி, வெளி வாரிப்பட்டப் பிரிவு , திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, திருநெல்வேலி இலங்கை வங்கி, நொதேர்ண் பிறைவேட் வைத்தியசாலை, பலாலி டம்றோ, அவ்நோர் பிறைவேட் லிமிட்டெட், கிறீன் கிறாஸ் விடுதி, பிகாஸ், ஞானம்ஸ் விடுதி, ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி, என்.எஸ்.ஆர் கட்டடத் தொகுதி, எச். என்.பி. வங்கி, யாழ்.பல்கலை பட்டப்படிப்புகள் பிரிவு, திருநெல்வேலி புறொப்பட்டி டெவலப்பேர்ஸ் லிமிரெட், யாழ். பல்கலைக்கழக ஆண்கள் தங்கு விடுதி, யாழ் பல்கலைக்கழக நான்கு மாடிகளையுடைய தங்கு விடுதி, பீப்பிள் லீசிங், ஸ்ரான்லி வீதி, மொபிட்டல் பிறை வேட் லிமிட்டெட், லிங்கம் கிறீம் கவுஸ், லங்கா ஒறிக்ஸ் லீசிங், யாழ். புகையிரத நிலையம்,சிறிநதியாநகைமாளிகை, கஸ் தூரியார் வீதி ராஜா ரோக்கீஸ் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இதற்கும் மேலதிகமாக வவுனியா கிறிட் உப மின்நிலையத்தில் செயற்படுத்த வேண்டிய திடீர் திருத்த வேலை காரணமாக, வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து கண்டி வீதியூடாக கற்குண்ட மடு வரை, மதவு வைத்த குளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக் குளம், பூந்தோட்டம், குருமன் காடு, வைரவப் புளியங்குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்திவரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம், வரை, நெளுக்குளத்திலிருந்து பெரிய நொச்சிக்குளம் வரை, நேரிய குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வெளிக்குளம், தெற்கிலுப்பைக்குளம், கோவில் குளத்தில் இருந்து சிதம்பரபுரம் வரை, மடுக்கந்தவிலிருந்து துட்டுவாகை வரை, நெடுங் குளம், கருவேலப் புளியங் குளம், மலையாபருத்திக் குளம், மாமடுவவிலிருந்துபதவியா வரை, வவுனியா வைத் தியசாலை, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்று முறிப்பு விமானப் படை முகாம், மண்டரின் காமெண்ட்ஸ், கவ்லூம் காமெண்ட்ஸ் இரட்டைப் பெரிய குளம் இராணுவ முகாம், பூ- ஓயா இராணுவ முகாம், எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, ஓவியா விடுதி, லங்கா அரிசி ஆலை, குளோப் அரிசி ஆலை சி.ஈ.சி கல்லுடைக்கும் ஆலை, மடுக் கந்த தொலைத் தொடர்பு நிலையம், பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக் கொடி கல்லுடைக்கும் ஆலை, குருமன்காடு யு.என். எச்.சி.ஆர், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, சிறீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிகுளம் தொலைத் தொடர்பு கோபுரம், செட்டிகுளம் வைத் தியசாலை, செட்டிகுளம் ப.நோ. கூ.சங்கம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-10)

## வேலை வாய்ப்பு

Airport vacancy loundary (லொண்டறி) கேட்டறிங் கார்கோ (Cargo) போன்ற வேலை வாய்புக்கு 35,000/- - 70,000/- சம்பளத்திற்கு வேலை வாய்ப்பு. உணவு, தங்குமிடம் இலவசம். 15வெற்றிடங்கள் மாத்திரம்.
**072 2231518, 071 9215892**

நிட்டம்புவவில் உள்ள பிரபல மூன்று நிறுவனங்களில் வேலைவாய்ப்பு உண்டு. தங்குமிடம், போக்குவரத்து, உணவு முற்றிலும் இலவசம். நாள் சம்பளம் 1100/- + OT-100 பெற்றுக்கொள்ளலாம். ஒருநாள் சம்பளம் 1600/- வரை பெற்றுக்கொள்ளலாம். வந்த நாளில் இருந்து வேலை செய்யலாம். நாள் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம்.
**077 2610442, 077 5977259, 075 4634810**

எமது பிரசித்தி பெற்ற Sunrich Biscuit (சன்ரிச் பிஸ்கட்) தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு உண்டு. நாள் சம்பளம் 1000/- தொடக்கம் 1500/- வரை. உணவு, தங்குமிடம் இலவசம். வருகை தந்த நாளிலே வேலை வாய்ப்பு. பொதியிடல், களஞ்சியப்படுத்தல் போன்ற பிரிவுகளுக்கு ஆண்/ பெண். வயது 18-60 வரை.
**072 2231516, 0772610442, 071 1475324**

எமது பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளுக்கு உடனடி ஆள்கள் தேவை. நாள் சம்பளம் 1600. நாள் சம்பளம், கிழமை சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம் இலைசம். பொதியீடல், களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு ஆண்/ பெண். வயது 18-60 வரை.
**077 5977259, 072 2467943, 076 6567150**

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 578
சீட்டிழுப்பு திகதி 2016.11.19
நீலம்
15 19 37 46 A
சுப்பர் ஜக்பொட்
ரூ.60,807,040/=
ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2016.11.21 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2819 திகதி 19.11.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
31 35 50 73 U
போனஸ் இல. 14
புதன்கிழமை ஜக்பொட் ரூ.37,095,075/-
23.11.2016 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## பராமரிப்பாளர் தேவை

பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்கிவரும் கருணாலயம் அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்திற்கு 30 தொடக்கம் 45 வயதிற்குட்பட்ட, க.பொ.த.சாதாரண தர கல்வி தகைமை உடைய இல்லத்தில் தங்கியிருந்து பொறுப்பாக பிள்ளைகளை பராமரிக்க கூடிய பெண் பராமரிப்பாளர் உடன் தேவை.
தொடர்புகளுக்கு - 021 222 8490

# VACANCY

COOKS
KITCHEN HELPER
CONCIAGE (FRONT OFFICE HELPER)
WAITERS / TRAINEE WAITERS
HOUSE – KEEPERS
CASHIER (FOOD AND BEVERAGE)

To work for Tilko Jaffna City Hotel, one of the leading star class hotel in the North. Candidate Should have 1 Year experience in a hotel industry.

Excellent carrier prospect and attractive remuneration package
Plaese call - 077 981 7617

(c26564)
(17.19.20)

## வாராந்தம் ரூபா 5000/= நீங்களும் வெல்லலாம்!



நீர் சுத்திகரிப்பில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட Everpure Hi - Tec (Pvt) Ltd நிறுவனத்தினால் கேட்கப்படும் கேள்விக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கீழ்க் காணும் கூப்பனில் நிரப்பி எங்கள் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு முன் கிடைக்கும் வகையில் தபால் மூலமாகவோ அல்லது நேரடியா கவோ அனுப்பி வைக்கவும். தெரிவு செய்யப் படும் அதிஷ்டசாலிக்கு ரூபா 5000/= பெறுமதி யான விலைக்கழிவுக் கூப்பனை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு!

கேள்வி : பின்வருவனவற்றுள் எந்த நுண்ணங்கியின் இருக்கையை உறுதிப்படுத்துவதன் மூலம் உங்கள் கிணற்று நீரில் மலத் தொற்று இருக்கிறது என்பதனை அறிந்துகொள்ள முடியும்.
விடை : 1) ஆபோவைரஸ் 2) ஈ - கொலி 3) அமீபா

சரியான விடை :...............
பெயர் :...............
முகவரி :...............
தொ.பே.இல :...............

100% தூயநீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன்பெற உடன் அழையுங்கள்
**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
#341, K.K.S. Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

SINGER FINANCE

## மோட்டார் சைக்கிளுக்கான குத்தகை வசந்தகாலம்




தொடர்புகளுக்கு:
சுஜந்தன் 077 7 391 449
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## மணமகள் தேவை

யாழ் இந்து 1979 அச்சுவினி பாவம் - 30 7ல் செவ்வாய் தனியார்துறை மணமகனுக்கு மணமகள் தேவை.

**075 039 3610**

## மணமகள்கள் தேவை

★85 இல் பிறந்த 8இல் சூரியனும் செவ்வாயும் 43½ பாவமுடைய MSc இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை

★87 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 44 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★87 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 46¾ பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு டாக்டர், பட்டதாரி மணமகள் தேவை.

★84 இல் பிறந்த Non Rc பகுதியை சேர்ந்த BSc பட்டதாரி மணமகனுக்கு Non Rc மணமகள் தேவை.

★84 இல் பிறந்த Rc வேத பகுதியை சேர்ந்த MBBS டாக்டர் மணமகனுக்கு Rc வேதத்தில் டாக்டர், இஞ்சினியர் மணமகள் தேவை.

★86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20 பாவமுடைய BSc MSc முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி அல்லது A/L படித்த மணமகள் தேவை.

மேலும் சூரியன் செவ்வாய் குற்றமுள்ள குற்றமில்லாத பாவம்கூடிய பாவம் குறைந்த சூரியன் செவ்வாய் ஜாதகங்கள் உள்ளன.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

## வாகன சேவை

அனைத்து விதமான உங்கள் உற்பத்திப் பொருள்களும் யாழ்ப்பாணம் முழுவதற்கும் குறைந்த செலவில் விநியோகம் செய்து தரப்படும். பயணங்கள், விநியோகங்களுக்கான வாகன வசதிகளும் எம்மிடமுண்டு. விமான நிலையத்திற்கான (Airport) பயணங்கள் ரூ 1500 இலிருந்து எம்மிடமுண்டு.

மேலதிக விபரங்களுக்கு: 077 3895 395

## கடைகள் வாடகைக்கு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு
அண்மையில் கடைகள் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கும் ஏற்றது.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

**077 7651826**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை



கையிருப்பு உள்ளவரை
மட்டுமே...
இன்றே முந்துங்கள்!
Free! Key & Odal

SLR 9322

**0777 614 186**
Sri Lanka. 4, IBC, Wellawatte.

## வேலைஆள்கள் தேவை

கொழும்பில் இயங்கும்
பிரபல அலுவலகத்துக்கு
ஆள்கள் தேவை.

தொடர்பு: 077 325 8492

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகர எல்லைக்குள் (5 - 6 Km உள்) மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு சிறிய வாகனம் நிறுத்தக் கூடிய வசதியுடன் வீடு வாடகைக்குத் தேவை.

**076 312 8411**

## தேவை

யாழ் மாவட்டத்தில் Biscuits,Snacks விற்பனை செய்வதற்கு விற்பனை பிரதிநிதி தேவை.
அடிப்படைச் சம்பளம் 20,000/- இற்கு மேல்
கல்வித்தகைமை A/L, முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**075 9314021, 077 1177900**

## வீடு வாடகைக்குண்டு

கந்தர்மடத்தில் யாழ்நகருக்கும் யாழ் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் 3அறைகளும் வாகனத்தரிப்பிடமும் கொண்ட தனிவீடு வாடகைக்குண்டு.
மாத வாடகை ரூபா 30 000/=

தொடர்பு: 075 526 4940


# நீரிழிவு விழிப்புணர்வு பேரணி

கரணவாய், நவ. 20

வடமராட்சி லயன்ஸ் கழகமும் நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகமும் இணைந்த நடத்திய நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுப் பேரணி நேற்று வடமராட்சியில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமாகி மாலிசந்தி ஊடாக நெல்லியடி பஸ் தரிப்பிடத்தை அடைந்தது. அங்கிருந்து நெல்லியடி தடங்கன் புளியடி திருமண மண்டபத்தில் நிறைவடைந்தது. அங்கு விழிப்புணர்வு கருத்தரங்கும் சத்துணவு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

நிகழ்வில் கலந்த கொண்டவர்களுக்கு இலைக்கஞ்சி போன்ற சத்துணவுகள் வழங்கப்பட்டன. யாழ் மாவட்ட லயன்ஸ் கழக ஆளுநர் மருத்துவர் வை. தியாகராசா, கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவசிறி, வடமாகாண சபை உறுப்பினர் சி. அகிலதாஸ் உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-108)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நாளை

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என மாவட்டச் செயலர் எம். வை.எஸ். தேசப்பிரிய தெரிவித்தார். (ற-10)


சட்டென்று சமைப்பதற்கு...

## ஷிப் மெகரல் டின் மீன்




எப்போதும்
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு

M.R GRAFIX - 0777 929911

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

COLOMBO COMMODITIES

☎ 0112 421430 / 0112 421432

இல: 71, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11.

## மணமகள் தேவை

1979 ஆம் ஆண்டு பிறந்த உத்தரம் 2ஆம் பாதம் நிரந்தர வேலையில் உள்ள கனடா பிரஜையான யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மகனுக்கு திருமணம் செய்ய பொருத்தமான பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர்.

sspkumaran11@gmail.com
தொடர்பு: 075 670 9054

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி - பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500M(1/2Km தூரத்திலும் ஆண், பெண் பாடசாலைகள், தபாற்கந்தோர், புகையிரதநிலையம், சந்தை முதலியவற்றிலிருந்து நடந்து செல்லக்கூடிய தூரத்தில் பஸ் வசதியுடனும்) அமைந்துள்ள 6பேரப்புக் காணி விற்பனைக்குண்டு. துண்டங்களாகவோ (வரைபடமுள்ளது) முழுமையாகவோ விரும்பியபடி வாங்க முடியும். உடனே தொடர்பு கொள்ளுங்கள். திருமதி யோகா நாகேந்திரம், கெருடாவில் கந்தசாமி கோயில் அருகில், பருத்தித்துறை வீதி, கெருடாவில், சாவகச்சேரி.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**077 558 1532/ 077 160 1115**

SCHENGEN VISA

## ஐரோப்பாவில் கல்வி
(லட்வியா மற்றும் லுத்வேனியா)

ஐரோப்பாவில் கல்வி கற்று, வேலை பார்த்து சுதந்திரமாக அவ்விடமே நிரந்தர வதிவிடம் பெறுவதற்கான அரியதொரு வாய்ப்பு

தேவையான தகைமைகள்:
- க.பொ.த.சாதாரண தரம்
- க.பொ.த.உயர்தரம்

IELTS அவசியமில்லை

கற்கை நெறிகள்
- Bachelors
- Masters
- PhD

EDUCARE
**0777 166 461, 0777 166 462, 0777 166 463**
33C 1/1,W.A Silva Mawatha, Colombo-06

## பணியாளர் தேவை

**கிளிநொச்சி நகரில் இயங்கும் பிரபல பேக்கரி (White Stone) இற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.**

01. கணக்காளர் (Quick Book 02 வருட அனுபவம்)
02. களஞ்சியக் காப்பாளர்
03. காசாளர்
04. விற்பனையாளர்

**077 313 6262**
Chef. theepan@gmail.com

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்
## நொதன் சென்றல் வைத்தியசாலை திருநெல்வேலி

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடிவயிற்றுநோ, கருச்சிதைவு, மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் IVF,ICSI யும் கொடை முட்டை (doner egg) விந்து நன்கொடை (doner Sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் **திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில்** அளித்து வருகின்றார். இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு: திருமதி ராஜேஸ்வரி
**077 343 9988, 021 221 9988, 021 221 9977, 021 222 2263**

# INVITATION FOR BIDS
# UNIVERSITY OF JAFFNA

## Provision of a Private Security Service for the University of Jaffna - 2017

1. The Chairperson, Procurement Committee of University of Jaffna on behalf of the Vice chancellor, University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for Provision of a Private Security Service for the University of Jaffna.
2. Period of contract shall be 365 days subject to a performance evaluation period of 90 days from the start date.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall possess the valid registration in the Ministry of Defense, Public Security, Law and Order. Business registration and a copy of the valid registration certificate should be attached with the Bid.
4. The Company / Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of 90 security staff in each contract for any Government Department / Corporation / University over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.
5. Interested Bidders may inspect the Bidding documents free of charge and obtain further information from the Senior Assistant Registrar, General Administration Branch, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m to 2.30 p.m. on any working day.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Senior Assistant Registrar, General Administration Branch, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to 07th December, 2016 upon the submission of receipt for the payment of non - refundable Tender fee of **Rs.2000.00** The payment should be made in cash to the Shroff, University of Jaffna.
7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairperson, Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m. on 09th December, 2016 Late Bids or incomplete Bids will be rejected.
8. Bids will be opened soon after closing in the presence of the Bidders or Bidders representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Two hundred thousand (Rs. 200,000.00).
10. Pre- bid meeting will be held at 10.00am on 30th November 2016 in the board room of the University of Jaffna, Thirunelvely.

**The Chairperson / Procurement Committee**
**University of Jaffna, Thirunelvely, Jaffna.**
**17.11.2016**

(C/ 26558) (11,17,21)

## விற்பனைக்குண்டு

நெலுவிலவளையில் 3 மாடி வீடு விற்பனைக்குண்டு. 2012இல் கட்டியது. 13.75 பேர்ச்சஸ் காணி வீதிக்கு 350 மீற்றர். 5 படுக்கையறை, 3 குளியலறை. 58.72 மில்லியன்.

Ravi :- 077 442 3800

## காணி தேவை

திருநெல்வேலிக்கும் ஊரெழுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் தோட்டம் செய்வதற்கு உகந்த வளவுக்காணி குத்தகை அடிப்படையில் தேவை.

077 673 4657

## MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk

## Aparment வாடகைக்கு

கொழும்பு 04 இல் Apartment வாடகைக்கு. 3 படுக்கையறை, 2 குளியலறை, 1218 சதுர அடி Main Room With Toilet 4ஆம் மாடி வாடகைக்குண்டு. 85,000/=

Call Wazeem : 077 413 9123

## தவறிவிட்டது

வெள்ளிக்கிழமை யாழ் நகரப்பகுதியில் பெருந் தொகையான பணம் (5000 ரூபா நோட்டுகள் ஒரு கட்டு) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். பெரிய சன்மானம் வழங்கப்படும்.

077 792 1387

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | |
|---|---|
| நிட்டம்புவ | 033 302 19 19 |
| யாழ்ப்பாணம் | 033 33 40 600 |
| காலி | 033 302 11 11 |
| மாத்தறை | 033 302 12 12 |
| அநுராதபுரம் | 033 302 13 13 |
| நுகேகொட | 033 302 14 14 |
| கம்பஹா | 033 302 15 15 |
| நீர்கொழும்பு | 033 302 16 16 |
| கண்டி | 033 302 17 17 |
| குருநாகல் | 033 302 18 18 |
| கிரிபத்கொட | 077 325 77 67 |
| இரத்தினபுரி | 0333 555 315 |

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations — ICDL — bcs — abe Accredited College — SQA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

03, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

01, January, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

10, December, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

03, December, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**British Way® English Academy**

**Contact** (Jaffna Branch) **: 033 33 40 600**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

# புதியஅரசமைப்புநடைமுறைக்கு நாடாளுமன்றப்பெரும்பான்மை

## அரசிடம் கோருகிறது ஹெல உறுமய

யாழ்ப்பாணம், நவ. 20

முன்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும், ஜே. ஆர்.ஜெயவர்த்தனவும் பொது வாக்கெடுப்பை நடத்தாமல், நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டேபுதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்தினார்கள். இதே போன்று தற்போதும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அந்தக் கட்சியின் தலைவர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக் குறித்துப் பொது வாக்கெடுப்பு நடத்தப்படத் தேவையில்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த ஆதரவுடன் புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படும்.

அரசியல் சார்பு மற்றும் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஏனைய காரணிகளால் பொது வாக்கெடுப்பு மக்களின் கருத்தைப் பிரதிபலிக்காது. பிரிட்டனில் நடத்தப்பட்ட, பிரெக்சிட் கருத்து வாக்கெடுப்பு இதற்கு ஒரு உதாரணம். இந்த வாக்கெடுப்பினால் அரசியல் மற்றும் பொருளாதார தளம்பல் நிலை மற்றும் பிளவுகள் போன்ற தேவையற்ற பிரச்சினைகள் பிரிட்டனில் ஏற்பட்டன. நாம் பொது வாக்கெடுப்பை நடத்தினாலும் அதேபோன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது பிரிவினை அரசியல் பரப்புரைக்கு இதனைப் பயன்படுத்தக் கூடும். மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது ஊழல் கூட்டாளிகள் இதனைத் தமது வங்குரோத்துப் பரப்புரைக்காகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இப்போது எல்லாக் கட்சிகளுமே புதிய அரசமைப்புத் தேவை என்று இணங்கியுள்ளன. எல்லாக் கட்சிகளும் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளன. எனவே அனைவரதும் ஒருமித்த ஆதரவுடன் இதனை நிறைவேற்ற வேண்டும்- என்றார். (த-5)

ஈர விழிகளுடன்........



10 ஆம் ஆண்டு நினைவில்

உயிராகி உலகில் 23.05.1929

துயராகி நினைவில் 20.11.2006

அமரர் வைத்தியர் லயன்


**பேதுருபிலிப்ஸ் (J.P)**

அரும்புகளாய் நாமிருக்க ஆரோக்கிய மனையமைத்து
இருக்கையில் அமர்ந்திராது உருவாக்கி வைத்தவரே
பெருமையுறு கல்விதனை பொக்கிசமாய் கற்க வைத்து
பாரெங்கும் கால் பதிக்க பார்த்திருந்த ஐயாவே !
குருவுமாய் செய்தபணி கரும்பாக வாழ்வினிக்க
கணமறிந்த கைவிளக்கே கோபுரத்து ஒளியுமானாய்
ஒரு பிடி ஔடதமாய் உள்ள வரை விருந்தானாய்
ஊருக்காய் இறைத்த நீர் எமையுயர வைக்குதையா !

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

திரு.திருமதி லியோன் புஸ்பராணி

## 100 ஆவது நினைவு நாள்



அன்னை மடியில் 28.11.1948

ஆண்டவன் அடியில் 13.08.2016


**இராமசுவாமி**

(பெருமாள்)

100 நாள்கள் என்ன ?
100 ஆண்டானாலும் உங்களை மறக்க
முடியாமல் தவிக்கும்

உங்கள்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**இராசையா இராஜேஸ்வரன்** (ராசன்)

(உரிமையாளர் - கருடா தேநீர்ச்சாலை, நவீனசந்தை , யாழ்ப்பாணம்)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் என் நாளும் உயிர் வாழும் ராசண்ணா
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
நீங்கள் கூறிய அன்பு வார்த்தைகள் எம்மை விட்டு என்றென்றும் அகலாது

15.11.2016 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (ஜே/6254)(17.19.20) நவீன சந்தை வர்த்தகர்கள்.

# மனைவியை விட எனக்குக் குறைவு

## ரணிலின் பேச்சால் சபையில் சிரிப்பொலி

கொழும்பு, நவ. 20

தனது மனைவியின் மாதாந்தச் சம்பளத்தை விடத் தனது சம்பளம் குறைவு என்று நேற்றுச் சபையில் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பிரதமர் இவ்வாறு கூறியதால் சபையில் சிரிப்பொலி எழுந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சபையில் இருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட ஏனைய சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்த போதே, தனது இல்லத்தின் நிலைவரம் குறித்து பிரதமர் சபையில் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வடக்கு- கிழக்கிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விமானப் பயண ரிக்கெட்டுக்கள் வழங்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்கள் உள்ளிட்ட 22 அரச நிறுவனங்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டு யோசனை முன்வைத்தார் பிரதமர் ரணில்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு குறைவானது. இது உண்மை. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதை நான் குறிப்பிடுகின்றேன். ஏனைய குடும்பங்களைப் போல எனது வீட்டின் நிலைமையையும் பார்க்கும்போது எனது மனைவியின் மாதாந்தச் சம்பளத்தைவிட எனது சம்பளம் குறைவானதாகும். அந்த நிலைமை இன்று வந்துள்ளது – என்று குறிப்பிட்டார். இதன்போது சபையில் சிரிப்பொலி எழுந்தது.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன வசதிகள் வழங்கப்படவேண்டும். அவர்கள் தமது பிள்ளைகளைப் பார்க்க வேண்டும். வீட்டுக்குச் செல்லவேண்டும். அதனால், அவர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்.

அத்துடன், இதைவிட அவர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கப்படவேண்டும். அவர்களின் நாளாந்தச் செலவுக்கு 2500 ரூபா வழங்கப்பட வேண்டும். அமெரிக்காவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் ஆசனத் தொகுதியில் இருந்தும் நிதி வழங்கப்படுகின்றது. அதேவேளை, இந்தியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விமானப் பயண ரிக்கெட்டுக்கள்கூட வழங்கப்படுகின்றன. இந்நிலையீல், பணிகளை முன்னெடுக்க வடக்கு, கிழக்குக்கு அதை வழங்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் தேர்தல் தொகுதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கவேண்டும் என யோசனையைமுன்வைக்கின்றேன். இதை எதிர்ப்பவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணியாற்றத் தேவையானதைச் செய்யாவிட்டால், நாட்டுக்கு இலாபம் ஏற்படாது. நட்டமே ஏற்படும்– என்றார். (த-4)

# இரணைமடுச் சீரமைப்பு பணிகளில் சிறிய மாற்றம்

கிளிநொச்சி, நவ.20

கிளிநொச்சியில் பெய்துவரும் மழை காரணமாக இரணமடுக் குளத்தின் சீரமைப் பணிகளில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கிளிநொச்சியில் நேற்று அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியது. இதனையடுத்து இரணைமடுக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் தொடர்பாக வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மழை என்பதைக் காரணம் காட்டி இரணைமடுக்குளத்தின் சீரமைப்பு வேலைகளைப் பிற்போட முடியாது. இதுதான் இங்குள்ள பெருமளவான மக்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல உதவுகின்றது. மழைகாலம் என்பதால் நாம் குளத்தின் வெளிப்பாதை, பாலம் என்பவற்றின் பணிக்கு முக்கியத்துவம் வழங்காது குளத்தின் உட்கட்டுமானப் பணிகளை முடிப்பதில் ஆர்வம் காட்டி இருந்தோம். கிளிநொச்சியில் இன்று (நேற்று)அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதனால் குளத்தின் உட்கட்டுமானப் பணிகளைக் குறைத்து பால வேலை, குளத்தின் பாதை வேலைகளில் ஆர்வம் காட்டியுள்ளோம். எவ்வாறாயினும் மழை என்றாலும் கூட நாம் எமது பணிகளைத் திட்டமிட்டு வழமைபோல் செய்து கொண்டுள்ளோம்- என்றார்.

கிளிநொச்சியில் நேற்று இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதியில் 120.8 மில்லி மீற்றர் மழையும், அக்கராயன் குளத்தை அண்டிய பகுதியில் 139.3 மில்லி மீற்றர் மழையும், கரியாலை நாகபடுவான் குளத்தை அண்டிய பகுதியில் 131.7மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளன.

இதனால் குறித்த குளங்களின் நீர்மட்டம் சிறிதளவு உயர்வடைந்துள்ளது. (த-21-35)

# ஐ.நாவின் தாக்கம் இனி இலங்கை மீது குறையும்

## ட்ரம்பின் வருகை காரணம் என்கிறார் மகிந்த

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் இலங்கை மீது ஐ.நா. செலுத்தும் தாக்கம் குறையும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவும் ரஸ்யாவும் இணைந்து செயற்படும்போது அது உலக நாடுகளுக்கு புதிய விடியலாகவும் அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

# வடமாகாண மரநடுகை மாதம்

"புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்."

-தோமஸ்அல்வா எடிசன் (அமெரிக்க அறிவியலாளர்)

கார்த்திகை 01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்"



## போதனா வைத்தியசாலைக்கு பள்ஸ் ஒக்சிமீற்றர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

குழந்தைகள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான பள்ஸ் ஒக்சிமீற்றர் வேல்ஸ் தமிழர் மருத்துவர் அறிஞர் நிறுவனத்தால் யாழ். போதான வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

வேல்ஸ் தமிழர் மருத்துவர் அறிஞர் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான மருத்துவர் வீ. விபுலேந்திரன் யாழ் போதனா வைத்திய சாலை பாணிப்பாளர் மருத்துவர் த. சத்திமூர்த்தி மற்றும் குழந்தை மருத்துவ நிபுணர் மருத்தவர் சி. ஜெயபாலனிடம் நேற்று குறித்த இயந்திரத்தைக் கையளித்தார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வைத்திய சாலைகளுக்கு வேல்ஸ் தமிழர் மருத்துவர் அறிஞர்நிறுவனம்உதவிகளைவழங்கி வருகின்றது. கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னும் இத்தகைய உதவிகளை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு வழங்கியது.

தற்போது ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக பள்ஸ் ஒக்சிமீற்றர் வழங்கப்பட்டது- என்று நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான மருத்துவர் வீ. விபுலேந்திரன் தெரிவித்தார்.

2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பள்ஸ் ஒக்சிமீற்றரை வழங்கிய வேல்ஸ் தமிழர் மருத்துவர் அறிஞர் நிறுவனத்தினருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் எங்களுடைய மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க முடியும் - என்று குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவர் சி. ஜெயபாலன் தெரிவித்தார். (ρ-7)

# உர மானியப் பணத்துக்காக காத்திருக்கும் விவசாயிகள்

தென்மராட்சி, நவ. 20

பயிர்களுக்கு உரமிட இதுவே சரியான தருணம். உர மானியக் கொடுப்பனவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி நெற்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக பெரு மழை பெய்கின்றது. வயல்களில் ஓரளவுநீர் தேங்கியுள்ளது. இப்போது வயல்களுக்கு உரமிடுவது அவசியமாகும். அரசால்அறிவிக்கப்பட்ட உர மானியக் கொடுப்பனவு இன்னமும்கிடைக்கவில்லை. அதை எதிர்பார்த்துள்ளோம். கடந்தகாலங்களில் உரவகைகள் மானிய விலையில் வழங்கப்பட்டன. காலந்தாழ்த்தி வழங்கப்பட்டாலும் வழங்கப்பட்டவுடன் வயல்களுக்கு உரமிடக் கூடியதாக இருந்தன. இந்த முறை கொடுப்பனவே வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டு படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு கமநல சேவைகள் நிலையத்தில் கையளித்து இரு மாதங்களாகின்றன. கடந்த வருடங்களில் நவம்பர் மாத காலப் பகுதியில் இரண்டாம் கட்ட மானிய உரங்கள் வழங்கப்பட்டு விடும். இந்தமுறை இதுவரை தரப்படவில்லை.- என்று அவர்கள் தெரிவித்தனர்.

> "உரத்துக்குப் பதில் பணம் வழங்கும் திட்டத்தில் அதன் விவரங்கள் மாவட்ட உரக் குழு பரிசீலித்த பின்னரே கமநல ஆணையாளரால் தேசிய உரச் செயலக அமைச்சுக்கு அனுப்பப்படும். தற்போது காலபோகச் செய்கை தாமதமடைந்ததால் விவசாயிகளது விவரங்களைத் திரட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள் ளது."

தென்மாராட்சி பிரதேசம் மட்டுமல்ல, யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கும் இன்னமும் உரத்துக்குப் பதிலான பணம் வழங்கப்படவில்லை.

உரத்துக்குப் பதில் பணம் வழங்கும் திட்டத்தில் அதன் விவரங்கள் மாவட்ட உரக் குழு பரிசீலித்த பின்னரே கமநல ஆணையாளரால் தேசிய உரச் செயலக அமைச்சுக்கு அனுப்பப்படும். தற்போது காலபோகச் செய்கை தாமதமடைந்ததால் விவசாயிகளது விவரங்களைத் திரட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

உரத்துக்கு பதிலாக பணம் பெறுவதற்கு விண்ணப்பித்த விவசாயிகளின் விவரங்கள் யாழ். மாவட்ட கமலநல சேவைகள் திணைக்களத்தால் நாளை திங்கட்கிழமை தேசிய உரச் செயலக அமைச்சுக்கு வழங்கப்படவுள்ளது. விரைவில்அனைத்துவிவசாயிகளுக்கும் உரத்துக்குப் பதிலான கொடுப்பனவு அவர்களுடைய வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும். கமநல சேவை நிலையங்களில் உரம் தேவையான அளவில் உள்ளது. பணம் கிடைப்பதற்கு முதல் உரம் தேவை யானவர்கள் கமலநல சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்- என்று கமநலசேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ρ-10-9)

## கதிர் இயந்திரம் கிடைத்தும் பொருத்த முடியா நிலமை

### கொள்வனவில் மோசடி என்ற சந்தேகத்தால்

தெல்லிப்பழை, நவ.20

தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கடந்த ஆண்டின் இறுதியில் நவீன கதிர் இயக்க இயந்திரம் கிடைத்தது. ஆயினும் இதுவரை அதிலிருந்து பயனைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றதுஎன்றுசுட்டிக்காட்டப்படுகின்றது.

தெல்லிப்பழை வைத்திய சாலையின் புற்றுநோய் தடுப்புப் பிரிவுக்கு கதிர் இயக்க இயந்திரம் தேவை என நீண்ட காலமாக கோரப்பட்டிருந்தது. அதற்கான அனுமதி வழங்கப்பட்டு அதைக் கொள்வனவுசெய்வதற்குகொழும்பு அரசு அனுமதி வழங்கியது. கதிர் இயக்க இயந்திரத்தைப் பொருத்துவதற்கான இடவசதி வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டது. இயந்திரம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளபோதும் அதைப் பொருத்துவதற்கு கொழும்பு அரசு தடை விதித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த இயந்திரம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மிக அவசியமானது. அதன் நிமித்தமே அதை அங்கு பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஆயினும் குறித்த இயந்திரத்தின் உண்மைப் பெறுமதிக்கும் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிக்கும் இடையே வித்தியாசம் காணப்படுவதால் அது குறித்த விசாரணை மத்திய சுகாதார அமைச்சால் நடத்தப்படுகின்றது. குறித்த விசாரணை முடிந்து உண்மை கண்டறியப்படும் வரை இயந்திரத்தைப் பொருத்த வேண்டாம் என்று மத்திய சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.- என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். (ρ-101)



# வல்லைவெளியில் மரக் கன்று நடுகை

யாழ்ப்பாணம், நவ.20

மரநடுகை மாதத்தை முன்னிட்டு வடமாகாண விவசாய அமைச்சால் வடமராட்சி, வல்லைவெளியில் நேற்று மரக்கன்றுகள் நடப்பட்டன.

'ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கு ஒரு வரம் பெற' என்ற தொனிப்பொருளில் வடமாகாண விவசாய அமைச்சு மரநடுகை மாதத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன் ஒரு அங்கமாக வல்லைவெளியில் முனியப்பர் ஆலயச் சூழலிலுள்ள சதுப்பு நிலங்களில் மண் குவிக்கப்பட்டு மரங்கள் நடப்பட்டன.

வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கே. தர்மலிங்கம், சி. அகிலதாஸ் மற்றும் கரவெட்டிப்பிரதேச செயலர் சி. சிவசிறி, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராசா உட்பட கமநல திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ρ-108)

## விதை உ.கிழங்கை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் விதை உருளைக் கிழக்கு பெறுவதற்கு பதிவு செய்தவர்கள் அவற்றை விரைவில் பெற்றுச்செல்லுமாறு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

உருளைக்கிழங்குச் செய்கையை மேம்படுத்துவதற்காக 50 வீத மானிய அடிப்படையில் விதை உருளைக் கிழங்கு வழங்கப்படுகின்றது. விவசாயி ஒருவருக்கு கால் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்வதற்கான விதைஉருளைக் கிழங்குகள் வழங்கப்படுகின்றன. சசி மற்றும் ரெட் லசோடா இனங்களைச் சேர்ந்த விதை உருளைக் கிழங்குகள் வழங்கப்படுகின்றன. ரெட் லசோடா இன வகை விதை உருளைக்கிழங்குகள் 126 பயனாளிகளுக்கும், சசி இன வகை விதை உருளைக்கிழங்குகள் 234 பயனாளிகளுக்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. 835 பேருக்கு விதை உருளைக் கிழங்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டது. (ρ-10)

# கெளுத்தி மீனை விழுங்கிய நாரையின் நிலைதமிழருக்கு

## வட மாகாண உறுப்பினர் பசுபதிப்பிள்ளை வர்ணிப்பு

கிளிநொச்சி, நவ.20

கெளுத்து மீனை விழுங்கிய நாரையின் நிலையிலேயே இப்போது தமிழர்கள் இருக்கின்றனர். நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் நேற்று விதைச் சுத்திகரிப்பு நிலையத் திறப்பு விழா நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

பத்து ஆண்டுகள் நடந்த கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தி நல்லாட்சி அரசைக் கொண்டுவந்தோம் என்று எம்மவர்கள் மார்தட்டுகின்றனர். எனினும் நல்லாட்சியால் எமது மக்களுக்கு எந்த நன்மையும் கிட்டவில்லை. நல்லாட்சி அரசில் பௌத்த பிக்கு அரச அதிபரை மிரட்டி தரம்குறைந்த வார்த்தைகளால் ஏசுகின்றார். கிராம அலுவலரை மிரட்டி தரம்குறைந்த வார்த்தைகளால் ஏசுகின்றார். நல்லாட்சி அரசில் இதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கெளுத்து மீனை விழுங்கினால் என்னவாகும்?. அது உள்ளும் போகாது வெளியேயும் வராது. பலவந்தமாக எடுக்க முயன்றால் அது தொண்டையை அறுக்கும். இந்த நிலைதான் இப்போது தமிழர்களுக்கும். நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

நாம் இந்த மண்ணில் வாழ்ந்தவர்கள். இந்த மண்ணில் வாழ்பவர்கள், வாழப் போகின்றவர்கள். நாம் நிமிர்ந்து நிற்க வேண்டும். விடுதலைப் புலிகள் இருந்தபோது நாம் நிமிர்ந்து நின்றோம். வெடி குண்டுகளுக்கு மத்தியிலும் எமது கலை, கலாசாரத்தைக் கட்டிக் காத்து வாழ்ந்தோம். யாழ்ப்பாணத்தில் 40 அல்லது 50 ஏக்கர் விடுவிக்கின்றனர் என்றார். எம்மவர்கள் நாம் கதைத்துச் சாதித்து விட்டோம் என்று பெருமை கொள்கின்றனர். பூநகரியின் கடற்கரையோரம் 2 ஆயிரம் ஏக்கர் காணிகள் கம்பிவேலி அடைத்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் 500 ஏக்கர் காணி கடற்கரையோரத்தில் இருந்து வீதிவரை கம்பிவேலி அடைத்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசின் காலத்தில் மட்டும் கிளிநொச்சியில் 10க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. இங்கு வாழும் நாம் எம்மை நாங் களே காப்பாற்ற வேண்டிய நிலையிலேயே இப்போது இருக்கின்றோம்.- என்றார். (ற-21)



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் சொகுசு பஸ் நேற்றுக்காலை வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகே விபத்துக்குள்ளானது. கடும் மழை பெய்துகொண்டிருந்த சமயம் அதிக வேகத்தில் பயணித்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.(ற-21)

## பலாலி ஆசிரிய கலாசாலை இடம்மாற்றம்

பலாலி ஆசிரிய கலாசாலை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மண்டபத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளது. பலாலி ஆசிரிய கலாசாலை, கோப்பாய் ஆசிரிய கலாசாலை வளாகத்துக்கு இடமாற்றப் படவுள்ளது எனக் கூறப்படுகிறது.

முத்துத்தம்பி வித்தியாலய மண்டபம் மாணவர்களுக்கான தொழிற்துறை பயிற்சிக் கூடமாக மறுசீரமைப்புச் செய்யப்படவிருப்பதால் பலாலி ஆசிரிய கலாசாலை யின் ஆவணங்கள் மற்றும் தளபாடங்களை அங்கிருந்து இடமாற்றம் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு கலாசாலை அதிபர் மற்றும் மூன்று கல்விசாரா சிற்றூழியர்களுடன் பெயரளவில் மட்டும் உள்ளது. பலாலி ஆசிரிய கலாசாலையை அதன் சொந்த இடத்துக்கு இடமாற்றம் செய்து அதன் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கைகூடாத நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கல்விச் செயற்பாடுகள் இன்றி இருக்கும் கலாசாலை கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. (ற-1)

# சேமிப்பின் முக்கியத்துவத்தை மாணவருக்கு உணர்த்துங்கள்

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

சாவகச்சேரி, நவ.20

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சிறு வயது தொடக்கம் வங்கியில் பணம் சேமித்துப் பழக்க வேண்டும். அது அவர்களின் எதிர்காலத்துக்குப் பெரிதும் உதவும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையால் கௌரவிக்கப்பட்டனர். அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு எந்தளவு அக்கறையும் ஆர்வமும் எடுக்கிறீர்களோ அதே போன்று இடைநிலைப் பிரிவுக் கல்வியிலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும். தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 973 மாணவர்களில் 821 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்து 84.39 சதவீதம் பெற்று வடமாகாணத்தில் முதலிடத்தில் தென்மராட்சி கல்வி வலயம் உள்ளது பெற்றோர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியேயாகும். கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்று வெளியான பெறுபேறுகளை எடுக்க உதவிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டதுடன் வலயத்திற்கு ரப் ஒன்றும் வழங்கப்பட்டது.

வாசிப்பு என்பது நிமிடத்திற்கு 45 தொடக்கம் 60 வரை சொற்கள் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டபோதும் எமது மாணவர்கள் இன்னமும் 40 சொற்களை மிகவும் தட்டுத்தடுமாறி வாசிப்பது வேதனையளிக்கிறது. கொரவப்பொத்தானை கல்வி வலயத்தில் ஆரம்ப பிரிவு மாணவர்கள் 52 சொற்களை தடுமாற்றமின்றி வாசிக்கின்றனர் என புள்ளி விவரங்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எமது பகுதியில் வாசிப் புத் திறன் அருகி வருவதையே இது காட்டுகின்றது.

மாகாணத்தில் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த இணையதள வசதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதைப் பயன்படுத்தி மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையில் அக்கறை செலுத்த வேண்டும்.

பாடசாலைகளில் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களைக் கௌரவிக்கக் கூடாது என்ற தப்பான அபிப்பிராயம் நிலவி வருகிறது.

5ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற மாணவர்களுக்கு தனியான பாதாகை அமைப்பதையும் படங்களை பெரிதாக்கி காட்சிப்படுத்துவதையும் நிறுத்த வேண்டும். மாணவர்களைக் கௌரவிப்பதாயின் 70 புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றவர்களையும் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரையும் கௌரவித்து அனைத்து மாணவர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.-என்றார். (ற-21,9)




மடு உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலைய

# கட்டட நிர்மாண வேலைகளை இம்மாதம் முடிக்க வலியுறுத்து

மன்னார், நவ.20

மன்னார், மடுவில் அமைக்கப்படும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலைய கட்டட வேலைகளை இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று கட்டட ஒப்பந்தகாரர்களிடம் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சரின் கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ் 2016ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு குறித்த கட்டடம் மன்னார் மடு சந்தியில் அமைக்கப்படுகின்றது. அதன் கட்டுமானப் பணிகளை வடக்கு அமைச்சர் நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்தார்.

கட்டட வேலைகள் அனைத்தையும் இந்த மாத இறுதிக்குள் நிறைவுசெய்து வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளரிடம் ஒப்படைக்கவேண்டும். எனது அமைச்சின் கீழ் ஒப்பந்த வேலைகளைசெய்துகொண்டிருக்கும் ஒப்பந்தக்காரர்கள் தத் தமது பொறுப்பை உணர்ந்து குறித்த ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை தரமாக செய்துமுடிக்கவேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்படின் குறித்த நிபந்தனைகளை மீறும் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சில சந்தர்ப்பங்களில் அத்தகைய ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களில் வட மாகா ணத் துக்குள் எனது அமைச்சு சார்ந்த வேலைத் திட்டங்களை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்படு வார்கள். அத்தகைய விளைவுகளை கருத்திற்கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும். கிடைக்கின்ற நிதியை சரியாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு ஒப்பந்தக்காரர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களைமேற்கொள்கின்ற போது தமது சொந்த வேலைபோன்று கருதினால் மட்டுமே குறித்த வேலையைக் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தரமுள்ளதாக நிறை வேற்றமுடியும். ஒதுக்கப்படுகிற நிதி உங்களது வரிப்பணம் என்பதையும் குறித்த அபிவிருத்தித் திட்டங்களானது எமது பகு திக்கும், எமது மக்களுக்குமானதும் என்ற விடயங்களை மனதில் வைத்து செயற்பட வேண்டும்- என்று அமைச்சர் டெனீஸ்வரன் குறிப்பிட்டார். (ற-21)

## வாள்வெட்டில் இளைஞன் படுகாயம்

வவுனியா, நவ.20
வவுனியா மகாறம்பைக்குளத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
சுப்பையா தயாகரன் (வயது-27) என்ற இளைஞரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.
தனது வீட்டில் இருந்து கடைக்குச் சென்று திரும்பியபோதே வாள் வெட்டு நடந்துள்ளது. படுகாயமடைந்த நபர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

## விவசாயிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.20
அளம்பில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட 24 விவசாயிகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் வாழ்வாதாரத் திட்டங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு அளம்பில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.
பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், அதிக பிள்ளைகளைக் கொண்ட வறுமை நிலையில் உள்ள குடும்பங்களும் இந்த வாழ்வாதார உதவித் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இரண்டு விவசாயக் கிணறுகள், 17 நீரிறைக்கும் இயந்திரங்கள், 18 தூவல் நீர்ப்பாசனங்கள், 8 மருந்து தெளிப்பான்கள் என்பவை வழங்கப்பட்டன என்று அளம்பில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் தெரிவித்தார்.
நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ய. ஆஜகுலன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ற-7)

### முல்லைத்தீவு, வட்டுவாகலில்

# சிமெந்தால் காவலரண் அமைத்து இருப்பைப் பலமாக்கும் கடற்படை

## தமது காணிகள் கையகப்படுத்தப்படுமோ என உரிமையாளர்கள் அச்சம்

முல்லைத்தீவு, நவ.20
முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்படை முகாமின்சுற்றுக்காவலரண்கள் அனைத்தும்சிமெந்தால் நிரந்தரமாக அமைக்கப்படுகின்றன. முகாம் அமைந்துள்ள எமது காணிகள் நிரந்தரமாகப் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு எதிராக நாம் முற்றுகைப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இவ்வாறு முகாம் அமைந்துள்ள காணிகளின் உரிமையாளர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.
கடந்த வாரம் முதல் குறித்த கடற்படை முகாமைச் சூழ அமைக்கப்பட்டுள்ள காவலரண்கள் அனைத்தும் சிமெந்தால் நிரந்தரமாகக் கட்டப்படுகின்றன. அவற்றின் அருகில் அவர்கள் தங்குவதற்கும் இரு அறைகள் மற்றும் நிரந்தரக் கழிப்பறைகள் என்பனவும் பெரும் நிதிச் செலவில் கட்டப்படுகின்றன. இவற்றைப் பார்க்கும்போது எமது நிலம் எமக்கு கிடைக்குமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இனியும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் சொல்லை நம்பிப் பயன் இல்லை. விரைவில் பெரும் முற்றுகைப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்கின்றோம்– என்று அவர்கள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு, வட்டுவாகல் பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து கடற்படையால் பெரும் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டது. படை முகாமை அகற்றித் தமது காணிகளை விடுவிக்குமாறு காணி உரிமையாளர்கள் பல தடவைகள் போராட்டம் நடத்தியிருந்தனர். காணிகளை விடுவிப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் உபசெயலாளர் தலைமையில் கடந்த ஜனவரி 16ஆம் திகதியும், செப்ரெம்பர் 24ஆம் திகதியும் முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. தமது நிலங்களை மீளக் கையளிக்க வேண்டும் என்று நில உரிமையாளர்கள் உறுதியாகக் கோரினர். உரிமையாளர்களின் எதிர்ப்பை மீறி கடற்படையினர் குறித்த காணிகளை அடாத்தாகக் கையகப்படுத்தும் நோக்கில் அளவீடு செய்ய முயன்றனர். அதையடுத்து நில உரிமையாளர்கள் வீதிமறியலில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த மாவட்டச் செயலக அதிகாரிகளின் வாக்குறுதிகளை ஏற்று காணி உரிமையாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். இந்த விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அந்த பிரதேசத்தை எந்தக் காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்க முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது வட்டுவாகல் கடற்படைத் தளத்தின் சுற்றுக் காவலரண்கள் அனைத்தும் சிமெந்தால் நிரந்தரமாக அமைக்கப்படுகின்றன என்று காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ற-21,10)

> “முகாமின் சுற்றுக் காவலரண்கள் பெரும் நிதிச் செலவில் சிமெந்தால் அமைக்கப்படுகின்றன. அவற்றைப் பார்க்கும் போது எமது காணிகளை எம்மிடம் கையளிக்கும் எண்ணம் கடற்படையினருக்கு இல்லை என்றே தோன்றுகின்றது. இனியும் அரசியல்வாதிகளின் வார்த்தைகளை நம்பிக் கொண்டிருக்க முடியாது. நாம் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடுவது குறித்து ஆராய்கின்றோம் என்றனர் காணிகளைப் பறிகொடுத்தவர்கள்.”



வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் அமைப்பினருடன் நேற்றுக் கலந்துரையாடினார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் அமைப்பின் யாழ். பணிமனையில் சந்திப்பு நடந்தது. மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், யாழ் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்கள் பணிமனை தலைவருமான அஷ்ஷெய்க் பி.ஏ.எல் சுபியான் மௌலவி மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டனர். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், சி.தவராசாவால் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொது மக்கள் கருத்தறியும் குழுவிடம் வழங்கப்பட்ட அறிக்கைகள் அஷ்ஷெய்க் பி.ஏ.எல் சுபியான் மௌலவியிடம் வழங்கப்பட்டன. (ற-21)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.20
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை தற்கால வேலைவாய்ப்பை மையமாகக் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் முழுநேர மற்றும் பகுதி நேர தொழில் பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.
இவ்வாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
தொழிற்பயிற்சி அதிகார சபையால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல் டிங்), இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், டீசல் வாகன திருத்துநர், குளிர்சாதன இயந்திர திருத்துநர் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவற்றுக் கான பதிவுகள் தற்போது நடைபெறுகின்றன.
கற்கை நெறிகள் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறுவுள்ளன. கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் அல்லது கைதடி தொழிற்பயிற்சி நிலையம், ஏ9 வீதி, கைதடி ஆகிய இடங்களில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும்– என்றுள்ளது. (ற-7)

# திண்மக் கழிவகற்றலுக்கு காணி வசதி ஏற்படுத்துக

## பருத்தித்துறை நகரசபை செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.20
பருத்தித்துறை நகர சபையில் திண்மக் கழிவுகளை சேகரிப்பதற்கு காணி வசதி இல்லாமல் உள்ளது. எமது நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவு சேகரிப்பதற்கு உகந்த காணிகள் இல்லை. உரியவர்கள் இது குறித்து அக்கறை செலுத்த வேண்டும். இவ்வாறு பருத்தித்துறை நகரசபை செயலர் பு.ரமேஸ்வரன் தெரிவித்தார்.
பருத்தித்துறை நகராட்சி மன்றத்தால் உள்ளூராட்சி மாதம் மற்றும் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கு இடையில் போட்டிகள் நடத்தப்பட்டன. பரிசளிப்பு நிகழ்வு பருத்தித்துறை நகராட்சி மண்டபத்தில் நகராட்சி மன்றச் செயலர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்து கொண்டார். அதில் உரையாற்றும்போதே நகரசபைச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக்கழிவு சேகரிப்பதற்கு உகந்த காணிகள் இல்லை. அயல் பிரதேசத்தில் காணி கொள்வனவு செய்யப்பட இருந்தது. அந்தப் பகுதி மக்களின் விழிப்புணர்வற்ற செயலால் அந்த நடவடிக்கை தற்போது கைவிடப்பட்டுள்ளது. எமது நகரசபைக்கு திண்மக் கழிவு சேகரிப்பதற்கு காணி அவசியமாகவுள்ளதால் உரியவர்கள் இதில் அக்கறை எடுத்துச் செயற்படவேண்டும்.
கடந்த அரசு போட்ட சட்டத்தால் தற்போது கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் மிக அதிகளவில் அதிகரித்துள்ளது. பெண் நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளப்படும்போதும் அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தால் சுகாதாரச் சீர்கேடும் ஏற்படக்கூடிய நிலையும் காணப்படுகின்றது– என்றார். அங்கு உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்ததாவது:
இரண்டு மாதகாலத்துக்குள் திண்மக் கழிவகற்றலுக்கான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். சாவகச்சேரி, பருத்தித்துறை நகர சபைகளை மாநகர சபைகளாக மாற்றுவதற்கு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மாநகர சபையாக மாற்றும்பொழுது பெரிய உதவிகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. -என்றார்.
நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் நந்தகுமார், பாட சாலை ஆசிரியர், மாணவர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10, 26)

# 2017 வரவு செலவுத் திட்டம்





## அனைவருக்கும் நன்மை பயக்கும் துரித வளர்ச்சியை நோக்கி...

### அத்தியாவசியப் பொருட்களின் விலைக் குறைப்பு

- சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 25.00 ரூபாவாலும்,
- பருப்பு கிலோ ஒன்றின் விலை 10.00 ரூபாவாலும்,
- உருளைக்கிழங்கு கிலோ ஒன்றின் விலை 5.00 ரூபாவாலும்,
- பயறு கிலோ ஒன்றின் விலை 15.00 ரூபாவாலும்,
- நெத்தலி கிலோ ஒன்றின் விலை 5.00 ரூபாவாலும்,
- வெள்ளைச் சீனி கிலோ ஒன்றின் விலை 2.00 ரூபாவாலும்,
- மண்ணெண்ணைய் லீற்றர் ஒன்றின் விலை 5.00 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

### லங்கா சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களின் பட்டியல்

சீனி, மைசூர் பருப்பு, கோதுமை மா, நெத்தலி, டின் மீன், மாசி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், பயறு, அரிசி, கருவாடு, வெள்ளைப்பூடு, கடலை, வட்டான பருப்பு, பால்மா, குழந்தைப் பால்மா, வெள்ளைக் கௌப்பி, சிகப்பு கௌப்பி, கோழி இறைச்சி, முட்டை, தேங்காய் எண்ணெய், உப்பு, கொத்தமல்லி, அரிசி மா

### வலுவான விவசாயக் கைத்தொழில்

- ★ விவசாயக் .கைத்தொழில் மேம்பாட்டுக்காக ரூபா. 125,000 மில்லியன்
- ★ வீட்டுத் தோட்ட விவசாய ஏற்பாடுகளுக்காக 50% சலுகையுடனான கடன்
- ★ விவசாய உற்பத்திகளுக்கு உச்ச விலை பெற்றுக் கொடுப்பதற்காக விவசாய கூட்டுறவு அமைப்புக்களை ஏற்படுத்துவதை ஊக்குவித்தல்
- ★ தற்போது நெற்செய்கைக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டம் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோளம் மற்றும் சோயா அவரை விவசாயிகளுக்கும்
- ★ விவசாய இயந்திர உபகரணங்களுக்கு இறக்குமதி வரி விலக்களிப்பு
- ★ கிளிநொச்சி, மன்னார் மற்றும் எம்பிலிப்பிட்டியவுக்கு புதிய தானிய களஞ்சியசாலைத் தொகுதிகள்
- ★ இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கான பாரிய திட்டத்தை உடனடியாக செயற்படுத்துதல்
- ★ மொனறாகல, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் அம்பாறையில் புதிய சீனித் தொழிற்சாலைகள்
- ★ ஒரு மெற்றிக் தொன் கரும்புக்காக குறைந்தது ரூபா 5000.00
- ★ இலங்கைக்கு 15,000 நல்லினக் கரவைப் பசுக்கள் இறக்குமதி
- ★ 33 பாரிய நீர்ப்பாசன அணைகளைப் புரனமைப்பதற்காக ரூபா 2020 மில்லியன்
- ★ கோழி இறைச்சி உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் விஷேட சலுகைகள்
- ★ 1500 சிறிய குளங்களைப் புனரமைப்பதற்காக ரூபா 3,000 மில்லியன்

### அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம்

- ★ கல்வி மேம்பாட்டுக்காக ரூபா 279,000 மில்லியன்
- ★ கல்வியை வலுப்படுத்துவதற்காக ரூபா 17,480 மில்லியன்
- ★ பாடசாலைப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஆயட் காப்புறுதி
- ★ 2017 ஆம் ஆண்டு முதல் உயர் தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் Tab
- ★ 2017 ஜனவரி 08 ஆம் திகதி முதல் ஒவ்வொரு பாடசாலை மாணவருக்கும் வங்கிக் கணக்கு
- ★ விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்கான நாளாந்த கொடுப்பனவு ரூபா 50.00 இலிருந்து ரூபா 150.00 வரை அதிகரிப்பு
- ★ மாணவப் பிக்குகளுக்காக மாதாந்தம் ரூபா 2500.00 கொடுப்பனவு
- ★ அரசாங்க தொழிற்பயிற்சி நிலையங்களின் கற்கைநெறிகளுக்காக புலமைப் பரிசில்கள்
- ★ கொழும்புக்கு வெளியில் தூரப் பிரதேசங்களிலுள்ள 1000 பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்தவென ரூபா 250 மில்லியன்
- ★ 13 வருட கால பாடசாலைக் கல்வி கட்டாயம்
- ★ ஆரம்ப, இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள் மற்றும் நூலகங்களுக்காக ரூபா 21,000 மில்லியன்
- ★ தேசிய திரைப்பட ஆய்வு நிலையத்தை உருவாக்குவதற்காக ரூபா 50 மில்லியன்

### ஆரோக்கியமான பரம்பரை

- ★ சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக ரூபா 212,000 மில்லியன்
- ★ சுகாதாரத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மேலதிகமாக ரூபா 25,200 மில்லியன் ஒதுக்கம்
- ★ நாட்டிலுள்ள சகல தனியார் மருந்தகங்களையும் தேசிய மருந்துப் பொருட்கள் அதிகார சபையில் பதிவு செய்ய நடவடிக்கை
- ★ சிறுநீரக நோய்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவென சுகாதார அமைச்சுக்கு மேலதிகமாக ரூபா 750 மில்லியன்
- ★ அரசாங்க வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்ளின் சேவை இரவு 10.00 மணி வரையும்

### மீனவ சமூகத்தின் எதிர்காலம்

- ★ கடற்றொழில் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக ரூபா 5,660 மில்லியன்
- ★ ஹம்பாந்தோட்டை. மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நீரியல் வாழ் உயிரின வளர்ப்பு கைத்தொழில் வலயங்கள்
- ★ பத்து கரையோர மாவட்டங்களில் மீனவ வீடமைப்பு திட்டங்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ரூபா 1200 மில்லியன்
- ★ "குளத்துடன் இணைந்த கிராமம்" என்ற திட்டத்தின் கீழ் 100 நன்னீர் மீன்பிடிக் கிராமங்களுக்காக ரூபா 750 மில்லியன்

### முதலீட்டு ஊக்குவிப்புக்கள்/ உட்கட்டமைப்பு வசதிகள்/ வாழ்வாதார மேம்பாடு

- ★ பொருளாதாரத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக ரூபா 15,000 மில்லியன்
- ★ இலங்கையில் முதன் முறையான இறக்குமதி ஏற்றுமதி வங்கியை ஸ்தாபிப்பதற்காக ரூபா 10,000 மில்லியன்
- ★ அரசாங்க மற்றும் தனியார்த் துறையினரின் பங்குபற்றுதலுடன் 15 ஏற்றுமதிக் கிராமங்கள்
- ★ களுத்துறை, இரத்தினபுரி, வவுனியா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 04 சுதந்திர வர்த்தக வலயங்கள்
- ★ சுயதொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் சிறியளவிலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடபடுவதற்கான நிதி வசதி அளிப்பதற்காக ரூபா 7,000 மில்லியன்
- ★ நிதிக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பாவனையாளர் நிதிக் கண்காணிப்பு அதிகார சபை.
- ★ தேசிய வர்த்தக முறைப்பாட்டு இயக்கம் மற்றும் தேசிய வர்த்தகங்களைப் பதிவு செய்வதற்கான அலுவலகம் ஸ்தாபிக்கப்படும்.
- ★ கைத்தறி புடவைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக ரூபா 300 மில்லியன்.
- ★ கொழும்பு நகரில் அதி சிறப்பு மிக்க கைப்பணிப் பொருட்கள் விற்பனை மத்திய நிலையம்.
- ★ கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபங்கள் 02 அமைக்கப்படும்.
- ★ சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 1,000 மில்லியன்.
- ★ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக ரூபா 1,850 மில்லியன்
- ★ மத்திய மற்றும் றுவன்புர அதிவேக நெடுஞ்சாலைகளின் நிர்மாணப் பணிகள் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி
  - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை புத்தளம் வரை நீடிப்பு
  - தெற்கு அதிவேக நெடுஞ்சாலை 2018 ஆம் ஆண்டாகும் போது கொடகம முதல் ஹம்பாந்தோட்டை வரை நிர்மாணிக்கப்படும்
  - கடவத்தை முதல் கெரவலப்பிட்டிய வரையான வெளிச்சுற்று வட்ட வீதியை 2019 ஆம் ஆண்டு ஜூலையாகும் போது நிறைவு செய்தல்
- ★ கொழும்பு நகரின் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக இலகு ரயில் போக்குவரத்து கட்டமைப்பு.
- ★ 1000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,500 மில்லியன்.
- ★ ஆட்டோ வண்டிகளுக்கு பதிலாக நான்கு டயர்களைக் கொண்ட மின்சாரக் கார்கள்.
- ★ ரயில் போக்குவரத்து சேவைக்கும் முன் பணம் செலுத்திய கார்ட் முறைமை.
- ★ குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்காக 500,000 வீடுகள்.
- ★ பெருந்தோட்டத் துறையினருக்கென 25,000 வீடுகள்.
- ★ வடக்கு கிழக்கு பிரதேசங்களில் 65,000 வீடுகளை நிர்மாணிக்கவென ரூபா 7,000 மில்லியன்.
- ★ பெருந்தோட்ட மக்களுக்கு 07 பேர்ச்ஸ் படி காணிகள்.
- ★ பாதுகாப்பு படையினரின் மேலதிகக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக ரூபா 3,500 மில்லியன்.
- ★ தனியார்த் துறையினருக்கான 45 மணித்தியாலய கடமை நேரமும் அரசாங்க ஊழியர்களுக்கான 40 மணித்தியாலய கடமை நேரமும் வாரத்திற்கான நெகிழ்வு போக்கு சேவை முறைமை
- ★ 20 வருடங்களைக் கொண்ட அக்ரகாரா காப்புறுதி முறைமையை வாழ்நாள் முழுவதற்கும் நீடிப்பு.
- ★ 500க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட அனைத்து கம்பனிகளிலும் சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையங்களை உருவாக்குவதற்கான ஆலோசனை.
- ★ திரைப்படப் பாதுகாப்பு மற்றும் மீளுருவாக்கப் பிரிவை ஸ்தாபிப்பதற்காக ரூபா 50 மில்லியன்.
- ★ கலைஞர்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள காப்புறுதித் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவென ரூபா 50 மில்லியன்.
- ★ பிரதேச ஊடகவியலாளர்கள் ஊடக உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்ளவென ரூபா 300,000.00 வட்டியற்ற கடன்
- ★ வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்லும் பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளத்தை 350 அமெரிக்க டொலர்களாகப் பேண நடவடிக்கை.
- ★ கிராம உத்தியோகத்தர். சமுர்த்தி உத்தியோகத்தர் குடும்ப நல உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளவென நாடெங்கிலும் 1000 "சேவா பியச" சேவை நிலையங்களை அமைக்கவென ரூபா 1,500 மில்லியன்.
- ★ மோட்டார் போக்குவரத்து திணைக்களம்/ ஆட்பதிவு திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகழ்வு திணைக்களம் என்பன ஏழு நாட்களும் மக்களுக்கு சேவை வழங்கும்.
- ★ இரு வருடங்களுக்குள் எல்லா அரச கட்டடங்களும் சூரிய சக்தி போன்ற பசுமை சக்தி மூலத்திற்கு மாற்றப்படும்.
- ★ அதிவேக நெடுஞ்சாலைகளின் கட்டணம் இரவு 9.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரையான காலப்பகுதியில் 50.00 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

**நிதி அமைச்சு**

# மரண அறிவித்தல்



## இராசையா இராஜேஸ்வரன்

(உரிமையாளர் - கருடா தேநீர்ச்சாலை, நவீனசந்தை , யாழ்ப்பாணம்)

தாவடி பாடசாலையடியைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜேஸ்வரன் 15.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு சண்முகலிங்கம் மற்றும் கனகமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கோமதிதேவியின் (மதி) அன்புக் கணவரும், ஜெயந்தா (பிரான்ஸ்), திவாகரன், சஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியலட்சுமி, பரமேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), இந்திரேஸ்வரன், ஈஸ்வரன் (கனடா), பாலேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், தயாபரன் (சுவிஸ்),காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் திசோகரன் (லண்டன்), தனீஸ்கரன் (லண்டன்),மங்கையற்கரசி, சய்யோநாதன் ஆகியோரின் மைத்துனரும், சபேசனின் மாமனும், சஜேய், சஞ்ஜேய் ஆகியோரின் பேரனும், பிரசித்தா, பிரதீபன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(J/6213)(11.17.21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 222 2491, 075 040 3137**

# மரண அறிவித்தல்

## துரையப்பா பாக்கியநாதன்

**(சட்டத்தரணி)**

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வட்டுக் கோட்டை, மூளாய்வீதியை வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா - பாக்கியநாதன் 18.11.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்களான துரையப்பா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மகோற் கடன் (வைத்தியர்) - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மீனாம்பிகை (சட்டத்தரணி) அவர்களின் அன்புக் கணவரும், யதுகுலன், (கனடா) சிறிகுகன் (இலங்கை), ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், கைலைநாதன் (இலங்கை), சிதம்பர நாதன் (லண்டன்) லோகநாதன் (லண்டன்), செல்வநாதன் (கனடா), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்வமணி மற்றும் கௌரி (லண்டன்), திலகவதி (லண்டன்), செல்வமங்கை (கனடா), பாலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2016) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாவடிச்சந்தி,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



**பிறப்பு**
**21.02.1951**

**இறப்பு**
**18.11.2016**

**யதுகுலன் (மகன் - கனடா) 647 709 3704)**
**சிறிகுகன் (மகன் - இலங்கை) 077 076 2378)**
**சாந்தி (சகோதரி - கனடா) 416 269 1738)**

(C/26555)
(11,18,21)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி (புவனம்) வைத்திலிங்கம்



ஸ்ரேசனடி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி (புவனம்) வைத்திலிங்கம் கடந்த (15.11.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்தி லிங்கத்தின் அன்பு மனைவியும் திருநாவுக் கரசின் (ஓய்வு நிலை அதிபர்-யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்) பாசமிகு சகோதரியும் நவமணியின் (கனடா) மைத்துனியும் வத்சலா (பிரான்ஸ்), விவேகா (கனடா), ஸ்ரீ விமல் (கனடா), விஜித் ஆகியோரின் அன்புத் தாயும் பத்ம நாதன் (பிரான்ஸ்), கனகநாயகம் (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் தேனுஹா, மயுரிஹா (பிரான்ஸ்), நிசான், நினேஸ் (கனடா), துஷ்யந்தன், அயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வரேஷ், தாரேஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஸ்ரேசனடி,**
**சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 224 1336**



## கதிர்காமு கந்தையா தியாகராஜா

(முன்னாள் கொள்வனவு முகாமையாளர்- ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி)

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தையா தியாகராஜா 18.11.2016 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மூத்த மகனும்,காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும், பரமராசா (சங்கத்தானை), தேவரத்தினம் (சங்கத்தானை), சந்திராதேவி (சங்கத்தானை), காலஞ்சென்ற கந்தசாமி (ஜேர்மனி) மற்றும் குணராசா (ஜேர்மனி),இந்திரேஸ்வரி (சங்கத்தானை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இந்திராதேவி (சங்கத்தானை) மற்றும் பாக்கியதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற தர்மலிங்கம்(சங்கத்தானை) மற்றும் கணபதிப்பிள்ளை (சங்கத்தானை), முருகேசு (திருகோண மலை), நாகம்மா (ப.ம.திட்டம், மிருசுவில்), காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி (புத்தூர்), பரமேஸ்வரி (ப.ம.திட்டம், மிருசுவில்) மற்றும் பொன்னுச்சாமி (கொக்குவில்), மனோன்மணி (ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம் - ப.ம.திட்டம், மிருசுவில்), இரஞ்சிதமலர் (மீசாலை) ஆகியோரின் மைத்துனரும், விநோதராஜ்(ஜேர்மனி), யசந்தன் (லண்டன்), மயூரன் (லண்டன்), திருமகள் (மாவட்ட நீதிவான் நீதிமன்றம்- மல்லாகம்), ஐங்கரன் (ஜேர்மனி), கலைமகள் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளாயினி (ஜேர்மனி), றஞ்சினி (லண்டன்), கிருஸ்ணலீலா (மாதகல்), வரதயோகர் (சங்கர்- பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை),பார்த்தீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யஸ்ணவி (லண்டன்), யஸ்துதி (லண்டன்), பரதன் (சுன்னாகம் நாகேஸ்வரி வைத்தியசாலை), வேனிலா (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), பவிசன் (சுவிஸ்), அதிசயன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், உதயகுமாரன் அபிராவின் (அரச மருந்துக் கூட்டுத்தாபனம்) அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'திருச்செந்தூர்',
இத்தியடி பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(J/6228) (11,18,21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**லண்டன் - 0044 742 4599 627, 0044 7710 156695,**
**சாவகச்சேரி - 077 979 7930, 077 294 6706**

## 31ஆம் நாள் நினைவுகளுடன்



**தயாநிதிதேவி சத்தியசீலன்**

தோற்றம் 05.06.1953 — மறைவு 21.10.2016

**திதி: 20.11.2016**

ஆலமரம் போல் எமைக் காத்து
அமரராகி சென்று விட்டீர்
நம் இறுதி மூச்சு இருக்கும்வரை
உங்கள் நினைவுகளை சுமந்திருப்போம் தாயே!

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(ஜே. 6223) (13,18,21)

**குடும்பத்தினர்.**

### கஞ்சா வைத்திருந்த நபருக்கு தண்டம்


யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் 9 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த நபருக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் பதில் நீதிபதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த நபர் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ற-6)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கந்தசாமி (விஸ்வகுலத்திகர்)



**தோற்றம்: 16.07.1933**
**மறைவு : 16.11.2016**

கொடிகாமம், இயற்றாலை, தாவளையைப் (மந்துவில்) பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தசாமி 16.11.2016 புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- இராசம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான தங்கவேலுப் பத்தர் - புஸ்பவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன் (கனடா), பவானி (சுவிஸ்), சாந்தினி (கனடா), கோமதி (கனடா), பாலகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜ்மோகன் (மோகன் - சுவிஸ்), கிருபாகரன் (சுவிஸ்),இரகுபவான் (கனடா), றெஜினி (கனடா), புஜிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இந்திராணி, காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் இராசகோபால், தங்கேஸ்வரி, மஹாலட்சுமி, விவேகானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பழனித்துரை, காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகலனும், தனேஸ்வரி, மனோன்மணி (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக Chapel Ridge Funeral Home & Cremation Centre canada இற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:

திருமதி கு.தங்கேஸ்வரி,
ச.இராஜகோபால்(மைத்துனர்- 075 049 7914)
இல.31,பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**வைத்தியலிங்கம் சத்தியநாதன்**
**(மைத்துனர்),**
**பாலகிருஷ்ணன்** (மகன்-கனடா)
**00164 7773 9643**

## வினாயகமூர்த்தி சிவகுமாரன்

(ஓய்வுநிலை ஆசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)



வீரப்பதிராயன், கரணவாய் தெற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாயக மூர்த்தி சிவகுமாரன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) 17.11.2016 வியாழக்கிழமை அகாலமரண மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாயக மூர்த்தி - பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், பாலம்பிகையின் (உபஅதிபர்- யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும், சாங்கவியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலசிங்கம்-சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தநாயகி, குகதாசன், சீதாதேவி, பாலகிருஷ்ணன், சரவணபவன், கிருபானந்தன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவநாதன், மகாகணபதி, ஜெயதேவி, இந்துமதி, முல்லை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ரவிசங்கர், அருணா, சத்தியேந்திரா, ஆரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், லாவண்யா, லக்சியா, சோபினியா, கணியன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரணவாய் தெற்கு வீரப்பதிராயனில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரப்பதிராயன்,
கரணவாய்.

தகவல்:
**வி.பரமேஸ்வரன் (சகோதரன்).**

(C/26554) (11,18,21)

**021 226 3658**

### வீடு வாடகைக்கு
கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு அருகில் சுற்றுமதிலுடன் கூடிய பெரிய அனெக்ஸ் வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.
**தொடர்பு: 077 6114068** (சனி/ ஞாயிறு)

### 3 Bed room Aparment விற்பனைக்குண்டு
1370 சதுர அடி சேவன்ட் பாத்ரூம் கிரனைட் தரை வரவேற்பறையிலிருந்து கடற்கரைக்காட்சி புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டது. 9 வருடம் பழையது.
**Ravi: 077 442 3800**

### பணியாளர் தேவை
கணினியில் அனுபவமுள்ளவர்களும், புத்தகம் கட்டுநர்களும் தேவை. (அச்சகத்தில் பணி யாற்றியவர்களுக்கு முன்னுரிமை) திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
புதிய கங்கை பிறிண்டேர்ஸ்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
**077 656 9660, 077 555 3918**

### வீடு வாடகைக்கு
பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**077 667 0582**

### காணி விற்பனைக்கு
சித்தன்கேணியில் தெல்லிப்பழை வீதிக்கு அருகில் 07 பரப்பு குழி 17 காணி விற்பனைக்கு உண்டு.
தேவை உடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**077 503 7688**

### பணிப்பெண் தேவை
யாழ் நகரில் உள்ள வீடொன்றுக்கு வீட்டுவேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 929 8034**

### வீடு காணி தேவை
ஆனைப்பந்தி, கந்தர்மடம், திருநெல்வேலி, கோண்டாவில், பிறவுண்றோட், நாவலர்றோட், நல்லூர்க் கோயில் வீதி ஆகிய இடங்களில் தேவை.
(தரகர் தேவை இல்லை)
**076 331 3154**

### விற்பனைக்குண்டு
பாவித்த லெனோவா, ஏசர், டிடிகனிவி Laptop (I5 Core 2 Duo) விற்பனைக்குண்டு.
விபரங்களுக்கு:- www. iway. lk
**076 801 6448**

### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள பூக்கடை ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.
**தொடர்பு: 077 9424011**

### வீடு வாடகைக்கு உண்டு
மீசாலை மேற்கு, மீசாலை, பங்களா வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
ஏரம்பு வீதி, துவாரகா இல்லம், மீசாலை மேற்கு, மீசாலை.
**077 841 3705**

### தேவை
திருநெல்வேலி சந்திக்கு அருகில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சுப்பர்மார்க்கட் ஒன்றுக்கு பெண்/ ஆண் வேலையாள் தேவை.
அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
**021 300 3730, 077 748 0357**

### வீடு வாடகைக்கு
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கில் 5 படுக்கை அறைகள், 3 குளியலறைகள், 5 வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்ட சகல வசதியுடனான வீடு வாடகைக்கு உள்ளது.
**077 150 6936**

### வேலையாள் தேவை
கீரிமலை ஆலடிச்சந்திக்கு அருகில் இருக்கும் விவசாயப் பண்ணைக்கு வேலையாள் தேவை. அங்கு இருக்கும் வீட்டில் குடும்பமாகத் தங்கியிருந்து வேலை செய்ய வருபவர்களுக்கு முன் உரிமையாக வேலை வழங்கப்படும். பண்ணைக்கு அருகில் பாடசாலை உண்டு. தங்குமிடம் இலவசம். தங்கி இருக்கும் கணவன்,மனைவி இருவரும் விரும்பினால் வேலை செய்யலாம். வேலைகளுக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
குறிப்பு: நல்ல இன மாட்டுக் கன்றுகள்,ஆடுகள் தேவைப்படுகின்றது. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**T.Kajan :077 625 0841, 077 610 1458**

நீங்கள் க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவரா?
**AIR TICKETING** அக்கடமி வழங்கும் உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு...

**AIR TICKETING AND RESERVATION**
வகுப்புக்கள் முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் அனுபவம் வாய்ந்த ஆசான்களால் கற்பிக்கப்படவுள்ளது. வகுப்புக்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



**SB Travels and Tours (pvt) Ltd**
இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1082, 021 222 9555

### பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு
**Educational Technologies Pvt Ltd**
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.
(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

Training Period Rs. 30, 000
After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance



ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

G.Anthany
Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road.Jaffna.

### கொக்குவில் வளர்மதி முன்பள்ளி மழலைகள் முன்பள்ளி புதிய கட்டடத் திறப்பு விழா அழைப்பு
காலம்: இன்று (20.11.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி

**தலைவர்**
திரு. ஆ.சத்தியமூர்த்தி (தலைவர், வளர்மதி நிறைவாழ்வகம்)

**பிரதமவிருந்தினர்கள்**
திரு.நா.வேதநாயகன் (அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்)
வைத்திய கலாநிதி சு.சுரேஸ்குமார்

**கௌரவ விருந்தினர்**
திரு.ஆழ்வார்ப்பிள்ளை சிறி (பிரதேச செயலர், நல்லூர் பிரதேச செயலகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.இ.இரட்ணகோபால் (கிராம அலுவலகர் J/121)
திருமதி.தே.பராசக்தி




**நிகழ்ச்சி நிரல்**
ஆலய வழிபாடு
மங்கல விளக்கேற்றல்
தேவாரம்
புதிய கட்டடம் திறத்தல்
திரை நீக்கம்
ஆசியுரை
வரவேற்புரை
வரவேற்பு நடனம்
தலைமை உரை
வாழ்த்துரைகள்
விருந்தினர்கள் உரை
கௌரவிப்பு
கலை நிகழ்ச்சிகள்
நன்றியுரை
மதிய போசன விருந்து

வளர்மதி முன்றலில் அழகுற நிறைவுறும் முன்பள்ளி புதுமனை கதவுகள் திறந்து மனதுகள் நிறைவோம் வாரீர்...!
மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், உறுப்பினர்கள்
கொக்குவில் வளர்மதி முன்பள்ளி
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்.
வளர்மதி நிறை வாழ்வகம்.
சம்பியன் லேன், கொக்குவில்.
(C 26551) (16,17,19)


# துணுக்காய், மல்லாகம், ஐயன்குளம், பொதுச்சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழியிறைச்சிக் கடைகளுக்கான துணுக்காய் கடைகளுக்கான குத்தகை மீள்கேள்வி அறிவித்தல் -2017

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2017 தொடக்கம் 31.12.2017 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | :- (அலுவலக நாள்களில் மு.ப. 8.30 - பி.ப. 3.00) |
| | :- 21.11.2016 - 05.12.2016 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | :- 05.12.2016 முற்பகல் 10.00 மணிவரை |
| கேள்விதிறக்கப்படும் திகதி | :- 05.12.2016 பி.ப 1.00 மணி |
| கேள்விதிறக்கும் இடம் | :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம் |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியைசெயலாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் என்றமுகவரியிட்டு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுபதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்குமுன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகைவகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படமுடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 19,140.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 232,100.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 19,140.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 47,520.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 1,678,000.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 510,000.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயன்குளம் | 11,550.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஐயன்குளம் | 112,640.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஐயன்குளம் | 11,550.00 | 1,500.00 | 500.00 |

பொதுச்சந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 22,000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,135,000 | 1,500.00 | 500.00 |
| 03 | ஐயன்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் | ஐயன்குளம் | 22,000.00 | 1,500.00 | 500.00 |

துணுக்காய் கடைத்தொகுதிகடைகள்

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 06 | 30000 | 5000 | 500 | 1000 |
| 02 | கடை இல 10 | 30000 | 5000 | 500 | 1000 |

நிபந்தனைகள்:

1. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக் கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் எனத் தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 12%பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்
5. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
6. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
8. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அமைவுநடந்து கொள்ள வேண்டும்.
9. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
10. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒருவாரகாலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

**க.தனபாலசிங்கம்,**
செயலாளர், பிரதேசசபை, துணுக்காய்.

(C/ 26548) (11,18,21)

**மணமகள் தேவை**

யாழ் இந்து குடும்பத்தினைச் சேர்ந்தவர்.
1963 இல் பிறந்தவர். சொந்த வீடு உள்ளது.
சாதி மதம் பார்க்கமாட்டோம்.
சொந்த தொழில் செய்பவர்.

**076 837 9443**

# விபத்தில் எண்மர் காயம்



யாழ்ப்பாணம், நவ.20

கிளிநொச்சி, பளையில் நேற்று இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துக்களில் 8 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற இலங்கை போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான பஸ் பளை இயக்கச்சி பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோதியது. விபத்தில் பஸ்ஸில் பயணித்த 6 பேர் காயடைந்தனர். அவர்கள் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, 5 பேர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த பஸ் பளை- இத்தாவில் பகுதியில் காப்பெற் வீதியின் மேல் தேங்கி நின்ற வெள்ள நீரை அடித்து சென்றதால் எதிரே வந்த பிக்கப் வாகனம் நிலை தடுமாறி தடம் புரண்டது. அதில் இருவர் காயமடைந்து பளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன எனப் பளைப் பொலிஸார் தெரிவித்த னர். (ற-21,6)

**கண்ணீர் அஞ்சலி**



*மார்க்கண்டு மனோகரசீலன்*

மலர்வு 24.01.1962 — உதிர்வு 09.11.2016


கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியா லய முதல்வர் திருமதி மீன லோஜினி இதயசிவதாஸ் அவர் களின் அன்புச் சகோதரர் மார்க் கண்டு மனோகரசீலன் அவர்கள் 09.11.2016 புதன்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியை நாளை (21.11.2016) திங்கட்கிழமை Creamatorium dv Pere Lachaise 71 Rve ronde aux 75020 Paris France என்னும் முகவரியில் நடைபெறும். அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/ உருத்திரபுரம் ம.வி

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
முருகேசு குமரேசு



தோற்றம் 07.09.1937
மறைவு 02.12.2015
திதி: ஸப்தமி

நீங்கள் உலகைவிட்டு நீங்கி
ஆண்டொன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

63/13,
கூழாவடி லேன்,
ஆனைக்கோட்டை.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

**4ஆம் ஆண்டு நிறைவினிலே....**



நிஜமாய் 02 . 01 . 1941
நினைவாய் 05 . 12 . 2012

அமரர் சின்னப்பா குணரத்தினம்
[ ஓய்வு நிலை உபதபால் அதிபர் – கனகராயன்குளம்]

திதி - அபரபக்க ஸப்தமி - 20.11.2016


காத்திரமாய் நீங்கள் காத்த குடும்பத்தைப்
பிரிந்தீர்களேயப்பா! வார்த்தைக்குள் அடங்காத
சோகத்தைத் தந்தீர்களேயப்பா !
நாம் சோர்ந்து விடாதிருக்க எமக்கு வழிகாட்டுங்களப்பா!

இல. 695/2. நாவலர் றோட்.
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
(ஸ்ரேசன் றோட், பளை)

(சி/26535)(17.19.20)

**விழிநீர் அஞ்சலி**



எமது கல்லூரி உபஅதிபர்
திருமதி பா.சிவகுமாரன்
அவர்களின் அன்புக் கணவர்
விநாயகமூர்த்தி சிவகுமாரன்
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(C 26557)
(14,17)

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஸ்தாபகர் காலஞ்சென்ற
சண்முகதாசன் அவர்களின்
பாசமிகு தாயார்
திருமதி
தெய்வானைப்பிள்ளை
செல்லத்துரை
அவர்கள் காலமான செய்திகேட்டு மிகுந்த துயர் அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்டி எலக்ரோனிக்ஸ், யாழ்ப்பாணம்.

**கண்ணீர் அஞ்சலி**



திருமதி கௌரிதேவி
அருந்தவராசா
(முன்னாள் சென்ஜோன் அம்புலன்ஸ் பிரதேச நிறைவேற்று உத்தியோகத்தர்)

சென்ஜோன் அம்புலன்ஸ் வலிகாமம் பிரிவுக்கான முன்னாள் பிரதேச நிறைவேற்று உத்தி யோகத்தராக தனது சேவைக் காலத்தில் யாழ். மாவட்டத்தில் சென்ஜோன் அம்புலன்ஸ் இன் வளர்ச்சிக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதியும் குடும்ப சகிதம் அயராது உழைத்தவருமாகிய **திருமதி அருந்தவராசா கௌரிதேவி** அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்......

யாழ். மாவட்ட ஆணையாளரும், (ஜே.6240)
ஏனைய உத்தியோகத்தர்களும் (13.18.17.21)
சென்ஜோன் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம்.

**பதினாறாம் ஆண்டு நினைவலைகள்**

அமரர் சிதம்பரப்பிள்ளை
செல்வரெட்ணம்



திதி: ஸப்தமி
சிவனாய் 11.11.1949 — சிவமாய் 17.11.2000

ஆண்டுகள் பதினாறு மறைந்தாலும்
கண்ணீர் நிற்கவில்லை- அப்பா
சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க
ஆவலாய் நிற்கின்றோம்
ஆயிரம் உறவுகள் இருந்தால் என்ன
உங்கள் அன்பைப் போல் வருமோ

அனுதினமும் தங்களின் நினைவுடன்
அலை மோதி நிற்கின்றோம்
உயிர் உள்ள வரை உம்மை மறவோம்
உம் நினைவில் வாழ்கின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காக வணங்குகின்றோம்

20A, ஈச்சமோட்டை ,கடற்கரை வீதி.
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகள், மச்சான்.

# வர்த்தகர்களின் பெருந்தன்மையால் மண்கும்பானில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், நவ. 20

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட மண்கும்பான் கிராமத்தில் கால போக நெற்பயிர் செய்கையில் ஆர்வம் காட்டாதிருந்த 150 விவசாயிகள் அந்தப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களின் முயற்சியால் தங்களது 75 ஏக்கர் வயல் காணியில் நெற்செய்கையை ஆரம்பித்தனர்.

150 விவசாயிகளுக்கும் மேற்பட்டோருக்கு சொந்தமான குறித்த காணிகள் தரிசு நிலங்களாக இருந்தன. அவற்றில் பல வருடங்களாக நெற் செய்கை செய்யப்பட வில்லை.

மண்கும்பான் பகுதியை சேர்ந்த வர்த்த கர்களின் செயற்பாட்டால் அந்தக் காணி கள் உழுது பண்படுத்தப்பட்டு கட்டாக் காலிகள் உட்செல்லாதவாறு சுற்றிவர முட்கம்பி வேலியும் அமைக்கப்பட்டது.

நெற்காணியில் உரிமையுள்ள 150 விவசாயிகளுக்கு விதை நெல்லும் வழங்கப்பட்டு நெல் விதைக்கப்பட்டது.

உரிமையாளர் இன்றிக் காணப்படும் வயற்காணிகளை வறிய 15 குடும்பங் களுக்கு தாமே விதைத்து அவர்களிடம் அந்தக் காணிகளை கையளித்தனர்.

பல வருடங்களாக விதைக்கப்படாமல் கட்டாந்தரையாக காட்சியளித்த இந்த வயல்காணிகள் தற்போது பச்சைப் பசேலென காட்சியளிப்பது ஊர் மக் களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந் துள்ளது. தற்காலத்தில் தீவகங்களில் நெற்செய்கை பண்ணுவது மிகவும் குறைவாக இருக்கும் காலகட்டத்தில இந்த வர்த்தகர்களின் செயற்பாடு போற்றத் தக்கது என கமநலசேவை திணைக் களமும் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

குறித்த வயல்களில் செய்யப்படும் நெல் லில் ஒரு மணி கூட வேண்டாம். அது வறிய வர்களை போய்ச்சேரவேண்டும் என்று வர்தகர்கள் தெரிவித்தனர் என்று மண் கும்பான் அபிவிருத்திச் சங்க தலைவர் கு.சரவணபவானந்தன் தெரிவித்தார். (ற-10)


DASH
Hero
நான் செல்லும் இடமெல்லாம்
வெளிச்சம் கொடுப்பதால்
நான் தனித்துவமானவன்
5
உத்தரவாதம்
ரூ.227,999 முதல்
மிக அதிகமாக
அனைத்தும் ஒன்றாக
பின்புற LED லயிட்
வெளிப்புற எரிபொருள் நிரப்பி
ஸ்கூட்டரோடு திரும்பும் ஹெட்லயிட்
மொபைல் போன் சார்ஜ் செய்யும் வசதி
திருடப்படுவதை தடுக்கும் இம்மோபிலயிசர் அமைப்பு
அலோவீல்
முன்பக்க டெலோஸ்கொபிக் சஸ்பென்சன்
மேற்புறத்தில் என்னுடைய ஹெட் லயிட் அமைந்திருப்பதனால் நான் செல்லும் இடமெல்லாம் வெளிச்சத்தை கொடுக்க என்னால் முடியும். நான் எந்த சந்தர்ப்பத்திலும் உங்களை இருளில் ஆழ்த்தமாட்டேன். நிச்சயமாக நீங்கள் பாதுகாப்பாக உணர்வீர்கள். அதனால்தான் நான் தனித்துவமானவன்.
* விலை மற்றும் கொடுப்பனவுகள் முன்அறிவித்தல் இன்றி மாற்றப்படும்.
* நிபந்தனைகளுக்கு உற்பட்டது
011 5 777 000
Facebook.com/HeroMotoCorpSriLanka
நாடளாவிய ரீதியில் அபான்ஸ் - ஹீரோ காட்சியறைகள் மற்றும் விற்பனை முகவர்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans


Abans
Authorized Reseller
Authorized Service Provider
This is 7.
Advanced new camera systems. The best performance and battery life in an iPhone. Immersive stereo sound. The brightest, most colorful iPhone display. And splash and water resistant.* iPhone 7 dramatically improves the most important aspects of the iPhone experience.
மாதாந்தம் ரூ.6,200/-* இலிருந்து
(ஆரம்ப விலை ரூ.119,999/-)
(பெக் கவர் மற்றும் திரைப் பாதுகாப்பு டெம்பர்ட் கிளாஸ் இலவசம்.)
20 மாதங்களுக்கு வட்டியின்றிய தவணைமுறை கொடுப்பனவு
*அனைத்து வர்ணங்களிலும் கிடைக்கும்
32GB, 128GB & 256GB
iPhone 7 & iPhone 7 Plus
Nations TrustBank
* iPhone 7 and iPhone 7 Plus are splash, water, and dust resistant and were tested under controlled laboratory conditions with a rating of IP67 under IEC standard 60529. Splash, water, and dust resistance are not permanent conditions, and resistance might decrease as a result of normal wear. Do not attempt to charge a wet iPhone; refer to the user guide for cleaning and drying instructions. Liquid damage not covered under warranty.
நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
துரித அழைப்புக்கு : 011-5 999 000
சங்கானை RC1 - 021 2250106, சுன்னாகம் RC1 - 021 2240440, யாழ்ப்பாணம் RC1 - 021 2220981, யாழ்ப்பாணம் RC2 - 021 5776153, வவுனியா RC1 - 024 2224878, மன்னார் RC1 - 023 2251193, மட்டக்களப்பு RC1 - 065 2227895, மட்டக்களப்பு RC2 - 065 2224218, கல்முனை RC1 - 067 2229089, திருகோணமலை RC1 - 026 2226371


50% வரை விலைக்கழிவு
சொவ்ட்லொஜிக் சகிதம் நத்தார்
52 + 25%
மாதங்கள் வரை வட்டியற்ற திட்டம்
வரை விலைக்கழிவு
SampathCards
உரிமையாளர்களுக்கு மாத்திரம்
வெகுமதிகள் மற்றும் வழங்கல்
வட்டியற்ற இலகு கொடுப்பனவுத் திட்டங்கள்
20 + 40%
மாதங்கள் வரை வட்டியற்ற திட்டம்
வரை விலைக்கழிவு
Nations TrustBank
உரிமையாளர்களுக்கு மாத்திரம்
SAMSUNG LED TV | 32"
UA32FH4003RMSG
• HyperReal Engine
• More Vibrant Colours
• Watch Movies from Your USB
3 வருட நீண்ட கால உத்தரவாதம்
இலவசம்
Samsung மொபைல் போன் B110
சாதாரண விலை ரூ. 51,499/-
மாதந்தம் ரூ. 3,262/-
விசேட பணவிலை ரூ. 36,099/-
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
விசேட பணவிலைக்கு இலவச வழங்கல் இல்லை
Panasonic LED TV 32" IPS LED
TH-32D400S
• 200Hz Backlight Motion Rate
• Adaptive Backlight Dimming
இலவசம்
மிக்சர் கிரய்ண்டர்
Maxmo MX-TRENDY
சாதாரண விலை ரூ. 53,599/-
மாதந்தம் ரூ. 3,395/-
3 வருட நீண்ட கால உத்தரவாதம்
விசேட பணவிலை ரூ. 36,099/-
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
SAMSUNG MOBILES
SM-J510F (Galaxy J5 - 2016)
• Ultra-slim metallic body
• 5.2" Super AMOLED Display
• 13.0 MP Camera
சாதாரண விலை ரூ. 36,600/-
விசேட பணவிலை ரூ. 30,670/-
மாதந்தம் ரூ. 4,168/-
6 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
SM-J710F (Galaxy J7 - 2016)
• 5.5" Super AMOLED Display
• 13.0 MP Camera
• Quad-core 1.6 GHz Cortex Processor
சாதாரண விலை ரூ. 38,850/-
விசேட பணவிலை ரூ. 36,298/-
மாதந்தம் ரூ. 4,934/-
6 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
Panasonic AUDIO SYSTEMS
Bluetooth
SA/SB-MAX5000GS
• Ultra Powerful Bass
• MAX Dance Illumination
• MAX Jukebox
சாதாரண விலை ரூ. 102,999/-
மாதந்தம் ரூ. 5,493/-
விசேட பணவிலை ரூ. 92,699/-
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
2 வருட நீண்ட கால உத்தரவாதம்
Bluetooth
Power Output
SA/SB-MAX7000GS
• AIRQUAKE BASS
• MAX Dance Illumination
• MAX Jukebox
சாதாரண விலை ரூ. 149,399/-
மாதந்தம் ரூ. 7,968/-
விசேட பணவிலை ரூ. 128,799/-
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
2 வருட நீண்ட கால உத்தரவாதம்
Whirlpool குளிரூட்டிகள்
REFWTM240RT/IB
• Twister Ice Tray
• Anti-bacterial Gasket
• Anti-spill Glass Shelves
சாதாரண விலை ரூ. 74,599/-
விசேட பணவிலை ரூ. 62,199/-
இலவசம்
மிக்சர் கிரய்ண்டர்
Maxmo Grinder
18 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
DELL Inspiron 5567 Core i5 7th Gen.
இலவசம்
ரூ. 26,499/-
பெறுமதி வாய்ந்த பரிசுகள்
Windows 10
Dell original Backpack
McAfee Virus Guard
7th Generation Intel® Core™ i5 Processor
•4GB RAM | •2GB VGA | •1TB HDD
•15.6-inch HD Truelife LED-backlit Display
4 வருட நீண்ட கால உத்தரவாதம்
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
சாதாரண விலை ரூ. 127,999/-
விசேட பணவிலை ரூ. 112,999/-
மாதந்தம் ரூ. 7,680/-
acer explore beyond limits
Aspire E5-575G
இலவசம்
ரூ. 2,499/-
பெறுமதி வாய்ந்த
4 வருட நீண்ட கால உத்தரவாதம்
7th Generation Intel® Core™ i3 - 7100U Processor
•4GB RAM | •1TB HDD
•15.6-inch HD LED-Backlight TFT Screen
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
சாதாரண விலை ரூ. 79,999/-
விசேட பணவிலை ரூ. 69,999/-
மாதந்தம் ரூ. 4,800/-
Panasonic ஹோம் சவர்
DH-3JL2WH
• Power Input 3.5kW
• 9 Safety Features
சாதாரண விலை ரூ. 17,699/-
விசேட பணவிலை ரூ. 16,599/-
மாதந்தம் ரூ. 1,327/-
12 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
Panasonic மிக்சர் கிரய்ண்டர்
MX-AC300
• 3 Jars • 350W Long Lasting Motor
• Double Safety Lock System
சாதாரண விலை ரூ. 13,799/-
விசேட பணவிலை ரூ. 12,499/-
மாதந்தம் ரூ. 1,035/-
12 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
Panasonic கிரய்ண்டர்
MK-SW200
• Food Hygiene Drum
• Interlocking Safety System
சாதாரண விலை ரூ. 22,999/-
விசேட பணவிலை ரூ. 19,599/-
மாதந்தம் ரூ. 1,725/-
12 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
Whirlpool சலவை இயந்திரம்
7.0kg
WWT-78X
• Twin Tub
• Mini Pulsators
• Dual Wash Speed
சாதாரண விலை ரூ. 29,099/-
விசேட பணவிலை ரூ. 27,499/-
மாதந்தம் ரூ. 1,746/-
15 மாதங்களில் வட்டியின்றி செலுத்துக
உத்தரவாதம் பெற்ற விநியோகஸ்தர்
011 5 705 705
சொவ்ட்லொஜிக் உத்தரவாதம் சகிதம்
WESTERN UNION WU
moving money for better
softlogic
சொவ்ட்லொஜிக் மெக்ஸ் மற்றும் சொவ்ட்லொஜிக் காட்சியறைகளிலும் வாங்கலாம்.

# சு.கவை பிளவடையச் செய்யவேண்டாம்

## மகிந்தவிடம் கட்சியின் இளைஞரணி கோரிக்கை

கொழும்பு, நவ.20

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்யும் பாவச் செயலில் ஈடுபட வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்சவிடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் இளைஞர் முன் னணி இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளது.

கட்சியை பிளவடையச் செய்வதால் அதன் நன்மைகள் சுதந்திரக் கட்சிக்கோ அதன் உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கோ கிடைக்கப் பெறாது என இளைஞர் முன்ன ணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்த வகையிலும் சவா லாக அமையாது. மகிந்த ராஜ பக்சவின் பெயரை விற்று சிலர் அரசியல் லாபமீட்ட முயற்சிக்கின் றனர்.

எவ்வாறான சவால்கள் வந்தாலும் சுதந்திரக் கட்சியை வலுப்பெறச் செய்யும் முயற்சிகள் கைவிடப் படாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி யைப் பிளவடையச் செய்யும் பாவச் செயலில் ஈடுபட வேண்டாம். - என் றார். (ற)

# நீரில் மூழ்கி சீன நபர் சாவு

கொழும்பு, நவ.20

வெலிகம பிரதேசத்தில் கடலில் நீராடிக் கொண்டிருந்த சீனநாட்டவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். குறித்த நபர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது. 29 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, கொழும்பு - பதுளை பிரதான வீதியில் ஹல்பே பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 பேர் காயமடைந்தனர்.

இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று சமனலவேவ பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பலாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ற)







# மாசி வடை





### எந்தவொரு உணவையும் சிறப்பாக்கும் சுவையின் ரகசியம்!

எமது வேலைப்பளு மிக்க வாழ்க்கையினால் நாம் சில விடயங்களை கைவிடுகின்றோம். ஆனால் இந்த வேலைப்பளுவினால் குடும்பத்தின் இனிமையான எதிர்பார்ப்புக்களை இல்லாமல் செய்ய எமது பெண்கள் தயாராக இல்லை. எனவேதான் எமது பெண்களின் பணிகளை இலகுவாக்கும் அதேவேளை, சமைக்கும் உணவின் சுவையை தினமும் அதிகரிக்க Knorr மாசி பவுடர் கலவை உங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எமது பெண்களில் பலர் மாசியை ஒரு சுவையூட்டியாக உணவுகளில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இருந்தும் கடையிலிருந்து மாசியை பெரிய துண்டுகளாக கொண்டு வந்து சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்வதற்கு அதிக வேலைப்பளு காரணமாக பலருக்கு நேரம் இல்லை. சில கடைகளில் மாசி துண்டுகளாக கிடைத்தாலும் அவற்றை தூளாக்குவதில் உள்ள சிரமம் காரணமாக நாம் மாசியை சம்பல் அல்லது கறிக்கு மட்டுமே பயன்படுத்தப் பழகியுள்ளோம்.

ஒரே மாதிரியான உணவை எவரும் தினமும் உண்ண விரும்புவதில்லை. ஒரு நாளைக்கு பொறித்து, இன்னொரு நாளைக்கு சமைத்து, இல்லாவிடின் சுண்டி, தாளித்து, அதுபோலவே பெட்டர் செய்து சாப்பிடத்தான் நாம் அனைவரும் விரும்புகின்றோம். பல்வேறு வகையிலான உணவுகளுக்கு மாசி கலக்கப்பட்டதும் அதன் சுவை அதிகரிக்கின்றது. அதனால்தான் உண்மையான மாசி மற்றும் தரம் மிக்க மசாலாத் தூள்களைக் கலந்து Knorr மாசி கலவை, பவுடர் வடிவில் உங்களுக்குக் கிடைக்கின்றது. எனவே பல்வேறு வகையான உணவுகளை இலகுவாகவும், சுவையாகவும் தயாரிக்க விரும்பும் நீங்கள், சமைக்க, பொரிக்க, சுண்ட, தாளிக்க மற்றும் பெட்டர் செய்யவும் Knorr மாசி பவுடர் கலவையை இலகுவாக பயன்படுத்தலாம்.

உங்கள் குடும்பத்தின் அன்புக்குரியவர்கள் விரும்பும் எந்தவொரு உணவையும் அவர்கள் விரும்பும் விதமாக சுவையாகவும், குணமுள்ளதாகவும் தயாரித்துக்கொண்டால் உங்களுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியைப்போலவே அன்புக்குரியவர்களும் மகிழ்வது Knorr குடும்பத்தினராகிய எமக்கு மிகவும் பெருமையாகும். எனவே நீங்களும் இன்றே Knorr மாசிப் பவுடர் கலவையை பயன்படுத்தி அருமையான சுவையை அனுபவியுங்கள்.

**சத்துரிகா அனுராதா**
Knorr Chef

**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| கடலைப் பருப்பு | 500g | கருவேப்பிலை | ஒரு பிடி |
| பச்சை மிளகாய் | 3 - 4 | காய்ந்த மிளகாய் துண்டுகள் | 2 மேசைக்கரண்டி |
| வெங்காயம் | 2 | பொரிப்பதற்காக எண்ணெய் | |
| நோர் மாசி பவுடர் கலவை | 3 பக்கட் | | |

**செய்முறை**

1. கடலைப் பருப்பைக் கழுவி, 2 அல்லது 3 மணித்தியாலங்கள் நன்றாக ஊற வையுங்கள்.
பின் நன்றாக வடிகட்டிக்கொள்ளுங்கள்.
2. பின்னர் எண்ணெயைத் தவிர கடலை பருப்பு மற்றும் ஏனைய அனைத்து பொருட்களையும் போட்டு உரல் அல்லது கிரைண்டரில் நன்றாக அரைத்துக்கொள்ளுங்கள். உப்பு பதத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.
3. அரைக்கப்பட்ட கலவையை சிறிது சிறிதாக எடுத்து உருண்டை பிடித்துக்கொள்ளுங்கள்
4. எண்ணெயை நன்றாக கொதிக்க வைத்தபின் வடைகளை ஆழமான எண்ணெயில் பொரித்தெடுத்து சூடாகப் பரிமாறவும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக அகற்றப்படவேண்டும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தப் போகிறார் என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறியிருப்பது தமிழர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை மீண்டும் கிளறியிருக்கிறது.

மட்டக்களப்பில் விகாராதிபதி சுமரணத்தின தேரர், தமிழ் அதிகாரிகளுக்கு எதிராக தூசணையுடன் கூடிய இன நிந்தனையைச் செய்தது மற்றும் பொது பல சேனா கொழும்பில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை முழக்கமிட்டது போன்ற பின்னணிகளில் நீதி அமைச்சரின் கருத்து வெளிவந்துள்ளது. இவ்வாறு சிறுபான்மை இனங்களுக்கு எதிராக நடந்துகொள்வோரைக் கட்டுப்படுத்தவும், இன, மத வன்முறைகளைத் தூண்டி குருதி ஆறு ஓட இனியொருபோதும் இடமளிக்க முடியாது என்பதை வலியுறுத்துவதற்காகவும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைத்தீவிரமாகப்பயன்படுத்துவோம் என்று உறுமியுள்ளார் நீதி அமைச்சர்.

"இதுவரை பயன்படுத்தப்படாதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இனிவரும் காலங்களில் நடைமுறைப்படுத்துவோம்" என்றும் அவர் கூறியுள்ளார். நீதி அமைச்சரின் இந்தக் கருத்து எவரை மனதில் இருத்திக் கூறப்பட்டது என்கிற கேள்வி எழுகிறது.


கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டேதான் வருகிறது. கடந்த வாரம்கூட அந்தச் சட்டத்தில் கீழ் வடக்கில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எதிராக "விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்றார்கள்" என்கிற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நீதி அமைச்சர் "பயன்படுத்தப்படாதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம்" என்று குறிப்பிட்டிருப்பது சிங்கள மக்களை மனதில் கொண்டுதான் என்றே எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னர் சிங்கள மக்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை. அதனாலேயே நீதி அமைச்சர் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கக்கூடும்.

ஆனால், பன்னாட்டுச் சமூகம் என்ன சொன்னாலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கைக்குத் தேவையானது என்கிற சாரத்தையும் நீதி அமைச்சர் கூறியிருக்கிறார்.

அவரது கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டம் மிகக் கொடூரமானது. அது தேவைக்கதிகமான அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்குகின்றது. அதனால் அவர்கள் அதிகார மீறல்களில் ஈடுபடுகிறார்கள். சித்திரவதை செய்கிறார்கள். துன்புறுத்துகிறார்கள். நிரூபிக்கப்பட முடியாத குற்றச்சாட்டுக்களின் கீழ் பல மாதங்களுக்குச் சிறையில் தள்ளுகிறார்கள். இவை எல்லாம் நிறுத்தப்பட வேண்டும். இந்தச் சட்டத்தால் கடந்த 30 வருடங்களாகக் கடும் துன்பத்தை அனுபவித்தவர்கள் தமிழர்கள். இன்னும் கூட பல தமிழ் அரசியல் கைதிகள் இந்தச் சட்டத்தின் கீழ்த்தான் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுவிப்பதாக அளித்த வாக்குறுதியையே நிறைவேற்றாது நிற்கின்றது இந்த அரசு.

அப்படிப்பட்ட கொடூரச்சட்டத்தைத் திருத்துவதை அல்லது அதற்குப்பதிலாகப் புதிய சட்டத்தைக் கொண்டு வருவதை மனித உரிமைகள் அமைப்புகளும் கண்டித்துள்ளன. அந்தச் சட்டம் பல கொடூரங்களுக்கு இடமளிப்பதால், அது முற்றாக ஒழிக்கப்படவேண்டும். சுமணரத்தின தேரருக்கும், பொதுபல சேனாவுக்கும் எதிராக உறுதியான நடவடிக்கைகளைச் சாதாரண சட்டங்களில் கீழ் மேற்கொண்டே அமைதியை நிலைநாட்டிவிட முடியும் அப்படியிருக்கையில், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை துணைக்கழைப்பது ஏற்புடையதல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக ஒழிக்கவேண்டுமே தவிர, அதனை வலுப்படுத்தும் விதத்தில் இந்த அரசு செயற்படக்கூடாது.



**மகளிர், முஸ்லிம்கள், லத்தீன் அமெரிக்கர்கள், ஆபிரிக்க அமெரிக்கர்கள், தன்பாலின உறவாளர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரை மட்டம்தட்டிப் பேசும் இயல்புள்ளவர் என்பதால், பரந்த சிந்தனையுள்ள அமெரிக்கர்கள் ட்ரம்பை விமர்சிக்கத் தகுதிபெற்றவர்கள்.**

அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்டு ட்ரம்ப் அதிர்ச்சி தரத்தக்க வகையில் வெற்றி பெற்றதிலிருந்தே, எதிர்ப்புப் பேரணிகளால் அமெரிக்கா அதிர்ந்துகொண்டே இருக்கிறது. இதை 'வெள்ளைச் சின அலை' என்றும், 'வெள்ளைச் சவுக்கடி' என்றும் வர்ணிக்கிறார்கள். கடந்த தேர்தலுக்குப் பிறகு வெள்ளையர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒரு பக்கமும், மற்றவர்கள் இன்னொரு பக்கமும் அணி திரண்டுள்ளனர்.

இது மூன்றுவித கருத்துக்களை உருவாக்கியுள்ளது. முதலாவதாக, தேர்தல் முடிவைக் கணிப்பதில் வல்லுநர்களும் ஊடகங்களும் ஏன் இப்படி வெள்ளை இன உடல் உழைப்புத் தொழிலாளர்களின் கோபத்தை எப்படிக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், முடிவைக் கணித்தார்கள் என்ற திகைப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. வெள்ளை இனத் தொழிலாளர்கள் அதிகம் வாழும் மாகாணங்களின் வாக்குகள்தான் ட்ரம்புக்கான வெற்றியை உறுதிசெய்துள்ளன.

### வெறுப்பின் வளர்ச்சி


இரண்டாவதாக, ட்ரம்பின் வெற்றி காரணமாக பிற மத வெறுப்பாளர்கள், சிறுபான்மைச் சமூகத்தவர்களை பல வழிகளில் தாக்கியுள்ளனர்.

மூன்றாவதாக, ட்ரம்ப்பினது வெற்றியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். பெருநகரங்களிலும் புறநகர்களிலும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக நடந்தன. சமூக வலைத் தளங்களில், கண்டனங்கள் அதிகரித்தன.


நிறவெறி கொண்ட பல்வேறு தரப்பினர் ட்ரம்பை ஆதரித்தார்கள் என்பது உண்மைதான். ட்ரம்பின் பேச்சும் இவர்களை ஆதரவாளர்களாக்கிவிட்டது. இது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மகளிர், முஸ்லிம்கள், லத்தீன் அமெரிக்கர்கள், ஆபிரிக்க அமெரிக்கர்கள், தன்பாலின உறவாளர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரை மட்டம்தட்டிப் பேசும் இயல்புள்ளவர் என்பதால், பரந்த சிந்தனையுள்ள அமெரிக்கர்கள் ட்ரம்பை விமர்சிக்கத் தகுதி பெற்றவர்கள். அதேவேளை, நல்ல அமெரிக்கர்களும் ட்ரம்பை நோக்கி ஓடியதைக் கவனிக்க முடிந்தது. அது ஏன் என்று சிந்திக்க வேண்டும்.

வாசகர் திருமுகம்



# உலகையே அதிர்ச்சியடைய வைத்த ட்ரம்பின் வெற்றி




**போராடுங்கள், கவனியுங்கள்**

ஜனநாயகக் கட்சிக்காரர்கள் செய்த இரண்டாவது பெரிய தவறு, தங்கள் நிலையிலிருந்து மாறாமல் உறுதியாக நின்றதுடன், ஒபாமா தங்களைக் காக்க வருவார் என்று காத்திருந்ததுதான். அவர்கள் உணர வேண்டியது என்னவென்றால், ஒரு காலத்தில் தொழில்வளர்ச்சி கண்ட மாநிலங்களாக இருந்த இந்தக் கடலோர மாநிலங்கள், மூன்று முறை தங்களுடைய எதிர்காலம் வளமடையும் என்ற நம்பிக்கையில் புதியவர்களுக்கு அடுத்தடுத்து வாக்களித்திருக்கின்றன.

இவர்களுடைய கோரிக்கைகள் என்ன, இவர்கள் ஏன் விரக்தி அடைந்திருக்கிறார்கள் என்று பேசி, புரிந்து கொண்டால்தான் தங்களுக்கு ஆதரவைப் பெருக்கிக் கொள்ள முடியும். அப்படி இல்லாவிட்டால், வெள்ளை மாளிகையில் ஒரு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அதிபராக அமர்ந்தால்கூட, இவர்களுடைய வாக்குகள் இப்போதுள்ள நிலையிலேயே தொடரும். தங்களுடைய அகங்காரத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, எதிர்த்து வாக்களித்தவர்களை அழைத்துப் பேசி ஆதரவாளர்களாக மாற்றுவதே கட்சியை வலுப்படுத்தும்.

> ஒரு காலத்தில் தொழில்வளர்ச்சி கண்ட மாநிலங்களாக இருந்த இந்தக் கடலோர மாநிலங்கள், மூன்று முறை தங்களுடைய எதிர்காலம் வளமடையும் என்ற நம்பிக்கையில்புதியவர்களுக்கு அடுத்தடுத்து வாக்களித்திருக்கின்றன.

**சுய பரிசோதனைக்கான காலம்**

குடியரசுக் கட்சியின் வழமையான ஆதரவாளர்களுக்கும், ட்ரம்பின் சீண்டல் பேச்சால் உற்சாகமடைந்த ஆதரவாளர்களுக்கும் இடையில் பெருத்த பிளவை ட்ரம்பின் வெற்றி ஏற்படுத்தியிருக்கிறது. அரசியலில் வெற்றிபெற வெள்ளை மாளிகையின் ஆதரவு ட்ரம்புக்கு அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தேவைப்படுகிறது.

ட்ரம்பைப் பதவி நீக்கம் செய்ய, அவருக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. உணர்ச்சிவசப்பட்டுச் செயல்படும் இயல்புள்ள ட்ரம்ப், அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கே ஆபத்தாக விளங்கக்கூடும். அப்படி நடந்தால், நாடாளுமன்றமே அவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு வாய்ப்பாகிவிடும்.

அதிகார நடவடிக்கையில் வழமையான நடைமுறைமையைக் கடைப்பிடிக்கத் தான் விரும்பவில்லை என்று ட்ரம்ப் கோடி காட்டியிருக்கிறார். இடைக்கால ஏற்பாட்டுக் குழுவில் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளத் தயாராகி வருகிறார். சொந்த நலனுக்காக விதிகளைக்கூட அவர் வளைக்கக் கூடும். தன்னுடைய மனைவணிக வியாபாரத்துக்கு அவர் சலுகைகள் செய்யக்கூடும்.

இவ்விதம் அவர் செயற்பாட்டால், அவரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தைக் கொண்டுவருவது மிக எளிது. எது நடந்தாலும், ஜனநாயகக் கட்சியினர் தங்களைப் புதுப்பித்துக்கொள்ள அவகாசம் கிடைக்கும். டரம்பை எதிர்த்து நிற்க, ஜனநாயகக் கட்சியினர் முதலில் தங்களுக்குள் ஆத்ம பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

(நன்றி:*தி-இந்து*)

## திருமுறைகளை முறையாக ஓதுவோம்

ஆலயங்களில் மகோற்சவ காலங்களிலும், விசேடபூசை வழிபாடுகளின் போதும் திருமுறைகள் பஞ்சபுராணமென வகைப்படுத்தி பாராயணம் பண்ணப்பட்டு வருகின்றன. பஞ்சபுராணத்தில் அடங்குபவை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பவையாகும். இவற்றை முறையாக ஓதுவதே மரபு. பெரியபுராணம் என்பது இறைவன் 'உலகெலாமென' அடியயடுத்துக் கொடுக்க, சேக்கிழார், இதனை முதலாகக் கொண்டு என்றும் இன்பம் பெருகும் இயல்பால் என்ற புராணத்தை நிறைவாகப் பாடியவற்றுள் அடங்குபவை. இவற்றுள் ஒன்றையே பஞ்ச புராணத்தில் ஓதவேண்டும். பெரியபுராணத்தை ஓதியபின்னரே விநாயகர், முருகன், அம்பாள் முதலான ஏனைய தெய்வங்கள் மேல் பாடப்பெற்ற தோத்திரங்களை ஓதவேண்டும். திருமுறைகளை இறைவன் சந்நிதானத்தில் விண்ணப்பிக்கும்போது பாடப்பட்ட வரிகளை மீண்டும் மீண்டும் பாடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். பொதுவாக திருமுறை ஓதப்படும்போது காணப்படும் சில சொற் பொருட் குற்றங்கள்.

1. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்பதை ஓதுதற்கரியவன் என்பது;
2. கண்ணிரண்டு குளிர்ந்தனவே என்பதை கண்களிரண்டு குளிர்ந்தன என்பது;
3. ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலம் என்பதை தில்லைச் சிற்றம்பலம் என்பது;
4. பூத நாயகன் நால்வேதமும் பொருளும் அருளி என்பதை பூதநாயகனால் என்பது; போன்றவையாகும்.

திருமுறைகளை ஓதமுன்னர் ஓதவிரும்பும் தேவாரங்களை அவற்றுக்குரிய மூல நூல்களிலிருந்து தெரிந்து, அவற்றை விளங்கி ஓதினால் இவ்வாறான சொற்பொருள் பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். எனவே திருமுறைகளை மரபுமீறாமல் சொற்குற்றம், பொருட்குற்றம் என்பவற்றைத் தவிர்த்து ஓதி இறைவன் திருவருளைப்பெறுவோம்.

சு.ஏழூர்நாயகம், பன்னாலை.

## மலசலகூடம் உரிய முறையில் பேணப்படாததேன்?

சங்கானை மரக்கறிச் சந்தைக்கு மரக்கறி விற்பனையாளர்கள், கொள்வனவு செய்வோர், பொதுமக்கள், வியாபாரிகள் என ஒருநாளைக்கு நூற்றுக்கு மேற்பட்டோர் வருகை தருகின்றனர். இவர்களின் பாவனைக்குதவாத நிலையில் அங்குள்ள மலசலகூடம் காணப்படுகிறது. அதனைப் பயன்படுத்தும் மக்கள் பாவனைக்குத் தேவையான தண்ணீரைப் பெறமுடியாமலுள்ளனர். அங்குள்ள தண்ணீர்ப் 'பைப்'புகளும் விசமிகளால் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் இயற்கைக் கடன் கழிப்போர் மலசல கூடத்துக்கு வெளியே இயற்கைக் கடன் கழிக்கின்றனர். இதனால் மலசல கூடம் அமைந்துள்ள எல்லையில் உள்ள ஓடக்கரை வீதியால் எவருமே செல்லமுடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகின்றது. இந்த வீதியில் வர்த்தக நிலையங்கள் வைத்திருப்பவர்களும் மூக்கைப் பொத்தியபடி தான் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்

மு.சந்திரகுமார்.
சங்கானை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.



மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்

# நோய் ஒன்றின் அறிகுறியான காய்ச்சலின் முக்கியத்துவம்

குழந்தைகளுக்கு ஏதாவது உடல் நிலை சரியில்லை என்றால் பெற்றோர் பயப்பட்டு வைத்தியரிடம் குழந்தையை உடனடியாக கொண்டு செல்வது இயல்பானதே. அதிலும் மிகப் பொதுவான உடல்நிலைக் குறைபாடு காய்ச்சல் என்பதேயாகும். சில சமயங்களில் காய்ச்சல் தொடங்கியவுடனேயே பெற்றோர் குழந்தையை வைத்தியரிடம் கொண்டு செல்வதை அவதானிக்கலாம். அது நல்லது தான். ஏனெனில் காய்ச்சலுக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றை கண்டறிய வேண்டும், ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளைக்கு காய்ச்சல் நிவாரணி மருந்தைத் தவிர (பரசிற்றமோல்) வேறு மருந்துகள் தேவைப்படுவதில்லை. முதலில் காய்ச்சல் என்பதை மருத்துவ ரீதியில் வரைவிலக்கணப்படுத்தினால், வெப்பநிலையானது உடல் வெப்பமானியில் அளவிடும்போது அது 100.4 பாகை பரனைட் அல்லது 38 பாகை செல்சியசைவிட கூடும் போதே குறிப்பிடத்தக்க காய்ச்சல் உள்ளது எனலாம். ஒருவரது சாதாரண உடல் வெப்பநிலையானது 98.6 பாகை பரனைட் அல்லது 37 பாகை செல்சியஸ் ஆகும். எனவே உடல் வெப்பநிலை சாதாரண நிலையை விட அதிகரிக்கும் போது குழந்தையின் உடல் வெப்பநிலையை அடிக்கடி சோதித்துப் பார்ப்பது நல்லது.

காய்ச்சல் என்பது, உடலில் ஏற்படும் நோய்களுக்கு எதிரான எமது உடலில் ஏற்படும் எதிர்த்தாக்கத்தின் விளைவேயாகும். எனவே கடும் காய்ச்சல் காணப்படும் போது நோயின் தாக்கம் அதிகமாகவுள்ளது எனத் தீர்மானிக்கலாம்.

குழந்தைகளைப் பொறுத்தவரையில், புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு காய்ச்சல் என்ன வெப்ப நிலையில் இருந்தாலும் அதைப் பாரதூரமாகக் கருதி உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அதேபோல் ஒரு மாதம் தொடக்கம் மூன்று மாதம் வரை காய்ச்சல் 38 பாகை செல்சியஸ் (100.4 பாகை பரனைட்) அளவுக்குள் இருத்தல் வேண்டும். மூன்று மாதத்துக்கு மேல் 39 பாகை செல்சியஸ் (102.2 பாகை பரனைட்) அளவை விட உடல் வெப்பநிலை அதிகமாயின் மிக முக்கியமான நோய் ஏற்பட்டுள்ளது எனலாம். வெப்ப நிலையின் அளவைப்போல் காய்ச்சல் காணப்படும் காலமும் முக்கியமானதாகும். சாதாரணமாக ஏற்படும் வைரசு தொற்றுக்கள் 4 தொடக்கம் 5 நாள்களில் மாறிவிடும். எனினும் டெங்குக் காய்ச்சல் அதிகமாக ஏற்படும் காலங்களில் இரண்டு நாள்களின் மேல் காய்ச்சல் காணப்படுமாயின் குருதிப் பரிசோதனை செய்தல் அவசியமாகும். ஒரு குழந்தைக்கு நீண்ட நாள்களுக்கு (குறிப்பாக 7 நாள்களுக்கு) மேல் காய்ச்சல் காணப்பட்டால் வைத்தியசாலையில் அனுமதித்தே சிகிச்சை வழங்க வேண்டும்.

முன்னர் கூறியவாறு காய்ச்சல் என்பது பலவித நோய்களின் ஓர் அறிகுறியாக அமைவதால் குழந்தைக்கு பாரதூரமானநோய் உள்ளது என்பதைப் பின்வரும் ஏனைய அறிகுறிகள் மூலம் தீர்மானிக்க வேண்டும்.

01. குறிப்பிடத்தக்க அளவில் உணவு உட்கொள்ளாமை அல்லது பால் அருந்தாமை.
02. பொதுவான உடல்நிலை காணப்படாமை (சோர்வு, மயக்கம்)
03. வெளிறிய தோற்றம் அல்லது உடலின் சாதாரண நிறத்தில் மாற்றம்.
04. கை, கால்கள் குளிர்வடைந்து காணப்படல்.
05. அதிகமான வாந்தி, வயிற்றோட்டம்.
06. சிறுநீர் கழிக்கும் அளவு குறைவடைதலும், சிறுநீர் கழிக்கும் போது எரிவு ஏற்படலும்.
07. மூச்சுத் திணறல், மூச்சு விட சிரமப்படல்
08. வலிப்பு ஏற்படல்
09. உடலில் அதிகமாக செம்புள்ளிகள், கொப்புளங்கள் அல்லது கருநீல நிற தளும்புகள் ஏற்படல்.
10. அவயவத்தை அல்லது மூட்டை அசைக்க முடியாமையும் மூட்டு வீங்குதலும்
11. கடுமையான வயிற்றுவலி.
12. கடுமையான தலையிடியும், வாந்தியும்
13. குருதியாக வாந்தி எடுத்தல் குருதி கலந்த மலங்கழித்தல் அல்லது முரசால் மூக்கால் குருதிக் கசிவு.

மேற்கூறிய அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு செல்லவேண்டும்.

காய்ச்சலைக் கட்டுப்படுத்த நாம் உடனடி நிவாரணியாக பரசிற்றமோல் எனும் மருந்தையே சாதாரணமாக பாவிக்கின்றோம். குழந்தைகளைப் பொறுத்தவரை நிறைக்கேற்றவாறு சரியான அளவில் பாவிக்க வேண்டும். அதிகளவில் பரசிற்றமோல் மருந்தை குழந்தைகள் உட்கொண்டு ஈரல் பழுதடைந்து பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதை இப்போதும் நாம் காண்கின்றோம். மேலும் டெங்கு காய்ச்சலும் காணப்படுவதால் பரிசிற்றமோல் தவிர ஏனைய காய்ச்சல் நிவாரண மருந்துகளை பாவிப்பது நல்லதல்ல. (உ+ம் Iuprofen)

**வெப்ப நிலையின் அளவைப் போல் காய்ச்சல் காணப்படும் காலமும் முக்கியமானதாகும். சாதாரணமாக ஏற்படும் வைரசு தொற்றுக்கள் 4 தொடக்கம் 5 நாள்களில் மாறிவிடும்.**

சில சமயங்களில் காய்ச்சலை குறைக்க அறை வெப்பநிலையிலுள்ள நீரால் நனைந்த துணியால் உடம்பைத் துடைக்கலாம். எனினும் குழந்தைகளுக்கு இந்த முறையானது காய்ச்சலைக் குறைப்பதையும் விட அசௌகரியத்தையும் ஏற்படுத்தும். எனவே காய்ச்சலுக்கான சரியான காரணத்தைக் கண்டறிந்து அதற்கான உரிய சிகிச்சையை வழங்க வேண்டும்.

இறுதியாக குறைந்தபட்சம் எமக்கு தெரிந்திருக்க வேண்டிய விடயம் காய்ச்சல் குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற வேளையில் அது கடும் காய்ச்சலாக இல்லாதவிடத்தில் அதன் சாதாரண உடல்நிலை காணப்படுமாயின் அல்லது சாதாரண துடியாட்டம், தொழிற்பாடு காணப்படுமாயின் அதிகம் நாம் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் முன்னர் கூறிய ஆபத்தான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும்.

குழந்தை நல வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.



# சூரியகாந்தி

உதயன் 20.11.2016






பக். 28

அருகும் பந்தி




தமிழரை இலகுவில் ஏமாற்றிவிட முடிகிறது

பக். 29


உயிர் பறிக்கும் இயற்கை

பக். 23




# சுமணரத்ன தேருக்கு

## பகிரங்க மடல்



அன்புள்ள மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் சுவாமி அவர்களுக்கு, எனது அன்பும் ஆன்மிகமும் கலந்த வணக்கங்கள்!



தாங்கள் தேக சுகத்துடன் இருப்பதைக் காண்பதற்கான காணொலியை முகநூல் வாயிலாகப் பார்ப்பதற்கு எனக்கு வாய்த்திருந்தது. ஆனால், அதுவே தங்களின் மனநல ஆரோக்கியம் தொடர்பில் சங்கப்படவும் சந்தேகப்படவும் வைத்திருக்கிறது. ஊடகங்களுக்குத் தீனி போடுவதற் கென்றே தெற்கிலும் வடக்கிலும் சில அரசியல் தலைகள் இருக்கின்றன. அவற்றின் வரிசையில் 'புதுசு கண்ணா புதுசு' என்பது போல நீங்களும் உங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கிறீர்கள்.

ஆனாலும் இது உங்களுக்கு முதற்தடவையன்று. ஆயுதங்கள் இன்றி, பேனா முனையுமின்றி வெறும் விசைப்பலகையும் கணினிச்சுட்டி சகிதமுமாக கருத்துப் போர் நடத்துபவர்களின் கைகளில் உங்கள் காணொலி சிக்கிப் பரம்பலடைந்து வருவது உங்களுக்கான பிரபல்யத்தை அதிகரித்திருக்கிறது.

மட்டக்களப்பு மங்களாராமய விகாரையிலிருந்து மங்கலகரமான காரியங்களை ஆற்றுவதற்காக அமர்த்தப்பட்ட உங்களிடமிருந்து அமங்கலமான வார்த்தைகளைக் காது கூசக் கேட்கும்படியான நெருக்கிடை ஒன்றை ஏற்படுத்தியிருந்தீர்கள். குறித்த காணொலியில் நான் கண்ட வில்லத்தனம், என்னுடைய பாடசாலைக் காலத்தில், 'புத்தரும் ஏழைச்சிறுவனும்' என்கிற பாடப்பரப்பில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட 'ஆசிய ஜோதி' என்னும் புத்தகத்தில் கற்று மனத்தில் பதித்து வைத்திருந்த பௌத்தமதம் பற்றிய பிம்பத்தைச் சுக்குநூறாக உடைத்துப் போட்டிருக்கிறது.

"ஓடும் உதிரத்தில், வடிந்து ஒழுகும் கண்ணீரில், தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ அப்பா! எவர் உடம்பினிலும் சிவப்பே குருதி நிறமப்பா! எவர் விழி நீர்க்கும்–உவர்ப்பே இயற்கைக் குணமப்பா!"

என்று ஆடு மேய்க்கும் சிறுவனொருவனுக்குப் புத்தர் போதித்ததாக ஆசியஜோதி கூறி நிற்கையில், புத்தரின் அவதாரங்களாக அவதரித்த நீங்கள் உதட்டினால் உமிழ்ந்த நச்சு வசனங்கள் காவியுடைக்குள் தாவிப்புகுந்து கொண்ட சில தாழ்வகை மிருகங்களை ஞாபகப்படுத்தி நிற்கின்றன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் தனக்குரிய மரியாதையைச் செலுத்தத் தவறிய கடற்படை அதிகாரி யைக் கடிந்துகொண்டபோதும் பரவிப்பாஞ்சான் பிரதேசத்தில் மக்கள் பிரதிநிதியான எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மக்களின் நிலங்களைப் பார்வையிடச் சென்றபோதும் அதனை அவலாக எடுத்துக் கொண்ட சில வாய்கள், உங்கள் விடயத்தில் அசாதாரண மௌனத்தைக் காண்பித்து நிற்பதன் பின்னணியும் அனைவரும் அறிந்ததே. பொலிஸாரின் முன்னால் நீங்கள் நிகழ்த்திய இந்த இனவாத இரைச்சலை எந்தச் சட்டக்கோவையின் எந்த உபபிரிவின் கீழ்க் குற்றமாகக் குறிப்பிடலாம் என்னும் தேடுதலை இந்தக் கடிதத்தை நான் காகிதத்தில் பதிவு செய்யும் வரையில் பொலிஸார் கண்டுபிடிக்கவேயில்லை. சிலவேளை அவர்கள் முறைப்பாடுகளுக்காகக் காத்திருக்கிறார்களோ தெரியாது. இதுவே குறித்த கிராமசேவகர் தண்ணியில்லா காடு ஒன்றுக்குப் பெட்டி, சட்டிகளுடன் பயணம் பண்ணுவதற்கான இடமாற்ற உத்தரவைத் தோற்றுவிக்கவும் திரைக்குப் பின்னால் திட்டம் வரையப்படலாம்!

காவிச்சீலைக்குள் புகுந்துகொண்டு நீங்கள் போடும் அட்டாதுட்டித்தனத்துக்கு முற்றுப்புள்ளிவைப்பதற்கு, அறிக்கை விடுவதையும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆள் சேர்ப்பதையும் விடுத்து, அப்பால் யோசிப்பதற்கு அரசியல் சார்ந்து, சட்டம் சார்ந்து ஒரு தமிழ்க் கனவான் கிடையாமலிருப்பதை நினைத்து வெட்கமடைகிறேன். அதுவே உங்களது ஆட்டிப்படைப்பினை அகலப்படுத்தவும் காரணமாக இருக்கிறதென்பதும் எனக்குப் புரியாமலில்லை.

அரச உத்தியோகத்தர் ஒருவர் தனது பணிகளைச் செய்ய இடையூறு செய்வது குற்றமென்று தெரியாத அல்லது தெரிந்தும் அது தொடர்பில் கவலைப்படாத உங்கள் போக்கு, அதே நாட்டின் குடிமகனான எனக்குச் சட்டத்தின் மீதான அபிமானத்தைத் தாழ்த்தியிருக்கின்றது.

ஞானசார தேரரையே கைது செய்ய முடிந்த அரசு உங்களை நீதிக்கு முன்னால் நிறுத்துவதில் காண்பிக்கும் தயக்கம் மறைமுக நிகழ்ச்சி நிரலொன்றின் வெளிப்பாட்டுப் புள்ளியா என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது. குறித்த காணொலியில் நீங்கள் நடந்து கொண்டதற்குப் பாராட்டுக்கள் வந்து குவிந்திருக்கிறது போலும். அந்தப் புளுகத்தில் மேலும் சில அடாத்து நடவடிக்கைகளைச் செய்திருப்பதாகச் செய்திகள் அறிக்கையிட்டிருக்கின்றன. எதற்கும் குறித்த கிராம சேவகரைக் கொஞ்சம் பத்திரமாக இருக்கும்படி சொல்லி வைத்தால் நல்லது போலத் தோன்றுகிறது.

மனோ கணேசனைத் தவிர அமைச்சுப் பதவியிலிருக்கும் எந்த மானிடப்பிறவியும் குறித்த காணொலியை தாங்களும் பார்த்ததாகத் தன்னும் தெரிவித்திருக்கவில்லை. மனோ கணேசனும் கூட தனது தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சு வசதிகளுக்குப் பங்கம் அமையாத வகையில் கருணாநிதி மற்றும் ஆனந்த சங்கரி போன்றோர் பின்பற்றும் கடித அரசியலில் இறங்கியிருக்கிறார். அவருடைய கடிதத்துக்கு மறுமொழி கிடைத்துவிட்டதோவும் தெரியவில்லை?

வடக்கு–கிழக்கு இணைப்பெல்லாம் வேண்டாம். கிழக்கு தனித்து இயங்கட்டும் என்று எதிர்பார்க்கும் சகோதரர்களுக்கும் தமது முடிவை மீளச் செவ்வை பார்ப்பதற்கான எத்தனத்தை வழங்கியிருக்கிறது உறைப்புடன் கூடிய உங்கள் உரை.

உங்களைக் கைது செய்து, பிறகு விசாரணை செய்து, அதற்கிடையில் உங்கள் கைதுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தி, அதற்குள் நீங்கள் விசாரணையிலிருக்கும்போது உங்களுக்குச் சீனி வருத்தமும் குருதி அமுக்கமும் கூடி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு... பிற்பாடு உங்களுக்கு பிணை தருகிற அன்று உங்கள் பிரதேச மக்கள் நீதிமன்ற வாசலில் கூடி நீதிமன்றத்தை உண்டு இல்லை என்று பண்ணி... இந்த மாதிரியான நிகழ்வுத் தொடர்ச்சிகள் இடம் பெறுவதில் எனக்கு உடன்பாடில்லை. குறித்த உங்களுடைய நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக அவதானித்ததன் பேரில் பௌத்த குருமாருக்குரிய ஆன்மிக உடையை இதன் பிற்பாடும் அணிவதற்கு உங்களுக்கு இலாயக்கு இல்லை என்பதை அரசு அல்லது பௌத்த பீடங்கள் பகிரங்கமாக அறிவித்து, அதனை (ஆன்மிக உடையை) அகற்றும் செயன்முறையை சிறு விழாவாகக் கொண்டாடி, பின்னர் நல்லிணக்கம் தொடர்பான புனர்வாழ்வு முகாம் ஒன்றுக்கு உங்களை அனுப்பிவைத்து அங்கு பொறுமை தொடர்பான பாடப்பரப்புக்குக் குறித்த கிராமசேவகரை வருகைதரு விரிவுரையாளராக நியமித்து... இது போன்ற நிகழ்வுத்தொடர் ஒன்று இடம்பெறுமாயின் அது வினைத்திறன் மிக்கதான, நல்லிணக்கத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையான அர்த்தப்படியான செயன்முறையாக அமையும். இல்லையேல், நயினாதீவு விகாராதிபதியும் நாமும் ஏன் அம்பிட்டிய சுமணதேரரைப் பின்பற்றக்கூடாது என்று எழ... மீளவும் நமது வரலாற்றை 1983 ஜூலையிலிருந்து ஆரம்பிக்க நேரும்.

ஏனெனில் தங்களுடைய அடாத்து நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்துள்ளதாகத் தகவல் வரும் வேளையில்தான் ஆர்ப்பாட்டங்களும் தீவிரம் பெற்றிருக்கின்றன.

ஏதோ செய்துள்ளீர்கள் என்று கெட்டித்தனத்தில் மார்தட்டிக்கொள்ளும், இவ்வாறான பௌத்த தர்மீகத்துக்கு ஒவ்வாத தங்களுடைய அடுத்த கட்டக் காணொலிகளைக் காண்பதற்கான அவாவுடன் காத்திருக்கிறேன்.

நன்றி
ஸுடோ ஸ்வாமி

காவிச்சீலைக்குள் புகுந்துகொண்டு நீங்கள் போடும் அட்டா துட்டித் தனத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு, அறிக்கை விடுவதையும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆள் சேர்ப்பதையும் விடுத்து அப்பால் யோசிப்பதற்கு அரசியல் சார்ந்து, சட்டம் சார்ந்து ஒரு தமிழ்க் கனவான் கிடையாமலிருப்பதை நினைத்து வெட்க மடைகிறேன்.



# கணப்பொழுதில் உயிர் பறிக்கும் இயற்கை

என்.நிவின்

மின்னல் தாக்கி இருவர் சாவு, நால்வர் சாவு போன்ற செய்திகள் தற்போது செய்தித் தாள்களில் இடம்பிடிக்கத் தொடங்கியுள்ளன. மின்னல்தாக்கம் குறித்து வானிலை ஆராய்ச்சி மையம், வளிமண்டலவியல் திணைக் களங்கள் என்பனவும் எச்சரித்து வருகின்றன. எனினும், மின்னலால் காவுகொள்ளப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

மழை பெய்யும்போது பெரிய சத்தத்துடன் இடி இடித்தால், நம்மில் பலர் ஓடி ஔிந்து கொள்கி றார்கள். சிறு வர்கள் அச்சத்தில் தமது பெற்றோரி டம் அடைக்கலம் புகுகின்றனர். கிராமப் புறங்களில் இடி இடிக்கும்போது, 'அர்ச்சுனா காப்பாற்று, அர்ச்சுனா காப்பாற்று' என்று சொல்லும் பழக்கமும் உண்டு. மின்னல் என்பது மழைக் காலங்களில் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் ஏற்படும் மிகப்பெரிய மின் ஆற்றல் வெளிப்பாடே. கண்ணைப்பறிக்கும் ஒளிவீச்சோடு, கோடுகளாய் வானில் நொடிப் பொழுதில் தோன்றி மறையும் நிகழ்ச்சிதான் மின்னல். மின்னலின்போதான சத்தத்தையே நாம் இடி என்கிறோம். பல மனிதர்களையும் பயத்தில் ஆழ்த்தியுள்ள இத்தகைய இடி எவ்வாறு உருவாகிறது? இது எவரையெல்லாம் தாக்குகின்றது?

வானில் தோற்றம் பெறும் இது மேகங்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால் ஏற்படுகிறது. மே கங்கள் மோதும் வேளையில் ஏற்படும் பெரிய சத்தத்தையே இடி(ஒலி) என்கிறோம், அவ் வேளை ஏற்படும் பெரிய வெளிச்சத்தையே மின்னல்(ஒளி) என்கிறோம். மேகங்கள் மோதிக் கொள்ளும்போது ஏற்படும் ஒலியும் ஒளியும் ஒரே நேரத்தில் ஏற்பட்டாலும், ஒலியைவிட ஒளி வேகம் கூடியது என்பதால் மின்னல் முதலில் நமது கண்களுக்குத் தெரிந்து விடுகிறது. அதன் பின் சிறிது நேரம் கழித்து இடி(ஒலி) நமது காதுகளுக்குக் கேட்கின்றது.

மேகங்களின் மோதுகையால் ஒரே நேரத்தில் தோற்றம்பெறும் இவையிரண்டும். ஒளியின் வேகம் ஒரு செக்கனுக்கு 30,0000 கிலோ மீற்றர்களாகவும் ஒலியின் வேகம் ஒரு செக் கனுக்கு 330 மீற்றர்களாகவும் இருப்பதன் கார ணத்தாலேயே முன்னும் பின்னுமாக எம்மால் உணரப்படுகின்றன.

முகில் அல்லது மேகம் என்பது புவியின் மேற் பரப்பில், வளிமண்டலத்தில் மிதப்பனவாகும். நீராவியாகி நீர்த்துளிகளின் சேர்க்கை அல்லது உறைந்த நீராவி ஒன்றாகச் சேர்ந்த ஒரு தொகுதியாகும். (விண்வெளியில் விண்மீன்கள், கோள்கள் இடைப்பட்ட வெளியில் காணப்படும் துகள் கூட்டங்களையும் முகில்கள் என அழைக் கின்றனர்) நீர் ஒடுங்கி நீராவியாகின்றது. இவை இணைந்து கண்களுக்குத் தெரியாத மிகச் சிறிய நீர்த்துளிகளை உருவாக்குகின்றன. கண் ணுக்குத் தெரியாத அளவுடைய பல கோடிக் கணக்கான துளி கள் ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் போது, அவற்றைக் கண்ணால் பார்க்கமுடிகிறது. இதுவே மழைமுகில் எனப்படுகின்றது. இத்த கைய முகில்களின் மேற்பக்கம் வெண்ணிற மாகத் தெரிவதுண்டு. முகில் சிறுதுளிகள் ஒளியைச் சிதறச் செய்யும் திறன் கொண்டவை. இதனால் முகிலின் ஆழம் அதிகமாகும்போது உட் புறங்களில் ஒளி குறைந்துவிடுகிறது. இதன் காரணமாக முகிலின் கீழ்ப் பகுதிகள் சாம்பல் நிறமாகவோ, கருநிறமாகவோ இருப்பதுண்டு. வெவ்வேறு காரணங்களாலும் உருவாகின்ற முகில்கள் வெவ்வேறு வடிவங்களிலிருக்கும். முகில்களின் உயரத்தையும் வெப்ப நிலையையும் பொறுத்து அவற்றிலுள்ள துகள்களும் வேறுபட்டிருக்கும்.

பூமியின் நீர்நிலைகளிருந்து ஆவியாகும் நீர், நீராவியாக மேலெழுந்து வானை அடைந்து ஒன்று சேர்ந்து மறுபடியும் திரவமாகத் தரையை வந்தடைகின்றது. பருவக் காற்றுக்களினால் ஒன்றுடன் ஒன்று மோதுப்படுகின்றன. அத்துடன் இவை மேலே சென்று ஏற்கனவே அங்கிருக்கும் மேகங்களுடன் செல்லும் வேகத்தில் உராய் வடையும்போதும், 10 மில்லியன் கிலோ வாட்ஸ் வரையில் மின்சக்தி உருவாகின்றது. இதனால் அந்தப் பகுதியில் வெளிச்சமும் சத்தமும் உருவாகின்றன. ஒளியை மின்னலென்றும், ஒலியை இடியென்றும் சொல்கிறோம். உயரமான கட்டடங்கள், உயரமான மரங்கள் போன்றவை இதனால் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றன.

உயரமான மரங்களுக்குக் கீழே ஒதுங்கி நிற்பவர்களையும் இதன் மின்சக்தி தாக்கு கின்றது. இது நேரடியாக மனிதர்களையும் தாக்குகிறது. திறந்த வெளியில் இருப்பவர்களைத் தாக்கும் வாய்ப்பும் அதிகம் உண்டு. இது அளவில் பெரிய மின்சக்தி ஆதலால் மின் ஊடு கடத்தப்படும் அனைத்துப் பொருள்களையும் பாதிக்கின்றது. மின்னல் சமயத்தில் மின்சா ரத்தை அதிகம் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

செருப்பு அணிந்து நடக்கும் ஒருவரை இடி தாக்கும் வாய்ப்புக் குறைவு. மழை நேரங்களில் குடை பிடிக்கும்போது, அதன் பிளாஸ்ரிக் கைப்பிடியைப் பிடிப்பதன் மூலம் மின்னல் தாக்குவதில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும். பச்சைமரத்தின் மூலம் ஊடுகடத்தப்படும் இவ் வகை மின், ஈர நிலத்தையும் அது சார்ந்தவை களையும் தாக்கி அழிக்க வல்லது. (இவ்வழியாக மேகங்களில் சேர்ந்திருந்த மின்னூட்டம் நிலத்துக்கு பாய்ந்து விடும்). பெரியளவிலான மின்சக்தி வெளியிடப்படுவதால் அதன் தாக்கத்துக்கு உள்ளானவை கருகிச் சாம்பலாகி விடுகின்றன.

இவ்வகை மின்சக்தியால் பலர் உயிரிழந்துள்ளனர். விமானத்தில் பறந்து செல்லும் பொழுதும் இத்தகைய மின்னல் தாக்கங்கள் நிகழ்கின்றன. மனிதன் உற்பத்தி செய்யும் மின்சாரம் தாக்கினால் சாவடைந்தவரின் உடலமாவது எஞ்சும். மின்னல் தாக்கினால் சிலவேளை அதுவும் எஞ்சாது!



## அந்திம தரிசனம்

முற்றத்துப் பந்தலின் கீழ்
மூச்சிழந்த உடலொன்று
சுற்றம் சூழ நடுவினிலே
சுனையற்றுக் கிடக்கிறது.
பெற்றவள் தன் நெஞ்சிலடித்துப்
பிலாக்கணம் பாடுகையில்
வெற்று இதயங்களும் அழுது
விரும்பியபடி நடிக்கின்றன.

பறையொலி எதிரொலிக்கப்
பாடைகட்டும் வேலைகளும்
முறையுருத்துக் கொள்ளிக்காரன்
மூக்கையுறிஞ்சியழும் நிலையும்
மறைமுகமாய்ப் பின் வளவுள்
'மப்படிக்கும்' செயலதுவும்
குறைவிலாது நடக்கின்றன
கூக்குரல்கள் மத்தியிலே.

வெற்றிலை வாய்களுக்கருகில்
வெள்ளைப்புகைமெல்லக்கிளம்பும்!
பற்றற்ற சுற்றத்தார் பலர் பந்தலுள்
பல்லாயிரம் கதையளப்பர்
கற்றோரெனத் தம்மை நினைத்துச் சிலர்
கால் மேல் கால் போட்டபடி
உற்றே கவனித்திதை அருகில்
ஓதுவரொரு விமர்சனத்தை.

பட்ட கடன் கழித்து விட்டுப்
படுத்திருக்கும் உடல் மீது
சொட்டு நீர் பலதாய்ச் சிந்தி
சோகங்களைக் கொட்டிய பின்
நட்ட தடிகளுக்கு நடுவில்
நாற்சதுரப் பெட்டியோடு
வெட்டை வெளிச் சுடலை நோக்கி
விரைகிறதொரு பயணமொன்று!

அலெக்ஸ்பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.



# வேண்டாமே மணமுறிவு



எஸ்.மல்லிகா

போருக்குப் பின்னரான தமிழரின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அநேகமானோர் மேய்ப்பார் அற்ற மந்தைகளாகத் திசைமாறிச் செல்கின்றனர். எங்கள் பண்பாட்டை மறந்து, திறந்த கலாசாரத்துக்கு அடிமையாகி வருகின்றனர். ஒழுக்க- விழுமியங்களைப் புறந்தள்ளி நடக்கின்றனர். இதன் தாக்கம், குடும்பச் சிதைவுகளுக்கும் மணமுறிவுகளுக்கும் வித்திடுகின்றது.

குடும்பத்தின் பிரதான உழைப்பாளி ஆண்தான். அத்துடன், சிறந்த பாதுகாவலன் ஆகவும் இருக்கிறான். ஆனால், சில தருணங்களில் தன் மனம்போன போக்கில் அவன் வாழ நினைக்கிறான். இன்று மணமுறிவு கேட்டு நீதிமன்றங்களை நாடி வருவோரில் 75வீத மான கணவன்- மனைவியர், இருவருமே அரச வேலையில் இருப்பவர்கள். அத்துடன், யாருக்காகவும் எதற்காகவும் பயப்படாதவர்கள். இருவரும் பரஸ்பரம் விருப்பம் தெரிவித்து மணமுறிவுக்கு விண்ணப்பிக்கிறார்கள். இவர்கள் அவசரப்படும் அளவுக்கு மணமுறிவை உடனே அளித்துவிடுவது சாத்தியமில்லை. ஆயினும், இவர்களுக்குக் கால அவகாசம் கொடுத்தாலும் மீண்டும் இணைந்து வாழும் வாய்ப்புக்களும் குறைவு. காரணம், ஏற்கனவே தமக்கான வேறு துணையை இவர்கள் தேர்ந்தெடுத்து விட்டமைதான். இதில் அதிகம் முனைப்புக் காட்டுவது ஆண்கள். ஏனென்றால், சின்னவீடுகள் எனப்படும் பிற பெண்களுடனான தொடர்பை இவர்கள் கொண்டிருப்பதாலாகும். இதனால், இவர்களின் அழகான இல்லறம் உருக்குலைகிறது.



தன்னை விட்டுவிட்டு அடுத்த பெண்ணுடன் கணவன் தொடர்பு வைத்துள்ளான் என்ற மனவைராக்கியத்துடன் மனைவியும், அவசர அவசரமாக மணமுறிவே தமக்குச் சிறந்த முடிவு என்று மன்றை நாடுகின்றாள். கோபத்தில் மனைவி எடுக்கும் முடிவும் சபலத்தில் கணவன் எடுக்கும் முடிவும் ஆரோக்கியமானவை அல்ல. ஆளுக்கொரு திசையில் இருவரும் பிரிந்து சென்றாலும், பரஸ்பரம் இருவரின் நினைவுகளும் அவர்களது நெஞ்சக்கடலில் ஆர்ப்பரிக்கத்தான் செய்யும்.

குடும்பத்தில் என்ன பிரச்சினை ஏற்பட்டாலும், அதற்குரிய தீர்வை வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இருக்கின்றனர். அவர்களை நாடித் தமது பிரச்சினைகளைத் தம்பதியர் மனம் விட்டுக் கூறினால், இப்படியான மணமுறிவு களும் குடும்பச் சிதைவுகளும் தவிர்க்கப்படும். முடிவற்ற அல்லது தீர்வற்ற பிரச்சினை என்ற ஒன்று இல்லை. அதேநேரம், ஒழுக்க விழுமியங்களை மீறியோ அல்லது நினைத்த மாதிரியோ எவரும் இங்கு வாழ்ந்துவிட்டுப் போகமுடியாது.

“எந்தன் உயிரே... எந்தன் உயிரே...
கண்கள் முழுதும் உந்தன் கனவே...
என்னை மறந்தேன்... என்னை மறந்தேன்...
நெஞ்சம் முழுதும் உந்தன் நினைவே...”

இந்த இனிய இல்லறத்தில், வாழ்க்கைத் துணை ஒரு செல்லப்பிராணி போல இருக்க வேண்டும் என்று ஆணும் பெண்ணும் எதிர்பார்க்கும் மனநிலை, வெகுவிரைவில் மனக்கசப்பை ஏற்படுத்திவிடுகிறது. வேறு துணையை நாடவைக்கிறது. இதனால் மணமுறிவு ஏற்படுகிறது. இனிவரும் காலத்தில் குடும்ப வாழ்க்கை என்பது நுகர்வுப் பொருள் போன்று திருப்தியளிக்கவில்லை என்றால் மாற்றிக் கொள்ளும் நிலை சகஜமாகி விடும் அபாயமும் உள்ளது.

(தொடரும்...)

# மதுவுக்கு விலைகள் குறைத்துப் பாரும்!

ஆவாவா வென்றெம் மக்களெலாம்
ஆண்டாண்டு அழுதழுது புரண்டாலும்
காணாமற் போனோரின்னுமோ
காணாமல் இருப்பது மட்டில்லை;
பேணாமல் அரசியல் கைதிகளும்
பேதலித்து சிறைகளிலே வாடுகிறார்
போதாத துக்கின்னும் இளைஞர்கள்
ஆவாகுழு வென்றுமே பிடித்துளார்!

ஆனாலோ இன்னமும் வாளோடு
ஆங்காங்கு திரிபவரும் திரிகின்றார்
போனாலோ வீடுகளில் உள் நுழைந்து
போட்டுள நகை நட்டென்றில்லா
தானாகக் கிளம்பும் நோட்டுகள்
தானன்றி கைபேசி தன்னோடு
போனாப்போகுதென்று விடுவாரே
போறவழி கண்ணாடியை நொறுக்குவார்!

ஆவாவா வென்றுதிரி கூட்டமோ
ஆனகுடி வகைகளை விலைகூட்டி
போகாதை சாராயக் கடைப்பக்கம்
போதையை மறந்திடென நல்லாட்சி
வேகாத பருப்பதனை சந்தையில்
வேகவைக்கப் பார்த்த தனாலாம்
ஆஹாஹா வாளதனைத் தூக்கினோர்
அதிகமாக தோன்றினர் அவனியிலே!

நல்லாட்சி வந்தென்ன புடுங்கிற்று
நற்சமுதாயமதை உருவாக்க
இல்லாமல் போதையைச் செய்திடினே
இயங்கிடுமா தூயதொரு சமுதாயம்?
எல்லாமும் எல்லார்க்கும் கிடைப்பதே
எந்தவொரு இடர்பாடும் தோன்றாமல்
நல்லாட்சி தனைநோக்கி இட்டுச் செல
நற்கரும மாற்றுகின்ற செயலாகும்!

வருமானம் கொண்டுதான் வாழ்தலாகும்
வாழ்வாதார செலவினமும் அதிகரித்தால்
பருவகால பாவனையில் பழகிவிட்ட
பழக்கத்தைத் தடுத்துவிட விலை கூட்டி
நெருக்குதல் கொடுத்திடும் உபாயத்தில்
நேர்கின்ற மாற்றங்கள் எதிர்விளைவே
இருக்கவே இருக்குது வாளன்றோ
எடுத்தவர் திரிகிறார் குடிப்பதற்காக!

நாளொன்று வருமானம் போதுமாமோ
நாளந்தச் செலவினங்கள் பார்த்து மீள
வாளொன்றை தூக்கினாலே மீதி சேரும்
வாள்களொடு திரியும் கூட்டமெப்ப
பாழதனை செய்திடற்கு வெளிக்கிட்டே
பார்த்துப் பார்த்துக் குடிவகையில்
நாளொன்றா வருடத்துள் குடிவகைக்கு
நஞ்சேற மூன்றுமுறை கூட்டினதால்!

விசம் ஏற வைத்துள்ள நல்லாட்சி
வந்தபின் வாளெடுத்த கோலங்கள்
தசகாலம் பொருட்களது விலைகளிலே
தயவுசெய்து கைவையாமல் விட்டுவிடும்
பிசகாமல் நல்லாட்சி நடப்பதிலே
பின்பற்ற மக்கள் கோடி சேர்வராமே
நிசமாக வாளெடுத்த ஆவாகுழு
நிலைக்காமல் மறைந்திடும் இங்கிருந்தே

மங்கியன்ன அத்ததமா மாத்தையோ
மறுபக்கம் புரட்டியாம் போட்டாலே
தொங்கலில் குழப்படிகள் விடுபவனும்
தொங்கமுகம் போட்டுடன் அடங்குவான்
எங்கையென சொன்னனோ செய்து பாரும்
இல்லாமல் மதுவுக்கு விலை கூட்டி
சங்கடத்தை உங்களுக்கு மெங்களுக்கும்
சத்தியமாய் உண்டுபண்ண வேண்டாமே

நவாலியூர்க் கவிராயர்



சிறுகதை

# கற்புன்னிகள்

தேவிபரமலிங்கம்

சிவானந்தன் நந்தினியை அப்பிடி இப்பிடி விரும்பிய ஒருவனல்ல. அவளின் உள்ளங்காலில் இருந்து உச்சந்தலை வரை அணு அணுவாக நேசித்தவன், ரசித்தவன். ஒரே கிராமத்தில் பிறந்துவளர்ந்ததும்; ஒரே பாடசாலையில் சேர்ந்து உயர் வகுப்புவரை கல்வியை கற்றதும் இருவரும் ஒருவரை ஒருவர் ஈர்த்துக்கொள்ள ஏதுவாக அமைந்தது.

வயதும் ஏற, வகுப்புக்களும் உயர்ந்து கொண்டிருக்க, பருவமும் பூரிப்படைந்த காலத்தில் பாடசாலை நாடகம் ஒன்றில் நாயகன் நாயகியாக இருவரும் இணைந்த சர்ந்தர்ப்பம் அவர்கள் இடையில் உறவை உருவாக்கிவிட்டது.

சிவானந்தன் நல்ல குரல் வளம் படைத்தவன்; பாடசாலைக் கலை நிகழ்வுகளின்போது மேடைகளில் அவனது பாடல்கள்களை கட்டும் அவனின் சிருங்காரக் குரல் இனிமையில் நந்தினியும் மூழ்கி விடுவாள்.

சிவானந்தனும் நந்தினியைப் பின்னும் முன்னும் துரத்திக் காதலிக்க ஆரம்பித்தான். பாடசாலையை விட்டு விலகிய பின்பாகச் சிவானந்தன் இசைக் குழுவொன்றில் இணைந்து பாடி வந்தான். அத்துடன் நகர சபை அலுவலகத்தில் வேலையும் பெற்றுக்கொண்டான். இவ்விதம் கூடிவந்த வாழ்க்கை நீரோட்டத்தில் நந்தினியை முறைப்படி பெண் கேட்டுத் திருமணம் செய்து கொள்வதில் அவனுக்கு எவ்வித விக்கினமும் ஏற்படவில்லை.

விரும்பியவர்கள் சேர்ந்தால் கேட்கவும் வேண்டுமா? இல்லறம் இனிதாகவே அமைந்து ஆறு ஆண்டுகளில் மூன்று பிள்ளைகளின் பெற்றோராகி நகர்ந்து கொண்டிருந்தது.

குடும்பத்தில் அங்கத்தவர் தொகை அதிகரிக்க அதிகரிக்க உழைப்பையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அரசவேலை மற்றும் இசைக் குழுவில் பாடகராகக் கிடைக்கும் ஊதியங்களைக் கொண்டிருந்தபோதும் வரவுக்கு மேற்பட்ட செலவுகள் வாழ்க்கையை இறுக்கியது.

இன்னமும் கூடுதலாய் உழைப்பதற்கு இரவுகளில் நீண்ட நேரம் வேறு பல இசைக்குழுக்களுடன் இணைந்து கொண்டாலே இயலும் எனும் நிலையில் சிவானந்தன் புதுப்புது இசைக் குழுக்களில் சேர்ந்தும் பாடத் தொடங்கி இருந்தான். அரச ஊழியத்தைப் பகலில் முடித்துக் கொண்டு, கோஷ்டிகளுக்குச் சென்று விட்டு அதிகாலையே வீடு திரும்புவான். கிடைக்கின்ற பொழுதுகளில் நித்திரைகொள்பவனுக்கு வாழ்க்கை கசத்தது. "என்னால இனி உங்களுக்கு உழைச்சுப் போட ஏலாது நந்தினி..." எனத் திடீரெனச் சலித்துப் போய்க் கூறிய சிவானந்தனின் வார்த்தைகள் நந்தினியின் சிந்தனையில் இடி விழுந்தது போல அமைந்தன.

"என்ன சொல்லுறியள் உங்களுக்குகென்ன பைத்தியமே... நாங்க தூக்கின சிலுவையை நாங்கதானே சுமக்கவேணும்..." என்றாள் நந்தினி.

"அதுதான் நான் செய்தபிழை அப்ப உன் மீது பைத்தியமாத் திரிஞ்சன்... இளமைத் துடிப்பில அவசரப்பட்டுக் கல்யாணத்தையும் செய்துபோட்டன்" என்றவனாய் அலுத்துக் கொண்டான்.

சிவானந்தன் சொன்னதிலும் நியாயம் இருப்பதை அவள் உணர நேரமாகவில்லை. ஐந்து, பத்து வருடங்கள் உழைத்துச் சேகரித்து வைத்துக் கொண்டு வாழ்க்கையில் இணைந்திருந்தால் இந்த நெருக்கடிகள் தோன்றி இராதென்பது உண்மைதான்.

கண்கெட்டபின்பு சூரிய நமஸ்காரம் செய்வது முடிந்த காரியமா? அதையெல்லாம் சிந்திக்காமல் அவசரப்பட்டுக் கல்யாணத்தைச் செய்து கொண்டதால் தோன்றிய வினையாமோ! என்பதையும் உணர்ந்து கொண்டாள். சிவானந்தனும் நந்தினியும் கல்யாண பந்தத்தில் இணைந்த காலங்களில் இருந்த வாழ்க்கைச் செலவுகள், இப்பொழுது அதிகரித்து விட்டன.

சிவானந்தன் பாடிவந்த ஐந்துக்கும் மேற்பட்ட இசைக் குழுக்களில் புதிதாகக் கல்பனா என்னும் பாடகியும் இப்போது பாட வந்து கொண்டிருந்தாள். சிவானந்தனை விடவும் பத்து வயதுகள் இளைமையான அவளின் குரல்வளம் சிவானந்தனுடன் இணைந்து ஜோடியாகப் பாடுவதில் மிகவும் பொருத்தமாக இருந்ததால் அதிக நிகழ்வுகளில் இருவரும் அடிக்கடி சேர்ந்து பாடுகின்ற வாய்ப்புக்களும் அமைந்து வந்தன. சிவானந்தனுக்கு நடுத்தரத்துக்கும் சற்றே அதிகரித்த வயதாகினும் இன்னமும் இளமைக் கவர்ச்சி அகன்று விடவில்லை. கல்பனாவுக்குச் சிவானந்தனின் குரலில் ஏற்பட்ட மையல் அவனது வசீகரத்திலும் சிறிது சிறிதாகப் படரத் தொடங்கியது.

கல்பனாவின் பார்வைகள், பேச்சுகள் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் சிவானந்தனைக் காந்தமாகப் பற்றிப்பிடிக்கத் தொடங்கின. அவ்வேளை நந்தினி-பிள்ளைகள் தோன்றி மனத்தராசில் அவற்றைத் தாழ்ந்து விட்டாலும் கல்பனாவின் புதிய வசீகரக்காதல் காலம் செல்லச் செல்ல தராசின் மறு தட்டையும் உயர்த்திச் சமன் செய்தது. மனைவி, பிள்ளைகள் என்னும் தாக்கமும் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் உழைத்துக் கொடுத்து மீட்சி ஏற்படப் போவதில்லை என்னும் சிந்தனையும் கல்பனாவின் அரவணைப்பில் சுகபோகத்தை அனுபவிக்கத் தூண்டியதில் வியப்பில்லை.

"ஐயோ இனி நானென்ன செய்வன் மூண்டு பிள்ளைகளையும் மறந்து அறுவான் குமரியோட ஓடி விட்டானே..." நந்தினியால் ஒப்பாரி வைக்க மாத்திரம் முடிந்தது. நாள் மாறி வாரம் கழிந்து மாதங்களும் ஓடி மறைந்து கொண்டிருந்தன.

"ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்" இவை கழியக் கணவன் தன்னிடம் திரும்பி வந்திடுவான் எனக் காத்திருந்தது தான் நந்தினிக்குக் கிடைத்த தலை எழுத்து. அதில் ஏமாற்றம் நீடிக்கவே. பிள்ளைகள் மூன்றையும் வளர்க்கச் சகோதரங்களின் உதவிகள் மட்டும் அமையாதெனக் தெரிந்து கொண்டவள் ஊரில் வசதி படைத்த வீடுகளில் தொட்டாட்டு வேலைகள் செய்வதுடன் தனக்குப் பெற்றோர் கொடுத்திருந்த தோட்டக்காணியிலும் சிறுபயிர் வளர்த்து வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தாள்

கல்பனாவுடன் புதிய வாழ்க்கையைப் பிணைத்திருந்த சிவானந்தனுக்குத் தேனிலவுக்குக் குறைவிருக்கவில்லை. இருவரும் மேடைகளில் சேர்ந்து பாடுவது போன்றே இல்லியலில் இன்பத்தின் அடிக் கரும்பை மாந்திக் கழிப்பதிலும் சுகம் அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆசையம் மோகமும் முடியத் திரும்பி வருவான் எனக் காத்திருந்த நந்தினிக்கு இப்போது

> "அதுதான் நான் செய்தபிழை அப்ப உன் மீது பைத்தியமாத் திரிஞ்சன்... இளமைத் துடிப்பில அவசரப்பட்டுக் கல்யாணத் தையும் செய்துபோட்டன்" என்றவனாய் அலுத்துக் கொண்டான். சிவானந்தன் சொன்னதிலும் நியாயம் இருப் பதை அவள் உணர நேரமாகவில்லை...

43
(பக்கம் பார்க்க)

# அதிர்ச்சியில் குட்டி அமெரிக்கர்!







■ தையா

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நியூயோர்க்கில் உள்ள பெஞ்சமின் பிராங்கிளின் பாலர் பாடசாலையில் உள்ள குழந்தைகளிடத்தே மாதிரித் தேர்தல் ஒன்றை முற்கூட்டியே நடத்தி அமெரிக்க ஜனாதிபதி யார்? என்பதை மிகச் சரியாகக் கணித்து விடுகிறார்கள். 1968ஆம் ஆண்டு முதல் கடந்த 48வருடங்களாக இடம்பெற்ற அனைத்து ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் அங்கும் தேர்தல் நடத்தப்படுகிறது. இதுவரை அதில் குழந்தைகள் தெரிவு செய்யும் வேட்பாளரே வெளியே மக்களாலும் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியாகியுள்ளார். ஆனால் இம்முறை குழந்தைகள் தெரிவுசெய்த வேட்பாளர் வெற்றிபெறவில்லை. கடந்த 48வருடங்களாகத் தொடர்ந்துவந்த குழந்தைகளின் கணிப்பு இம்முறை முதல் தடவையாகத் தோல்வி கண்டுள்ளது.

தரம் ஐந்து வரையான குழந்தைகளுக்கு, தேர்தல் என்றால் என்ன, அதை எப்படி நடத்துகிறார்கள், எவர் வேட்பாளர்கள், எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், அவர்களுடைய அரசியல் களம் என்ன? என்பதை எல்லாம் விளக்குகிறார்கள். வேட்பாளர்கள் பற்றிய குறிப்புகளும் நிறை, குறைகளும் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றன. குழந்தைகள் அவரவர் விருப்பத்துக்குரிய வேட்பாளரை ஆதரித்து பரப்புரைகளும் நடத்துகிறார்கள். பின்னர் குழந்தைகள் இரகசியமாகத் தங்களுடைய வாக்கைச் செலுத்துகிறார்கள்.

"அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை ஒட்டியதாய் 4ஆண்டுகளுக்கு ஒருமுறை நாங்களும் தேர்தல் நடத்துகிறோம். இது குழந்தைகளுக்கும் எங்களுக்கும் மிக சுவாரஸியமான விடயமாக இருக்கிறது. ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தங்களுக்கும் இருக்கிறது என்ற பெருமிதத்துடன் குழந்தைகள் வாக்களிக்கிறார்கள். இதுவரை எங்கள் குழந்தைகளின் தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கின்றனவோ, அப்படித்தான் நாட்டின் தேர்தல் முடிவுகளும் அமைந்திருக்கின்றன. இது எங்களுக்குப் பெருமையாக இருந்தது" என்ற பாடசாலைத் தலைமை ஆசிரியர் பாட்ரிசியா மூர் "இந்த முறை நடத்திய தேர்தல் முடிவு அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது" என்றுள்ளார். ஏனெனில் குழந்தைகளின் வாக்களிப்பால் ஹிலாரி கிளின்டன் 52சதவீத வாக்குகளைப் பெற்று, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் 43சதவீத வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்திருக்கிறார். ஆனால் உண்மையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு வெற்றி பெற்றவர் ட்ரம்ப். ஆகவே இம்முறை குழந்தைகளின் கணிப்புத் தவறாகிப்போனமை அவர்களுக்கு அதிர்ச்சியளிக்கின்றது.



# யாழ் மண்ணே வணக்கம்....

"யாழ் ஓசை கேட்கிறது
அன்றொரு நாள் நிலவொளி வீசிய இரவினில்
உப்புவெளிக்காற்றில் ஊறிப்பரவிய
அந்த யாழ் ஓசை கேட்கிறது

ஒளியாய் அழகு விரிகிறது
ஒலியினில் ஏறிய மனது
கற்பனை உலகை அளக்கிறது
மேகம் இறங்கும் கடலின் கரையில்
மோதும் காற்றில் மெல்லக் கரைந்தே
அந்த யாழ் ஓசை கேட்கிறது!"

நீரேரிகள் நடுவே நீண்டிருக்கும்
நிலப்பரப்பே!
சுண்ணாம்புக்கல் சூழ்ந்த சுந்தரபுரியே!
யாழ்பாடி பரிசாகப் பெற்ற நிலமே
புகழ் கொண்டு நிமிர்ந்தாய் யாழ்.
மண்ணே வணக்கம்!

தமிழ் மன்னர் ஆண்ட தமிழகமே!
புத்தளம் வரை புகழ் நீண்ட பேரரசே
போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும்
ஊனைக்கொண்டார் என்றாலும்
உறுதி குலையாத, என்நிலமே
அந்நியர் ஆட்சியிலும் உன்னை
அழகுபடுத்திக் கொண்டாய்
ஒல்லாந்தர், கிறிஸ்தவ
ஆலயங்கள் கொண்டு வந்தார்
கடல்வெளி தன்னிலே
கோட்டை கட்டினார்.

பிரித்தானியர் ஆட்சியில்
வீதிகள் விரிந்தன
கல்விச்சாலைகள் மலர்ந்தன
அறிவினில் உயர்ந்தாய் நீ...
எம் அழகொளிர் யாழகமே

(வளரும்)

வேலணையூர் – தாஸ்

# செந்நீர்

செந்நீர் சிதறி எழுகிறது,
செம்மாந்து உயிரும் பிரிகிறது
இறைவன் சிருஷ்டி இதுவாயின்
இன்றே துறந்திடு! இல்லறத்தை
பிசகுகள் வருகினும் நிசப்தம் கொள்ளாமல்
பிரத்தியட்சம் கொண்டு பிரக்ஞையிடுவாய்
கோழியர் ஆட்சி முடியும் தருணம்
கோ ஆட்சியின் சங்கதி அறிவாய்
கவந்தங்கள் எத்தனை கிடந்தனவோ
கயவன் வீரம் தனை அறிவதற்கு
அறியாத உண்மையை அறிந்திடும்போது
அழிவை விலக்கிட நிதம் துணிவோம்



– சுருத்திகா சுதாகரன்



# போதை அகற்றிடப் போதனை செய்வோம்

ஒழுக்கம் விழுப்பம் தருமென்று
ஓதிச் சென்ற வள்ளுவனின் வாரிசுகள் தம்
பொன்னான வாழ்நாளைப்
போதையிலே கழிக்கின்றார் அந்தோபரிதாபம்....!

விரலிடுக்கில் சிகரெட்டுடன் வீதியுலா வருகின்றார்
வீணாகத் தம் ஆயுளினைப் புகைவழியே ஊதுகின்றார்
கஞ்சாவும் அபினும் கொஞ்சிவிளையாடும் அவருடலைக்
காலன் கவர்ந்திடக் கணநேரம் போதுமே....!

கெக்கலி கொட்டுகின்றார் மேல் நாட்டார் நமைப்பார்த்து..
கேரளக்கஞ்சாவுடன் இருவர் கைது - என்ற
சேதிகளே எந்நாளும் எம் செவியை!
சேர்கின்ற பெருந்துன்பம் நீக்கிடுவோம்....!

சின்னஞ்சிறியோர் முதல் பென்னம் பெரியோர் வரை
சீர்கெட்டலைகின்றார் போதைக்கடிமையாகி
இந்த நிலை மாற்றிட இன்றே நாம் ஒன்றிணைந்தால்
இவ் ஈனத்தனத்தை இல்லாதொழித்திடலாம்....!

பொறுப்புடனே நாம் நடந்து அறிவுரைகள் கூறி நல்ல
போதையற்ற சமூகத்தை
இப் புவிதனிலே அமைத்திட்டால்
புதுவுலகு உருவாகும் போதை விசம் நீங்கி...!

குடும்பத்தில் இருந்து மாற்றத்தை ஆரம்பித்து
கூட்டுச்சேர்ந்தே நாம் போதையை விரட்டிவிட்டு
நல்லொழுக்க சமூகம் நாமெனக்கூறின்
நாளை தலைநிமிர்ந்து நடப்பர் நம் தலைமுறைகள்....!

ஜெயப்பிரசாந்தி ஜெயபாலன்
யாழ். பல்கலைக்கழகம்




# மீன் குழம்பும் மண் பானையும்

மகனைப் பிரசவித்துவிட்டு இறந்துபோகிறார் அண்ணாமலையின் (பிரபு) மனைவி. கைக்குழந்தையுடன் மலேசியாவுக்குப் புலம் பெயரும் அவர், அங்கே மீன்குழம்பும் மண்பானையும் என்ற பாரம்பரிய உணவகம் நடத்திப் பணக்காரர் ஆகிறார். மகனை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் அண்ணாமலையின் தியாகத்தை அறியாதவனாயுள்ளான் அவரது மகன் கார்த்திக் (அறிமுக நாயகன் காளிதாஸ்). கல்லூரியில் பயிலும் இவருக்கு சக மாணவி பவித்ரா (ஆஷ்னா சாவேரி) மீது காதல்.

காதலில் ஏற்படும் சிக்கலால் அப்பாவுக்கும் மகனுக்கும் இடையே பிரச்சினை உருவாகின்றது. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கும் அவர்களுக்கு வழிகாட்டுகிறார் வெள்ளுடை மகான் (கமல்). அவர்களுடைய ஆத்மாக்களை வைத்து இவர் தரும் தீர்வு இருவரையும் புரட்டிப்போட்டுவிடுகிறது. அது என்ன, அதன் விளைவுகள் என்ன என்பதுதான் கதை.

'புருஸ் அல்மைற்' (Bruce Almight) என்னும் ஆங்கிலப் படத்தின் அடிப்படைக் கதையை நினைவூட்டும் இந்தப் படத்தில் கொஞ்சம் பண்டைய தமிழர் அடையாளம், கொஞ்சம் நகைச்சுவை ஆகியவற்றைத் தொட்டுக் கொண்டிருக்கிறார் அறிமுக இயக்குநர் அமுதேஷ்வர்.

பவித்ராவின் அப்பாவும் அம்மாவும் பிரிந்து வாழ்வதும், மாஃபியா குழு ஒன்றில் வேலை செய்யும் மாலாவுக்கு (பூஜா குமார்) அண்ணாமலை மீது ஈர்ப்பு ஏற்படுவதும், ஆள் மாறாட்டத்துக்குப் பிறகான இரண்டாம் பாதிக் கதையைக் கலகலப்பாக நகர்த்திச் செல்லக் களம் அமைத்துக் கொடுத்துவிடுகிறது.


அப்பாவும் மகனும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் இடங்கள் மிகையுணர்ச்சியின்றி நகைச்சுவையாகக் கடந்து செல்வதை ரசிக்கலாம். ஆனால் 'ஆத்மா' சமாச்சாரம் வந்த பிறகு அடுத்தடுத்த காட்சிகளை எளிதில் ஊகிக்க முடிவதால் சுவாரஸ்யமும்-விறுவிறுப்பும் குறைந்துவிடுகின்றன. கார்த்திக்கால் மாஃபியாக்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுவதாகக் காட்டும் காட்சி நடைமுறையற்றதாயினும் அது பிழை என்பதை மறந்து சிரிக்கவைக்கிறது.

கெளுத்தி மீன் குழம்பு வைத்துக்கொடுத்து தமிழ்நாட்டு வாழ்க்கையைத் தனது வாடிக்கையாளர்களுக்கு நினைவுபடுத்தும் அண்ணாமலையாகப் பிரபுவுக்குக் கச்சிதமான கதாபாத்திரம். அப்படிப்பட்டவர் ஒரு கட்டத்துக்குப் பின்னர் தற்கால இளைஞனாக மாறிச் செய்யும் செயல்கள் நகைச்சுவை தருகின்றன. அதேபோல முதலில் இளமைத்துள்ளலைக் காட்டும் காளிதாஸ், ஒரு கட்டத்தில் அடக்கமே உருவாக மாறி அட என்று சொல்ல வைத்துவிடுகிறார். இவரது தோற்றம், வசன உச்சரிப்பு, உடல்மொழி ஆகியவை கவர்கின்றன.

எம்.எஸ்.பாஸ்கர், பூஜாகுமார் கூட்டணி சிரிப்பு வைத்தியம் செய்கிறது. ஆஷ்னா சாவேரி தனக்குத் தரப்பட்ட கதா பாத்திரத்தில் திறம்பட நடித்திருக்கிறார். நன்றாக நடனமாடியுமிருக்கிறார்.

கௌரவக் கதாபாத்திரத்தில் வந்துசெல்லும் கமல் களைப்பாகக் காணப்பட்டாலும், முத்திரை பதிக்கத் தவறவில்லை. இமானின் பாடல்கள் அனைத்தும் ரசிக்கும்படியாக இருக்கின்றன. பாடல்களைப் படமாக்கிய விதத்திலும் மலேசியாவைக் காட்சிப்படுத்திய விதத்திலும் சுற்றுலா போய்வந்த உணர்வை ஏற்படுத்தி விடுகிறார் ஒளிப்பதிவாளர் லட்சுமண். தந்தை-தனயன் உறவை மையமாகக் கொண்டு, நகைச் சுவை விருந்து வைக்க நினைத்த இயக்குநர் நட்சத்திரப் பட்டாளத்தை மட்டுமே அதிகம் நம்பியிருக்கிறார். காட்சிகளில், நகைச்சுவையில் நிலவும் வறட்சியைக் களைந்திருந்தால் விறுவிறுப்பான நகைச்சுவை விருந்தாக இருந்திருக்கும் இந்த மீன்குழம்பும் மண்பானையும்.









# ‘மதம்’

ஜயா

ஒருசொல் பல பொருள்களை உணர்த்தி நிற்பதொன்றும் அரிதல்ல. ஆனால் ‘மதம்’ என்ற சொல் செயல் முறையில் இருவேறு நேரெதிர்க் கருத்துக்களைக் கொண்டமைவது கவனிக்கத்தக்கது. உலக மக்களிடையே பலவாறும் பரவியுள்ள அவரவர் பின்பற்றும் ‘சமயம்’ என்பது இதுதரும் ஒரு பொருளாகும். அதாவது இறை தத்துவத்தையும் ஆன்மிகத்தையும் அடிப்படையாகக் கொண்டதாய் அவரவர் கடைப்பிடிக்கும் நெறிமுறை என்பது இந்த மதம் தரும் கருத்து. மற்றையது, தரையில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியதான யானைக்கு இனப்பெருக்க விழைவுக் காலத்தில் ஏற்படும் நிலைகொள்ளாத வெறிபிடித்த நிலையும் ‘மதம்’ என்றே கொள்ளப்படுகின்றது.

இறைதத்துவம், ஆன்மிகம் என்று அர்த்தப்படும். மதம் இறைவனின்பால் ஈர்க்கப்பட்ட மனதை ஒருநிலைப்படுத்தி, மனஅமைதி தேடும் பக்தியாளரின் மனதில் சாந்தத்தைத் தரும் வழி. இவ்வாறாகச் சமயம் சார்ந்து அர்த்தப்படும்போது ‘மன அமைதி, ஆன்மிகம்’ என்பதாய் இது தரும் பொருள் ‘மதம் பிடித்த யானை’ என்று கருத்துப் படுமிடத்தே முற்கூறிய அர்த்தத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு வெறி பிடித்த விலங்கினுடைய கொடூரச் செயல் தனைச் சித்திரிப்பதாய் மாறிவிடுகின்றது.

ஆன்மிகம் என்பதாய் அர்த்தம் கொள்ளும் மதத்தைப் பின்பற்றும் ஒழுக்கசீலர்களை ‘மதகுருமார்கள்’ என்றழைப்பதன் காரணமும் அவர்கள் இறைவனுக்குச் சமமானவர்களாகத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் ஆன்மிகவாதிகள் என்பதனாலேயே. ஆனால் இதிலிருந்து விடுபட்டு விலங்குகளுக்குரிய மதம்(வெறி) கொண்டவர்களான சுமணரத்ன தேரர் போன்றவர்களும் மதகுருமார்களே! இந்த உதாரணத்தோடு உங்களுக்குப் புரிகிறதா ‘மதம்’ எவ்வாறு இருவேறு பொருள் தருகின்றது என்று?





# மருவி வரும் ‘பந்தி’

அபிராமி

தமிழர் தம் பண்பாடுகளில் தலையாயது பசித்து வருவோருக்கு உணவளிப்பது. தமிழர்களின் விருந்தோம்பல் பண்பானது அவர் தம் உணர்வுகளையும் உயிர்கள் மீதான காருண்யத்தையும் பெருமைகளையும் எடுத்துக்கூறுகின்றது. அந்த வகையில் விருந்தினரை உபசரிக்கும் முறையான கவனிப்பையும் அவர்களது முக பாவங்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

விருந்தோம்பல் என்பது பசித்து வருபவர்களதும் பசி தீர்ப்பவர்களதும் மனம் மகிழும் வகையில் இருக்க வேண்டும். வீட்டுக்கு வரும் உறவுகள் உட்பட அனைவ ரையும் இன்முகத்துடன் வரவேற்று, அவர்களை அமர வைத்து இளைப்பாறச் செய்ய வேண்டும். பின்னர் களைத்து வந்த அவருக்குத் தாகம் தீர்க்க நீர் வழங்கி, பசியறிந்து உணவளித்து விருந்தோம்பல் செய்ய வேண்டும்.

எம்முடைய குணப்பண்புகளையும் விருந்தோம்பல் உபசரிப்பு சுட்டி விடும். இத்தகைய தருணங்களில் மட்டுமன்றி நாம் கொண்டாடும் விழாக்கள் சடங்குகளின் போதும் எங்களின் அழைப்பை ஏற்று வருகை தரும் உறவுகள், அயலவர், விருந்தினரை நாம் குடும்பத்தார் அனைவருடனும் ஒன்று சேர்ந்து வரவேற்பது முதல் உபசரிப்பில் குறை ஒன்றும் இல்லாமல் கவனிப்பது வரை விருந்தளிப்பவர்களின் அனைத்துச் செயற்பாடுகளும் அவர்களுக்குத் திருப்திகரமாக அமைய வேண்டும். மங்கல நிகழ்வாயினும் சரி அமங்கல காரியமாயினும் சரி எந்த நிலையில் இருந்தாலும் விருந்தினரை வரவேற்று உபசரிப்பது என்பது தமிழர் தம் மரபு வழி பேணி வரும் பண்பாடாகும்.

மூதாதையர் கால விருந்தோம்பல்களில் விருந்தினரை பன்னீர் தெளித்து வரவேற்று மஞ்சள் திலகம் இட்டு அழைத்துச் சென்று அமரவைத்து, நீர் வழங்கி, பக்குவமாய் வாழை இலையை அவர் முன்வைத்துப் போசனத்தைப் பலபேருக்கும் பக்குவமாய்ப் பரிமாறும் முறைமை ‘பந்தி’ எனப்பட்டது.

இவைதான் பிற்காலங்களில் திருமணம், புதுமனைப் புகுவிழா, பூப்பெய்த சடங்கு, குழந்தைப் பேற்றால் அமையும் சடங்குகள், அமங்கலச் சடங்குகள் எனப் பலவற்றிலும் இன்றுவரை இடம்பிடித்தும் வருகின்றது. ஆனாலும் ஆலயங்களில் இதுபோன்ற முறையில் உணவளிப்பதை ‘சபை’ என்றே அழைப்பர். ‘சண்டைக்குப் பிந்தினாலும் சபைக்கு முந்து’ என்ற முதுமொழி, ஆற்றவேண்டியுள்ள அனைத்துக் காரியத்திலும் சபைக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

வீட்டில் நிகழும் உணவளிப்புக்களில் விருந்தினரை அழைத்து, அமர வைத்துப் பசி ஆற அறுசுவை உணவுகளைவிருந்தினர் முகம் நோக்கி, வைத்து அவர்களுக்கு விருப்பமான உணவுகளைக் கேட்டு உபசாரத்தை வயிறும், மனமும் நிறையும் வரை அளிப்பதே ‘பந்தி’ என்பதற்கு அர்த்தப்படும். இத்தகைய ‘பந்தி’ ஏதாவது ஒரு வழியில் தமிழரிடத்தே விருந்தோம்பலின் சிறப்பை வெளிப்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகின்றது. வரிசையாக விருந்தினரை அமரவைத்து ஒழுங்கு முறைப்படி வாழை இலையிலே உணவு பரிமாறுவது முதலாம், இரண்டாம், மூன்றாம்பந்தி என விழாவுக்கு வரும் விருந்தினரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகரித்துச் செல்லும்.

இன்றைய விழாக்களில் விருந்துபசரிக்கும் முறையானது மேலைத்தேய ஆங்கிலக் கலாசார மரபுகளைக் கொண்டுள்ளது.

தமக்குத் தேவையானவற்றைத் தாமே எடுத் துண்ணும் ‘சுயசேவை’ உணவுப் பரிமாற்ற முறையை அளிப்பது ஒரு கலாசாரமாகவும் நாகரிகமாகவும் கொள்ளப்பட்டு பந்திப் பரிமாற்றத்தை மாற்றி விட்டனர். பேணப்பட வேண்டிய தமிழர் பாரம்பரியம் ஒன்று மருவி அழிவதை இவ்வாறான சம்பிரதாய நிகழ்வுகளில் காணக்கூடியதாக உள்ளது. ‘சுயசேவை’ பரிமாற்றம் சிறந்த உபசரிப்பு அல்ல. உணவின் சுவையில் வயிறு நிறைவது என்ற நன்மையைத் தரினும் இன்முகத்தோடு உணவளிப்பவரின் தன்மையைக் காண இயலாதுள்ளது. அத்துடன் வாழை இலையில் உணவருந்துவதால் கிடைக்கும் சுவையை அனுபவிக்க முடியாமல் போகின்றது. அத்துடன் சூழலைப் பாதிக்கும் பொலித்தீன்(லஞ்சீற்) பாவனைதான் அதிகரித்துள்ளது. தமது தேவைக்கேற்ற அளவான உணவைப் பரிமாற முடியும் என்ற நன்மை ஒன்றுக்காக இதைக் கடைப் பிடித்தாலும். அளவுக்கதிகமாகச் சிந்தியும்–சிதறியும் சில வேளைகளில் அது கூடச் சாத்தியமற்றதாகின்றது. பழைமை போற்றும் தமிழர் பண்பாடுகளில் மறைந்துள்ள ஆயிரம் ஆயிரம் நன்மைகளைத் தவிர்க்கும் தற்காலச் சுயசேவைப் பரிமாற்றத்தால் பசித்திருப்பவர் வயிறு நிறைவது மட்டுமன்றி உணவளிப்பவர் மனம் நிறைவதும் சாத்தியமற்றதே.



நல்லூரான்

# தமிழர்களை இலகுவாக ஏமாற்றிவிட முடிகிறது!

நம்பிக்கெட்ட இனம் என்று, ஈழத் தமிழர்களை அடைமொழிக்குள் அடக்குவதுண்டு. பொதுவாகவே யாழ்ப்பாணத் தமிழர்களும், யார் என்ன சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடுகிறார்கள். நடைமுறை வாழ்க்கை, அரசியல் அரங்கு, என்பவற்றில்கூட வஞ்சகம் இல்லாமல் மற்றவர்கள் சொல்பவற்றை அப்படியே நம்பி விடுகிறார்கள். அந்த வகையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களது அத்தகைய குருட்டு நம்பிக்கை பொய்த்துப்போய் அவர்கள் பலத்த ஏமாற்றங்களைச் சந்திப்பதும் வழமையே. இதனால் ஈழத் தமிழர்களை ஏமாற்றுவது என்பது மிகவும் இலகுவானது என்ற கருத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தரப்புக்கள் மத்தியில்நிலைகொண்டுள்ளதென்னமோ உண்மையே.

இத்தகைய அப்பாவித்தனத்துக்குச் சமமாக எம்மவர் சிலரின் மத்தியில் ஆண்டாண்டு காலமாக நின்று நிலைத்துள்ள மற்றுமொரு வழக்கம் வெளிநாட்டுத் தரப்புக்கள் மீதான மோகம்; ஒருவித அதீத விருப்பு என்றும் அதனை அடையாளப்படுத்தலாம். உள்ளூர்த் தயாரிப்புக்கள் தரமானதாக இருந்தாலும் 'மேட் இன் சைனா, என்ற குறியீடு எம்மவர்களைக் கவர்வதும், அதன்பால் அவர்கள் ஈடுபாடு கொள்வதும் வழமையானதொன்றே. இதனாலேயே காலத்துக்குக்காலம் இலங்கைக்கு வந்து சமயச் சொற் பொழிவு, இலக்கியச் சொற்பொழிவு, இசை நிகழ்ச்சி, பட்டிமன்றம் என்று ஏதோதோ பெயர்களில் கயிறு திரித்து இலங்கைத் தமிழர்களை உச்சி குளிர வைக்கும் கைங்கரியத்தில் பல வெளிநாட்டினரும் ஆர்வமும் அக்கறையும் காட்டிச் செயற்படுகின்றனர்.

அவர்களது புண்ணியத்தில் இத்தகைய நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி எம்மவர்கள்தலையில்மிளகாய்அரைத்து ஐந்தோ, பத்தோ தேடிக் கொள்வதில் எம்மவர்களில் சில சூரர்களும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்தியத்துணைத் தூதகரத்தின் துணைத் தூதுவர் கொஞ்சக்காலமாக எம்மவர் சிலரது மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவராக ஆக்கப்பட்டிருக்கின்றார். தாம் எமது மக்களுக்காக ஒழுங்கு செய்த நிகழ்வு ஒன்றுக்கு துணைத்தூதுவரை முக்கிய விருந்தினராக அழைத்து



தலைப்பாகையும் கட்டினர். அவரும் தமக்கு வழங்கப்படும் அதீத கௌரவத்தால் மனம் பூரித்து 'யாழ்ப்பாண மண்ணில்கால்பதிக்கமுடிந்தால்அதுவரப்பிரசாதமே' என்ற நற்சான்றிதழ் வழங்கியதாக அண்மையில் பத்திரிகையில் வாசித்த ஞாபகமுண்டு. அப்படிப்பட்ட இந்தியத் துணைத்தூதுவருக்கு கொக்குவில் என்ற ஊரும் யாழ். மாவட்டத்தில் தான் உள்ளது என்பதை எவரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில் கடந்தமாதம்20ஆம்திகதிவியாழக்கிழமை நள்ளிரவு நேரம் தமது தனிப்பட்ட தேவைக்காக மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு கொலை செய்த இலங்கைப் பொலிஸாரது அராஜகச் செயற்பாட்டால் மனதுடைந்து கலங்கிப் போன ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரினதும் மன வெப்பியாரத்துக்கு மருந்து தடவும் விதத்தில் இனமத பேதமின்றி மனிதாபிமானம் மிக்க மனிதர்களெனத் தம்மை அடைய்ாளப் படுத்தும் சிலர் பெரும்பான்மையினத்தவர் என்ற தலைக்கனத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, ஆறுதலும் அனுதாபமும் வெளியிட்டனர். அப்படிப் பொலிஸாரது செயற்பாட்டைக் கண்டித்த தரப்பினர் மத்தியில் காதுகளைப் பொத்தி, கண்களை மூடி, வாயைஇறுகமூடிக்கொண்ட இந்தியத்துணைத்தூதுவர் போன்றோரும் இருக்கத்தான் செய்கின்றனர் என்பதை இப்போதாவது அவர்களுக்குக் காவடி தூக்கும் எமது தரப்பினர்கள் உணர்வார்களா?

யாழ்ப்பாணத்தவர்களுக்கு 'ஐஸ்' வைத்துத் தத்தமது நிகழ்ச்சி நிரலை ஒழுங்காக முன்னெடுக்கும் காந்தி தேசத்துத் தரப்பினர்களாலும் என்னதான் தமிழினத்துக்கு அநியாயம் இழைக்கப்படினும் ஈழத் தமிழர்கள் மனதுடைந்து போகவோ, சோந்து போய் விடவோ மாட்டார்கள் என்பதற்கு அதற்கெதிராக வடபகுதித் தமிழர்கள் அமைதியான சாத்வீகமான விதத்தில் அநியாயத்துக்கு நியாயம் வேண்டி, நடத்திக் காட்டிய கடை அடைப்பும், முழு முடக்கமும் சாட்சி பகர்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனாலும் தமிழர்களை அழிக்கக் களமிறக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் அதன் பின் தமிழர்களுக்கெதிரான இந்திய அரசியல் நகர்வுகள் போன்றதே இதுவும். இவர்களைத் தமிழர்கள் புறக்கணிக்கும் காலம் கட்டாயமானது.

> “காலத்துக்குக்காலம் எடுபிடிகளின் ஏற்பாட்டில் இலங்கைக்கு வந்து சமயச் சொற்பொழிவு, இலக்கியச் சொற்பொழிவு, இசை நிகழ்ச்சி, பட்டிமன்றம் என்று ஏதேதோ பெயர்களில் கயிறு திரித்து இலங்கைத் தமிழர்களை உச்சி குளிர வைக்கும் கைங்கரியத்தில் தமிழ் நாட்டுத்தரப்பினர்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டிச் செயற்படுகின்றனர்.

# வாட்டமுற்றதேனோ மலரே...!

அன்பின் நண்பியே! இனிய மலரே!
மகேல வீரனை(க்) கட்டியணைத்தாளென்றே
நெஞ்சு பொறுக்குதில்லையே என்கிறீரே
வெளியிடமதில் முத்தம் கொடுத்தாளே
அட! தமிழ்ப்பண்பே போச்சுதென்றே


இரகசிய அறைக்குள் அதை அளிப்பதோ
அணைப்பும், முத்தமும் ஏனென்றே தெரியாதோ
முழுச்செய்தியும் படிக்கவில்லையோ நீரோ?
படியும் படியும் பத்திரிகையில் படிப்பீரோ
பெண்களில் தமிழ்ப்பெண் பாகுபாடோ!

பெண்தலையிலா குந்தியிருப்புக் கலாசாரம்
ஐயையோ! தமிழ்ப்பண்பாடு போகுதாம்
என்னும் கூக்குரலே! பெண்ணடிமையாம்
கிடைக்கவில்லையே அவளுக்கு,
சுதந்திரமாம், பெண்கள் கண்ணீர்
வடிப்பதும் தெரியாதாம்

பெண்ணே! பெண்ணுக்கு யமனாம்,
சீதனம் கேட்கும் மாமியாராம்.
கலாசாரம் எங்குபோனதாம்
எத்தனை உயிர்கள் காவு போனதாம்
உமக்குத் தெரியாதோ? அதெல்லாம்

கட்டியணைத்தவள் சொன்னாளே
காரணம் எல்லாம் சொன்னாளே
விளங்கவில்லையோ? உனக்கே
மோடு மோடு மூளையில்லையே
உனக்கு மூளையில் களிமண்ணே!

- ஞானாம்பிகா



# நெல்லிக்கனி



நெல்லிக்காய் சாப்பிட்டால், நோய் எதிர்ப்புச் சக்தி, அதிகரிக்கும். செரிமானத் தன்மையும் கூடும். கூந்தல் வளர்ச்சி பெறும். குளிர்ச்சித் தன்மை அதிகமாக இருப்பதால், குருதிச் சுத்திகரிப்புக்கும் பெருந் துணை புரிகிறது.



# பித்த வெடிப்பு நீங்க...

ஒவ்வொருவரும் தமது முகம் போல காலும், அழகாக இருக்க வேண்டும் என்றே விரும்புவார்கள். குறிப்பாக, பெண்களுக்கே இப்படியான ஆசைகள் அதிகமாக இருக்கும். பித்த வெடிப்பு இருந்தால், பாதங்களின் அழகு கெட்டுவிடும். பித்த வெடிப்பு நீங்க இதோ இலகு வழி.

மெழுகுடன் சம அளவு கடுகு எண்ணெய் சேர்த்து நன்கு குழைத்துக் கொள்ளவும். அதனைக் குதிக் கால்களில் வெடிப்புள்ள பகுதிகளில் தடவி அதன் மீது லேசான துணி போட்டுப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறாக ஒருவார காலத்துக்குச் செய்து வந்தால், பித்த வெடிப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்.

அதேபோன்று, கைப்பிடியளவு படிகாரத்தை எடுத்து சட்டியில் போட்டு நன்றாகப் பொரித்துக்கொள்ள வேண்டும். பின்னர் அதனை எடுத்து, ஒலிவ் அல்லது தேங்காய் எண்ணெய் கலந்து பித்த வெடிப்பில் பூச வேண்டும். இவ்வாறு ஒருவாரம் செய்துவர பித்த வெடிப்பு விரைவில் குணமாகும்.



# எண்ணெய்ச் சருமத்துக்கு...

கட்டிளமை வயதுப் பெண்களுக்குக் கவலை தரும் விடயம், எண்ணெய் வடியும் முகம் மற்றும் முகப்பருக்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவி பிடிக்கலாம். பொதுவாகவே ஆவி பிடிப்பதனால் சருமத் துவாரங்கள் திறந்துவிடும். இதனால் சருமத்தில் தங்கியிருக்கும் கொழுப்புப் படிமங்கள், இறந்த செல்கள், அழுக்குகள் வெளியேறி விடும். இதனால் பருக்கள் வராமல் முகத்தின் துவாரங்கள் இறுகிப் பளிச்சென்று இருக்கும்.



# முள்ளங்கி



நீர்ச்சத்து அதிகம். சிறுநீரகக் கல்லைக் கரைக்கும். உடலில் உள்ள கெட்ட நீரை வெளியேற்றும். சிறுநீரைப் பெருக்கும். எடையைக் குறைக்க நினைப்பவர்கள், இதய நோயாளிகள், சர்க்கரை நோயாளிகள் தினமும் முள்ளங்கியை பச்சடியாக, துவையலாகச் செய்து சாப்பிடலாம்.

# உள்ளங்கைகள் மிருதுவாக...

உள்ளங்கைகள் மிருதுவாக இல்லையே என நிறையப் பெண்கள் கவலைப்படுவதுண்டு. வீட்டில் பாத்திரம் மற்றும் துணி துவைக்கும் சவர்க்காரங்களின் இரசாயனத் தன்மையால் சருமம் கடினமாகியிருக்கும். அதேபோல் அதிகமாய் உள்ளங்கைகளுக்கு வேலை கொடுத்தாலும் இப்படி ஆகிவிடும். பூப்போல உங்கள் உள்ளங் கைகள் மென்மையாக இதோ எளிய வழி.

வெல்லத்தைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து அதில் சிறிது எலுமிச்சைச் சாறு சேர்த்துத் தினமும் தூங்கப்போகும் முன் கைகளில் தேயுங்கள். ஐந்து நிமிடம் கைகளை முன்னும் பின்னும் தேய்த்து பின் கழுவுங்கள். அதற்குப்பின் வேலை எதுவும் செய்யாமல் இருந்தால் உடனடியாகக் கடினத்தன்மை மறைந்து மிருதுவான கைகள் கிடைக்கும். தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக ஒலிவ் எண்ணெயையும் பயன்படுத்தலாம்.

இதேபோன்று, காய்ச்சிய பால் சிறிது எடுத்து அதில் கிளிசரின் மற்றும் எலுமிச்சைசாறு 4 துளிகள் விடவும். இதனைக் கலக்கிக் கைகளில் தேயுங்கள். நாளடைவில் உள்ளங்கைகள் மிருதுவாகும்:

இதேபோன்று, முட்டையுடன் பாதாம் பவுடர் மற்றும் தேன் கலந்து நன்றாக நுரை வரும்படி கலக்கிக்கொள்ளுங்கள். பின்னர் அதனைக் கைகளில் தேய்த்து, 15 நிமிடங்கள் ஊற விடவும். இவ்வாறு வாரம் ஒருமுறை செய்தால் உள்ளங்கைகளில் இருந்த கடினத்தன்மை போய்விடும்.

உங்களுக்கு மிகக் குறைந்த நேரமே இருக்கிறதா? கவலையை விடுங்கள். எளிய வழி ஒன்று இருக்கிறது. சோளம் மாவில் சிறிது நீர் கலந்து கைகளில் தேயுங்கள். ஒரு வாரத்தில் உங்கள் உள்ளங்கைகள் மிருதுவாகும் பாருங்கள்.





# தமிழை நான் கண்டேன்...

புன்னை மரத்தடியில்
புலராத பொழுதினிலே!
பெண்ணொருத்தியை
நான் கண்டேன் – அவள்
தமிழென்று நானறிந்தேன்


தலைவாரிப் பூச்சூடி
தாழ முடிந்திருந்தாள்
தாள லயங்களை எல்லாம்
தப்பாது சேர்த்திருந்தாள்
இடையின் அசைவினிலே
இலக்கியம் காட்டினாள்.
இதழ்களின் அசைவிலே
இலக்கணம் கற்பித்தாள்
அவள் கன்னக்
கதகதப்பினிலே

கம்பன் வாழ்கின்றான்
எண்ணக் கனவினிலே
எத்திசையும் முழங்குகிறான்
அவளுயர்த்திய புரட்சிக் கொடியில்
புன்னகைக்கிறான் பாரதி

"நீ யார்" என்று,
நான் கேட்டேன்
"சித்திரப்பாவை"– என்றாள்
சித்தப்பிரமையுடன்
நான், நின்றேன்

*பா.பாலாஜினி, பளை*





# அச்சம் என்பது மடமையடா

படித்துவிட்டு வெட்டியாக, நண்பர்களுடன் ஊர் சுற்றிக் கொண்டிருக்கும் சிம்பு, தென்னிந்தியா முழுக்க மோட்டார் சைக்கிளில் பயணிக்கத் திட்டமிடுகிறார். அப்போது, அவரது தங்கையின் தோழி லீலா ராமன் (மஞ்சிமா மோகன்) அவரது வீட்டுக்கு வந்து சில காலம் தங்குகிறார். இருவரும் பரஸ்பரம் ஈர்க்கப்படுகிறார்கள்.

சிம்பு தன் பயணத்துக்குத் தயாராகும் நாளில் அவருடன் மஞ்சிமாவும் சேர்ந்துகொள்கிறார். பயணத்தின்போது வழியில் ஒரு விபத்து ஏற்படுகிறது. அந்த விபத்தின் விளைவுகள், அதன் காரணங்கள், அது அவர்கள் வாழ்வில் ஏற்படுத்தும் அடுக்கடுக்கான பாதிப்புகள் ஆகியவைதான் 'அச்சம் என்பது மடமையடா'.

'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்துக்குப் பிறகு மீண்டும் கௌதம் மேனன் – சிம்புவின் கூட்டணி. ஒரு பயணத்தில் "அவன் எதிர்பாராது சந்திக்கிற வன்முறைகளால் நிகழும் விபரீதங்கள்" என்ற ஒருவரிக் கதையைத் திரைக்கதையாக அமைத்ததில் நிமிர்ந்து உட்கார வைக்கிறார் கௌதம் மேனன். நண்பர்கள், காதல் என்று வழக்கமாகப் போய்க்கொண்டிருக்கும் கதையில், விபத்துக்குப் பிறகு ஊகிக்கவே முடியாதபடி திரைக்கதை வேகமெடுக்கிறது.

மஞ்சிமாவின் குடும்பத்தைக் காப்பாற்ற முயற்சிப்பது, ரவுடிகளைத் தேடிச் சென்று பழிவாங்குவ்து என்பதெல்லாம் சரிதான். ஆனால் சிம்பு பொலிஸ்காரர்களை அடித்து மண்டையை உடைக்கிறார். தாக்க வருபவர்களைச் சுட்டுக் கொல்கிறார். ஆனால், உள்ளதிலேயே ஆபத்தான ரவுடியை மட்டும் அவர் பொலிஸ் என்பதால் சுடமாட்டாராம்!


இக்கட்டான நேரத்தில் நாயகர்களுக்கு மட்டும் எப்படித்தான் சாவியுடன் நின்றிருக்கும் மோட்டார் சைக்கிள் கிடைக்கிறதோ தெரியவில்லை. அதேபோல, மஞ்சிமாவின் பிறப்புக் குறித்த பின்னணி, அரசியல்வாதியின் திட்டம், கை ஒடிந்த சிம்பு சண்டை போடுவது, இறுதிக்காட்சியில் சிம்புவின் புதிய அவதாரம் போன்ற விடயங்கள் எல்லாம் 'அட... இதுவும் வழக்கமான தமிழ் சினிமா தானா' என்று சொல்ல வைக்கின்றன.

அழுத்தமான, தொடுதல்கூட இல்லாமல் சிம்புவுக்கும், மஞ்சிமாவுக்கும் இடையிலான காதலை மிக இயல்பாகக் காட்சிப்படுத்தியதில் தன் முத்திரையைப் பதிக்கிறார் இயக்குநர். முன் பாதி முழுவதும் கவித்துவமான காதல் ரசனை காற்றில் கலந்திருக்கிறது. இசையும் ஒளிப்பதிவும், வசனங்களும் நடிப்பும், பாடல் வரிகளும் திரையில் அருமையான காதல் அனுபவத்தை மலரச் செய்கின்றன. சண்டைக் காட்சிகளில் உள்ள தீவிரம் அழுத்தமாக உள்ளது. இருவரும் தத்தமது காதலைச் சொல்லும் தருணங்கள் மனதைத் தொடுகின்றன. படம் முழுக்கத் தாடியுடன் வருகிறார் சிம்பு. 'கூட வந்தா நல்லாயிருக்கும்ல' என்று காதலில் உருகும்போதும், நண்பனைப் பறிகொடுத்த பின் அழும் காட்சியிலும் மிகவும் பக்குவமான நடிப்பை சிம்பு வெளிப்படுத்துகிறார். மஞ்சிமா மோகன் திரையில் தோன்றினாலே அவ்வளவு கவிதையாக இருக்கிறது. "உன்கூட வரலாம்னு பார்த்தேன் பைக்ல" என்று தயங்கித் தயங்கி சிம்புவிடம் சொல்லும்போதும், "சரி, இதுக்குமேல நான் ஏன், உன்கூட வரணும்'' என்று கொஞ்சம் தெனாவட்டாகக் கேட்கும்போதும் ரசிக்க வைக்கிறார்.

பொலிஸ் வில்லனாக வரும் பாபா செகல், சிம்புவின் நண்பனாக வரும் சதீஷ் கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு. டானியல் பாலாஜி சிறிய வேடத்தில் வந்து கவனம் ஈர்க்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையில், 'தள்ளிப் போகாதே' பாடலைத் தவிர மற்ற எல்லாப் பாடல்களும் கதையுடன் பயணிப்பதால், அவற்றைத் தனியே பிரித்துப் பார்க்க முடியவில்லை. ஆனால் 'தள்ளிப் போகாதே' பாடலும் அதுஎடுக்கப்பட்ட விதமும் அருமை. அருமையான ஒளிப்பதிவும், தாமரையின் வரிகளும் சித்ராமின் குரலும் நடன அமைப்பும் சேர்ந்து பாடலை அசாதாரணமான அனுபவமாக்குகின்றன. முதற் பாதியில் சிம்பு, மஞ்சிமாவைத் திரையில் காட்டிய விதத்துக்கும் இரண்டாம் பாதியில் காட்டிய விதத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் ஆச்சரியப்படுத்துகிறது. முதற் பாதி முழுக்க முழுக்க ரசனையோடு அமைதியாக நகர, இரண்டாம் பாதி முழுக்க வெறும் டமால் டுமீல்! டான் மெக்கார்தர், தேனி ஈஸ்வர் ஆகியோரின் ஒளிப்பதிவும், யதார்த்தம் மீறாத சண்டைக் காட்சிகளும், அன்ரனியின் எடிட்டிங்கும் கௌதமின் திரைக் கதைக்குக் கைகொடுக்கின்றன.

நாயகனின் பெயரை இறுதிக் காட்சி வரை வெளிப்படுத்தாமல் இருப்பதில் காட்டிய கவனத்தை, இறுதிக் காட்சிகளிலும் காட்டியிருந்தால் படம் முழுத் திருப்தியை அளித்திருக்கும்.





சிந்தனைக்கு!
கல்விச் செல்வம்
இருந்தால், உலகையே
விலைக்கு வாங்கலாம்.
-ஓர் அறிஞர்

## வாழ்வில் சிறக்க சான்றோர் மொழிந்தவை

- வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம். கடமையைச் செய்தால் அது வெற்றி, கடமைக்குச் செய்தால் அது தோல்வி.
  –மாவீரன் அலெக்சாண்டர்
- முயற்சி இல்லையென்றால் உன்னால் வெற்றிபெற முடியாது. முயற்சி இருந்தால், உன்னால் தோற்க முடியாது.
  –ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
- தன்மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னை ஒரு சிற்பம் ஆக்கும் என்று கல்லுக்குத் தெரியாது.
  –ஐன்ஸ்டீன்
- உலகம் எப்போதும் பளபளப்பைக் கண்டு ஏமாறுகிறது.
  –ஷேக்ஸ்பியர்
- உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாயிரு. உயர்த்திப் பேசும்போது செவிடனாய் இரு. வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்.
  –விவேகானந்தர்
- நீராவி போன்றது புகழ். வந்த வேகத்தில் ஆவியாகிவிடும்.
  –ஆபிரகாம் லிங்கன்
- மரியாதையாய் கேட்டால், கோட்டைகளும் உனக்கு வழி விடும்.
  –செனிகா

## வரலாற்றில் இன்றைய தினம்

1789 - நியூயோர்லி. உரிமைகள் சட்டத்தை அங்கீகரித்த முதல் அமெரிக்க மாநிலமானது.
1917 - உக்ரைன் குடியரசாகப் பிரகடனம்.
1947 - எலிசபெத் இளவரசி லெப்டினன்ட் பிலிப் மவுண்பேட்டனைத் திருமணம் செய்து கொண்டார்.
1992 - கொழும்பு நீதிமன்றில் குண்டு வீச்சில் 8 பேர் காயம்.
- மூளாயில் எறிகணை வீச்சினால் இருவர் சாவு.
- அரசியல் தீர்வே இறுதியானது என்கிறார் அமைச்சர் ஹமீத்.
1996 - எழுதுமட்டுவாழ் சம்பவம்; 6 படையினரும் காவலில்.
- படைமுகாம்களுக்கு நேரில் செல்ல படைத் தளபதிகளுக்கு உத்தரவு. வடக்கில் அத்து மீறல்களைத் தடுக்க பாதுகாப்புச் செயலர் நடவடிக்கை.
1999 - வடக்கு-கிழக்கு ஆலோசனைச் சபை உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை. கட்சிகளிடமிருந்து பெயர்கள் கோரப்படுகின்றன.
- எறிகணை வீச்சினால் மன்னார் நகரம் வெறிச்சோடியது.
2006 - ஏ-9 பாதையைத் திறக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இணைத் தலைமைகளிடம் ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தர நாயகம் அவசர வேண்டுகோள்.
- நிலையான சமாதானத்தை ஏற்படுத்த ஐ.தே.க வால் மட்டும் முடியுமென அடித்துச் சொல்கிறார் ரணில் விக்கிரமசிங்க.



## செல்லப் பிராணி

நான் வளர்க்கும்
செல்லப் பிராணி
பூனையே!

என்னைப் போல
அழகாய்ச் சட்டை
போடுமே!


வீட்டு எலியை
தினமும் வேட்டை
ஆடுமே!

மனிதன் போல
சுத்தம் பேணி
வாழுமே!

என். தனுசியா

## முதன் முதலில்...

- உலகின் முதல் முன்பள்ளியைத் தொடங்கியவர் ஜேர்மனியைச் சேர்ந்த பிரெடரிக் புரோபெல் என்பவர்.
- உலகின் முதல் நவீன பல்கலைக்கழகம் இத்தாலி நாட்டிலுள்ள போலங்கா நகரில்தான் தொடங்கப்பட்டது.



க.வர்ஷாசினி
தரம் - 4ஏ
ஏஞ்சல் ஆங்கிலப் பாடசாலை,
மானிப்பாய்

# சிறுவர் உலகு

## சொல் நயம்

கண் பார்வை இல்லாத சிறுவன் ஒருவன் வீதியில் இருக்கும் ஒரு மாடிப் படிக்கட்டில் அமர்ந்திருந்து பிச்சை எடுக்கிறான். அவன் அருகே, "நான் குருடன், உதவுங்கள்"என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகை ஒன்றும், காசு போடுவதற்கான பாத்திரம் ஒன்றும் இருக்கின்றன. அந்த வழியே செல்லும் யாரும் அவனுக்குப் பெரிதாக உதவியதாகத் தெரியவில்லை. பாத்திரத்தில் சில்லறைகள் விழுந்தபாடும் இல்லை.

அந்த வழியைக் கடந்த ஆண் ஒருவன், சிறுவனுக்கு உதவினான்.

பொக்கெட்டில் இருந்து சில்லறைகளை எடுத்துப் பாத்திரத்தில் போட்டான். பின்னர், அருகில் இருந்த பலகையைப் பார்த்தான்.

இரண்டு நிமிடங்கள் சிந்தித்து விட்டு, பதாகையை எடுத்து அதில் இருந்த வாசகத்தை மாற்றினான்.

அவன் சென்ற சிறிது நேரத்திலேயே பாத்திரம் சில்லறைகளால் நிரம்பத் தொடங்கியது.

சிறுவனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

வாசகத்தை மாற்றி அமைத்தவர், ஏதேனும் மாற்றம் உண்டா என்று பார்க்க மீண்டும் அவ்விடத்துக்கு வந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே பாத்திரம் சில்லறைகளால் நிரம்பி இருந்தது.

சிறுவன் அவரின் கால் தடத்தால் வந்த ஓசையை வைத்து அவர் திரும்பவும் வருவதை இனம் கண்டுகொண்டான்.

"நீங்கள்தானே முன்பு வந்து இந்தப் பதாகையை எடுத்து மாற்றினீர்கள்? என்ன எழுதியிருந்தீர்கள்?

எப்படி இப்போது நிறையப் பேர் உதவியிருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"மற்றொரு வாசகம் எழுதினேன்" என்றார் அந்த நபர்.

"அந்த இரண்டாம் வாசகம் தான் என்ன ?

எதனால் இம்முறை நிறையப் பேர் பிச்சை இட்டனர்?"

"இன்று மிகவும் அழகான நாள்; அதை என்னால் பார்க்க முடியவில்லை" என்று இரண்டாவது வாசகத்தில் எழுதப்பட்டிருந்தது.

இரண்டு வாசகங்களுமே சிறுவன் குருடன் என்பதைத்தான் குறிப்பிடுகின்றன. ஆனால், இரண்டாவது வாசகம் அதிக சக்தி படைத்தது.

## அன்பு



வீட்டில் இருந்து ஓர் அம்மா கதவைத் திறந்துகொண்டு வந்தார். வெளியே மூன்று பெரியவர்கள் வெள்ளை நிறத் தாடியுடன்நின்றனர். உங்களுக்கு உணவு வேண்டுமா? உள்ளே வாருங்கள் என்று அந்த அம்மா அன்புடன் அழைத்தார்.

நாங்கள் உங்கள் வீட்டுக்கு உணவு உட்கொள்ள வரவில்லை என்று அந்தப் பெரியவர்களில் ஒருவர் கூறினார். அவர் பெயர் வெற்றி. வெற்றி அந்த அம்மாவிடம், இவர் செல்வம், இவர் அன்பு, எங்கள் மூவரில் ஒருவர்தான் உங்கள் வீட்டுக்கு வர முடியும். எவர் வர வேண்டும் என்பதை உங்கள் குடும்பத்தாருடன் கலந்தாலோசித்துவிட்டு வந்து சொல்லுங்கள்–என்றார்.

அந்த அம்மாவும் கணவரிடம் சென்று நடந்த விவரத்தைச் சொன்னார். அவருடைய கணவர், செல்வத்தை கூப்பிடுவோம், அப்போதுதான் நமது வீடு முழுவதும் செல்வம் கொட்டிக் கிடக்கும், நாம் சந்தோசமாகச் செலவு செய்யலாம்– என்றார்.

மனைவி அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டு, வெற்றியை கூப்பிடுவோம் என்றார். இதை எல்லாம் கவனித்துக் கொண்டு இருந்த அவர்களுடைய மகள், இல்லையம்மா, அன்பை கூப்பிடுவோம். அப்போதுதான் நமது இல்லம்– நமது மனம் முழுவதும் அன்பால் நிறைந்திருக்கும்–என்றாள்.

மூவரும் இதற்குச் சம்மதிக்கவே அந்த அம்மா வெளியே சென்று, எங்கள் வீட்டுக்கு அன்பு வரவேண்டும்–என்றார்.

அதன்படி அன்பு வீட்டுக்குள் நுழைந்தார். அவரைத் தொடர்ந்து வெற்றியும், செல்வமும் சென்றனர்.

ஒருவர் தானே வருவீர்கள் என்றுசொன்னீர்கள்? என்று அந்த அம்மா கேட்டார்.

நீங்கள் வெற்றி கேட்டிருந்தால், அவர் மட்டும்தான் வந்திருப்பார். அதுபோல செல்வம் மட்டும் கேட்டிருந்தால், நான் மட்டும் வந்திருப்பேன். ஆனால், நீங்கள் அன்பு வேண்டும் என்று கேட்டதால்– நாங்களும் வந்துவிட்டோம். அன்பு எங்கெல்லாம் இருக்கிறதோ– அங்கெல்லாம் நாங்களும் இருப்போம் என்று செல்வம் சொன்னார். அந்த இல்லம் மூன்று செல்வங்களும் பெற்று மகிழ்ச்சியில் திழைத்தது.

நீதி– அன்புதான் உலக மகா செல்வம். இச்செல்வம் ஒருவரிடம் இருந்தால்; அனைத்தும் அவரைத் தேடிவரும்.



# திருந்(த்)த வேண்டிய திருடர்கள்

சி.நற்குணலிங்கம்

சட்டவிரோதமான முறையில், மனச்சாட்சியற்ற வகையில் தனித்தோ குழுவாகவோ இயங்கிப் பணத்துக்கு முதலிடமளித்து விரைவாகப் பணத்தைச் சேர்ப்பதற்குச் சிலர் குறுக்கு வழியில் பயணிக்கிறார்கள். குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கப் பல வழிகளையும் கையாளுகிறார்கள். அதனால் அவர்கள் ஒருபோதும் முன்னேற முடியாது என்றுணர்வதில்லை. அதன் மூலம் வெற்றிகள் கண்டவர்களைக் காண்பதும் அரிது. ஆனால் இவர்களை ஏதாவதொரு பிரச்சினையுடன் பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் காணமுடிகின்றது.

யாழ். தேசத்தில் திருடர்கள், கொள்ளையர்களின், கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளன. வாகனங்களை மறித்து பணம் நகைகளை கொள்ளையடிக்கிறார்கள். வீடுகளுக்கு இரவு, பகல் என்ற பேதமின்றி துப்பாக்கிகள், வாள்கள் சகிதம் கொள்ளையில் ஈடுபடுகின்றனர். பணம், நகைகளை எடுப்பதில் சிரமம் இருப்பின் கொலை செய்யவும் அவர்கள் தயங்குவதில்லை. 18வயதுக்குக் குறைந்த சிறுவர்களும் திருட்டு முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஆலயங்கள் கொடியேறிவிட்டாலும் திருடர்களுக்குக் கொண்டாட்டம்தான். வேறு மாவட்டங்களிலிருந்து வந்து தங்கியும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு உழைக்கிறார்கள்.

இவர்கள் மட்டும் திருடர்கள் அல்ல. சட்டவிரோதமான முறையில் வாகனங்களின் உதவியுடன் மரக்கடத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த மாதம் கிளிநொச்சிப் பளைப் பொலிஸ் நிலையத்தில் பதிவாகிய 33 முறைப்பாடுகளுள் மரக்கடத்தல் தொடர்பான முறைப்பாடுகளே அதிகம். சட்ட விரோதமாக தறிக்கப்பட்ட பெறுமதியான பாலை, முதிரை மரங்களிலிருந்து அறுக்கப்பட்ட தீராந்திகள் கொண்டு செல்லப்பட்டு பல இலட்சம் பெறுமதிக்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஆண்கள், பெண்கள் என பால் வேறுபாடின்றி கடத்தல்களில் ஈடுபடுகின்றனர். கேரளக் கஞ்சா கரையோரப் பகுதிகள் ஊடாகக் கடத்தப்பட்டு பல இலட்சம் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இந்தியாவிலிருந்து போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன. அனு மதிப்பத்திரமின்றி சாராய விற்பனை. களவாகக் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இவை வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பத் தலைவர்களை இலக்காகக் கொண்டு விற்பனை செய்யப்படுகின்றது. கசிப்புக்கு அடிமையானவர்கள் அதனை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்கத் தயாராக உள்ளனர்.

கசிப்பு உற்பத்தி முறியடிக்கப்பட்டாலும் பெருமளவில் உற்பத்தி நடந்து கொண்டே இருக்கின்றது. சில கடை உரிமையாளர்கள் சட்டத்துக்கு முரணாகத் தமது விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனையும் செய்கிறார்கள்.



பெரும்பாலான வியாபாரிகள் பொருள்களை விற்பனை செய்வதில் சட்டவிரோதமான முறையில் நடந்து கொள்கின்றனர். காலாவதியான உணவுப் பொருள்கள், உடலுக்கு ஒவ்வாத அழகு சாதனப்பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்தல், மட்டுமன்றி பழுதடைந்த பொருள்களைக்கூட விற்பனை செய்கிறார்கள். கால்நடைகளுக்கான உணவான கோதுமை, தவிடு போன்ற உணவுப்பொதிகளில் நிறைகுறைந்த பொதிகளை விற்பனை செய்கிறார்கள். இவ்வாறு தவறான வழிகளில் பணத்தைச் சேகரிக்கும் இவர்களும் திருடர்களே.


இவை மட்டுமல்ல சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், அதிக வட்டிக்குப் பணம் கொடுத்துச் சம்பாதித்தல், அதிகமான பயணக் கட்டணத்தைப் பிடுங்கிக் கொள்ளுதல் பஸ் நடத்துநர்கள் மேயவிடப்படும் ஆடு, மாடு ஆகிய கால்நடைகளை களவாகப் பிடித்து இறைச்சிக்கு விற்றல், சட்டவிரோதமாக மணல் ஏற்றுதல், கடலில் எல்லை மீறி மீன்பிடித்தல், நோயுள்ள ஆடு, மாடு, கோழிகளை இறைச்சியாக்கிக் கடைகளில் விற்றல், மருந்து விசிறப்பட்டு விரைவில் பழுக்கச் செய்த பழங்களை விற்பனை செய்தல், தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்தல், அனுமதிப்பத்திரத்துக்கு முரணானவகையில் மண்ல் ஏற்றுதல், சிறையில் உள்ளவர்களை விடுவிக்கலாம் என்று கைதிகளின் பெற்றோருடன் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து பணம் அறவிடல் போன்றவற்றீல் ஈடுபடுவோரும் திருடர்களே. ஆபாசப்படத் தயாரிப்பில் ஈடுபடும் இயக்குநர், நடிகர், நடிகை, உதவியாளர்கள், போன்றோர் ஆபாசப் படங்களைத் தயாரித்து இறுவட்டுக் களை சந்தைக்கு விடுவதன்மூலம் என சட்டத்தக்கு முரணாக குறுக்கு வழி யில் பணம் சம்பாதிக்கிறார்கள்.

அத்துடன் வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபடுவோர் எனச் சட்டத்துக்கு விரோதமான முறையில் சென்று குறுக்கு வழியில் பணத்தை சம்பாதிப் பவர்கள் பலரும் திருடர்களே. நாம் வாழ்வில் சந்திக்கக் கூடியதாக இருக்கும். இவர்களுக்கு எப்படி அவர்களுக்கு அறிவுரை கூறினாலும் திருந்தமாட்டார்கள். குறைந்த நேரத்தில்கூடிய பயனைப் பெற்றுக் கொள்ளும் இவர்கள், குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதில் ஊறிவிட்டார்கள்.

இப்படியேஇவர்களை விட்டுவைத்தால் சமூகம் சீரழிந்துவிடும் இவர்கள் அனைவரும் திருடர்கள. சமூக விரோதிகளான இவர்கள் தொடர்கண்காணிப்புடன் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

இவர்களுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்படவேண்டும். இவை தொடர்பான சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். இவர்ளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளுக்கு மக்களது முழுமையான ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.


இவற்றின்மூலம் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் இவர்களை நீண்ட காலத்துக்குச் சிறையில் வாழவைக்க வேண்டும். இதன்மூலம் இவர்களின் சம்பாத்தியத்தை நிறுத்தமுடியும், நிறுத்தவேண்டும்.



**இளைஞன்:** ஹாய் செல்லம் எங்க இருக்கிறிங்க?
**யுவதி:** நான் எங்கட அப்பாவோட காரில கோயிலுக்குப் போயிட்டு, அதுக்கப்புறம் பீச்சுக்குப் போயிட்டு, வீட்டுக்கு வந்து கார பார்க் பண்ணிட்டு, வீட்டு மாடில நின்று உங்களுக்கு 'வட்ஸ்அப்' இல சற் பண்ணிக்கிட்டு இருக்கிறன்.
**இளைஞன்:** ஓ...அப்பிடியா...
**யுவதி:** ஆமா நீங்க எங்க இருக்கிறிங்க?
**இளைஞன்:** ஊருக்குப் போற பஸ்சில, உங்களுக்குப் பின்னால இருக்கிற சீற்றில தான்.
**யுவதி:** !!!

ஜோக்ஸ்





# "கடலோடு தான் எங்கட வாழ்க்கை"

குணசேகரன் சத்தீனா

தொழிலை முடித்துவிட்டுக் கரைக்கு வருகிறார்கள்.வள்ளத்தில்இருந்து இறங்கிய கால்கள் கடல் நீரிலிருந்து மண்ணைத் தொடும் முன்னர்கடல் நீரைத் தொட்டு சிலுவை அடையாளம் போட்டுக் கொள்கிறார்கள், கடலன்னைக்கு நன்றி சொல்கிறார்கள்.

**தயாராகும் மீன்வலைகள்**

யாழ்ப்பாணத்தில் பாசையூர் என்றால் அனைவரும் அறிந்த மீனவப் பிரதேசம். இங்கு மீன்பிடித் தொழில் செய்யும் அனைவரும் சிறகுவலைத் தொழில் தான் செய்கிறார்கள். வெளியில் இருந்து பார்க்கும்போது தெரிகின்ற இவர்களின் வாழ்வுக்குள் இன்னொரு வாழ்வுள்ளது. அது கடலுடன் பின்னிப்பிணைந்த வாழ்வு. வீடுகளில் இருக்கும் நேரத்தை விடக் கடலும் கடற்கரையும் தான் அவர்கள் அதிகநேரம் இருக்கும் இடங்கள். தரையில் இருந்து கடலிற்குள் சென்றுவரும் வரையான இவர்களின் வாழ்வைப் பற்றி அறியும் ஆவலில் வலைகளைச் சூழ வைத்துக் கொண்டு நடுங்குகின்ற விரல்களிற்கிடையில் வலை நூல்களைச் சேர்த்துச் சிறப்பாகப் அதன் கிழிசல்களைப் பொத்திக் கொண்டிருக்கும் யோசேப் ஐயாவிடம் சென்றேன்.

**மீன்பிடிக்கும் முறை**

"இப்பமீன்வகைநல்லாக்குறைஞ்சு போட்டுது. நாங்கள் ஓடுற மண்ணெண்ணெயின்ர காசுக்குக்கூட மீன்படுறது இல்ல. காலநிலையும் மாறிப்போட்டுது கடற்றொழில மட்டும் நம்பியிருக்கிற எங்களுக்கு இந்த எதிர்பாராத ஏமாற்றத்தை எதிர் கொள்ளமுடியாமல் இருக்கு" பொத்திக் கொண்டிருந்த வலைகளின் கிழிசல்களைப் பார்த்தபடி கூறினார் யோசேப் ஐயா.

"நான் கடற்றொழிலை 40வருசமாகச் செய்யிறன், சிறகுவலைமீன்பிடிதான் நான் செய்யிற தொழில். கடலுக்க போய் சுழி ஓடித்தான் செய்ய வேணும் எங்கட ஆக்கள், எல்லோரும் இந்தத் தொழில்தான் செய்யிறவை. மீனுக்குப் பட்டியும் வைப்பம். கம்புகளைக் கொண்டுபோய் நாலு பக்கமாகக் குத்தி நடுவம். கம்புகள்வலையை இழுத்து கட்டிவிடுவதற்குப் பயன்படும். கீழ் மண்ணுக்குள் தெரியிற மாதிரியும் கட்டுவம். நாங்கள் பாவிக்கிற கம்புகள் கடற் தண்ணிக்கு ஏற்றமாதிரி பாவிப்பவையாக இருக்கும் இப்ப 20அடிக் கம்புகள் தான் பாவிக்கிறனாங்கள். நாங்கள் கட்டுற பட்டி தண்ணிக்குள்ள ஒரு சின்ன வீடு கட்டின மாதிரி இருக்கும். பட்டிக்குள்ள மீன் வந்தாப்பிறகு நாங்கள் கொண்டு போற இன்னொரு வலைய(கடிப்பு) வைச்சு அதற்குள்ள இருக்கிற மீன் களைப் பிடிப்பம். அப்ப மீன்கள் உயிருள்ளவையாக இருக்கும் வள்ளத்துக்குள்ள கொண்டு வருகிறபோதுகூட உயிருள்ள மீன்களாகத்தான் இருக்கும் பிறகு தான் மீன்கள் சாகும். அதனால தான்எல்லோரும் எங்கட களங்கட்டி (பட்டி) மீன்களை விரும்பிச் சாப்பிடுவினம். அவைமிகவும்ருசியானமீன்களா இருக்கும்.

**தொழில் நடவடிக்கை**

நாங்கள் கடலில கட்டுற களங்கட்டித்(பட்டியை) தொழிலுக்குரிய வலையை ஒருமாதத்தில இரண்டு தடவைகள் கரைக்குக் கொண்டுவருவம். ஏனென்றால் வலையில பாசி, செமும்பு பழுந்திருக்கும். இதனால் வலை பாரமாகிவிடும். 15அல்லது 20நாள் கடலுக்குள் வலை நின்றால் வலையத் தூக்கேலாமல் பாரமாக இருக்கும். செழும்புகள் அப்பின வலையில மீனும் படாது. அதனால வலையைக் கழட்டிக் கொண்டு வந்திடுவம் செழும்புகளை நீக்கிச் சாயம் போட்டு அவிச்சுக் காய விடுவம். வலைச் சாயம் காய்ஞ்ச பிறகு வலையில இருக்கிற கிழிசல்களைப் பொத்தி திரும்பவும் வலையைக் கடலுக்குக் கொண்டுபோவம். நான்கு ஐந்து நாள்கள் செல்லும்திரும்பக்கொண்டுபோய் தொழில் செய்ய.


நாங்கள் கழட்டிக் கொண்டு வந்த வலையை 10 நாளைக்குள்ள திரும்பவும் போடவேண்டும். இல்லையென்றால் இன்னொருவர் அதே இடத்தில போய் தொழில் போடலாம் இது எங்கட சங்கத்தோட வழக்கம். ஆகவே நாங்கள் கழட்டிக் கொண்டு வந்த வலையை நான்கு நாள்களிற்குள் கொண்டுபோய் போட்டிடுவம். ஒருவருடைய பட்டியில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் தான் இன்னொருவர் பட்டியமைக்கலாம்'என்றார். அவ்வேளை தொழிலுக்குச் செல்வதற்கு கடற்கரைக்கு வந்தார் அந்தோனி ஐயா.

**கடலை மட்டும் நம்பியவர்கள்**


"நாங்கள் மீன்பிடித் தொழில் மட்டும் தான் செய்யிறம் இதவிட வேற தொழில் தெரியாது, இருட்டு நேரத்தில இறால்படும், நிலவு நேரத்தில கணவாய்வரும் இருட்டில மீனுக்கு இரை தெரியாதுநிலவு நேரத்திலதான் மீன் இரைதேடி வரும். அதால இந்தக்காலம் நாங்கள் நம்பித் தொழில் செய்யலாம். ஆனால் இப்பொழுது மீன்கள் தான் இல்லை. என்றவர், தரையில எங்கட குடும்பத்த காப்பாற்ற நீருக்குள்ள போராடுகிறோம்." – என்றார்.

அப்பொழுது அங்கு வந்தார் கிறிஸ்து ஐயா, "இப்ப கரையில இருந்து கடலநோக்கி அடிக்கிற காத்து இன்னும் எங்களுக்கு இலகுவான தொழிலைத் தரும். ஏனென்றால் மீன்கள் அப்பதான் கரையை நோக்கி வரும். அலையோடயும் காத்தோடயும் போராடும். இலகுவாக எங்கட வலைக்குள்ள சிக்கும். பட்டி கட்டிறதுக்கு சிறகு வலைதான் பாவிப்பம் வலைக்கு நாங்கள் பழக்கப் பட்டனாங்கள் பார்த்தவுடனே சொல்லிடுவம் இது எத்தின இஞ்சி வலை என்றும் எத்தின கண் வலை என்றும் எங்கட தொழில் போட்டில இருந்து கொண்டு செய்யிற தொழில் இல்ல கடலுடனான எங்கட வாழ்க்கை எங்களுக்கு மட்டும் தான் தெரியும்"என்றார்.

வெளியில் இருந்து மீன் வாங்கிச் சாப்பிடும் நம்மவர்களையும் கடல் நீருக்குள் சிறு வீடு கட்டி அதனோடு போராடும் மீனவர்களையும் அவர்களின் கஸ்ரங்களையும் சிறிதாவது அறிந்து கொண்டு விடைபெறுகின்றேன்.







நிவிதன்

# இதையாவது பிரசுரியுங்கள்!

இத்துடன் 20 கதைகள்... அனுப்பிய ஒன்றைக்கூடப் பிரசுரிக்கவில்லை.

விரக்தியின் விளிம்பில் "என்னுடைய கதையை மட்டும் பிரசுரிக்கவில்லை என்றால், நான் தற்கொலை பண்ணிக்கொள்வேன் சேர்" என்று பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் எழுதி அனுப்பினேன்!!!. தற்கொலை செய்யுமளவுக்கு எனக்குத் துணிவில்லை எனினும், எப்படியாவது எனது கதை பிரசுரமாகி விடும் என்ற ஒரு நப்பாசை தான்.

அந்த வேளை தான் அது நிகழ்ந்தது...!

என்னுடைய கதை நாளையேனும் பத்திரிகையில் வராதா? என்ற யோசனையில் இருந்த நான், எதிரே வந்த வாகனத்தைக் கூடக் கவனிக்காமல் வளைவில் திருப்பிப் பெரும் விபத்து... இல்லாவிடினும் சிறிய விபத்து! நான் வேறு, என் சைக்கிள் வேறாகக் கிடந்தோம். தலைசுற்றிக் கண்கட்ட அப்படியே மயங்கினேன். அப்புறம் தான் தெரிந்தது நான் இருக்குமிடம் வைத்தியசாலை என்று! சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தபோதுதான்.... அது... அந்தப் பாழாய்ப்போன பத்திரிகை என் கண்ணில் பட்டது.

அந்தப் பத்திரிகையில் 'சாலை விதிகளை மீற வேண்டாம்' என்ற விழிப்புணர்வுக் கட்டுரை ஒன்று படத்துடன் பிரசுரமாகியிருந்தது. அட... அந்தப் படத்தில்...நானும் எனது சைக்கிளும் !!!



# அன்புள்ள அப்பா...!

ச.பிரகாசினி


நம்மில் அதிகமானவர்களுக்குத் தாயின் பாசம் தான் தெரியும். நாம் வளர்ந்து, நமது வேலைகளை நாமே செய்துகொள்ளப் பழகும் வரை நம்மைத் தாங்கி நிற்பவள் தாய் என்பதே எமது வெளிப்படையான எண்ணம். இந்தக் கால கட்டங்களில் நமக்கு மட்டுமல்ல பொதுவாக எல்லோருக்குமே தாயன்றித் தந்தையுடன் பெரிதாக ஈடுபாடு இருக்காது. "அம்மா, சாப்பாடு முடிஞ்சுதா? அம்மா பள்ளிக்கூடம் போயிற்று வாறன், அம்மா அப்பாட்டச் சொல்லு எனக்குச் சைக்கிள் வேணும்" என்று அம்மாவே உலகமாகவும் ஊடகமாகவும் நினைப்போம். அம்மாவையும் எங்களையும் தாங்கிப்பிடித்துள்ளது அப்பா என்பது, எங்கள் கண்களுக்குத் தெளிவாவதில்லை. அப்பா மீது பாசமோ, ஈர்ப்போ இருப்பினும் அம்மா மீது இருப்பது போன்றில்லாமல் சிறிய இடைவெளியிருக்கும். அது நாம் ஆண்பிள்ளையாயினும் சரி, பெண் பிள்ளையாயினும் சரி எமக்கு வயதாக வயதாக அதிகரித்துக் கொண்டே போகும். ஒரு கட்டத்தில் தந்தையும் நாமும் பேசிக் கொள்வதும் குறைந்துவிடும். பிள்ளைகள் தமது தந்தையின் அருமையைப் புரிந்து கொள்வது எப்போது என்றால், தாம் தந்தையின் நிலைக்கு வரும்போது தான். அவ்வேளைகளில் தான் அப்பா இப்படி நடக்கும்போது எப்படிக் கஷ்டப்பட்டிருப்பார் என்றுணர்வோம்.

தந்தை தனது குடும்பத்துக்குச் சீரான பொருளாதார வசதியை அளித்தால் தான், தாயால் தனது கடமைகளைச் சரியாகச் செய்ய முடியும். குழந்தைக்குப் பாலூட்டுவதிலிருந்து பாடசாலைச் செலவுகள், குடும்பத்துக்கான உடை, உணவுச்செலவுகள் எனத் தாயின் பின் இருக்கும் தந்தையின் அத்திபாரம் எமக்குத் தெரிவதில்லை. குழந்தையைப் பிரசவிப்பதன் வலியைத் தாய் உணருவதைப் போன்று தன் வாழ்நாள் முழுதும் தந்தை அனுபவிக்கும் வலி நம் கண்களுக்குத் தெரிவதில்லை. தாயின் அன்பு வெளிப்படையானதும் அனைவரும் உயர்த்திக் கூறுவதும் என்பதால் அனைத்துக் குழந்தைகளும் இலகுவாகப் புரிந்து கொள்கின்றன. ஆனால் தந்தையின் அன்பையும் உழைப்பையும் புரிந்துகொள்ள நமக்கு வயதும் முதிர்ச்சியும் தேவைப்படுகின்றது.

ஒரு தாய் தன் பிள்ளைகளைப் பத்து மாதம் சுமந்து பெறுகின்றாள் என்ற ஒன்றே உலகம் தாயை முன்னிறுத்தி உயர்த்திக்கூறக் காரணமாகின்றது. தந்தைதான் தனது மனைவி பிள்ளைகளை இறக்கும் வரைச் சுமக்கின்றான் என்பது கவனிக்கப்படுவதில்லை. தனது பிள்ளைகள் செய்யும் தவறுகளைத் தன்னைக் கடினமாக்கிக் கொண்டு கண்டிக்கும்போதே தந்தையிடம் வெறுப்பு உண்டாகி விடுகிறது. தன் பிள்ளைக் குத் தன்மேல் வெறுப்பு ஏற்படும் என்று தெரிந்தும். தனது பிள்ளை வழி தவறி விடக்கூடாது என்பதற்காகத் தன்னைப் பிள்ளை தள்ளி வைத்தாலும் பரவாயில்லை என்றெண்ணி நல்வழிப்படுத்துகிறான். ஒருவன் தந்தையாகிவிட்டபின் தனக்கென்று எதையும் சிந்திப்பதில்லை. இதைப் பிள்ளைக்கு வாங்கலாம். இதை மனைவிக்கு வாங்கலாம் எனத் தனக்கான தேவையைத் தவிர்த்துத் தன்னைச் சார்ந்துள்ளவர்களைத் தாங்குகின்றான். நமக்குப் பத்து வயதுவரை எனது தந்தையை விடப் பலசாலி எவரும் இல்லை. என் தந்தைக்கு எல்லாமே தெரியும் என நினைக்கிறோம். 15 வயதுக்குப் பிறகு தந்தை இந்தக் காலத்துக்குப் பொருந்தாத ஆள் என்று நினைக்கின்றோம். 20 வயதை அடைந்ததும் எனது தந்தைக்கு எதுவுமே தெரியாது என்று நினைக்கின்றோம். 30 வயதை அண்மிக்கும்போது தந்தையிடம் ஆலோசனை கேட்டால், நல்லது என எண்ணுவோம். 40 வயதை அடைந்ததும் இதுபோன்ற பிரச்சினைக்குத் தந்தை இருந்திருந்தால் நல்ல தீர்வு சொல்லியிருப்பார் என வருத்தப்படுவோம். இது நம் ஒவ்வொருவரது வாழ்விலும் நிகழும் உண்மை. தாய் அன்பு போலன்றி தந்தையின் அன்பையும் ஆற்றலையும் புரிந்துகொள்ள நமக்குக் காலமும் நேரமும் தேவைப்படுகின்றது. ஆகவே தாய்-தந்தை பாகுபாடு பாராது உயிரோடுள்ளபோதே இருவரையும் சமமாக நேசிப்போம்.



தெய்வங்கள் எல்லாம் தோற்றே
போகும்தந்தையின் அன்பின் முன்னே.
தாலாட்டுப் பாடும் தாயின் அன்பும்
தந்தையின் அன்பின் பின்னே.
தகப்பனின் கண்ணீரைக்
கண்டோர் இல்லை.
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை...






இளைஞன் : வன்முறை இல்லாத ஒரு தலைமுறையை உருவாக்க முடிவு செய்திருக்கிறன் ஐயா

முதலாளி : வெரிகுட்! வெரிகுட்! அதுக்குத் தம்பிக்கு நான் என்ன உதவி செய்யனும்?

இளைஞன் : உங்க பொண்ணை எனக்குக் கல்யாணம் செய்து கொடுங்க அவ்வளவுதான் ஐயா.

முதலாளி : !!!

கணவன் : நம்ம வீட்டுக்குள்ள நுழைஞ்ச திருடனைப் பிடிச்சு, அடிச்சு, உதைச்சு அவன்ர கை, கால் எல்லாம் முறிச்சிட்டியே! எங்கிருந்து வந்தது உனக்கு இவ்வளவு தைரியம்?

மனைவி : அண்டைக்கு நீங்கதான் என்ர இடுப்பைக் கிள்ளுறீங்க எண்டு நினைச்சு வெளு வெளு என்று வெளுத்தா, பாவம் அது திருடனாப் போச்சுங்க.

கணவன் : !!!



# குழந்தை ஞானம்!

கவிராஜா

வேலை விடயமாக நான் ரயில் ஒன்றில் வெளிமாவட்டத்துக்குப் பயணித்துக்கொண்டிருந்தேன். அதுவே நான் முதன் முதலில் ரயிலில் பயணம் செய்யும் தருணமும் கூட. எனது எதிரேயுள்ள இருக்கையில் ஐந்து வயதுக் குழந்தை ஒன்றும் அதன் தந்தையும் பயணம் செய்தனர். அந்தக் குழந்தை தனது தந்தையிடம், ஓடிக்கொண்டிருந்த ரயிலின் ஜன்னல் வழியே தெரிந்த இயற்கைக் காட்சிகளைக் காட்டி என்னென்னவோ கேள்விகளைக் கேட்டபடி இருந்தது. சில கேள்விகளுக்குப் பதில் செல்லும் தந்தை சில கேள்விகளுக்குப் பதில் செல்ல முடியாமல் படும் பாட்டை நான் ரசித்துக்கொண்டிருந்தேன். அந்தக் குழந்தை சில கேள்விகளைத் திரும்பத்திரும்பக் கேட்டு அடம்பிடித்தது. அவ்வேளை ஆத்திரமடைந்த தந்தை ஒருகட்டத்தில் "சத்தம் போடாமலிரு" என்று அதட்டிக் கையை ஓங்கினார். இதுவரை அவர்களின் செயலைக் கவனித்திருந்த நான் பதறிப்போய், "பாவம் குழந்தை, ஆர்வத்தில் ஏதோ கேட்கிறான். பதில் சொன்னால் போச்சுது" என்றேன்.

"அப்படியா? நீங்களே இவனுக்குப் பதில் சொல்லுங்கள்" என்று குழந்தையை எதிரே உள்ள என்னிடம் நீட்டி விட்டார்.

குழந்தையை அணைத்துப் பெற்று, "தம்பிக்கு என்ன பெயர்?" என்றேன். சடாரென "சுசாரன்" என்று தன்னுடைய துடினத்தைக் காட்டிவிட்டான். தந்தை சொன்னதால் தான புரிந்தது அவன் பெயர் "துஷாரன்" என்று.

"துஷாரன் நீங்க அப்பாட்ட என்ன கேள்வி கேட்டனிங்கள்...என்னட்டக் கேளுங்கோ பதில் சொல்லுறன்" என்றேன்.

தன் அழகிய கண்களை உருட்டி விழித்த குழந்தை "மாமா! ரயில் என்ன சாப்பிடும்?" என்று கேட்டது. அவன் நெற்றியில் முத்தமிட்டேன்.

ரயில் என்ன சாப்பிடும்? ஆமாம் இது என்ன கவித்துவமான கேள்வி!

இதிலிருந்து எனக்குப் புரிந்தது. ரயிலுக்கு உயிர் இருப்பதாகக் குழந்தை எண்ணுகிறது. உயிர் இல்லாவிட்டால் ரயில் இப்படிக் கூவுமா...? தடதடவென்று ஓடுமா?

இந்தக் கேள்வியில் கவித்துவம் மட்டுமல்ல, கடவுள் தத்துவமும் அல்லவா இருக்கிறது. இது புரியவில்லையே இந்த அப்பாவுக்கு!

இதே போன்றுதான் ஒருமுறை என்னிடம் கல்விகற்க வரும் குழந்தையை, "பாப்பா! உங்கட வீட்டுக்கு எப்படி வாறது?" என்று கேட்டேன். அது தரம் ஒன்றில் கற்கும் குழந்தை.

"எங்கட வீட்டுக்கு மேல வானத்தில மேகம் யானை மாதிரி துதிக்கையைத் தூக்கிக்கிட்டு நிக்கும் பாருங்க... அதுதான் சேர் எங்கட வீடு..." என்றது அந்தக் குழந்தை.

இது போன்ற பதில்கள் குழந்தைகளின் பேதமையில் பிறப்பவை ஆயினும் அவை மேதமையை உரைப்பவை! தத்தாத்ரேயர் என்பவர் எழுதிய நூலான அவதூத கீதையில், தான் ஞானம்பெறக் காரணமான 26 குருமார்களுள் குழந்தையும் ஒன்றே எனக் குறிப்பிடுகிறார். ஏனெனில் நமக்குக் கிடைக்காத தரிசனங்கள், அனுபவங்களில் சில குழந்தைகளுக்குக் கிடைத்துவிடுகின்றன.

ரோஜாப் பூக்களின் மீது மழை பெய்கிறது என்று சொன்னதற்கு, இல்லையில்லை, மழைதான் ரோஜா ரோஜாவாகப் பெய்கிறது என்று சொன்னது ஒரு குழந்தை. கோயில்களிலும் இறைவனைத் தரிசிக்கும் வேளைகளிலும் அமைதியாக நாம் வழிபட்டுக்கொண்டு இருக்கும்போது குழந்தை பொம்மைகளைக் கொண்டு வந்து கலகலவென்று சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும். கோபங்கொண்டு "நான் சாமி கும்பிடுறது தெரியலைய உனக்கு" என்று பேசினால் அந்தக் கோபத்தைக் கண்டுகொள்ளாமல், சிரித்துக் கொண்டே "சாமி, கொஞ்ச நேரம் இந்தப் பொம்மைகளோட விளையாடட்டும்" என்று பதிலுரைக்கும்.

அவ்வேளை நாம் கண்ணனைப் போல, விளையாட்டை விரும்பும் ஒரு சிறுவனாகவும் குறும்புத்தனமும் உவகைச் சிரிப்பும் நிறைந்ததொரு கடவுளாகவுமே குழந்தையைக் காண்கிறோம்! குழந்தையின் கையைப்பிடித்துப் பேசியபடி நடக்கும் போதெல்லாம், சில சமயங்களில் நாம் பிடித்திருக்கும் குழந்தையின் கை எமக்கு எல்லையற்ற சந்தோசத்தைத் தந்து விடுகிறது. எப்போதும் குழந்தைகள் எமக்குச் சந்தோசம் தரும் குட்டிக் கடவுளர்களே.



அன்று ஞாயிற்றுக் கிழமை
அவளுடைய வீட்டுக்குப் போயிருந்தேன்.
அவளின் அழகு இப்போது மிகைப்பட்டிருந்தது
பள்ளிக் காலப் பருவத்தைவிட இப்போது
கண்கள் என்னைச் சுண்டியிழுத்தன.
பல காலம் கழித்து அவளைச் சந்தித்த திருப்தி
எனது காதல் காலங்களை மீட்டியது.
அன்று வரை அவள் என்னுடைய நீண்ட நாள் தோழி
என்று மட்டுமே அவளுக்குத் தெரியும்.
நான் இன்னும் என்னுடைய காதலைச் செல்லவில்லை
என்பது இப்போது உங்களுக்கும் புரிந்திருக்க வேண்டும்.
என்ன ஆச்சரியம்!!! அவளைக் கண் இமைக்காமல்
பார்த்துக் கொண்டிருக்க 'அம்மா' என்றழுதபடி
அவளைப் போன்றே அருகில் வருகின்றது குழந்தை ஒன்று.
'ஏனப்பா பிள்ளை அழுகுது' என்றபடியே
அதன் பின்னே வருபவன், அவள் கணவன் என்று
நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும்!!!
'என்ன அழகு' பிள்ளையின் கன்னத்தைக்
கிள்ளிக் கிளம்பினேன் வீட்டுக்கு...

– பிரகாசன்

## என்ன அழகு!


## ஜோக்ஸ்



மனைவி- என்னுங்க! நாளைக்கு வீட்டு விசேத்துக்கு என்று சுட்டு வைச்சிருந்த பலகாரத்த திருடன் எவனே இருந்து சாப்பிட்டுக்கிட்டிருக்கிறானுங்க.

கணவன்- பேசாமத் தூங்கு, காலையில அவன் செத்துக் கிடப்பான் விழஞ்சதும் பார்த்துக்கலாம்.

மனைவி!!!



# போதிக்கப்பட வேண்டிய பௌத்தர்கள்

யாழவன்

நாடு ஆங்கிலேயர் வசமிருந்து சுதந்திரமடைந்ததிலிருந்து பெரும்பான்மையின மக்களின் செல்வாக்குடன் பெரும்பான்மையினத் தலைமைகளே தொடர்ந்தும் நாட்டை ஆண்டு வருகின்றன. மதகுருமார்களான பிக்குகள் (தேரர்கள்) பௌத்தத்தைக் கடைப்பிடிப்பது என்ற மத நிர்வகிப்புக்களில் மட்டும் நின்றுவிடாது ஆரம்பத்திலிருந்தே அரசியல் களத்திலும் அரச நிர்வகிப்பிலும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கினர். அதற்கு அடிப்படையாகக் கொள்ளத்தக்கது அவர்களிடத்தே ஆசிகளைப் பெறும் அரசியல் தலைமைகளைத் தமது அரசியல் அறிவுரைகளைப் பின்பற்ற வைக்க அவர்களால் முடிந்தமையே. அவர் களின் மதக் கொள்கைகள் திணிக்கப்பட்ட ஒவ்வொரு ஆட்சியாளரும் தம்முடைய மதமும் அதுவே என்பதால் அவர் வழி ஒழுகுவது சாத்தியமாக அமைந்தது. ஆனாலும் மதகுருமார்களை ஆதரித்தால் மட்டுமே மக்களின் செல்வாக்கைப் பெறமுடியும் என்ற பல அரசியல் நகர்வுகளும் ஆட்சியாளர் மத்தியில் இல்லாமலில்லை.


புத்தபிரான் தோற்றுவித்த மேன்மை மிகு பௌத்தத்துக்கும் அதன் கொள்கைகளுக்கும் சுமணரத்ன தேரர் போன்றவர்களுக்கும் எந்த வகையிலும் எவ்வித ஒற்றுமைகளும் இல்லையெனினும் இவர்கள் பௌத்தம் என்ற ஆடையைப் போர்த்தி தமது மனக் குரோதங்களுக்கு ஏற்ப மக்களை ஒழுகவைப்பதுடன் தமது சமூகத்தை விடுத்துப் பல்லின மக்களும் நிறைந்து வாழும் நாட்டின் ஆட்சியையும் அதன் சட்ட திட்டங்களையும் தமது போர்வை மூலம் முறைகேட்டுக்கு உட்படுத்தவும் செய்யத் துணிகிறார்கள். மதகுரு என்கின்ற தமது பெயருக்கேற்ப இறைவனைத் தியானிக்கும் மனப்பக்குவம் நிறைந்திராவிடினும் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் பேச்சுக்கள் மூலம் இனமுறுகல்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கும் மனநிலை இவர்களிடம் நிறைந்துள்ளது.

அண்மையில் குருதிக் களரியை ஏற்படுத்தப்போவதா கப் புறப்பட்ட பொதுபல சேனாவின் பொதுச் செயலா ளர் ஞானசார தேரரின் கீழ்த்தரமான செயல்கள் இதன் பாற்படும்.

மதப்பரப்புரைகளுடன் மட்டும் நின்றுகொள்ளாது அரசியல் கட்சிகளை ஆரம்பித்து அரசியல் பரப்புரைகளையும் செய்துவரும் இத்தகைய பௌத்த தேரர்கள், தாம் சமூகத்துக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டியவர்கள் என்ற கடப்பாடற்ற சிந்தை கொண்டு காணப்படுகின்றனர். பௌத்தம் என்ற மிகப்பெரிய தார்மீகத்தைத் தம்முள் கொண்டுள்ளதால் சட்டங்களால் தம்மைத் தண்டிக்க முடியாது என்ற தலைக்கனமும் அவர்களிடம் நிறைந்தேயுள்ளது. அதனால் மதம் சார்ந்த ஆட்சியாளர்கள் தொடர்வதும் சட்டங்கள் அவர்களைத் தண்டிக்கப் பின்னிற்பதுவும் இத்தகைய தேரர்களின் பக்குவப்படாத உளநிலைகளைத் தொடர்ந்தும் நீடிக்கச் செய்கின்றன. ஆகையால் இவர்களைத் தமது மதக் கடப்பாடுகளைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் என்ற பட்டியலுக்குள்ளும் இணைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் இவர்கள் சாதிக்க முற்படுவது, இனக்குரோதத்தைத் தூண்டிவிடும் செயற்பாடுகளால் கடந்த மூன்று தசாப்த காலமாகப் போராட நிர்ப்பந்திக்கப்பட்ட விடுதலைப் புலிகளைப் போன்று மீளவும் சிறுபான்மை இளைஞர்களை உருவாக்குவதே.

இனமுறுகல்களையும் அவற்றிடையே வன்முறைகளையும் உருவாக்கிவிடக்கூடிய இத்தகைய பௌத்த தேரர்களின் செயற்பாடுகள் மலிவடைவதற்குப் முக்கிய காரணம், சட்டம் அவர்களைக் கைகட்டி வேடிக்கை பார்ப்பதுவும் அவர்கள் செய்யும் அத்தகைய குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப் பின்னிற்பதுவுமேயாகும். இவ்வாறான தேரர்களால் பௌத்த விகாரைகள் நிறுவுவதற்காகத் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொள்ளும் இன்றைய நடவடிக்கைகளை மக்கள் எதிர்த்து வருவதன் காரணம்கூட இவ்வாறானவர்களுடன் சேர்ந்திருக்கும்போது சமூகத்தில் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் எவ்வாறிருக்கும் என்பதைச் சந்தேகமின்றித் தெரிந்துகொண்டுள்ளார்கள் என்பதையே உணர்த்தி நிற்கின்றது. பௌத்த சமயத்துக்குக் களங்கம் விளைவிக்கும் இவர்களைப் போன்றவர்கள் உருவாவதைத் தடுப்பதாயின் புத்தபிரானின் பௌத்த தர்ம போதனைகளுக்குக் களங்கம் விளைவிக்காமல் மக்களை நல்வழிப்படுத்தும் மகத்துவ மனிதர்களாக, அரசியல் சிந்தனையற்ற மதகுருமார்களாக இவர்களைத் தோற்றுவிக்க வேண்டிய கடப்பாடுகளை இறுக்கமாக பௌத்தம் கடைப் பிடிக்க வேண்டும்.


> “ இனமுறுகல்களையும் அவற்றிடையே வன்முறைகளையும் உருவாக்கிவிடக்கூடிய இத்தகைய பௌத்த தேரர்களின் செயற்பாடுகள் மலிவடைவதற்குப் முக்கிய காரணம், சட்டம் அவர்களைக் கைகட்டி வேடிக்கை பார்ப்பதுவும் அவர்கள் செய்யும் அத்தகைய குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப் பின்னிற்பதுவுமேயாகும்.



# இழந்ததும் பெற்றதும்

பள்ளிக் காலத்தில்
பகலிரவாய்க் கற்ற பயன்- இன்று
பல்கலையில் .....
இருப்பிட மாற்றம்
இன்னல்கள் ஏற்றம்
இழந்தவையோ........
அதிகாலை கேட்கும் ஆலய மணி.......
அன்பு கலந்திட்ட அம்மாவின் தேநீர்.....
கண்டிப்பும் கலகலப்பும் கலந்திடும்
அப்பாவின் அறிவுரைகள்......
துன்பம் கண்டு நான் துவண்டிடும் வேளை
தூக்கி நிறுத்திடும் அண்ணன்களின்
கரங்கள்...
அண்ணியரின் அரவணைப்பு......
அக்காவுடன் பகிர்ந்து கொள்ளும்
அன்றாட நடப்புகள்.....
தங்கையுடன் தினம் போடும்
தடபுடல்ச் சண்டைகள்.....
அத்தை, அன்ரா- என
அணி வகுத்து நிற்கின்ற
மருமக்கள், பெறாமக்களின்
மழலை மொழிப்பேச்சு....
அயல் வீட்டுத் திருமணம்.....
ஆலயத் திருவிழா....
இத்தனையும் இழந்து இன்று
பெற்றதுதான் என்ன....?
அதிகாலை அலறும் அலாரம்
விரையும் விரிவுரைகள்- வெறும்
ஒட்டளவேயான எழுத்தறிவு ...
பாதி வெந்து மீதிவேகாத அரிசியுடன்
ஊசிப்போன கடலையும்
உழுத்துப்போன பருப்பும்
புழுக்கள் பல கலந்து பழுதின்றிக் காய்ச்சிய
கத்தரிக்காய்க் கடைசலுடன்
காத்திருக்கும் கடை உணவு....
பாசம் எனச் சொல்லி வேசம்
போடுகின்ற- பல
பல்கலை நட்புக்கள் (நடிப்புக்கள்)......
பொய்யான முகங்கள்....
போலிச் சிரிப்புகள்....
கூடவே இருந்து கொடும் பாதகம் புரியும்
குள்ளநரிக் கூட்டத்தின்
துரோகத்தனங்கள்... என
நான் பெற்றிட்ட பட்டியல் நீள்கிறது...
ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெறு
என்பார்
இத்தனையும் இழந்து விட்டேன்- இன்று
பெற்றது தான் என்ன....?
விடைதேடி விரைகிறேன் .....

ஜெயப் பிரசாந்தி ஜெயபாலன்







# மிளிரும் சருமத்துக்கு...

அரிசிச்சாதம் வடித்த கஞ்சியில் நிறைய சத்துக் களும் விற்றமின்களும் உள்ளன. இவை சரு மத்துக்கும் உடலுக்கும் நல்ல பயன்களைத் தரும்.

பச்சை அரிசி அல்லது அன்றாடம் சமைப்பதற்குப் பயன் படுத்தும் அரிசியை நீரில் வேகவைத்து, அரிசி பதமாக வந்த பின் அந்த நீரை வடித்தெடுங்கள். வடித்தெடுத்த கஞ்சியை வடிகட்டி ஆற விடுங்கள்.

அந்தக் கஞ்சியை ஒருநாள் முழுவதும் அப்படியே புளிக்க வையுங்கள். இந்த புளித்த கஞ்சியினுள் பக்ரீரியா பெருக வாய்ப்புண்டு. இந்தக் கஞ்சியைச் சருமத்துக்குப் பூசினால் நல்ல பயனளிக்கும்.

இந்தக் கஞ்சியினுள் சிறிது நீரும் ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூளும் கலந்து முகத்தில் பூசி வந்தால், முகப்பருக்கள் நீங்கும்.

முகச்சுருக்கங்களும் எடுபடும். தினமும் காலை மாலை இவ்வாறு செய்துவரச் சருமம் அழகாகும். சருமத்தில் பரு அடையாளத் துவாரங்கள் இருந்தாலும் இதனை உபயோ கிப்பதன் மூலம் மறையும். வயதான தோற்றம் நீங்கி இளமை கூடும். அத் தோடு, வடித்தவுடன் இளம் சூட்டுடன் உள்ள கஞ்சியைப் பருகினாலும் அதி லுள்ள விற்றமின்களால் உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும்.

இந்தக் கஞ்சியை முகத்தில் பூசி ஐந்து நிமிடங்கள் கழித்துத் தூய நீரினால் கழுவுங்கள். இவ்வாறு தினமும் செய்து வந்தால், நீங்களும் அழகு தேவதை ஆகலாம்.



## முகப் பருக்களின் அடையாளம் மறைய...

நாம் அன்றாடம் சமையலில் உபயோகிக்கும் பொருள்களில் சில அழகு சார்ந்த விடயத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அது பற்றிய விவரம் வருமாறு–

**வெள்ளரி**
பருக்களை ஒழிப்பதில் வெள்ளரிக்கு முக்கிய பங்கு உண்டு. வெள்ளரிக் காயை அரைத்து அந்தக் கூழை 'மாஸ்க்' போல முகத்தில் தடவி வர பருக்கள் குறையும்.

**தேன்**
எலுமிச்சை சாற்றுடன் தேன் கலந்து முகத்தில் பூசி வர முகப்பொலிவு கூடும்.

**ஒலிவ் எண்ணெய்**
வாரம் ஒருமுறை ஒலிவ் எண்ணெயை உடம்பு முழுவதும் தேய்த்துக் குளித்து வர மினுமினுப்பு அதிகரிக்கும். ஒலிவ் எண்ணெய்க்குப் பதிலாகத் தேங்காய் எண் ணெயையும் பயன்படுத்தலாம்.

**சர்க்கரை**
சர்க்கரையை முகத்தில் தேய்த்து மசாஜ் செய்தால், இறந்த செல்களை அழித்து முகப்பொலிவைக் கூட்டுவதோடு மட்டுமல்லாமல் முகச் சுருக்கத்தையும் குறைத்து மிருதுவான சருமத்தைக் கொடுக்கும்.

# தாய்மை அளிக்கும் கல்யாண முருங்கை

கல்யாண முருங்கை பெண்களுக்கு என்று படைக்கப்பட்ட ஒரு மிகச் சிறந்த தாவரம் என் பதால், கன்னிப் பெண்கள் இருக்கும் வீட்டில் கல்யாண முருங்கை இருக்க வேண்டும் என்ற பழமொழியும் உள்ளது. கல்யாண முருங்கை மரம் இருக்கும் வீடுகளில், பெண்மை சார்ந்த எந்த நோயும் வராது என்பது நம் முன்னோர் களின் ஐதீகமாக இருந்து வருகிறது.

பெண்களுக்கு பெண்மையை கொடுக்கும் ஹார்மோன்களின் நாளமில்லா சுரப்பியில் ஏற்படும் கோளாறுகளை கல்யாண முருங்கை நிவர்த்தி செய்கிறது.

கல்யாண முருங்கை மரத்தின் இலையை அரைத்து தோசை மற்றும் சூப்பாக வைத்து உட் கொண்டால்– பெண்களின் ஓமோன் உற்பத்தியைத் தூண்டச்செய்து, அவர்களின் அழகை அதிகரிக்கச் செய்யும்.

பெண்களின் கர்ப்பப்பையில் உள்ள குழந்தை யின் கரு வளர்ச்சியை மேம்படுத்துவதற்குஇ கர்ப்பப்பையில் வளரும் எண்டோமேர்டியம் என்ற சதை வளர்ச்சியைச் சரி செய்கிறது.

பெண்களின் மன அழுத்தம், கரு உருவாகாத நிலை, உருவான கரு சிதைவுறும் நிலை போன்ற பிரச்சினைகளைப் போக்கி– பெண்கள் தாய்மைஅடையும்சூழ்நிலையைஏற்படுத்துகிறது.

கல்யாண முருங்கை மரத்தின் பட்டையை எடுத்து, லேசாக இடித்து அதைத் தண்ணீரில் போட்டு நன்றாகக் கொதிக்க வைக்க வேண் டும். பின் அதைத் தினமும் காலையில் உட் கொண்டு வந்தால், கருப்பையின் உட்புறச் சதையை அதிகரிக்கச் செய்து, கருவை உண் டாக்கும். அத்துடன், பெண்களின் மாதவிலக் கின் போது ஏற்படும் அதிகமான வயிற்று வலி மற் றும் குருதிப்போக்கு முதலான பிரச்சினை களைக் கல்யாண முருங்கையின் இலை குணப்படுத்துகிறது.

# உருளைக்கிழங்கு மீன் குழம்பு

வழமையாக நாம் உண்ணும் உணவுகள் சலிப்பை ஏற்படுத்தும். அத்தகைய உணவுகளில் சிறிது மாற்றம் செய்து உட்கொள்ளும் போது, சுவை அதிகமாகும். அப்படிப்பட்ட ஒன்றுதான் உருளைக்கிழங்கு மீன் குழம்பு.




### தேவையான பொருள்கள்


மீன்– அரைக் கிலோ
உருளைக்கிழங்கு– கால் கிலோ
சின்ன வெங்காயம்– 200 கிராம்
உள்ளிப் பூண்டு– 10 பற்கள்
தக்காளிப்பழம்– 4
பச்சை மிளகாய்– 8
மஞ்சள் தூள்– அரைத் தேக்கரண்டி
மிளகாய்த் தூள்– 2 மேசைக்கரண்டி
மல்லித்தூள்– 3 தேக்கரண்டி
புளி– எலுமிச்சம் பழம் (தேவையான அளவு)
வெந்தயம்– அரைத் தேக்கரண்டி
பெருஞ்சீரகம்– அரைத் தேக்கரண்டி
சோம்பு– அரைத் தேக்கரண்டி
தே. எண்ணெய்– தேவையான அளவு
உப்பு– தேவையான அளவு
கறிவேப்பிலை, கொத்தமல்லி– சிறிது


### செய்முறை

மீனைச் சுத்தம் செய்து, அதில் மஞ்சள் தூளைப் பூசி வைக்கவும். உருளைக்கிழங்கைத் தோலுரித்து நறுக்கிக் கொள்ளவும். வெங்காயம், தக்காளிப்பழம் ஆகியவற்றைப் பொடியாக நறுக்கி வைக்கவும். புளியைத் தண்ணீர் கலந்து கரைத்து வைக்கவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் கொதிக்க வைக்கவும். கொதித்த எண்ணெயில் வெந்தயம், பெருஞ்சீரகம், சோம்பு ஆகியவற்றைப் போட்டுத் தாளித்த பின்– வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு என்பவற்றைச் சேர்த்து நன்கு வதக்கவும். வெங்காயம் வதங்கியதும், அதில் தக்காளிப்பழத்தையும் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

தக்காளி நன்கு வதங்கியதும், உருளைக்கிழங்கைப் போட்டு வதக்க வும். அத்துடன் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், மல்லித்தூள் சேர்த்துப் பச்சை வாசனை போகும் வரை நன்கு வதக்கவும். பின்னர் குழம்புக்குத் தேவையான அளவு தண்ணீருடன் புளிக் கரைசலை ஊற்றவும். அத்துடன், தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்கு கொதிக்கவிடவும். உருளைக்கிழங்கு வெந்து குழம்பு பக்குவத்துக்கு வந்த பின்னர், மீனைப் போட்டு ஒரு கொதி வந்தவுடன் கொத்தமல்லித்தூள் மற்றும் கறிவேப்பிலை ஆகியவற் றைப் போட்டு இறக்கவும். இந்தச் சுவையான உருளைக்கிழங்குக் குழம்பு, உங்களை அதிகம் சாப்பிடத் தூண்டும்.







# அரசியல் பிக்குகளால் ஆட்டம் காணும் ஆட்சி

யாதுமாகி

இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் பல்வேறு சக்திகளில்பௌத்தபிக்குகள் இன்று குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றனர். நேரடியான அரசியல் செயற்பாட்டைக்கொண்டிருக்கும் இவர்களை, அரசியல் பிக்குகள் என அழைப்பதே பொருத்தமானது.

இலங்கையில் நவீன அரசியலின் தொடக்கத்தின் பின்னர், 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே பிக்குகளின் அரசியல் பிரவேசம் நிகழ்கிறது. இது காலனித்துவக் காலத்தில் பிரித்தானியர் மேற்கொண்ட கிறிஸ்தவ மத மாற்ற நடவடிக்கைகளை எதிர்த்து, விக்கட்டுவத்த குணானந்த தேரரும், ஹிக் கடுவ சுமங்கல தேரரும் தொடக்கிய 'பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்' என்பதுடன் ஆரம்பமானது. எனினும் 1946ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிக்குகள் அரசியலில் ஈடுபடலாமா என்ற விவாதங்கள் மேற் கிளம்பின.

டி.எஸ்.சேனநாயக்கா மற்றும் சில தரப்புக்களைச் சேர்ந்த பிக்குமாரும் பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை வன்மையாகக் கண்டித்தார்கள். எனினும் ஒரு சில பிக்குமார் தரப்புக்கள், பிக்குகளின் அரசியல் பிரவேசத்தை கடுமையாக ஆதரித்தன. அதுமட்டுமன்றி அறிவுஜீவித்துவப் பரப்பிலும், பிக்குகளின் அரசியல் பிரவேசத்தை வலியுறுத்தியும் நியாயப்படுத்தியும் நூல்கள் வெளியிடப்பட்டன.

இலங்கை அரசமைப்பின் பிரகாரம் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

அப்படியாயின், இனவாதப் போக்கிலான பௌத்த பிக்குகளது செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையை ஏன் செய்யாதுள்ளது? என்ற கேள்வி விடையற்றுத் தொடர்கின்றது. நல்லாட்சி என்ற பதத்தை வைத்துக் கொண்டு தவறிழைத்தவர்களை, நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலை சீர்குலைக்க பொது எதிரணியுடன் இணைந்து செயற்படும் பௌத்த பிக்குகளை, சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கவும், சிறுபான்மை சமூகங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்தற்போதைய ஆட்சியாளர்கள்விரைந்து செயற்படவேண்டும்என்பதுதெளிவாகின்றது.

பிக்குகளின் அரசி யல் நடவடிக்கைகள் பரவலாக அறியப்பட்ட ஒன்றாகவும், தனிக்கட்சி அரசி யலாகவும் வளர்ச்சியடைந்துவிட்டது. பெரும்பான்மையின சிங்கள பௌத்தர்கள் பிக்குகள் மீது அளவுக்கதிகமான அன்பும், மரியாதை யும் கொண்டிருக்கும் அதேவேளை, சிறுபான்மையின மக்கள் அவர்கள் மீது வெறுப்பையும் அவநம்பிக்கையுமே வெளிப்படுத்து கின்றனர். அஹிம்சை, கருணை, கொல்லாமை போன்ற உன்னத கோட்பாடுகளை வலியுறுத்தும் பௌத்தத்தின் மதகுருக்களான பிக்குகள், இலங்கையின் இன முரண்பாட்டு அரசியலில் கடும்போக்கு மனோபாவத்துடன் நடந்து கொள்வதனாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு எதிரானவர்களாகவே இருந்து வருவதனாலும் சிறுபான்மை மக்கள் மத்தியில் அவர்கள் குறித்து பொதுவாக நல்லபிப்பிராயம் நிலவுவதில்லை.

## 'வரலாறும் அரசியல் பிக்குகளும்

பெரும்பாலும் வரலாறு வரலாற்றாசிரியர்களின் கண்ணோட்டத்துடனும், அவர்களது பக்கச்சார்புடனுமே எழுதப்படுகிறது. தொல் பொருளியல், வரலாற்றெழுதுதலில் ஏற்படும் இந்தக் குறைபாட்டைத் தணிக்க உதவுகிறது. தொல் பொருளியல், வரலாற்றை விஞ்ஞானபூர்வ தரவுகளின் அடிப்படையில் கட்டியெழுப்புகிறது. ஆனால் இலங்கைத் தொல்லியலில் அவ்வாறான நிலைமைகளில்லை. இலங்கைத் தொல்லியலானது, அரசியல் பௌத்தத்தின் தீவிர செல்வாக்குக்குட்பட்டுள்ளது. சமகால இலங்கையின் தொல்லியல் ஆய்வுகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடுகளும் சிங்கள-பௌத்தத்தை பாதுகாப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் ஏற்றவகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஜாதிக ஹெல உறுமய, பூமிபுத்திர போன்ற சிங்கள பௌத்த அடிப்படைவாத இயக்கங்களுக்குள் மட்டுமிருந்த இக்கருத்துநிலை இன்று அதற்கு வெளியேயும் வியாபித்து வருகிறது. அண்மையில் இராணுவத்தளபதி 'நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது' என வெளியிட்ட கருத்து இதன் தொடர்ச்சியாகவே பார்க்கப்பட வேண்டும்.

இப்போது அரசியல்பௌத்தம் முஸ்லிம்களுடனும் வரலாற்று மோதுகை உறவொன்றை ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம்களின் வரலாற்று நீட்சியை குறுக்கி வந்தேறு குடிகள் என்ற சர்ச்சையை மேலும் ஒரு முறை கிளப்பி யுள்ளது. இதிலிருந்து சிங்கள பூர்வீகக்கோட்பாடும் கட்டமைக்கப்பட்ட பெருங்கதையாடல் மட்டுமே என்பது நிரூபணமாகிறது. இலங்கையின் பிரபல தொல்பொருளியல் விஞ்ஞான அறிஞர் ராஜ் சோமதேவா இலங்கையை பௌத்த தேசமாக தொல் பொருளியல் ரீதியாக கட்டமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை நிராகரித்து விடுகிறார். சிங்களவர்களும் ஏதோ ஒருவிதத்தில் வந்தேறு குடிகள்தான் எனபதாகத்தான் இவரது கருத்து அமைந்திருக்கிறது.

இந்தநிலையில் அரசியல் பிக்குகள் முன்வைக்கும் கருத்துக்களும்வரலாற்றுவாதங்களும்அடிப்படையற்றவையாகும். ஆனால் இலங்கையை சிங்களவர்களுக்குரிய நாடாகக் கட்டமைப்பதிலும் சிறுபான்மை இனத்தவர்களை வந்தேறு குடிகளாகக் காட்டும் முயற்சியிலும் இன்று அரசியல் பிக்குகள் களமிறங்கியுள்ளனர்.

அரசியல் பிக்குகள் சிறுபான்மையினரை வரலாற்று இருட்டடிப்புச் செய்வதன் நோக்கம் வெளிப்படையானது. கிழக்கில் சிறுபான்மையினரே மக்கள் தொகையில் அதிகப்படியாகவுள்ளனர். கிழக்கை சிங்கள மயப்படுத்துவதற்கு சிறுபான்மையினரின் பூர்வீகத்தின் மீது முதலில் புனைவுகளை உருவாக்கி அவர்களை அந்நியமானவர்களாகக் காட்ட வேண்டும். அதன்பின்னரே அவர்களின் பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை அமைப்பது உசிதமானது என அரசியல் பிக்குகள் கருதுகின்றனர்.

அரசியல் பிக்குகளின் இந்த வரலாற்றுப் போரை எதிர்கொள்ளும் நிலைக்கு இன்று தேசிய சிறுபான்மையினர் தள்ளப்பட்டுள்ளனர். இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை அநகாரிக தர்மபால மற்றும் கொலினல் ஒல்கொட் ஆகியோரின் எழுத்துக்களிலும் நடவடிக்கைகளிலுமே தேடவேண்டியுள்ளது.

## அநகாரிக தர்மபால

இலங்கையில் காலனித்துவத்துக்கெதிராக செயற்பட்ட முக்கிய அரசியல் செயற்பாட்டாளராக அடையாளம் காணப்பட்ட இவர், இலங்கையில் முஸ்லிம்களின் பூர்வீகம் தொடர்பில் குறுகிய பார்வையைக் கொண்டிருந்தார். இவர் தனியான பௌத்த-சிங்கள அடையாளத்தை நிறுவுவதற்கான பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை நிறுவி, காலனித்துவ சக்திகளுக்கெதிரான தனது செயற்பாடுகளை ஒழுங்கமைத்தார். சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லிம்கள் குறித்த அவரது கருத்துக்கள் தவறானவையாகவும் வன்முறையைத் தூண்டக் கூடியதாகவும் அமைந்தன.

சிங்கள பௌத்த தேசியவாதிகள் முஸ்லிம்களுக்கெதிராக தர்மபாலவின் கருத்துக்களினால் தூண்டப்பட்டனர்.

அநாகரிக தர்மபால வலியுறுத்திய கருத்துக்கள் சிங்கள பௌத்த உணர்வை மேலும் கூர்மைப்படுத்தவே வழி வகுத்தன. காலனித்துவ காலத்தில் இலங்கையில் இடம் பெற்ற சிங்கள- முஸ்லிம் இன மோதல்களின் பின்னால் அநாகரிக தர்மபாலவின் இந்தக் கருத்துக்களே முக்கிய அடித்தளமாக அமைந்திருந்தன. அவரின் வழி வந்தவர்களால் இக் கருத்துக்கள் சிங்கள சமூகத்தளத்தில் மேலும் கருத்தாடலுக்குக் கொண்டு வரப்பட்டன. இன்று அரசியல் பிக்குகள் வெளிப்படுத்தும் கருத்துக்களும் கொண்டிருக்கும் நிலைப்பாடுகளும் இவரது சிந்தனைகளின் தொடர்ச்சியாகவேயுள்ளன. அவருக்குப் பின்னர் இந்தக் கருத்துநிலையை மிகப்பரந்தளவில் முன்னெடுத்தவராக கங்கொடவில சோமதேரர் உள்ளார்.

## கங்கொடவில சோமதேரர்

கங்கொடவில சோமதேரர் இலங்கையில் அவரது சமயப் பணிகளாலும் அரசியல் கருத்து நிலைகளாலும் நன்கு அறியப்பட்டவர். இவரது கருத்து நிலைகளும் பணிகளும் சிங்கள பௌத்த சமூகத்தில் மிகவும் பிரபலமானவை. சிங்கள பௌத்த சமூக அடையாளத்தை வலுவாக நிறுவுவதும் பௌத்த கொள்கைகளை இலங்கையின் அரசியல் சமூகத்தளங்களில் பரவலாக்குவதையும் அவர் முக்கிய நோக்கமாக கொண்டிருந்தார். இலங்கையின் மிக முக்கியமான கொழும்பு போன்ற பெரும் வர்த்தக நகரங்களில் தமிழ்-முஸ்லிம் வர்த்தகர்கள் பெற்றிருக்கும் செல்வாக்குக் குறித்து சிங்கள- பௌத்தர்கள் தவறான அபிப்பிராயம் கொள்ள வைக்கும் வகையில் தனது பரப்புரைகளை முன்னெடுத்தார்.

சிங்கள- பௌத்த சமூகத்தில் அவர் தனது கருத்து நிலையை பரவலடையச் செய்ய இளம் சமுதாயத்தினரை பௌத்த நெறிகளுக்குத் திரும்புமாறு அழைப்புவிடுத்தார். இளைஞர்களின் பிரச்சி னைகள் குறித்து ஒரு சிறப்பான அணுகுமுறையையும் அவர் கையாண்டார். சோமதேரர் கிறிஸ்தவ மதத்தையும் கிறிஸ்தவ மத மாற்றத்தையும் தீவிரமாக விமர்சித்தவர். இலங்கையில் முஸ்லிம் அரசியலையும் அவர் வன்மையாக விமர் சித்தார். அவர் நிறுவிய ஒரு சிறு அரசியல் கட்சியின் தலைவராகவும் அவர் விளங்கினார்.

## யார் இந்த சுமணரத்ன தேரர்?

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு மங்களாராம விகாரையை இவர் பொறுப்பேற்றார். சிங்களக் குடியேற்றங்களைச் செய்கிறார் என்கிற குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகளால் வாகரைக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார். இன்று இவரால் பல சிங்களக் குடும்பங்கள் மட்டக்களப்பில் மாத்திரம் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். கிழக்கில் நில ஆக்கிரமிப்பை முன்னின்று நடத்துபவர் அவர்.

போர் முடிந்தபின்னர் 2008ஆம் ஆண்டு கிழக்கில் பட்டிப்பளை பிரதேசத்தில் பல சிங்கள மக்களை கொண்டு வந்து பலாத்காரமாக குடியேற்றினார். அவர்களுக்கு அடையாள அட்டைகளையும், வாக்கட்டைகளையும் வழங்கும்படி அந்தப் பிரதேசத்து கிராம சேவகரிடம் சண்டையிட்டிருந்தார்.

(46ஆம் பக்கம் பார்க்க)

# உருண்டைப் பணியாரம்



### தேவையான பொருள்கள்

- பச்சரிசி – ஒரு படி
- தேங்காய் – ஒன்று
- நாட்டுச் சர்க்கரை – 2 கப்
- ஏலக்காய் – 4
- எண்ணெய் – தேவைகேற்ப

### செய்முறை

பச்சரிசியை தண்ணீரில் முதல் நாளே ஊறவைத்து விடவும். மறுநாள் எடுத்து தண்ணீரை வடிக்கட்டி அரிசியை சிறிது நேரம் உலர்த்தி உரலின் இடித்து அரித்துக் கொள்ளவும். தேங்காய் பாதியை கழுவி விட்டு பூவாகத் துருவவும். ஏலக்காயை பொடி செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் மாவை போட்டு அதனுடன் தேங்காய்ப்பூ, சர்க்கரை, ஏலக்காய், தண்ணீர் சேர்த்து கெட்டியாக உருட்டும் பதத்துக்கு பிசைந்துக் கொள்ளவும். மாவைச் சிறிது, சிறிதாக உருட்டிக் கொள்ளவும். சட்டியில் எண்ணெயை ஊற்றி காயவைத்து உருண்டையை எண்ணெயில் போட்டு நன்கு சிவக்கும் அளவுக்கு இல்லாமல் பொன்நிறமாக பொரித்து எடுக்கவும். உருண்டைப் பணியாரம் தயார்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 700 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 300 | 200 | 500 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 500 | – | – |
| பாரை | 550 | 400 | 400 | – | 600 | 600 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 500 | – | 350 |
| சீலா | 300 | 400 | 300 | – | 400 | 400 | 300 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 300 | 300 | – | 300 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 250 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 400 | – | – |
| ஒரா | 400 | 250 | 300 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 200 | 100 | – | 200 | 200 | – |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 200 | – | – |
| திருக்கை | 150 | 200 | 200 | – | 200 | – | – |
| மதனம் | 150 | 200 | – | – | 250 | – | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 100 | 100 | – |
| பாலை | 400 | 150 | 300 | – | 300 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 200 | 200 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 60 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 50 | 60 | 80 | 60 | 40–60 | 60 | – | 35 |
| கரட் | 80 | 60 | 80–120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 100 | 100–120 | 160 | – | 60 |
| பாகல் | 140 | 100 | 200 | 120 | 120–140 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 80 | 60–80 | 120 | – | .80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 50 | 40 | 40 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 50 | 60 | 50 | 60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 40 | 80 | – | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 70 | 45 | 60 | 60 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 80 | 70 | 60 | 80 | 70 | 80 | – | 50 |
| வெண்டி | 100 | 80 | 60 | 80 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 200 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 | 120 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 30–35 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 400 | 600 | 600 | 500 | 500–550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 110 | 120 | 120 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 80 | 50 | 60 | 80 | – | 100 |



## இது புதுசு

குளியலறை செரமிக் பொருத்திகள் அறிமுகமாகியுள் ளன. திரவ சவர்க் காரம், அழுக்கு நீக் கும் தூரிகை என் பவற்றை வைக்கும் செரமிக் சாதனமான இது, அதிக தூய்மை யைப் பேண உதவும். இவை ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.





## நாளை


கார்த்திகை-06
திங்கட்கிழமை -21.11.2016
திதி: ஸப்தமி கா.08.09
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.10.18
ராகுகாலம்:07.40-09.10 வரை
சுபநேரம்:12.10-01.40 வரை

## பெண்களுக்கான சிகையலங்காரம்




1 தலை முடியை மூன்றாகப் பிரித்துக் கட்டிக் கொள்ளவும்.
2 மேல் பகுதி தலைமுடியை சுற்றி வைத்து கிளிப் செய்யவும்.
3,4 ஏனைய இரு பகுதிகளையும் அவ் வாறே செய்யவும், சிகை அலங்காரம் தயார்.

# ஆங்கிலப் படத்துக்கு இசையமைத்தார் இளையராஜா



லவ் அன்ட் லவ் ஒன்லி என்ற ஆங்கிலப் படத்துக்காக 21 பாடல்களுக்கு இசையமைத்துள்ளார் இசைஞானி இளையராஜா.

மதுரையில் பிறந்து 2003ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இயக்குநர் ஜூலியன் கரிகாலன் இந்தப் படத்தை இயக்கினார்.

இந்தப் படம் குறித்து கரிகாலன் கூறுகையில் முதலில் இந்தப் படத்தை ஆரம்பித்த போது இளையராஜாவுக்குச் சம்பளம் வழங்கும் நிலையில் நாங்கள் இல்லை. அவர் இசையமைக்க ஒப்புக்கொண்டால் பட்ஜெட்டை அதிகமாக்கும் முடிவில் இருந்தேன். குறைந்த செலவில் படமாக்கப்படும் படம் என்பதால் அவரும் குறைவாகவே சம்பளம் பெற்றார். அவருடைய பாடல்களைக் கேட்டு வளர்ந்த யாரும் அவருடன் பணியாற்றும் வாய்ப்பைத் தவறவிடமாட்டார்கள்.

அவருடைய யூடியூப் வீடியோ ஒன்றில் அவர் அளித்த செவ்வியைப் பார்த்தேன். அதில் புதியவர்களைத் தான் ஊக்கப்படுத்தத் தயார் என்று கூறியிருந்தார். அதைப் பார்த்த பிறகே அவரை அணுக வேண்டும் என்று தோன்றியது. முதல் முறையாக அவர் ஆங்கிலப் படம் ஒன்றுக்கு இசையமைத்துள்ளார்.

திரையரங்குகளில் படத்தை வெளியிட விருப்பமில்லை. அதற்குப் பதிலாக அமேசானில் வீடியோ ஆன் டிமாண்ட் என்கிற வழிமுறையில் வெளியிட்டுள்ளேன். எனவே இந்தப் படத்தை ஒன்லைனில் மட்டுமே காணமுடியும்.

இந்தப் படத்தில் ரோஹித் காலியா, ஜார்ஜியா நிகோலஸ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். மூன்று ஆண்டுகள் படமாக்கப்பட்டிருக்கிறது. வார இறுதி நாள்களில் மட்டுமே படப்பிடிப்பை நடத்தி முடித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவில் இந்தப் படத்துக்கு சிறந்த இயக்கம் மற்றும் சிறந்த இசைக்கான விருதுகள் கிடைத்துள்ளன என்றார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 4 | | 2 |
| | | | 7 | | | | 6 | 1 |
| | 2 | | 1 | 5 | | | | 7 |
| | | 9 | 2 | | | | | |
| 4 | | | 6 | 3 | 7 | | | 9 |
| | | | | | 9 | 7 | | |
| 7 | | | | 4 | 1 | | 8 | |
| 2 | 3 | | | | 6 | | | |
| 5 | | 4 | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 1 | 3 | 5 | 2 | 8 | 7 | 4 |
| 2 | 5 | 3 | 4 | 7 | 8 | 9 | 6 | 1 |
| 7 | 8 | 4 | 1 | 9 | 6 | 5 | 3 | 2 |
| 5 | 6 | 2 | 9 | 3 | 7 | 1 | 4 | 8 |
| 8 | 4 | 9 | 2 | 6 | 1 | 3 | 5 | 7 |
| 3 | 1 | 7 | 5 | 8 | 4 | 6 | 2 | 9 |
| 9 | 7 | 5 | 8 | 4 | 3 | 2 | 1 | 6 |
| 1 | 3 | 6 | 7 | 2 | 9 | 4 | 8 | 5 |
| 4 | 2 | 8 | 6 | 1 | 5 | 7 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).


இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஏன்டி குழந்தை அழுகிறதே அப்ப கூட சீரியல் பார்த்துண்டிருக்கியே...




லூசு மனுஷா குழந்தையும் சீரியல பார்த்துத் தான் அழுது

வங்கியில் பணத்தை கொள்ளை அடிச்சதும் இல்லாம, செக்யூரிட்டியை ஏன் கடத்திட்டுப் போனீங்க...?



கொள்ளையடிச்ச பணத்தை நாங்க பாதுகாப்பா எடுத்துப் போக வேண்டாமாங்கையா...







WhatsApp

மகன்: அப்பா இந்த சங்கு சக்கரவாணம் பத்திக்கவே மாட்டேங்குது

அப்பா: டேய் மெதுவா பேசுடா ... அது சங்கு சக்கரம் இல்ல... உங்கம்மா செஞ்ச முறுக்கு..

அம்மா:...

(செத்தான் சேகரு)



**மேடம்:** உங்களின் நற்செயலை, சிலர் குறை கூறலாம். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை உருவாகலாம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.



**இடபம்:** கடந்த கால உழைப்பிற்கான நற் பலன் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து, பாராட்டு வெகுமதி பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**மிதுனம்:** பொது இடங்களில் அதிகம் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலங்களைப் பாதுகாக்கவும். லாபம் மிதமாக கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.



**கடகம்:** உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.



**சிங்கம்:** மனதில் குளறுபடி ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு கடனுதவி கிடைக்கும். நேரத்திற்கு உண்பது நல்லது.





**கன்னி:** சமயோசிதமாக செயல்பட்டு முன்னேறுவீர்கள். எதிரித் தொல்லை சுவடு தெரியாமல் மறையும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பெண் கள் வீட்டுக்கு தேவையான பொருள் வாங்குவர்.



**துலாம்:** கருணை மனதுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். பெண்கள் குடும்பப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பர்.



**விருச்சிகம்:** உங்களின் சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் சீராக புதிய உத்திகளைப் பயன்படுத்துவது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.



**தனுசு:** மற்றவர் ஏளனப் பேச்சைப் புறக் கணியுங்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும்.



**மகரம்:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறிச் செல்வர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் வர வாய்ப்புண்டு. பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.



**கும்பம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழிலில் உழைப்புக்கேற்ப பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்தினருடன் விருந்து, விழா சென்று மகிழ்வர். வீடு, வாகனத்தில் பராமரிப்புப் பணி மேற்கொள்வீர்கள்.



**மீனம்:** நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். திட்டமிட்ட வெளியூர் பயணத்தில், திடீர் மாறுதல் ஏற்படும். பிள்ளைகளின் வளர்ச்சி பெருமையளிக்கும்.



# பார்சிலோனாவிலிருந்து விலகமாட்டார் மெஸ்ஸி

பார்சிலோனாவை விட்டு மெஸ்ஸி ஒருபோதும் விலகமாட்டார் என அந்தக் கழகத்தின் தலைவரான ஜோசெப் மரியா கணித்துள்ளார்.

ஆர்ஜென்ரீனா தேசிய கால்பந்தாட்ட அணியின் தலைவராக உள்ள மெஸ்ஸி, ஸ்பெய்னின் புகழ்பெற்ற பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரராக திகழ்ந்து வருகிறார். ஆர்ஜென்ரீனாவுக்காக விளையாட முதலேயே மெஸ்ஸி பார்சிலோனாவுக்காக விளையாடத் தொடங்கிவிட்டார். மெஸ்ஸியை வளர்த்தெடுத்ததும் பார்சிலோனாவே. ஆர்ஜென்ரீனாவைவிட மெஸ்ஸி பார்சிலோனாவுக்கு அதிக முக்கியத் துவம் கொடுக்கிறார் என சில வேளைகளில் அவர் மீது சர்ச்சைக் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதுண்டு. ஆனால் கடந்த சில வாரங்களாக மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு விலகவுள்ளார் போன்ற கருத்துக்கள் பரவலாகப் பேசப்பட்டு வந்தன. மன்செஸ்டர் சிற்றியிலுள்ள, தனது முன்னாள் முகாமையாளரான பெப் குவார்டிலோவுடன் இணையும் திட்டத்தில் மெஸ்ஸி உள்ளார். பார்சிலோனாவுடன் செய்துள்ள ஒப்பந்தத்தின் படி எஞ்சியுள்ள 18 வாரங்களுக்குப் பின்னர் அவர் மன்செஸ்டர் சிற்றிக்காக விளையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் பார்சிலோனா கழகத்தின் தலைவரான ஜோசெப் மரியா, மெஸ்ஸி ஒருபோதும் பார்சிலோனாவை விட்டு விலகார் என்று உறுதிபடக் கணித்துள்ளார்.

பார்சிலோனா மெஸ்ஸியுடனான ஒப்பந்தத்தை நீடிக்க ஆர்வமாகவுள்ளது. மெஸ்ஸி தனது ஓய்வுக் காலம் வரை பார்சிலோனாவுக்காக விளையாடுவார் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



# ஆஸ்திரேலியாவை கதிகலங்கவைக்கும் பவுன்சர் பந்துகள்

பவுன்சர் பந்தால் பலமாகத் தாக்கப்பட்டு உயிரிழந்த ஆஸ்திரேலியாவின் இளம் வீரரான பிலிப் கியூக்ஸைத் தொடர்ந்து, தற்போது வோஜஸும் பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ளூர் கழகங்களுக்கு இடையிலான முதல்தர துடுப்பாட்டத் தொடரான செப்பீல்டு சீல்டு அங்கு பெரும் பிரபலமானது. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் பிலிப் கியூக்ஸ், அப்பொட் வீசிய பவுன்சர் பந்தை தவறாகக் கணித்து, தலையின் பின்பகுதியில் தாக்கப்பட்டு உயிரிழந்தார், அதன் பின்னர் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது வீரர்களுக்கு பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

நடப்பு வருடத்துக்கான செப்பீல்டு சீல்டு தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா – ரஸ்மானியா அணிகள் விளையாடிய ஆட்டமொன்றில் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா அணியின் தலைவரான வோஜஸ் 16 ஓட்டங்களைப் பெற்று, துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீவன்சன் வீசிய பவுன்சர் பந்து வோஜஸின் தலைக்கவசத்தைத் தாக்கியது. உடனே வோக்ஸ் நிலை தடுமாறி கீழே விழுந்தார். பின்னர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கியூக்ஸின் பின்னர் பலர் பவுன்சர் பந்தால் தாக்கப்பட்ட போதிலும், மருத்துவமனையில் சேர்க்கப்படும் அளவுக்கு சேதம் ஏற்பட்டமை வோஜஸூன் விடயத்தில் தான். அவரது உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லை. ஆனால் தொடரின் ஏனைய ஆட்டங்களில் வோக்ஸக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் பவுன்சர் பந்துகள் அவ்வப்போது ஆஸ்திரேலியாவை கதிகலங்க வைத்துக்கொண்டுதான் உள்ளன.




# நாயினால் தாமதமான சதங்கள்

இந்தியா – இங்கிலாந்து அணிக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் ஆட்டதத்தின்போது தெருநாய் ஒன்று கோக்லி, புஜாரா இருவரதும் சதங்களையும் தாமதப்படுத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்திய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று, முதலில் துடுப்பெடுத்தாடியது. கோக்லி 91 ஓட்டங்களுடனும், புஜாரா 97 ஓட்டங்களுடனும் விளையாடிக்கொண்டிருந்த போது திடீரென மைதானத்துக்குள் தெரு நாய் ஒன்று உள்நுழைந்து இடையூறு செய்தது. மைதான பராமரிப்பாளர்கள் ஒரு வழியாக நாயை விரட்டினர், மீண்டும் நாய் மைதானத்துக்குள் புகுந்தது.

இதனால் வேறு வழியில்லாமல், வீரர்கள் 12 நிமிடங்கள் முன்னதாகவே தேநீர் இடைவேளைக்கு சென்றனர். இதனால் புஜாரா மற்றும் கோக்லியின் சதம் சிறிது தாமதமானது.






# தலைவராக ஐம்பதாவது ஆட்டத்தை கேக் வெட்டிக் கொண்டாடினார் மிஸ்பா

பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவரான மிஸ்பா, தலைவராக தான் களமிறங்கிய 50 ஆவது ஆட்டத்தை கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளார்.

மிஸ்பாவுக்கு தற்போது 42 வயதாகிறது. ஓய்வெடுக்கும் சிந்தனையிலிருந்த அவர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டமைக்கு இணங்கி தொடர்ந்தும் விளையாடி வருகிறார். இதுவரை அவர் 68 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளார். பாகிஸ்தான் – நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்றுவரும் ஆட்டம் மிஸ்பாவின் 69 ஆவது ஆட்டமாகும். அத்துடன் தலைவராக மிஸ்பாவுக்கு 50 ஆவது ஆட்டமாகும்.

இதைக் கொண்டாடும் வகையில் மிஸ்பா சக வீரர்களுடன் இணைந்து கேக் வெட்டி மகிழ்ந்துள்ளார்.

# கற்புண்ணிகள்...

அவன் கசந்தவனாகித் திரும்பமாட்டான் என்னும் யதார்த்தமும் புரியத் தொடங்கியது. மாதச் சம்பளமும் இருவரும் சேர்ந்து இசைக் குழுக்களில் பாடும் வருவாயும் சிவானந்தன் கல்பனா வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருந்தன. மறுபுறம் ஒரு நேரம் சாப்பிட்டு இருநேரங்கள் பட்டினி கிடந்து தனது மூன்று பிள்ளைகளையும் வளர்த்தெடுக்கும் துலாபாரத்தை சுமந்தாள் நந்தினி.

கல்பனாவும் இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பின்பாக மேடைகளில் பாடுவதை நிறுத்த வேண்டிய நிலமை தோன்றியது. இப்போது சிவானந்தன் மறுபடியும் அரச வேலையையும் பார்த்து இசைக்குழுக்களுக்கும் பாடச் சென்றும் உழைத்த வருவாயில் வாழ்க்கை ரதம் சில்லெடுக்கத் தொடங்கியது. "கல்பனா இப்பெல்லாம் புதுப்பொடியங்கள் பாடத் தொடங்கிட்டாங்கள். அதால என்னையும் ஓரங்கட்டப் பாக்கிறாங்கள்..." சிவானந்தன் சொன்னது அவனுடைய இயலாமையைக் கல்பனாவுக்குக் கட்டியம்கூறி வைக்கவும் தவறவில்லை.

"அப்படித்தான் எல்லாம் நானும் பாடிக் கொண்டிருந்தன். இப்ப என்னைக் கூடப்பிடுவாங்களா.. புதிசாப் பெட்டையள் பாட வந்திட்டாளவை. அதோட இப்பத்தேயப் பாட்டுக்களையும் எங்களால பாட முடியுமே..." சிவானந்தனின் மனமும் சோர்ந்து போகாமல் இருக்க இவ்விதம் சொல்லி வைத்தாள் கல்பனா.

கல்பனாவின் பெற்றோருடன் ஒட்டிக் கொண்டிருந்தவர்கள். தற்போது அடிக்கடி எழும் பிரச்சினைகளால் தனிக்குடித்தனம் சென்று வாழ முற்பட்டனர். தொலைவாக இருப்ப தால் இதுவரைக் கவனிக்காமலிருந்த சீதனக் காணியில் அரச நிறுவனம் வீடு அமைத்துக் கொடுத்தது. அப்பகுதியில் பல குடும்பங்கள் புதிதாகக் குடியேறின. இவர்களும் அந்தக் குடும்பங்களில் ஒன்றாகினர். தற்போது இருக்குமிடம் தொலைதூரமாகையால் அரச வேலைக்குச் சென்று வருவதும் கோஷ்டிகளுக்குப் பாடச்செல்வதும் அவனுக்கு இமாலயப் பிரச்சனையாகவே மாறிவிட்டது. அரச வேலையை விட்டும் ஒண்டும் செய்யெலாது இன்னும் கொஞ்சக் காலம் வேலை செய்தால் பென்சன் வந்திடும் அதுவரைக்கும் போய்த்தான் வரவேணும் என்ற கட்டாயமும் ஏற்பட்டது. சிவானந்தனின் உடலும் வயதின் முதிர்ச்சியால் தளர்ந்து வந்ததை கல்பனாவுக்கு வேறொருவர் சொல்லியா தெரிய வேண்டும்? கல்பனாபவின் இளமை முறுக்குக்கு சிவானந்தனால் இப்பொழுதெல்லாம் ஈடுகொடுக்க முடிவதில்லை. "அம்மாணேய்... அப்பா எங்களை விட் டிட்டுப் போக நீங்க எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு எங்களை வளத்தீங்க... அவருக்குக் கடவுள் சரியான பாடத்தைக் குடுக்க வேணும்...ஓ..."

சிவானந்தன் நந்தினியை விட்டுப்போய் பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன. அப்போது ஆறே வயதாக இருந்த மூத்தவன் தயாபரன் இப்போது இளந்தாரியாக வளர்ந்திருந்தான். அவனுடைய வாயில் இருந்து வந்த சூடான வார்த்தைகளை இடைமறித்தாள் நந்தினி. "தயா அப்பிடிச் சொல்லாத. எல்லாம் எங்கட தலையெழுத்து. இல்லாட்டி எவ்வ ளவு அன்பாயிருந்த அப்பா விட்டுட்டுப் போறேண்டா சும்மா இருக்கோ" நந்தினியின் முயற்சியால் பிள்ளை களும் வந்த கஷ்டங்களை எல்லாம் தாக்குப்பிடித்து இன்றைக்கு நிமிர்ந்து நிற்கிறார்கள். அவர்கள் தந்தையில்லாதவர்களாயினும் நல்ல பண்பானவர் களாக இருக்கவேண்டும் என்பது அவளது விருப்பம்.

புதிதாகக் குடியேறிவாழ்ந்த குடும்பங்களில் சிவானந்தனின் பக்கத்து வீட்டுக்காரன் சந்திரன், திருமணம் செய்து மனைவியைப் பிரிந்து வயதான தாய், தங்கையுடன் இருக்கின்றான். கூலி வேலை செய்யும் அவனுக்கு அங்கே வேலைகள் கிடைத்துக் கொண்டிருந்தன. வேலைகள் இல்லாத நாள்களில் பொழுதைப்போக்க சிவானந்தன் வீட்டுக்கு வந்து போவதும் வழக்கம். வேலைக்குப் போகும் போதே சிவானந்தனின் இரண்டு பிள்ளைகளையும் பாடசாலைக்குக்கூட்டிக்கொண்டுபோய்வேலைமுடித்து வரும்போது திரும்பவும் கூட்டியும் வருவான்.

கல்பனா பகலில் வீட்டில் தனியே சமையல் மற்றும்வேலைகளில் ஈடுபட்டு இருப்பாள். சந்திரனும் வேலை இல்லாதுவிட்டால் கல்பனாவுடன் வந்திருந்து அரட்டை அடிப் பான். சிவானந்தன் இசைக்கச்சேரிக்குச் செல்லும் இரவுகள் இன்னும் அவர்களை இறுக்கமாக்கியது. சிவானந்தனுக்கு இந்த நிகழ்வுகள் தெரிய வந்ததும் சிந்திக்கத் தொடங்கினான். நெருப்பும் பஞ்சும் கிட்ட இருந்தால் தீப்பற்ற நேரமா செல்லும்? சந்தி ரனுக்கும் கல்பனாவுக்கும் புதிய உறவு தோன்றி தலைக்கு மேல் வெள்ளம்வந்தது போலாகி விட்டது. சந்திரனும் கல்பனாவும் சிவானந்த னுக்கு முன்பாகவே கணவன் மனைவியாக வாழ்வதை அவனால் தடுத்து விடவும் முடியவில்லை. தலைமுழுகி விட்டதாக நினைத்த கணவன் பதினாறு வருடங்கள் கழிந்த பின்பாகத் தன்னைத் தேடி வருவான் என்று நினைத்திராத நந்தினி முன்பாக வந்து நின்றான் சிவானந்தன். "ஆரிது...?" தாயிடம் தயாபரன் கேட்டான். நந்தினி எதுவுமே பேசாமல் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினாள். இன்னமும் புரிந்து கொள்ளாமல் இருக்கத் தயாபரன் குழந்தையில்லை.

"ஓ.. விளங்குது இதுவரையும் உங்கட முகம் தெரியாமல் வழ்ந்திட்டம் இனியும் வாழ்வம்... இப்ப ஏன் வந்தனீங்க போங்க போய் விடுங்க" சிங்கமாக கர்ச்சித்தான் தயாபரன்.சிவானந்தன் மனைவி நந்தினியின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான். எதிரிபார்த்திராத நந்தினி பதறிப்போனாள். முந்தனையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு கணவனடியில் அமர்ந்தவள் குரல்வைத்தாள்.

"தயா ஒண்டும் பேசாத அங்கால போ" தாயின் உறுதியான வார்த்தைகளைக் கேட்டு விக்கித்து நின்றான் அவன் . வெளியில் போய் நின்று தம்பி தங்கையுடன் வீட்டுக்குள் நடக்கும் காட்சிகளைப் பார்ப்பவர்கள் முகங்களில் பூரிப்புத் தோன்றியது.

"என்னை மன்னிச்சிடுங்கோ... இனி நானுங்களை விட்டுப்போக மாட்டன்" காலில் வீழ்ந்து கதறியழுதான். சிவானந்தனின் வார்த்தைகளில் பட்டறிவு பட்டுத் தெழிந்தமை வெளிப்பட்டது. மறுபுறம் இனிவரும் காலங்களில் பட்டறிவு பெறப்போகும் சந்திரனின் படலம் ஆரம்பமாயிற்று. இவ்வாறே இன்னும் தொடரும் பலரது நிலையும் அவர்களைப் பின்னால் வருத்தும் என்பது சிவானந்தனுக்கு மட்டும் தெரிந்தது. ■

## சொற்சிலம்பம் - போட்டி இல: 447

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | 12 | | ■ |
| ■ | 13 | 14 | | ■ | | ■ | 15 |
| 16 | | | ■ | 17 | | 18 | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | 22 | | ■ | 23 | 24 | | |
| 25 | | ■ | 26 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:.................................................
பூரணமான தபால் விலாசம்: ......................................
.........................................................................
கையொப்பம்:.........................................................

— — — — — — — — — — — — — — — —

### இடமிருந்து வலம்

1. உத்தியோகத்தர் நிலை
4. செயற்கைக் கோள்
7. பாண்டவரின் தாய்
9. நில்
10. நினைவுநாள்
11. நாய், பூனை போன்றவற்றில் ஆண்
13. சோற்றுணவின் கடைசியில் சேர்த்து உண்பது
16. தாய்
17. சளி பிடித்தல்
19. மனைவியின் சகோதரி கணவன்
20. பாரமான
21. பக்குவநிலை
23. மூளை பிசகியவன்
25. வலிமை
26. நண்பகல் வேளை

### மேலிருந்து கீழ்

1. ஒன்றின் பாகம்
2. உபாயம்
3. விதிக்கப்பட்டது.
4. காது கேளாத தன்மை
5. காமன்
6. மூன்று
8. உடம்பு
12. வாகனம்
14. சங்கங்களின் கூட்டமைப்பு
15. அரசன்
16. அதிகாரத்தில் இருப்பவன்
17. சிரசில் எழுதப்பட்டது
18. மீன் சின்னம்
22. குளிர்மை
24. ஒரு குறியீடு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 445 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**
(1) பச்சாதாபம் (6) மகன் (7) சனி (8) சவரம் (10) பலா (11) மிதம் (12) விரும்பு (14) படகு (15) சம்பவம் (17) சதி (18)கனி (19) அகர (20)குடல் (21) அகலம்

**மேலிருந்து கீழ்**
(1) பஞ்சமி (2) சாமரம் (3) தாகம் (4) பன் (5) ஆனி (7) சலாம் (9) வதனம் (10) பருகு (12) விடம் (13) பத்திரம் (14) பவனி (15) சங்கு (16) பகல் (17) சகல (19) அக

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 445 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
செல்வி இந்துஜா அருள்லிங்கம்,
இல: 364/ B. சாந்தசோலை வீதி,
தம்பனைச்சோலை, வவுனியா.

**2 ஆம் பரிசு**
ஆ.கா.ஶ்ரீதரன்,
24-5/3, மடன்ஹஹாவத்த ஒழுங்கை,
கொழும்பு-6

**3 ஆம் பரிசு**
க.சரோஜினி,
கிந்துசிட்டி, புலோலி தெற்கு,
புலோலி.

**4 ஆம் பரிசு**
சா.விரபேக்கா ஜெனிபர்,
இல.9/1 தண்ணீர்த்தாங்கி வீதி,
4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
இ.ஹேமகிரி,
இல.44, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

**பாராட்டுப் பெறுவோர்**

ஐ.முருகையா,
மடத்தடி, பலாலி வீதி,
உரும்பிராய்.

க.டில்லியம்மா,
இல. 232/3 செபஸ்தியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

திருமதி ஜே.பத்மா,
இல. 351/1 கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.447 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர். (30.11.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.447இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.12.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 445இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம்

## 20.11.2016 முதல் 26.11.2016 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

புதன், சுக்கிரன், கேது அளப்பரிய நன்மை வழங்குவர். மனதில் நம்பிக்கை ஏற்படும். ஆர்வமுடன் பணிகளை நிறைவேற்றுவீர்கள். பூர்வ சொத்தில் ஓரளவு பண வரவு கிடைக்கும். புத்திரர்கள் தன் விருப்பங்களை நிறைவேற்றச் சொல்லி பிடிவாதம் செய்யலாம். சார்ந்த உதவி தாமதமாகலாம். மனைவி அன்பு பாசம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் சில சீர்திருத்த பணிகளைச் செய்வீர்கள். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் குழந்தைகள் நலனுக்காக பாடுபடுவர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர்.

### இடபம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. குடும்பத்தின் தேவையை நிறைவேற்றுவீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கூடும். தந்தை வழி உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவர். விவகாரங்களில் சமரசத் தீர்வு கிடைக்கும். புத்திரர்கள் செயல்களைக் கவனித்து வழி நடத்த வேண்டும். கணவன், மனைவி இடையே சுமுக உறவு ஏற்படும். பயணத்தில் தகுந்த பாதுகாப்பு வேண்டும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### மிதுனம்

ராகு, சூரியன், சனி, புதன் ஆதாய பலன் தருவர். இனிய எண்ணங்கள் உற்சாகம் தரும். பணி களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். புதியவர்களின் உதவி கிடைக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்வர். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவியின் கருத்தை ஏற்பதால் குடும்ப ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பண வரவும் கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் பண வசதிக்கேற்ப நகை புத்தாடை வாங்குவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு பாராட்டு பெறுவர்.

### கடகம்

சந்திரன் நற்பலன் தருவார். திட்டமிட்ட பணிகள் நிறைவேற அதிக முயற்சி வேண்டும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். வாகன பராமரிப்பு செலவு உயரும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் குளறுபடி ஏற்படலாம். உடல்நிலை சுமாராக இருக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் இருக்கும். கடன் பெற வேண்டாம். பணியாளர்கள் பணியில் அதிக கவனம் வேண் டும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்கக் கூடாது. மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### சிங்கம்

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் தாராள நன்மை தருவர். உறவினர்களுடன் சுமுக உறவு ஏற்படும். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் திறமையை வெளிப்படுத்தி முன்னேற்றம் காண்பர். வழக்கு, விவகாரத்தில் அனுகூலமான தீர்ப்பு கிடைக்கும். மனைவியின் சொல்லும் செயலும் பாராட்டும் வகையில் இருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணிகளை முடித்து நிர்வாகத்தின் அன்பைப் பெறுவர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் விரும்பிய பொருட்களை பெற்றோரிடம் கேட்டு வாங்குவர்.

### கன்னி

சூரியன், சுக்கிரன், கேது, சனீஸ்வரரால் நன்மை உண்டாகும். வேண்டாதவர்கள் கூட உங்களை புரிந்து கொள்வர். குடும் பத்தில் நற்பெயரும், சமூகத்தில் புகழும் கிடைக் கும். பயணங்கள் இனிமையாக அமையும். புத்திரர்கள் நண்பர்களுக்கு இணையாக உங்களிடம் பழகுவர். கடன் கொடுத்த பணம் வசூலாகும். மனைவி கருத்திணக்கம் கொள்வார். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணியாளர்களுக்கு அதிக உழைப் பால் பண வரவு கூடும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் சந்தேகம் தீரும்.

### துலாம்

ராகு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். புத்துணர்வுடன் பணி புரிவீர்கள். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்வர். எதிர்ப்பாளரிடம் விலகுவதால் சிரமம் தவிர்க்கலாம். மனைவி உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். வெளியூர் பயணங்கள் புதிய அனுபவம் தரும். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் வளரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் அன்பை பெறுவர். பெண்கள் வீட்டு அலங்காரப் பொருள் வாங்குவர். மாணவர்களின் தேர்ச்சி விகிதம் சீராகும்.

### விருச்சிகம்

செவ்வாய், குரு, சுக்கிரன் அளப்பரிய நற்பலன் தருவர். தாமதமான செயல் அதிர்ஷ்டவசமாக நிறைவேறும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். பயணங்கள் அதிகரிக்கும். மகளின் யோகத்தால் செல்வ வளம் சேரும். நோய் தொந்தரவு விலகி ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் அன்பில் மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகளைச் செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்களின் செயல் திட்டங்கள் குடும்ப வருமானத்தை உயர்த்தும். மாணவர்கள் படிப்புடன் பிற கலைகளிலும் ஆர்வம் செலுத்துவர்.

### தனுசு

சுக்கிரன், கேது, சந்திரனால் நன்மை உண்டு. பேசுவதில் நிதானம் வேண்டும். தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும். புத்திரர்களின் ஆர்வம் நிறைந்த செயல் குளறுபடியாகலாம். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி சொல்லும் ஆலோசனை நன்மை தரும். பயணங் களால் அதிக நன்மை இருக்க வாய்ப்பில்லை. தொழில், வியாபாரம் செழித்து வளர பணி புரிவீர்கள். பணியாளர் கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நடந்தால் தான் நடவடிக் கைகளில் இருந்து தப்ப முடி யும். பெண்கள் உறவினர் வீட்டில் சுப நிகழ்ச்சி நடத்த உதவு வர். மாணவர்கள் படிப் பில் அக்கறை கொள்வர்.

### மகரம்

பெரும்பாலான கிரகங்கள் ஆதாய பலன்களை தருவர். எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும். வாழ்க்கையில் இனிய அனுபவங்கள் நிறைந்திருக்கும். தாய்வழி உறவினர்கள் உதவி கேட்டு அணுகுவர். பயணங்களால் அதிக நன்மை இருக்காது. புத்திரர்கள் திறமைமிகு செயலால் நற்பெயரும், புகழும் பெறுவர். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள் குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் வளரும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகர வாழ்க்கை நடத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### கும்பம்

சூரியன், புதன், சுக்கிரனால் அளப்பரிய நன்மை கிடைக்கும். செயல்பாட்டில் திறமை வெளிப்படும். பணிகளை திட்ட மிட்டபடி நிறைவேற்றுவீர்கள். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. வழக்கு, விவகாரத் தில் சுமுக தீர்வு கிடைக்கும். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாக இருக் கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண் கள் உடன் பிறந்தவர்களுக்கு உதவுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

### மீனம்

ராகு, குரு, செவ்வாய் நற்பலன் தருவர். பழகுபவர்களின் எண்ணம் உணர்ந்து பேசுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவி கேட்டு அணுகுவர். பயணங்கள் குறையும். புத்திரர்களின் நல்ல செயல்களால் பெருமை அடைவீர்கள். பூர்வபுண்ணிய நற்பலன் சில நன்மைகளை உருவாக்கும். கடன்கள் நிர்ப்பந்தம் குறையும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால் ஒற்றுமை பலம் பெறும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சியும், பண வரவும் கூடும். பணியாளர்களுக்கு வேலைப் பளு கடுமையாகும். மாண வர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர்
– யாழ் பல்கலைக்கழகம்

# நான் சந்தித்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் 2014ஆம் ஆண்டு புனிதர் பட்டம் பெற்று புனித இரண்டாம் அருள் சினனப்பரான கதை பற்றி கடந்த வாரம் வெளியான ஆக்கத்தின் தொடர்ச்சி.

**1998ஆம் ஆண்டு வத்திக்கான் நகரில் திருத்தந்தையுடனான சந்திப்பு**

1998 ஆம் ஆண்டு வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில் வத்திக்கானில் பணியாற்றும் யாழ் மறைமாவட்டத்தை சேர்ந்த மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளாரின் ஏற்பாட்டில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரைச் சந்தித்தது மறக்கமுடியாத அருள் நிறைந்த அனுபவமாகும். நான் சந்தித்த திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் புனிதராகியுள்ளார் என்ற செய்தி எப்போதும் பிரமிப்பூட்டும் ஒரு செய்தி என்பதோடு அவ்வனுபவத்தை பகிர வேண்டும் என்ற அவா என் உள்ளத்தை என்றும் நிறைத்தே இருந்தது. எனவேதான் கடந்த வாரம் அவர் பற்றி எழுதிய ஆக்கத்தில் இப்போது புனிதராய் விளங்குகின்ற, நான் சந்தித்த திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பருடன் எடுத்த அந்த முக்கியமான படத்தையே இணைத்திருந்தேன். எனது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் 20 ஜனவரி 1995 ஆம் ஆண்டு இலங்கையின் முதற் புனிதர் யோசவ் வாஸ் அடிகளாரை அருளாளர் என அறிவிக்க கொழும்பு வந்தபோது கொழும்பு மறைமாவட்டத்தின் அப்போதைய (இன்று பணி ஓய்வு பெற்ற) பேராயர் நீக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோருடன் எடுக்கப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த படம் ஒன்றை இவ்வாக்கத்துடன் காணலாம்.

**வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில்**

மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளாரின் ஏற்பாட்டில் உரோமாபுரியில் அப்போது கல்வி கற்றுக் கொண்டிருந்த சந்திரபோஸ் அ.ம.தி. அடிகளாரும் யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரும் அதிகாலை வேளை வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்திற்கு என்னை அழைத்து வந்து மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளாரிடம் ஒப்படைத்துவிட்டு தமது வகுப்புக்களுக்குச் சென்றுவிட்டார்கள். வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில் கடுங்குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. சதுக்கம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்திருந்தது. திருத்தந்தை ஒருவரைச் சந்திக்கும் நிகழ்வு ஒருவரது வாழ்வில் நடக்கும் ஓர் ஆபூர்வ நிகழ்வுதான். எப்போது திருத்தந்தையை சந்திக்கப் போகிறோம் என மனது ஆர்வத்தில் துடித்துக் கொண்டிருந்தது. நீண்ட நேர காத்திருப்பின் பின்னர் சோதனைகள் முடித்து உள்ளே அனுமதிக்கத் தொடங்கினார்கள். திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் அப்போது ஓரளவு வயது முதிர்ந்து இருந்தமையால் தனியான சந்திப்புக்கள் நிறுத்தப்பட்டு பொதுவான சந்திப்பே அனுமதிக்கப்பட்டிருந்தது. அழகுற அமைந்திருந்த பெரிய மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம். எங்கோ ஒரு மூலையில் இருந்து தூரமாக இருந்து திருத்தந்தையைப் பார்க்க முடியும். அதுவே பெரும் பாக்கியம் எனக்கருதி நின்றபோது உள்ளே சென்று அதிகாரிகளிடம் பேசிவிட்டு வந்த மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் பாதுகாவலன் ஆசிரியர் என்பதை நிரூபிக்கும் எனது செய்தியாளர் அட்டையை வாங்கிக்கொண்டு போய் உள்ளே கொடுத்தார். உடனே ஒருவர் வந்து என்னை சோதனை இட்டு உள்ளே அனுப்பினார்.

**1981ஆம் ஆண்டு சுடப்பட்ட திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்**

நானும் இப்போது யாழ் மறைமாவட்ட அகவொளி குடும்பவள பணி நிலையத்தில் பணியாற்றுகின்ற ஆர்.ஸ்ரலின் அடிகளாரும் இந்தியா பூந்தமல்லி திரு இருதய குருத்துவக்கல்லூரியில் மெய்யியல் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோது உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்திய அந்த சம்பவம் நடைபெற்றது. ஆர். ஸ்ரலின் அடிகளாரே அச்சம்பவத்தை என்னிடம் சொன்னார். இந்த சம்பவம் நடைபெற்ற பின்னர் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் மேல் ஓர் அன்பான பாசஉணர்வு ஏற்பட்டது.



1981ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியால் சுடப்பட்டு தெய்வாதீனமாகப் பாதுகாக்கப்பட்டார். 1981ஆம் ஆண்டு வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில் முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியின் 9 கலிபர் துப்பாக்கிச் சன்னங்களில் இரண்டு திருத்தந்தையின் உடலைத் துளைத்தன. 5மணி நேர சத்திர சிகிச்சையின் பின்னர் மருத்துவர்கள் தெரிவித்த விடயம் ஒரு புதுமை நடந்துள்ளது என்பதாகும். முக்கிய உறுப்புக்களைத் தாக்காமலும் அவரைக் கொல்லாமலும் நிரந்தர உடற் பாதிப்புக்களை ஏற்படுத்தாமலும் அவரது உடலைத் துளைத்த சன்னங்களை எவரோ வழி நடத்தியுள்ளனர் என்று தெரிவித்தனர். 1983 ஆம் ஆண்டு தாம் சுடப்பட்ட இரண்டரை ஆண்டுகளின் பின்னர் திருத்தந்தை சிறைச்சாலைக்குச் சென்று தம்மைச் சுட்டுக் காயப்படுத்திய முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியைச் சந்தித்துப் பேசினார். அப்போது முகமது அலி அக்கா எனது குறி ஒருபோதும் தப்பாது. நீங்கள் தப்பியது எப்படி? என்று கேட்டார். அதற்குத் திருத்தந்தை துப்பாக்கியை இயக்கியது ஒரு கை, சன்னத்தை வழிநடத்தியது வேறொரு கை எனத் தெரிவித்தார்.

1982 ஆம் ஆண்டு பத்திமாபதி ஆயர் திருத்தந்தையைச் சந்தித்த போது திருத்தந்தை தமது உடலில் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தை ஆயரிடம் கொடுத்து அதனைப் பத்திமா அன்னையின் பதியில் வைக்கும்படி வேண்டினார். ஆயர் அச்சன்னத்தை பத்திமா அன்னையின் திரு முடியில் பொறித்து வைத்துள்ளார். தாம் சுடப்பட்ட அடுத்த ஆண்டு அதேதினத்தில் 1982ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி திருத்தந்தை பத்திமா பதிக்குச் சென்று பத்திமா அன்னைக்கு நன்றி செலுத்தினார். 10 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் 1991ஆம் ஆண்டு பத்திமா பதிக்குச் சென்றுள்ளார். தமது உயிரைப் பாதுகாத்ததற்காக மட்டுமல்ல தம் பதவிக்காலம் முழுவதும் துணை நின்றதற்கும் 1989 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்திலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக நாஸ்திகவாதம் வீழ்ச்சியுற்றதற்காகவும் அன்னைக்கு நன்றி செலுத்துவதாக 2000ஆம் ஆண்டில் முத்திப்பேறு பெற்ற பட்டத்தை யசிந்தா – பிரான்சீஸ் ஆகிய இருவருக்கும் வழங்கிய போது தெரிவித்துள்ளார்.

**திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பற்றி பாதுகாவலன் பத்திரிகையில்**

திருத்தந்தை முகமது அலி அக்கா என்ற துருக்கியத் தீவிரவாதியுடன் என்ன பேசினார் என்பதை ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் இருந்து எடுத்து மொழியாக்கம் செய்து பாதுகாவலன் பத்திரிகைக்கு அனுப்பினேன். அதை முதற்பக்கத்தில் பிரசுரித்தார்கள். பின்னர் திருத்தந்தையின் இறையியற் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும் என்ற தொடர் ஆக்கத்தை பாதுகாவலன் பத்திரிகையில் பல மாதங்களாக எழுதி வெளியிட்டேன். எனது பாதுகாவலன் ஆசிரியப் பணிக்காலத்தில் (1997 - 2007) திருத்தந்தையின் விடயங்களுக்குச் சிறப்பு முக்கியத்துவம் கொடுத்தேன். 2005 ஆம் ஆண்டு திருத்தந்தை இறந்த போது கத்தோலிக்க திருச்சபையின் பலத்தை உலகமே கண்டு வியந்தது என பெரிய தலைப்பிட்டு முதற்பக்கம் முழுவதும் நிறையும் படியாக பெரிய படத்தை வெளியிட்டேன்.

இவ்வுலகில் நல்வாழ்வு வாழ்ந்து புனிதர் நிலை அடைந்தவர்கள் எமக்காகப் பரிந்து பேசும் வல்லமை பெற்றவர்கள். அவர்களிடம் நாம் மன்றாட முடியும். அவர்களும் புதுமைகள் புரிய முடியும். அவர்கள் பெயரில் ஆலயங்கள் அமைக்க முடியும். புனிதர்களை அவர்கள் வாழும் போதே சந்திப்பதும் அபூர்வமானது. ஆனால் அண்மைக்காலத்தில் இந்த நிலை சற்று மாறியுள்ளது. குறிப்பாக புனித அன்னை தெரேசா, புனித இரண்டாம் அருள் சின்னப்பர் போன்றோர் சமகாலப் புனிதர்கள் ஆக விளங்குகின்றனர். இவர்களைச் சந்தித்த பலர் இன்று வாழ்கின்றனர் என்பது அபூர்வமான உண்மையாகும்.

**வத்திக்கான் நகர் உலகின் மிகச் சிறிய நாடு**

வத்திக்கான் நகர் உலகின் மிகச் சிறிய நாடு. அந்நாடு பற்றி அறிய வேண்டிய பல விடயங்கள் உண்டு. வத்திக்கான் நகர் (வற்றிக்கான் சிற்றி) இத்தாலி நாட்டின் உரோமை நகரிலுள்ள ஒரு தன்னாட்சியுடைய சுதந்திர நாடாகும். இதன் அரசியல் தலைவர் திருத்தந்தையாவார். வத்திக்கான் நகரத்தில் திருத்தந்தையின் அதிகாரப்பூர்வ உறைவிடமும் அலுவலகமும் அமைந்து கத்தோலிக்கத்தின் தலைமை மையமாகத் திகழ்கிறது. வத்திக்கான் நகரத்தின் மொத்தப் பரப்பளவு ஏறக்குறைய 109 ஏக்கரே ஆகும். இதன் மொத்த மக்கள் தொகை சுமார் 804 ஆகும். இதுவே பரப்பளவு மற்றும் மக்கட்தொகை அடிப்படையில் உலகின் மிகச் சிறிய நாடு ஆகும்.

வத்திக்கான் நகரம் 1929ஆம் ஆண்டு முதல் நிலைத்திருக்கும் ஒரு நகர–நாடு. 1929இல் தன்னாட்சி நாடாக உருவெடுத்த வத்திக்கான் நகரத்தைக் கிறிஸ்தவ சமயத்தின் தொடக்கத்திலிருந்தே நிலைத்துவருகின்ற திருப்பீடத்திலிருந்து வேறுபடுத்திக் காணவேண்டும்.

இரு ஆட்சியமைப்புக்களுக்கும் வெவ்வேறு கடவுச்சீட்டுக்கள் உள்ளன. நாடில்லாத திருப்பீடம் வெறும் அரசு தொடர்புடைய மற்றும் சேவைக்கான கடவுச்சீட்டுக்களைப் பிறப்பிக்கின்றது; வத்திக்கான் நகரம் குடியுரிமைக்கான கடவுச்சீட்டுக்களைப் பிறப்பிக்கின்றது. இரண்டு அரசுகளுமே குறைந்த அளவிலேயே கடவுச்சீட்டுக்களைப் பிறப்பிக்கின்றன. 1929ஆம் ஆண்டு இலாத்தரன் உடன்படிக்கை மூலமாக உருவான வத்திக்கான் நகர் ஒரு புதிய உருவாக்கமாகவே அமைந்தது.

வத்திக்கான் என்ற பெயர் வத்திக்கான் மலை எனப் பொருள்படும் லத்தீன் வார்த்தையான வட்டிகனசில் இருந்து பெறப்பட்டது. இதன் ஆட்சிப்பகுதியானது புனித பேதுரு பேராலயம், திருத்தூதரக அரண்மனை, சிசுடைன் சிற்றாலயம் மற்றும் பல அருங்காட்சியகக் கட்டடங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இப்பகுதியானது 1929 வரை இத்தாலிய பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. 1929இல் இலாத்தரன் ஒப்பந்தத்தின் படி மேற் சொல்லப்பட்ட பகுதிகளின் எல்லைகள் ஏற்கனவே இருந்த சுற்றுச் சுவர் மூலம் வரையறுக்கப்பட்டது. பண்டைய வழக்கப்படி இங்கு புனித பீட்டர் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு சிறப்பு ஒப்பந்தத்தின்படி 1 ஜனவரி 1999 முதல் யூரோ நாணயம் இங்கு பயன்படுத்தப்படுகிறது. வத்திக்கான் நகரில் அதிகமாக பதிவாகும் குற்றங்கள் வழிப்பறி மற்றும் திருட்டு ஆகும். இங்கு சிறைச்சாலை அமைப்பு ஏதும் இல்லாததால் இந்நகரில் குற்றம் புரிவோர் இத்தாலி நாட்டுச் சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள்.

புனிதராகியுள்ள திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சினனப்பர் தம் அருள் வரங்களை தேவையில் இருக்கும் அனைவர் மேலும் பொழிவாராக.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சூழலும் இரசாயனமும்



கு.மதுசூதன்

மாறிவரும் உலகப் போக்கில் இரசாயணம் மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்ததொன்றாகிவிட்டது. காலை எழுந்தது தொடக்கம் நித்திரைக்கு செல்லும் வரைக்கும் மனிதன் இரசாயனங்களுடனேயே இணைந்திருக்கிறான். அவனைச் சூழ்ந்திருக்கும் இரசாயனச்சூழலை விட அவன் உண்ணும் உணவிலயே அதிக இரசாயனம் கலந்துள்ளது. அவனை அதிகம் பாதிப்பதுவும் அவனுடலுள் செல்லும் இந்த உணவுகளே. எனவே நச்சுணவுகளை உட்கொள்ளுவதனால் அவனது ஆயுட்காலம் மிகவும் குறைவடைந்து செல்கிறது என்பது மறுக்கப்படாத உண்மை. மாறிவரும் காலநிலைகளுக்கேற்பவும் அதிகரித்த சனத்தொகைக்கேற்ப விளைச்சலை வேண்டியும் விவசாயிகளும் உற்பத்தியாள்ர்களும் அதிக இரசாயனங்களை விவசாய நிலங்களிலும் உற்பத்தி செயன்முறைகளிலும் பயன்படுத்துவதனால் இரசாயனங்களே இன்றைய மக்களின் உடலில் செரிவடைந்துள்ளன. சில பாரதூரமிக்க இரசாயனங்கள் உணவுச்சங்கிலி வழியேயும் செரிவடைந்து ஆபத்துக்களையும் நோய்களையும் விளைவிக்கின்றன.

இன்று குடாநாடும் சரி, ஏனைய பிரதேசங்களும் சரி, புற்றுநோய்த் தாக்கங்களா்லும் மாரடைப்பு இருதய நோய்களினாலும் அவதிப்படுவதையும் இறப்பு வீதம் அதிகரித்துச் செல்வதையும் புள்ளிவிவரங்கள் மூலம் உணரமுடிகின்றது.


உண்மையில் உணவில் இரசாயனக்கலப்பும் இயந்திரம் மூலமான உணவுத் தயாரிப்புமே இதற்குக் காரணமாக அமைகின்றன.

விவசாய நிலங்களில் அதிக விளைச்சலைப் பெறவும் உற்பத்திவீதத்தை அதிகரிக்கவும் பெரும்பாலும் இலாபநோக்கோடு அதிகளவு அசேதனப் பசளைகளின் பயன்பாடுகளை அதிகரித்துச் செல்லும் இன்றைய மனிதத் தலைமுறை ஆரோக்கியமான எதிர்காலச் சந்ததிக்கான அத்திபாரமல்ல. அசேதன உரப் பாவனைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து சேதன வளமாக்கிகளைப் பிரயோகிக்க ஊக்குவிக்கவேண்டும். இயற்கைக் கழிவுகளும் விலை மதிப்புள்ளன என உணர்ந்து அவைதாம் எமது விளை நிலத்துக்குரிய மருந்தும்- ஊட்டச்சத்தும் என உணரவேண்டும், உணர்த்த வேண்டும்.

மற்றைய நாடுகளிலுள்ளதைப்போல கழிவுகளை வினைத்திறனுடனும் வகைக்கேற்ப பிரித்து, அதில் இயற்கையான உக்கக்கூடிய கழிவுகளை கூட்டுப்பசளையாக்கிச் செய்து சேதன வளமாக்கிகளை உற்பத்தி செய்யவேண்டும். இதற்கு வினைத்திறன் மிக்கதாய் மாநகர சபை, பிரதேசசபை கழிவு சேகரிக்கும் துறை சார்ந்தோர் செயற்பட வேண்டும். சில பிரதேச சபைகள் சேதன உரங்கள் தயாரிப்பதை மேற்கொண்டாலும், அதனை வினைத்திறனாகவும் அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மற்றைய நாடுகளிலுள்ளதைப் போல கழிவுகளை வினைத் திறனுடனும் வகைக்கேற்ப பிரித்து அதில் இயற்கையான உக்கக்கூடிய கழிவுகளை கூட்டுப்பசளையாக்கிச் செய்து சேதன வளமாக்கிகளை உற்பத்தி செய்யவேண்டும். இதற்கு வினைத்திறன் மிக்கதாய் மாநகர சபை, பிரதேசசபை கழிவு சேகரிக்கும் துறை சார்ந்தோர் செயற்பட வேண்டும்.

விவசாயிகள் கொஞ்சம் கொஞ்சமாக தமது விளை நிலங்களை இயற்கையோடிணைந்த பயிர்ச்செய்கைக்கு பயிற்றுவிக்க வேண்டும். இதுவும் அவர்களின் தார்மீக பொறுப்புக்களில் ஒன்றாகும். படுபாதகமான நஞ்சுச்செரிவான களைகொல்லிகள், பீடைகொல்லிகள், வளமாக்கிகள் என்பன இன்று அரசினால் தடைசெய்யப்பட்டுக் கொண்டிருப்பது நற்செய்தியாயினும், இப்போதும் சில நச்சுத் தன்மை கூடியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. அவை இறக்குமதி செய்வது குறைக்கப்பட்டு, இயற்கைப் பசளைகள் உற்பத்தி செய்யப்படுவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.




இன்றெல்லாம் நாம் மரநடுகையை ஊக்குவிப்பதற்கான விளம்பரப்படுத்தல்களுக்காக எவ்வளவோ பணத்தை வீணாக்குகிறோம். மரநடுகை மாதம் முடிந்ததும் அதனை ஏன் மறந்து விடுகிறோம். அந்தப் பணத்தை மரங்களை வெட்டாதிருக்கவும் எமது சொந்த நிலங்களில் காடழிப்புக்களை தடுக்கவும் வினைத்திறனுள்ள வழிகளில் பயன்படுத்துவதே சாலச் சிறந்தது. நாம் இந்தநிலத்தில் வாழ்ந்துவிட்டு போவது நியாயமில்லை. நாமக்குப் பின்னர் நமது தலைமுறைகள் என மனித இனம் நீண்ட காலம் வாழவேண்டும். இரசாயனங்களைப் பயன்படுத்தி நிலத்தைப் பாழாக்காது, அடுத்த தலைமுறைக்கு நல்ல வளமிக்க சூழலொன்றை கையளித்துச் செல்வது அனைத்து மனிதர்களுடையதுமான தார்மீகக் கடமையாகும்.

## அரசியல் பிக்குகளால்...

(39 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர்களின் நிலங்களை தமிழர்கள் கொள்ளையடிக்கிறார்கள் என்று கூறி 14.02.2012 அன்று சாகும்வரை உணவு ஒறுப்பு இருந்தார். பிள்ளையான் என்னை கொல்ல விரட்டிக்கொண்டு வந்தார்.... தமிழ்த் தேசிய முன்னணி மூலம் எனக்குக் கொலை அச்சுறுத்தல் இருக்கிறது" எனக் கூறி ஊடகங்களில் ஒரு சிங்கள நாயகனாக ஆக்கப்பட்டார். இவர் மற்றும் பொதுபல சேனாவின் கலகொட அத்தே ஞானசாரதேரர் போன்றோர் 21 ஆம் நூற்றாண்டில் அநாகரிக தர்மபாலவையும் கங்கொட சோததேரரையும் மீட்டுருவாக்கம் செய்ய முயற்சிக்கிறார்கள். இந்த அரசியல் பிக்குகளால் ஆடிப் போயிருக்கிறது மைத்திரி- ரணில் கூட்டு ஆட்சி. இதைக் கட்டுப்படுத்த வெறும் வாய்ச் சவாடல்கள் மட்டும் போதாது. உறுதியான நடவடிக்கை வேண்டும். அதற்குத் திராணி இருக்கிறதா இந்த அரசுக்கு?



# தீர்வுக்காக ஆயுதம் ஏந்துவது உகந்ததல்ல

## அரசியல் அனுபவமே அதற்கு வேண்டும் என்கிறார் கிழக்கு அமைச்சர் துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உணர்ச்சிவசப்படுவதோ, ஆயுதம் ஏந்திப் போராடுவதோ உகந்ததல்ல. மாறாக 60 வருடகால அரசியல் அனுபவத்தைக் கொண்டு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மகாண விவசாய அமைச்சரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச கால்நடை பண்ணையாளர்களுக்கு பொருள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் ஒன்று தவிர்க்க முடியாமல் நடைபெறுமாயின் பன்னாட்டு அமைப்புக்களின் கண்காணிப்பிலே நடைபெறவேண்டும்.

இறுதிக் கட்டப் போர் இங்கு நடைபெற்றபோது பன்னாட்டு அமைப்புக்கள் அனைத்தையும் நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நந்திக் கடலிலே தமிழ் மக்களைக் கொன்று குவித்தார்.

போர் காரணமாக உறவுகளையும் சொத்துக்களையும் இழந்து விட்டோம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு கிடைக்கும் பட்சத்திலேயே பிள்ளைகள் சமாதானமாக வாழ முடியும்.

எமது அரசியலை நகர்த்தவேண்டும் என்று பல தரப்பினர் கூறி வருகின்ற போதிலும், 60 வருடகால அரசியல் அனுபவத்தைக் கொண்டு தற்போது அரசியல் செய்ய வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

தற்போது உணர்ச்சி வசப்படுவதோ ஆயுதம் ஏந்திப் போராவிடுவதோ உகந்ததல்ல. சாத்வீகமான முறையில் மூளையை நன்கு பாவித்து செயற்பட வேண்டும் - என்றார். (த-5)

# அரசும், பொலிஸும் அடாவடிக்கு ஆதரவு

## நாடாளுமன்றில் வியாழேந்திரன் எம்.பி.கொதிப்பு

கொழும்பு, நவ. 20

அரசும், பொலிஸாரும் பக்கச்சார்பாகவே செயற்பட்டு வருகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கடந்த 11ஆம் திகதி கண்டி வீதியை மறித்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தார்.

இவ்வேளையில், தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பிரதேச செயலாளர் அவ்விடத்துக்குச் சென்றிருந்தார். ஆனால், பிரதேச செயலாளர் மீது தேரர் முறையற்ற வார்த்தைகளைப் பிரயோகித்திருந்தார்.

மரியாதைக்குரிய பல தேரர்கள் இந்த மண்ணில் வாழ்ந்துள்ளார்கள். இருப்பினும் இவ்வாறானவர்களின் செயற்பாட்டால் அனைத்து தேரர்களுக்குமே இழுக்கு ஏற்பட்டது.

இருந்தாலும், இது முதல் தடவை அல்ல. இவ்வாறான செயற்பாடுகள் காலம்காலமாக இடம்பெற்று வருகின்றன. அவ்வாறான செயற்பாடுகளுக்கு முறையான சட்ட நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதேபோன்று, கடந்த 16ஆம் திகதி செங்கலடியிலுள்ள தனியார் காணியொன்றினுள் அத்துமீறி நுழைந்திருந்தார். இருப்பினும் அந்தக் காணியினுள் நுழையவோ, கூட்டங்கள் நடத்தவோ அனுமதியில்லை என ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு மீறி நடந்துகொள்வோருக்கு, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக உரிய தண்டனை வழங்கப்படும் என கூறப்பட்டிருந்தது.

இதற்குப் பின்பே தேரர் அக்காணியினுள் அத்துமீறி நுழைந்திருந்தார். தேரர் அவ்வாறு செயற்படும் நேரத்தில் பொலிஸ் அதிகாரிகள் அருகில் இருந்தும் கூட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதன்மூலம் நாட்டின் அரசும், பொலிஸாரும் பக்கச்சார்பாக செயற்பட்டு வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

மற்றைய எல்லா மாகாணங்களிலும் அபிவிருத்தி அமைச்சுகள் காணப்படுகின்றன. ஆனால் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டு- காணப்படுகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அபிவிருத்தி அமைச்சுகள் இல்லை-என்றார்.(த-ய)












ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் க.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக துணுக்கரய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவீந்திரனும் கலந்து கொண்டனர். (ற-10)





பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 54 ஆவது ஆண்டு விழாவும், கலை விழாவும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் இலங்கை வங்கியின் இணைப்பதிகாரி உதவிப் பொது முகாமையாளர் விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், முதன்மை விருந்தினரான வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமாரின் பாரியார் திருமதி நந்தினி பரிசில் வழங்குவதையும் காணலாம். (ற-10)




மன்னாரில் நடைபெற்ற 32 ஆவது திரி சாரணர் மாநாட்டில், யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் திரி சாரணர் கலந்து கொண்டனர். (ற)







மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பனை அபிவிருத்தி சபை விரிவாக்க முகாமையாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய கா.கோபால கிருஸ்ணன் கலந்து கொண்டார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ற-10)



வட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் மாகாண அபிவிருத்திக்கான தனது நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபாவை துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அம்பலப்பெருமாள் கிராம பிள்ளையார் கோயிலின் அபிவிருத்திக்காக வழங்கினார்.
நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலர் இ.பிரதாபன், ஆலய நிர்வாக சபைத் தலைவர் மதியழகன், உதவித்திடடப் பணிப்பாளர் நந்தசீலன், கிராம உத்தியோகத்தர் நாகபாதம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-10)



கியூமெடிக்கா நிறுவனத்தால் கோப்பாய் மகா வித்தியாலய விசேட கல்வி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ற-422)



நாடு முழுவதும் இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் நடைபெறுகின்றன. முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாள்கள் நடைபெற்றது. அதில் 100 இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர். மல்லாவி கிரிக்கெட் கழகத்தால் பங்கு பற்றியவர்களுக்கு ரீசேட் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ற-7)



வெங்கலச்செட்டிகுளம் பிரிவிற்குட்பட்ட மெனிக்பாம், உதய சூரியன் விளையாட்டுக் கழகத்திற்கு வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமாகிய ப.சத்தியலிங்கத்தால் 2016இற்கான நிதியில் இருந்து மைதான வேலி அமைப்பதற்கான உதவி அண்மையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் கிராம மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற-10)



மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச சபை கிராம பொது நூலகம் ஆனைக்கோட்டையில் அண்மையில் புதிய நூல்களுக்கான கண்காட்சியை நடத்தியது. கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். (ற-10)




சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் இல்லச் சிறார்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (ற-10)



முல்லைத்தீவு மாவட்டத்தில் மறைந்து செல்லும் பாரம்பரியக் கலைகளை வளர்க்கும் முகமாக அந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கலை அமைப்புக்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியிலிருந்து ஒரு தொகுதி வாத்தியக் கருவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ற-10, 102)




புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் அண்மையில் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கான சர்வதேச போராட்ட தி... பொதுக்கூட்... நடைபெற்றது. சி.க... செந்திவேல் தலைமை... யுரை ஆற்றினா... விசேட உரைகளை... பேராசிரியர் சி. சிவ... ரம், எழுத்தாளர் ... தணிகாசலம், ச. த... ஜன் ஆகியே... வழங்கினர். (ற-...



கரணவாய் மணியகாரன் தோட்டம் அ. த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளி... நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் கு. பாஸ்கரன் தலைமை... யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்த ... கள் வங்கியின் யாழ். பிராந்திய உதவி முகாமையாளர் திருமதி சிவசோதி சி... கொழுந்து மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவதையும், கலந்து கொ... மாணவர்களையும் காணலாம். (ற-10, 1...

# வடக்குக் கல்வித் திணைக்களத்தின் சாதனையாளர் கௌரவிப்பு நேற்று

யாழ்ப்பாணம், நவ.20



வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் எற்பாட்டில் வடக்கு மாகாண சபையின் கீழ் நடத்தப்பட்ட போட்டி நிகழ்வில் வெற்றியீட்டித் தெரிவாகிய சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இந்த நிகழ்வின் முதலாம் மற்றும் இரண்டாம் அமர்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் முதலாம் அமர்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விஞ்ஞானம், கணிதம், சமூகவியல், வினாடிவினாப் போட்டிகள், சுற்றாடல் சார்ந்த கட்டுரைப் போட்டிகள், ஓவியப் போட்டி மற்றும் சதுரங்கப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி பெற்றுத் தெரிவாகிய மாணவர்கள் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாக வெற்றிபெற்ற மாணவர்கள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள், விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன்,

சிறுவர்கள் விளையாட்டுடன் கூடிய கல்வி முறைக்கு மாற்றப்பட வேண்டும். இயற்கையுடன் கூடிய அறிவை உட்புகுத்தவேண்டும். கல்வி மாணவர்களுக்குச் சுமையாக அமையக் கூடாது.

பரீட்சையில் தோல்வி கண்ட மாணவ மாணவிகள் தமது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளார்கள். மாணவ மாணவிகள் மீது சூழல் ஏற்படுத்தும் நெருக்குதல்களே தற்கொலைக்குக் காரணம். மாணவர் மனங்களில் போட்டி பொறாமை குடி கொண்டுள்ளது. இன்னல்கள், இடம்பெயர்வுகள் சொத்து இழப்புக்கள் உட்பட பாரிய இழப்புக்கள் மத்தியில் தமிழ் இனம் தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால், எம்மிடையே அடிப்படை உரிமையாக இருக்கும் கல்வியே மூல காரணம்– என்றார். (த-06)

## இறுதிப் போர் பற்றி நூல் வெளியிட்டார் சிவ்சங்கர் மேனன்



இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போர் உள்ளிட்ட ஐந்து முக்கிய விவகாரங் களில் இந்தியாவின் அயலுறவுக் கொள்கை முடிவுகள் தொடர்பான உள்ளகத் தகவல்களை உள்ளடக்கிய நூலை, இந்தியாவின் முன்னாள் அயலுறவுத்துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன் எழுதி வெளியிட்டுள்ளார்.

'வாய்ப்புகள் இந்தியாவின் அயலுறவுக் கொள்கை உருவாக்கத்தின் உள்ளே' என்ற தலைப்பிலான இந்த நூல் நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது. அதிகாரபூர்வமாக எதிர்வரும் 2 ஆம் திகதி புதுடில்லியில் உள்ள இந்திய அனைத்துலக நிலையத்தில் வெளியிடப்படவுள்ளது.

அயலுறவுத்துறைச் செயலராக இருந்த காலப் பகுதியில், தாம் நேரடியாகவோ, இணைந்தோ எடுத்த சில முக்கியமான இந்திய அயலுறவுத்துறைக் கொள்கை முடிவுகள் குறித்தும் இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2009 இல் தோற்கடிக்கப்பட்ட இலங்கையின் உள்நாட்டுப் போர், இந்திய–அமெரிக்க அணுசக்தி உடன்பாடு, இந்திய – சீனா இடையிலான முதலாவது எல்லை தொடர்பான உடன்பாடு, மும்பையில் நடந்த 26/11 தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு எதிராக பலத்தைப் பயன்படுத்துவதில்லை என்று இந்தியா எடுத்த முடிவு, அணுவாயுதங்களை முதலில் பயன்படுத்துவதில்லை என்ற இந்தியாவின் முடிவு ஆகிய ஐந்து பிரதான விடயங்கள் குறித்து இந்த நூலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (த-5)

## தேசிய...

களை மேற்கொள்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையையும் எடுப்போம் என்றும், ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் மாதாந்தம் விவாதிக்க வேண்டும் என்றும், இதன்மூலம் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்க முயற்சிப்போரை இனங்காண முடியும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்கள் உள்ளிட்ட 22 அரச நிறுவனங்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அவர் தெரிவித்ததாவது:

19 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களில் சிலவற்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறைத்துள்ளார். அதிகாரம் குறைக்கப்பட்டாலும், பணிகள் குறைக்கப்படவில்லை. தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஜனாதிபதிப் பதவிக்கு புதிய பொறுப்பாகியுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஜனாதிபதிகளுக்கு அவசியநிலை இருந்தபோதும் செய்ய முடியவில்லை. 2009ஆம் ஆண்டு முதல் இந்தப் பதவியைத் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், தற்போது நாட்டில் தேசிய ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. முதல் முறையாக வடக்குக்கு 11 தடவை ஜனாதிபதி பயணம் செய்துள்ளார். எமது சில பகுதிகளுக்குக் கூட அவர் 11 தடவை சென்றதில்லை.

இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்படுத்துவது ஜனாதிபதிதான். டி.எஸ்.சேனாநாயக்கவுக்குப் பின்னர் இந்தப் புதிய பொறுப்பு ஜனாதிபதிப் பதவிக்கு உள்ளது. சிங்களவர் என்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். ஆனால், இலங்கையர் என்று கூறுவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். அதுபோல தமிழர்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டில் உள்ளனர். அவர்களுடனும் இணைந்து பணியாற்ற முடியும்.

எதிர்க்கட்சியும் அதைக் காட்டுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் (இரா.சம்பந்தன்), ஜே.வி.பியின் தலைவர் (அநுரகுமார திஸாநாயக்க) ஆகியோர் இங்கு முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டனர். பொது வாக்கெடுப்பினூடாக புதிய அரசமைப்பு அனுமதிக்கப்படவேண்டும் என்பதை அவர்கள் குறிப்பிட்டனர். அதாவது சிங்கள மக்களின் அனுமதி பெறவேண்டும். நாம் அழுத்தம் கொடுக்கமாட்டோம் என்பதை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அன்று கிரிக்கெட் போட்டியைப் பார்க்க ஒன்று சேர்ந்த மக்கள் இன்று இதற்கு ஒன்றுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில், இதைச் (தேசிய ஒற்றுமையை) சீர்குலைக்க அடிப்படைவாதிகள் இருக்கின்றனர். சிங்கள, முஸ்லிம், தமிழ் அடிப்படைவாதிகள் இருக்கின்றனர். இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். தினேஷ் குணவர்த்தன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோரும் இதனைக் கண்டிப்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இந்த விளையாட்டைக் கொண்டுசெல்ல முடியாது. இதேவேளை, ஊடகங்களும் இந்த விடயத்தில் அவதானமாகச் செயற்படவேண்டும். தமது விற்பனையை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்கள் செயற்படக்கூடாது. ஊடகங்கள் இவ்வாறு (அடிப்படைவாதத்தை ஊக்குவித்து) செயற்படுமாயின் அவை குறித்து நாம் தனியாகக் கவனம்செலுத்தவேண்டி ஏற்படும். தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்கமாட்டோம். அதைத் தடுப்பதற்காக வேண்டியதைச் செய்ய வேண்டும் என நான் கூறுகின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு இடமளிக்கக்கூடாது. தடுக்கத் தேவையான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

ஜனாதிபதியுடன் அண்மையில் இரவில் இடம்பெற்ற சந்திப்பில், சட்டத்தினூடாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். 30, 35 ஆண்டுகளின் பின்னர் உருவாக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்க எவருக்கும் நாம் இடமளிக்கமாட்டோம். இந்தப்பொறுப்பைநாமும் நிறைவேற்றுவோம் என இந்தச் சபைக்கும் நான் கூறுகின்றேன். எனவே, இந்த விடயம் (தேசிய ஒற்றுமை) குறித்து நாம் நாடாளுமன்றத்தில் மாதாந்தம் அச்சமின்றி விவாதிப்போம். யார் இதைச் சீர்குலைக்கின்றார்கள் என்பதை எம்மால் கண்டுபிடிக்க முடியும் – என்றார். (த-4)

## மாவீரர்...

பிரதேசத்திலும், மாவீரர் வாரம் உணர்வெழுச்சியுடன் இம்முறை நினைவேந்தல் செய்யப்படவுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் 1989ஆம் ஆண்டிலிருந்து மாவீரர் வாரம் நினைவு கூரப்பட்டு வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, போர்க்களமாடி வீரச் சாவடைந்த மாவீரர்களை நினைவு கூருவதற்காக நவம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் தாயகத்தில் இருந்தபோது, மாவீரர் வாரம் பேரெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டு வந்தது. 2009ஆம் ஆண்டின் பின்னர் தமிழர் தாயகத்தில் இரகசியமாக ஆங்காங்கே மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் தமிழர்கள் வாழும் புலம்பெயர் தேசங்களில் உணர்வெழுச்சியுடன் நினைவு கூரப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு தமிழர் தாயகத்திலும் பகிரங்கமாக மாவீரர் வாரம் நினைவு கூரப்படும் என்று பல அமைப்புக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் அழைப்பு அறை கூவல் விடுக்கப்பட்டிருந்தது. ஜனநாயகப் போராளிகள் கட்சி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (த-5)

## நிறைவேற்று...

நாட்டின் ஒற்றுமைத்தன்மை பாதிக்கப்பட்டு, வேறு வேறு நாடுகள் உருவாகுமா? இது பெரியதொரு பிரச்சினையாகும்.

இவ்வாறு மகிந்த ஆதரவு பொது எதிரணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உபகுழுக்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

பொது எதிரணி என்ற அடிப்படையில் 14 அடிப்படை விடயங்கள் தொடர்பில் நாம் முன்மொழிவுகளைச்சமர்ப்பித்துள்ளோம். வழிநடத்தல் குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள இந்த அடிப்படைகளுக்கு வெளியே எந்தவொரு விடயத்துக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் போது, தற்பொழுது அவருக்குக் (ஜனாதிபதிக்கு) காணப்படும் அதிகாரங்களுக்கு என்ன நடைபெறும்? நாட்டின் ஒற்றுமைத் தன்மை பாதிக்கப்பட்டு, வேறு வேறு நாடுகள் உருவாகுமா? இது பெரியதொரு பிரச்சினையாகும். நிறைவேற்று அதிகார முறை தொடர்பில் ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை.

இது மாத்திரமன்றி நாடு முழுவதற்கும் சட்டங்களைத் தயாரிப்பதற்கு நாடாளுமன்றத்துக்குக் காணப்படும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருந்தாலும், மக்களின் ஆட்புல ஒருமைப்பாட்டை அபகரிக்க முடியாது.

நாட்டின் ஐக்கியம் மாத்திரமன்றி நாடாளுமன்றத்துக்குக் காணப்படும் உரிமைகள் என்பன அரசமைப்பில் இல்லாமல் செய்யப்படக் கூடாது. மாகாண சபைகளை ஒன்றிணைக்கும் பிழையான செயற்பாடுகளால் நாட்டை மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் முயற்சிகள் தொடர்பில் நாம் எமது கருத்துக்களைத் தெளிவாகக் கூறியுள்ளோம். இவ்வாறான கருத்துக்களுக்கு அமைய அரசியல் நிர்ணய சபை எந்தவித அவசரமும் இன்றிச் செயற்படுவது அவசியமானது. அவசர அவசரமான 'புல்டோசர்' முறையை நிறுத்தி, மக்கள் மத்தியில் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கான வழிகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். மக்கள் மத்தியில் தெளிவு இல்லை. மக்கள் என்ன நடக்கிறது எனக் கேட்கின்றனர் – என்றார். (த-5)

## புதிய அரசமைப்பு

வாக்கெடுப்பின் ஊடாகவே நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார ஆகியோர் கூட்டாக ஒரே குரலில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல் நிர்ணய சபை நியமித்த வழிநடத்தல் குழுவினால் நியமிக்கப்பட்ட ஆறு உப குழுக்களின் அறிக்கைகளைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் சமர்ப்பித்தார். இதன் பின்னர் கட்சித் தலைவர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்கா, "ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். இதற்கு மாற்றாகச் செயற்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். அரசமைப்புக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கப்படுவதுடன், பொது வாக்கெடுப்பில் மக்களின் விருப்பமும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்" – என்றார்.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், "வழிநடத்தல் குழுவில் ஆராயப்படும் விடயங்கள் அரசியல் நிர்ணய சபையில் கலந்துரையாடப்பட்டு, அது அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு அனுமதி வழங்கப்பட்டதும் மீண்டும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும், பொது வாக்கெடுப்பின் ஊடாக மக்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானது. புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டாலும் அதனை மக்களே இறுதியில் தீர்மானிக்க முடியும். அதற்கான இறைமை நாட்டு மக்களுக்கே உள்ளது" – என்றார்.

இறுதியில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த அரசமைப்புக்குத் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனுமதிக்க வேண்டும் – என்றார். (த-5)

## இந்திய...

கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையே கைது செய்யப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். (த-4-101)

## ஒருங்கியை

மத்திக் கும் மாகாணத்திற்கும் இடையில் தற்போது காணப்படும் ஒருங் கியை நிரல் அதிகாரங்கள் முற்றாக நீக்கப்படல் வேண்டும் போன்ற பரிந்துரைகளுடன் புதிய அரசமைப்புக்கான உப குழுக்களின் அறிக்கைகள் நேற்று நாடாளுமன்றத்தில் பிரதமரால் முன்வைக் கப்பட்டன.

அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது. புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவுக்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்ட 6 உப குழுக்களின் அறிக் கைகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் முன் வைத்தார்.

அடிப்படை உரிமைகள் தொடர்பான உப குழு, நீதித்துறை தொடர்பான உபகுழு, நிதி தொடர்பான உப குழு, பொதுமக்கள் பாதுகாப்பு-பொலிஸ்-சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உபகுழு, அரச சேவையில் மறுசீரமைப்பு ஏற்படுத்துவதற்கான உபகுழு, மத்திய-சுற்றயல் உறவுகள் குறித்த உபகுழு ஆகிய 6 உபகுழுக்களின் அறிக்கைகளே நேற்று முன்வைக்கப்பட்டன.

அந்த உபகுழுக்களின் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கியமான பரிந்துரைகளில் சில வருமாறு:

**பொலிஸ் அதிகாரம்**

சட்டம், ஒழுங்கு அதிகாரம் மாகாணத்திடம் இருக்கவேண்டும், மாகாண பொலிஸ் நிர்வாகத்தை நடத்திச் செல்ல சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்படவேண்டும், மாகாணக் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு சுயாதீனமான மாகாண வழக்குத் தொடுநர் தலைமையதிபதி (சட்ட மா அதிபர்) நியமிக்கப்படவேண்டும்.

**காணி அதிகாரம்**

மாகாண காணி உரித்து மாகாண சபையிடமே இருக்கவேண்டும், எனினும் தான் விரும்பும் காணித் துண்டை தருமாறு கோரும் உரிமை மத்தியிடம் இருக்கும், அப்படிக் கேட்கப்படும் கர்ணித் துண்டை மாகாணம் விடுவிக்கவேண்டும், காணி ஆணையாளரால் வழங்கப்பட்ட கொள்கை வழிகாட்டல்களின்படியே மாகாணக் காணிகள் நிர்வகிக்கப்படவேண்டும், அரச காணி ஆணைக்குழுவில் மத்திய அரசுக்கும் சம அளவான உறுப்பினர்கள் இருக்கவேண்டும், ஏதாவது தேசியத் திட்டத்திற்கு (உதாரணமாக மகாவலி, நகர அபிவிருத்தி போன்றன) காணியைச் சுவீகரிப்பதாயின் மாகாண சபையின் உடன்பாட்டுடன் மட்டுமே செய்யமுடியும்.

**அரசமைப்பு நீதிமன்றம்**

மாகாண சபைகளால் நிறைவேற்றப்படும் நியதிச் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும் மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் அரசமைப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

**ஒருங்கியை நிரல் நீக்கம்**

மாகாணம் மற்றும் மத்திக்கு இடையில் தற்போது காணப்படும் ஒருங்கியை நிரல் அதிகாரங்கள் (concurrent list) நீக்கப்படவேண்டும், அதிலுள்ள அதிகாரங்கள் மத்திய அல்லது மாகாண நிரல்களில் சேர்க்கப்படவேண்டும், இந்த இரு நிரல்களிலும் குறித்துரைக்கப்படாத அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குச் சேரவேண்டும்.

**சுயாதீன மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**

தேசிய பொதுச் சேவை ஆணைக்குழு போன்று சுயாதீன மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படவேண்டும், முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் அதற்கான உறுப்பினர்களைக் கூட்டாகப் பரிந்துரைக்க வேண்டும், அரசமைப்புச் சபை அதனை அங்கீகரித்த பின்னர் ஆளுநர் அந்த நியமனங்களைச் செய்வார், மாகாண பொதுச்சேவை அலுவலர்கள் தொடர்பான எல்லா விடயங்களையும் - ஆட்சேர்ப்பு, ஊழியர் நடத்தைக் கோவை உருவாக்கம், இடமாற்றக் கொள்கை உருவாக்கம் - தீர்மா னிக்கும் அதிகாரம் மாகாண அமைச்சரவையிடமே இருக்கும், மாகாண பணி நிலைப் பிரிவுத் தேவையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைப் பொதுச் சேவைகள் ஆணைக்குழு கொண்டிருக்கும்.

**மாவட்ட நிர்வாகம்**

மாவட்ட நிர்வாகமானது மாகாண நிர்வாகத்தின் அங்கமாகும் வகையில் மீளக் கட்டமைக்கப்படவேண்டும், மாவட்டச் செயலர்களும் பிரதேச செயலர்களும் மத்தியின் அதிகாரிகளாக இருக்கின்ற அதேவேளை முறையே மாகாணத்தின் மேலதிக பிரதம செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளராக மீள நியமிக்கப்படவேண்டும், மாகாணத்தில் உள்ள கிராம அலுவலர்கள் அனைவரும் மாகாண அரச சேவைக்கு உள்வாங்கப்படவேண்டும், ஒவ்வொரு மாகாணமும் மாகாணச் சட்டத்தரணிகள் திணைக்களத்தையும் மாகாண சட்ட வரைஞர் ஒருவரையும் கொண்டிருக்கவேண்டும், பிரதேச செயலகங்கள் பிரதேச சபைகளின் எல்லைகளுடன் அடுத்தடுத்ததாக இருக்கவேண்டும்.

**ஆளுநர் அதிகாரம்**

ஆளுநர் தற்றுணிவின் பேரில் செயற்படும் வகையில் அதிகாரமளிக்கும் ஏற்பாடுகள் சீர்திருத்தப்படவேண்டும், முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்பேரில் செயற்படும் பெயரளவிலான தலைவராகவே ஆளுநர் இருக்க வேண்டும், நியதிச் சட்டங்களை நிறைவேற்ற ஆளுநர் ஒப்புதல் வழங்கும் முறை இல்லாதொழிக்கப்படவேண்டும், நிதி சம்பந்தமான நியதிச் சட்டங்களுக்குத் தேவைப்படும் ஆளுநரின் பரிந்துரை நீக்கப்படல்வேண்டும், முதலமைச்சரின் இணைப்பாட்டுடனேயே ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படவேண்டும், ஆளுநர் அவரது நியமனத்திற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட கால அளவுக்கு அரசியலில் முனைப்பான வகிபாகம் ஒன்றை வகித்திருக்கக் கூடாது, பதவிக் காலத்திலும் அரசியலில் முனைப்பான வகிபாகம் ஒன்றைக் கொண்டிருக்கக்கூடாது.

**உள்ளாட்சி சபைகள்**

உள்ளூர் அதிகார சபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும், முன்பள்ளி மற்றும் மின்சார நீர் விநியோகங்கள் உள்ளாட்சி சபைகளிடம் ஒப்படைக்கப்படல்வேண்டும், செலவைச் சமாளிப்பதற்கான போதிய நிதி வளங்கள் உள்ளடங்கலாக போதிய சுயாதீனத்தைக் கொண்டிருக்க வேண்டும், உள்ளாட்சி சபை நிறுவனங்களை இற்றைப்படுத்தல் மாகாண சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவேண்டும், உள்ளாட்சி சபைகளின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படவேண்டும், அபிவிருத்தியில் உள்ளாட்சி சபைகளுக்கு ஆலோசனை வழங்க கிராம இராச்சியத்தை உருவாக்குதல்.

**நிதி**

அரச தலைவர் நிதி அமைச்சர் பதவியை வகிக்கக்கூடாது, அது அமைச்சரவை அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும், நாடாளுமன்ற அதிகாரத்தின் கீழ் அல்லாத வரி ஏதும் அறவிடப்படக் கூடாது, போதியளவு வருமான மூலங்கள் மாகாண மற்றும் உள்ளூர் அரச துறைகளைப் போய்ச் சேரக்கூடியதாக இருக்க வேண்டும், மாகாண சபை நிதியம் உருவாக்கப்படும், ஒவ்வொரு உள்ளாட்சி சபைகளுக்கும் உள்ளாட்சி நிதியம் உருவாக்கப்படும், மாகாண சபைகள் திரட்டிய நிதியத்தை உருவாக்க முடியும், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் நிதி ஆணைக்குழு ஒன்று இருக்க வேண்டும்.

## உப குழு

தயாரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

வழிநடத்தல் குழுவினால் உருவாக்கப்பட்ட ஆறு உப குழுக்களினதும் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உப குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் அரசியல் நிர்ணயச் சபையில் விவாதித்து அதன் அடிப்படையிலேயே வழிநடத்தல் குழு இவை பற்றிய தீர்மானத்துக்கு வரும். அரசமைப்புத் தொடர்பான வழிநடத்தல் குழு இதுவரை 40 சந்திப்புக் களை நடத்தி, பல்வேறு விடயங்கள் பற்றி ஆராய்ந்துள்ளது.

தற்பொழுது அரசமைப்பில் உள்ள அரசின் தன்மை, மதத்துக்கான முன் னுரிமை தொடர்பில் ஆராய்கின்றது. மதத் துக்கான முன்னுரிமையில் தற்போதைய அரசமைப்பில் உள்ளதை நீக்குவது எமது நோக்கம் அல்ல. ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அவற்றை பலப்படுத்துவதே வழிநடத்தல் குழுவின் எதிர்பார்ப்பாகும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து அதற்கு மாற்றீடாக மூன்று முறைகளை தெரிவு செய்துள்ளோம். இவை குறித்து அரசியல் நிர்ணய சபையில் விவாதித்து பொருத்தமான முறை எது என்பதை முடிவு செய்ய முடியும். தேர்தல் முறை மறுசீரமைப்பில் கலப்பு முறையொன்றுக்கான விருப்பம் உள்ளது. உலக நாடுகளில் பின்பற்றப்படும் கலப்பு முறைகளை ஆராய்ந்து மாற்றீடுகள் சிலவற்றை முன்மொழிந்துள்ளோம். நிறைவேற்று அதிகார முறையின் கீழ் ஜனாதிபதி நியமிக்கப்படுவதால் பெரிய குறைபாடு காணப்படுகின்றது. அதிகாரங்களை பகிர்வது குறித்து கலந்துரையாடியுள்ளோம். சில அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார்.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், அரசமைப்பை தயாரிக்கும் செயற்பாட்டில் நாம் பங்களிப்புச் செலுத்தியுள்ளோம். அரசமைப்பு தயாரிப்பில் பல்வேறு மாற்றீடுகள் குறித்து ஆராயும் நோக்கத்திலேயே நாம் இந்த விடயங்களில் ஈடுபாட்டை செலுத்தியுள்ளோம் – என்றார்.(த-5)

## இறுதித்

பத்தில் உரையாற்றாமலேயே சபையிலிருந்து வெளியேறினார்.

நேற்றுக் காலை சபையிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் களின் உரைகளைக் கேட்டு, பதிலளிப்பதற்காகக் குறிப்புகளை எடுத்துக்கொண்டிருந்த அவர் இறுதிநேரத்தில் உரையாற்றுவதைத் தவிர்த்து விட்டார்.

2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், சுயாதீன ஆணைக்குழுக்கள் உட்பட 22 அரச நிறுவனங்களுகான ஒதுக்கீடுகள் பற்றிய குழுநிலை விவாதம் நடைபெற்றது.

விவாதத்தில் கலந்து கொள்வதற்காக காலை 10.40 மணியள வில் சபைக்கு வந்தார் ஜனாதிபதி .

நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க உரையாற் றிக்கொண்டிருந்தார். இவரின் உரை முடிவடைந்ததையடுத்து, ஜனாதிபதியை உரையாற்று வதற்காகச் சபாநாயகர் கரு ஜயசூரிய அழைப்பு விடுத்தார். இதன்பின்னர் ஜனாதிபதி பின்னர் உரையாற்றுவார் என சபை முதல்வாரன அமைச்சர் லக்ஸ் மன் கிரியெல்ல சபாநாயகருக்கு அறிவித்தார்.

இதையடுத்து, விவாதத்தில் பிரதமர் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினர். ஆளும் எதிரணியினர் அனைவரும் உரையாற்றி முடித்த பின்னரே ஜனாதிபதி உரையாற்றவிருந்தார். இறுதித் தருணத்தில் உரையாற்றாமலேயே அவர் சபையிலி ருந்து வெளியேறினார்.

இராணுவ சூழ்ச்சியை எதிர்கொள்ள நேரிடும் என்று மகிந்த அணியின் தினேஸ் குணவர்தன ஜனாதிபதி முன்னிலையில் விடுத்த எச்சரிக்கையுடனான அறிவிப்பின் பின்னர் சபையில் சர்ச்சை நிலை ஏற்பட்டது. இந்த நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றுவதைத் தவிர்த்துவிட்டார். (த-4)

## தமிழர்களும்

இவ்வாறு பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இனவாத, மதவாதப் பேச்சுக்களுக்கு எதிராக தூண்டல்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயும் என்று நாடாளுமன்றில் அரசு அறிவித்து 24 மணி நேரத்தினுள்ளேயே ஞானசார தேரர் மேற்கண்டவாறு முழங்கியுள்ளார்.

சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்புக்கள் அனைத்தையும் இணைத்துக் கொண்டு கண்டியில் கண்டனப் பேரணியொன்றை நேற்று நடத்தினார் ஞானசார தேரர். மட்டக்களப்பு மங்களராம விகாரையின் தலை மை பிக்கு அம்பிட்டியே சுமணரத்ன தேரர் உட்பட பௌத்த பிக்குகள் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு உரையாற்றிய ஞானசார தேரர், தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எந்தவொரு பிரதேசத்திலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவும், சுதந்திரமாக வாழவும் முடியும். பள்ளிவாசல்களை அமைத்து, ஒலிபெருக்கிகள் மூலம் சத்தமிட்டுக்கொண்டுதமது மத அனுட்டானங்களை மேற்கொள்ள முடியும் என்றால் ஏன், இந்த நாட்டை கட்டியெழுப்பி, எழுத்துமூலம் வரலாற்று உரிமைக்கு உரிமை கொண்டாடும் சிங்கள பௌத்த இனத்திற்கு அந்த உரிமை மறுக்கப்படுகின்றது. அதேபோல் கள்ளத்தோணிகளைப் போல் தொடர்ந்தும் எம்மால் வாழ முடியாது என்ற செய்தியையும் எமது தலதா பெருமானிடம் முறையிடவே இங்கு கூடியிருக்கின்றோம்.

இந்த நாட்டின் வெட்கக் கேடான, முதுகெலும்பில்லாத ஆட்சியாளர்கள், தமது இனம், மதம் தொடர்பான அனைத்து கடப்பாடுகளையும் மறந்து செயற்பட்டு வருகின்றனர்.

மகாநாயக்க தேரர்கள் வெள்ளைக்காரன் வழங்கிய சொத்துக்களை அனுபவித்துக் கொண்டு அவன் கூறிய கடமைகளை மாத்திரம் செய்து கொண்டிருக்காது சிங்கள பௌத்த இனம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் குறித்தும் கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்தக் கடப்பாட்டை அவர்கள் செய்யத் தவறினால் சிங்கள பௌத்த இனத்தை பாதுகாப்பதற்காக பல்வேறு மட்டங்களில் போராடிவரும் எமது இளைய தலைமுறையினர் உட்பட பௌத்த ஆதரவாளர்கள், எவ்வாறான போராட்டத்தை தெரிவு செய்தாலும் அவற்றுக்கு நாம் பொறுப்பு கூற மாட்டோம். கடும் விசனமடைந்துள்ள எமது பிள்ளைகள், கற்களையும், பொல்லுகளையும் எடுத்துக் கொண்டு தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்பட்டால் இந்த நாட்டிற்கு என்ன நடக்கும் என்பதை எண்ணியும் பார்க்க முடியாது என்றார். (த-5)

## ஜனாதிபதி

கொண்டனர்.

புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் மற்றும் வடக்கு - கிழக்கில் அரசின் செயற்பாடுகள் தொடர்பாக இந்தச் சந்திப்புக்களில் முக்கியமாக ஆராயப்பட்டது என்று உதயன் பத்திரிகை அறிந்தது.

அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ள நாடாளுமன்றம் நேற்றுக்கூடியபோது, புதிய அரசமைப்புத் தொடர்பான உபகுழுக்களின் அறிக்கைகளை பிரதமர் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அது முடிந்ததும் மதிய உணவின் பின்னராக ஜனாதிபதியை அவரது நாடாளுமன்ற அலுவலகத்திலும் பிரதமரை அவரது அலுவலகத்திலும் தனித் தனியாக கூட்டமைப்புக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

புதிய அரசமைப்பு ஏற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் விடயங்கள் குறித்து கூட்டமைப்பின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் அழுத்திக் கூறினர் என்று தெரியவந்தது. வரவு-செலவுத் திட்டத்திற்கு கூட்டமைப்பு ஆதரவளித்தமையின் பின்னணி குறித்தும் அவர்கள் ஜனாதிபதியிடம் விரிவாக விளக்கிக்கூறினர்.

அத்தோடு, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான கூட்டமைப்பினரைப் புறக்கணிக்கும் விதத்தில், குறிப்பாக வேலை வாய்ப்பு மற்றும் அபிவிருத்தி விடயங்களில் கூட்டமைப்பின் கோரிக்கைகள், பரிந்துரைகள் கவனத்தில் எடுக்கப்படாமை குறித்தும் சந்திப்பில் அவர்கள் சுட்டிக்காட்டினர். எனினும் இந்த விடயம் தொடர்பில் அடுத்த வாரம் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் திரட்டி ஜனாதிபதியையும் பிரதமரையும் தனித் தனியாகச் சந்தித்து இது தொடர்பில் விரிவாக – விலாவாரியாக – விளக்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வு மற்றும் இந்து விவகார அமைச்சர் எம்.சுவாமிநாதனால் வடக்கு மாகாணத் திற்கென முன்மொழியப்பட்ட 65,000 வீட்டுத் திட்டம் தொடர்பான தமது அதிருப்தியையும் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கூட்டமைப்பின் தலைவர்கள் எடுத்துரைத் தனர். இது தொடர்பில் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேரும் கையெழுத்திட்டு வழங்கிய முறையீட்டு மனுவையும் அவர்கள் ஜனாதிபதியிடம் கையளித்தனர். (உ)

## ஒற்றை

நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:தேசிய இனப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர் வைக் காண்பதாக முன்னாள் ஜனாதிபதிபதி மகிந்த ராஜபக்ச போருக்கு முன்னதாக கூறினார். போரின் பின்னர் அவர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை தெரி வுக்குழுவே தீர்மானிக்க வேண்டும் என்றார். தற்போது அதனையே நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

அதிகாரப் பரவலாக்கத்திற்கு நாம் பூரணமாக இணங்கியுள் ளோம். தேசிய அரசு தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்காகவே நிறுவப்பட்டுள்ளது. நாம் ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பரவலாக்குவதற்கு முயற்சிப்போம் – என்றார். (த-5)

# விங்ஸ் அக்கடமி

புலவர் வீதி, நவாலி
சுரேஸ் ஸ்ரோர்ஸ் முன்பாக

தரம் 6-O/L வரை

2017ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள்

05-12-2016 ஆரம்பம் திங்கட்கிழமை

இன்று முதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



# STUDY IN CANADA

* Bio Medical Science
* Practical Nursing
* Hotel management
* Management courses
* Fashion Designing
* Cosmetic techiques and Management
* Computer science

→ அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் மூலமான ஆங்கில வகுப்புக்கள்.
→ குறுகிய காலத்தில் அனைத்து ஏற்பாடுகளும் முடித்துக் கொடுக்கப்படும்.
→ மிகக் குறைந்த கட்டணங்கள்.
→ கடந்த மூன்று வருடங்களாக எவருக்கும் எவ்விதமான ஏமாற்றங்களும் கொடுக்காமல் வெற்றிகரமாக இயங்கும் ஒரு நிறுவனம்.

சிறந்த ஆலோசனைகளைப் பெற நேரில் வாருங்கள்.
(தொலைபேசி மூலம் எவ்விதமான விளக்கங்களும் பெற முடியாது)

WINSTAR VISA CONSULTANTS
106, Post box junction, Palaly Road, Thirunelveli, Jaffna.
fb: winstar visa consultants
web: www.winstarjaffna.com
mail: winstarvc@gmail.com
070 2363676
(C 26561) (16,17,19)


## வீட்டுக்கிருத்திய நிகழ்வு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 23 |
| 06 | 10 |
| 1944 | 2016 |

**அமரர் திருமதி புனிதவதி பஞ்சலிங்கம் (மணி)**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரராஜசேகரன் பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்

(கார்க்கார கிளி)



கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் (கார்க்கார கிளி) 14.11.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.11.2016 திங்கட்கிழமை கல்முனையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரபுரம், பரந்தன்.
077 961 3004,
077 079 0659.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.
(K/223) (10.19)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் **திருமதி. பாமதி விஜயகாந்தன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவக்கொழுந்து சதாசிவம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர்**
**நலன்புரி கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.**
(J/6250) (10.17.19)


## வேலைவாய்ப்பு

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனத்துக்கு வெல்டிங் வேலை (கிரில்ஸ், கேட் உட்பட) தெரிந்த வேல்டர் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

077 349 4673

## வேலைவாய்ப்பு

கொழும்பில் பிவிசி (PVC) குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு ஆண் வேலையாள்கள் (Helpers) தேவை. தகுந்த சம்பளத்துடன் சாப்பாடு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். வயதெல்லை 30இற்குள்.

077 349 4673

## நாய்க்குட்டிகள் விற்பனை

Dalmation, German Shophord Doberman நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.

077 414 7463

## ஆள்கள் தேவை

தாதியர் வேலைக்கு ஆள்கள் தேவை. பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி பெற விரும்புபவர்களும் நேரில் வரவும்

Sugantha Anaipanthy Nursing Home
395, Nayalar Road, Jaffna.




## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு

### கூறுவிலைகோரல்

கோயிலின் திருப்பணித்தேவை கருதி பின்வரும் பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு எனும் தபால் முகவரிக்கு 30.11.2016 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

பொருள்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1) நிலை (வேம்பு) 4" X 3" | உயரம் 6" - 9" அகலம் 4" - 0" | 03 Nos இதற்கானகதவு 03 (வேம்பு) | |
| 2) நிலை (வேம்பு) 4" X 3" | உயரம் 6" -9" அகலம் 3" -6" | 06 Nos இதற்கானகதவு 06 (வேம்பு) | |
| 3) நிலை (வேம்பு) 4" X 3" | உயரம் 6" - 9" அகலம் 3" - 0 | 03 Nos இதற்கானகதவு 03(வேம்பு) | |
| 4) நிலை (வேம்பு) 4" X 3" | உயரம் 6" -9" அகலம் 3" -6" | 03 Nos இதற்கானகதவு 03(வேம்பு) | |
| 5) நிலை சப்புமகோனி 4" X 3" | உயரம் 6" -0 அகலம் 2" - 6" | 03 Nos இதற்கானகதவு 03(சப்பு) | |
| 6) யன்னல் | 4" - 0 அகலம் 4" - 9" உயரம் | 5/8" கம்பியன்னல் | 09 இற்கான அடைப்பு கதவுகள் |
| 7) யன்னல் | 4" - 0 அகலம் 4" - 0 உயரம் | 5/8" கம்பியன்னல் | 09 இற்கான அடைப்பு கதவுகள் |
| 8) 4" X 2" கம்பஸ்தீராந்தி அல்லது பனைமரம் 16" நீளம் | | 160 Nos | |
| 9) 2" X 1" கம்பஸ்சிலாகை அல்லது பனை சிலாகை | | 3600 lenth | |
| 10) 4" X 3" கம்பஸ் அல்லது வேம்பு தீராந்தி | | 324 lenth | |
| 11) Beading றீப்பை | 1" X 1/2" | 800 lenth | |
| 12) ஓடு (Star) | | 1500 | |

திரு. பொ. அன்பரசன்
செயலாளர், அறங்காவலர்சபை
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு.


## இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி

### British College of Beauty Studies

ஒளி அழகன் ஸ்ரூடியோ

இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான துறைசார்ந்த பாடநெறிகளைக் கொண்ட கல்லூரி





* அழகுக்கலை
* தையல் கலை
* கேக் ஐசிங்
* ஆங்கிலம்
* கணனி
* சமையல் கலை
* Ladies Skills development



* 3,6 மாத கால முழுநேர மற்றும் பகுதிநேர வகுப்புக்கள்.
* குறுகியகால பயிற்சி வகுப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.
* தங்கள் பெயருடன் பெயர்கள் சேர்க்கும் அளவுக்கு பயிற்சி வழங்கப்படும்.
* பயிற்சி வகுப்புக்கள் அனைத்தும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சி அளிக்கப்படும்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 25.11.2016

மேக்கப், தையல், கேக் ஐசிங், கணனி வகுப்புக்கள் அனைத்துப்பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பம்.
வயதெல்லை கிடையாது.

பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனை அருகில்)
Tel: 076 7011645
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(C 26560) (16,17,19)


# ஊடகங்கள் மீது தனிக் கவனம்

## சபையில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20

ஊடகங்கள் அடிப்படைவாதத்தை ஊக்குவித்துச் செயற்படுமாயின் அவை குறித்து நாம் தனியாகக் கவனம் செலுத்த வேண்டி ஏற்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில், ஊடகங்கள் செயற்படக் கூடாது. இதனை விளையாட்டாகக் கொண்டுசெல்ல முடியாது. இந்த விடயத்தில் ஊடகங்களும் அவதானமாகச் செயற்பட வேண்டும். தமது விற்பனையை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்கள் செயற்படக் கூடாது. ஊடகங்கள் இவ்வாறு அடிப்படை வாதத்தை ஊக்குவித்துச் செயற்படுமாயின் அவை குறித்து நாம் தனியாகக் கவனம் செலுத்த வேண்டி ஏற்படும். தேசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக வேண்டியதைச் செய்ய வேண்டும்- என்றார். (த-4)


## SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் இலக்கணப்பிழையின்றிச் சரளமாகக் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் (Dip in Science and English London)
வகுப்புகள் யாழ்ப்பாணத்திலும் சங்கானையிலும்.
தொடர்பு: 077 675 1649

# Vacancies

மன்னார் மாவட்டத்தில் ஓர் முன்னணி அச்சகமாக விளங்கும் அச்சகம் ஒன்றிற்கு வேலை வாய்ப்புக்கள் உள்ளது

### 01. Computer Grafic Designer & Management Assistant

தகைமைகள்

- G.C.E A/L பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கணனி கற்கை நெறியில் MS Office, Photo shop, Page Maker, Corel Draw என்பவற்றில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
- தமிழ் கணனித் தட்டெழுத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- Computer Hardware தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதி பத்திரம் இருத்தல் விரும்பத்தக்கது.
- திருமணமாகாதவர் விரும்பத்தக்கது.

சம்பளம் - அடிப்படைச் சம்பளம் ரூ 20,000.00
மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.
03 மாத பயிற்சியின் பின் சம்பள ஏற்றம் செய்யப்படும்.
உணவு தங்குமிட வசதி இலவசம்

### 02. Offset Mechine Minder

- Hamada, KORD அச்சு இயந்திரங்களில் நன்கு அனுபவமுடையவர் தேவை.
- குறைந்தது 01 வருட அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்

சம்பளம் - அடிப்படைச் சம்பளம் ரூ 25,000.00
மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.
திறமை, பொறுப்புணர்ச்சி என்பவற்றை பொறுத்து சம்பள ஏற்றம் செய்யப்படும்.

தொடர்பு: 0779291102

## தமிழ்க்

தமிழ் மக்களின் வாழ்வுப் போக்கைக் குலைக்காத- கலாசாரத்துடன் இணைந்த கல் வீடுகளைக் கட்டுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளது கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து, கூட்டமைப்பின் ஊடகப் பிரிவினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

30 ஆண்டுகளாகப் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வீடுகளுக்கு உள்ள தேவைகள் நீங்கள் அறிந்ததே. போரின் பின்னர் உடனடியாக 50 ஆயிரம் வீடுகளை இந்தியா பரிசளித்தது. அவற்றில் 90 வீதமானவை வடக்கு-கிழக்கில் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் 65 ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு வீடும் 21 லட்சம் ரூபா செலவில் ஆர்சிலோன் மிட்டல் நிறுவனத்தால் அமைக்கப்பட முன்மொழியப்பட்டது.

அதனை நாம் உறுதியாக எதிர்த்தோம். எமது கால நிலைக்கு பொருத்தமற்றது. மேலோட்டமான கட்டுமானம். நீண்ட காலப் பாவனைக்கு உதவாதது. அதற்கான செலவை நியாயப்படுத்த முடியாமலிருக்கின்றது. இந்தக் காரணிகளால் நாம் அதனை நிராகரித்தோம்.

எங்கள் மக்களுக்கு வீடுகள் தேவை என்பதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது. ஆனால் முன்மொழியப்பட்டதிலும் பார்க்க அரைவாசிச் செலவில் அவர்களுக்குச் சிறந்த முறையிலேயே அமைத்துக் கொடுக்கப்படலாம் என்பதையே சுட்டிக்காட்டுகின்றோம்.

சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனி நபர்களின் ஆதரவு மற்றும் முயற்சியுடனும் உள்ளூர் வங்கிகளின் அனுசரணையுடன் மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். அமைச்சரால் முன்மொழியப்பட்ட திட்டத்துக்கான செலவில், ஒரு வீட்டுக்குப் பத்து இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் வீடுகளை எமது திட்டத்தின் கீழ் அமைக்க முடியும். இதற்கு உள்ளூர்த் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதன் மூலம் அடுத்த நான்கு வருடங்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தையும் வழங்க முடியும்.

எனினும் எம்மில் பலருக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்த சுவாமிநாதன் எமது தொகுதிகளில் பொருத்து வீடுகளை அமைக்கக் கோரிக்கை விடுமாறு கேட்கிறார். இது மகிழ்ச்சிக்குரியது அல்ல. புனர்வாழ்வுக்கான நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பொருத்து வீடுகளை நிராகரிப்பதாகவும் அதற்குப் பதிலாகச் சிவில் சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட திட்டத்தை முன் நகர்த்துவதாகவும் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது.

செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பொருத்து வீட்டுத் திட்டத்தை நிராகரிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

கடந்த 11ஆம் திகதி கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு இது தொடர்பில் தங்கள் கவனத்தை ஈர்ப்பதென முடிவெடுத்தது. நாங்கள் அனைவரும் பொருத்து வீட்டுத்திட்டதுக்கு முற்றிலும் எதிராக உள்ளோம் என்பதை நீங்கள் அறிய வேண்டும். அதேசமயத்தில் மக்கள் தங்களுடைய வாழ்வின் கலாசாரத்தை தொடர்ந்து பேணக் கூடிய வகையிலான பாரம்பரியமான கல் வீடுகள் வழங்கப்படவேண்டும்.

இது தொடர்பில் தங்களுடைய துரிதமான நியாயமான நடவடிக்கைகளை கோரி நிற்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சீ.யோகேஸ்வரன், ந.சிவசக்தி ஆனந்தன், சி.சிறிதரன், ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், சார்ல்ஸ் நிர்மலநாதன், துரைரட்ணசிங்கம், சாந்தி சிறிஸ்கந்தராசா, சி.சிவமோகன், ஞா.சிறிநேசன், கோடீஸ்வரன், வியாளேந்திரன் ஆகியோர் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (த-5-8)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 07 . 1936 | 16 . 11 . 2016 |

**திருமதி மகேஸ்வரி (குஞ்சு) குலசிங்கம்**

வரிசைப்புலம், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா Perth ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி குலசிங்கம் 16.11.2016 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தயாளன் (ஐக்கிய அமெரிக்கா), தயாநந்தன், தயாதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், பூரணம், சின்னம்மா, தங்கம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு இளைய சகோதரியும் அருள்நங்கை(ஐக்கிய அமெரிக்கா), சித்திரா,விஜயலதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அக்ஷயன், நிஷேவிதா,கயூரி, கேதகி, வேணுகேஸ், லினிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(21.11.2016) திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.50, ஆத்திசூடி வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 8681** (J/6227)02.18.20

## புதிய

நேற்றுச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே மேற் கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்புச் சபை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி கூடவுள்ளது. வழிநடத்தல் குழுவின் அறிக்கை தயாராக இருந்தால் அதனை அரசமைப்புச் சபையில் சமர்ப்பிப்பதற்காகவே டிசெம்பர் மாதம் கூடவுள்ளோம். இந்த நாடாளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமையானது, அரசமைப்பைத் தயாரிக்கும் செயற்பாடுகளுக்குப் பலமாக அமைந்துள்ளது. சகலரின் கருத்துக்களைச் செவிமடுப்பதற்கே சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. விவாதம் ஜனவரி 9,10, 11ஆம் திகதிகளில் ஆரம் பிக்கின்றோம். இந்த மூன்று தினங்களில் விவாதத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ற தேவை இல்லை. மேலும் காலம் எடுக்க முடியும். இது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கலாம்.

உபகுழுக்களின் அறிக்கைகள் சகலவற்றையும் மக்களைச் சென்றடையும் வகையில் வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட பொது இடங்களுக்குச் செல்லும் வகையில் விநியோகிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். இணையத்தளத்தில் தரவேற்றினால் சகலரும் இதனைப் பார்வையிட முடியும் - என்றார். (த)



# யாழ். பல்கலையின் வர்ண விருதுகள்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். பல்கலைக் கழகத்தின் 2015ஆம் ஆண்டுக்கான சகலதுறை வீராங்கனையாக ரி.அபிதா, சகலதுறை வீரராக எஸ்.பிரதாப் ஆகியோர் தெரிவாகினர்.


யாழ். பல்கலையின் 2015 ஆம் ஆண்டுக்கான வர்ணவிருது வழங்கும் நிகழ்வு, யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட கூபர் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. பெரும்பான்மையான விளையாட்டுக்களில் கலந்துகொண்டு சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியமைக்காக கலைப் பீடத்தைச்சேர்ந்த ரி.அபிதா சகலதுறை வீராங்கனையாகத் தெரிவானார். சகலதுறை வீரராக வணிக பீடத்தைச் சேர்ந்த எஸ்.பிரதாப் தெரிவானார். இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம் பிடித்துள்ள யாழ். மாவட்ட வீரர் ஞானரூபனும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். அவர்களைத்தவிர ஏனைய 300 மாணவர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினராக முன்னாள் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவி தர்சினி சிவலிங்கமும் கலந்து கொண்டனர். (ம-23)


அபிதா


பிரதாப்


ஞானரூபன்



## புஜாராவின் கணிப்பு பொய்த்துப் போனது

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸால் வெற்றிபெறும் என்று அந்த அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான புஜாரா கணித்திருந்த நிலையில் அவரது கணிப்பு பொய்த்தது.

ஆட்டம் விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது. இந்த ஆடுகளம் இரண்டாம் நாளிலிருந்து சுழலுக்கு ஒத்துழைக்கக் கூடியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதல் நாளிலேயே முந்நூறுக்கும் அதிகமான ஓட்டங்களைப் பெற்று பலமாக இருந்தது. புஜாரா சதம் கடந்தார். முதல்நாள் ஆட்டம் நிறைவடைந்தவுடன் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இந்திய அணி சிறப்பான தொடக்கம் கண்டுள்ளது. விசாகப்பட்டினம் போன்ற ஆடுகளத்தில் முதல் நாளில் முந்நூறுக்கும் அதிகமான ஓட்டங்களைச் சேர்த்தால் அது மிகப்பெரிய அடைவு என்றே சொல்லவேண்டும். இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடும் அவசியம் ஏற்படாது என தெரிவித்திருந்தார். ஆனால் இங்கிலாந்து அணியின் மத்திய வரிசை வீரர்களான பரிஸ்ரௌவ், ஸ்ரோக்ஸ் இருவரதும் நிதான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது. ஆனால் 200 ஓட்டங்கள் பின்தங்கியது. (ம)

## கண்டி, விமானப்படை அணிகளுக்கு வெற்றி

கொழும்பு, நவ. 20

டயலொக் ரக்பித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கண்டி ரக்பி அணி, விமானப்படை ரக்பி அணி ஆகியன வெற்றிபெற்றன.

கொழும்பு குதிரைச் சவாரித் திடலில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இராணுவ ரக்பி அணியை எதிர்த்து கண்டி ரக்பி அணி மோதியது. இதில் கண்டி ரக்பி அணி 34:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

பொலிஸ்பார்க் மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிஸ் ரக்பி அணியை எதிர்த்து விமானப்படை ரக்பி அணி மோதியது. இதில் விமானப்படை ரக்பி அணி 22:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஹொக்கித் தொடர்

கொழும்பு, நவ. 20

மேர்க்கன்டைல் ஹொக்கி சங்கத்தினால் நடத்தப்படும் 40ஆவது ஹொக்கித் தொடரின் ஆட்டங்கள் சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன. குறித்த தொடரில் 20 அணிகள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)

## கௌரவிக்கப்படுகிறார் ஆசிகா

பொதுநலவாய நாடுகளுக்கு இடையில் நடத்தப்பட்ட பளுதூக்கல் தொடரில் வெண்கலப் பதக்கம் வென்ற வி.ஆசிகா இன்று கௌரவிக்கப்படவுள்ளார்.

யாழ். பளுதூக்கல் சங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் கௌரவிப்பு நிகழ்வு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆசிகா மட்டுமல்லாது தேசிய மட்ட பளுதூக்கல் தொடரில் பதக்கம் வென்ற வீர, வீராங்கனைகளும் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ். பளுதூக்கல் சங்கத்தின் தலைவர் மா.இளம்பிறையன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## அரையிறுதியில் சிந்து

சீன பூப்பந்தாட்டத் தொடரில அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றார் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையாக உருவெடுத்துவரும் பி.வி. சிந்து.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில், சிந்துவும் சீனாவின் ஹி பிங்ஜியாவும் மோதினர். 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய அவர் அந்த செற்றையும் 21:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## தீவுகள் சிம்பாப்வே ஆட்டம் சமநிலையில்

முத்தரப்புத் தொடரில் சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் மோதிய நேற்றைய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 257 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக எர்வின் 92 ஓட்டங்களையும், ரசா 77 ஓட்டங்களையும், சிப்கபா 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரீத்வைட் 4 இலக்குகளையும், கபிரியேல், கோல்டர் இருவரும் தலா 2 இலக்குகளையும், நேர்ஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் படுமோசமான தடுமாற்றம் என்று அல்லாமல் இலக்கை எட்டும்படியான நம்பிக்கையில் துடுப்பெடுத்தாடியது. அணி 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது சாள்ஸ் ஆட்டமிழந்தார். கோப் சதம் கடந்தார். ஆனால் மத்திய வரிசையில் பந்துகள் அனேகமாக வீணடிக்கப்பட்டன. அதுவே தீவுகளுக்கு தலையிடியாய் வந்தமைந்தது. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய சிம்பாப்வேயின் இன்னிங்ஸிற்கேற்றாற் போல் தீவுகளும் நகர்ந்தது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் நான்கு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலை. சிறப்பான களத்தடுப்பு வியூகத்தை கட்டமைத்து பதற்றத்தை ஏற்படுத்தினார் கிரீமர். இறுதிப் பந்தில் ஓர் ஓட்டம் தேவை என்ற நிலையில் ரண்அவுட்டுடன் ஆட்டத்தை சமநிலையில் முடித்தது சிம்பாப்வே. (ம)



## பிளாசிஸுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார் அம்லா

பந்தின் தன்மையை திட்டமிட்டு மாற்றினார் என பிளாசிஸுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த முறைப்பாட்டை நகைச்சுவை என்று விளித்துள்ளார் அந்த அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான அம்லா.

மெல்பேர்ணில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அம்லா இவ்வாறு தெரிவித்தார். பிளாசிஸுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள முறைப்பாடு அர்த்தமற்றது. இந்தச் செய்தியாளர் சந்திப்பில் ஒட்டுமொத்த அணியினரும் வந்துள்ளோம். அவருக்கு ஆதரவாக அனைவரும் உள்ளோம் என்பதைக் காட்டுவதற்காகவே நாம் அனைவரும் இங்கே வந்துள்ளோம். என அம்லா மேலும் தெரிவித்தார் . (ம)


## மிலோஸ் அசத்தல்

இங்கிலாந்து ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெறுவதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தினார் கனடா வீரர் மிலோஸ் ராவ்னிக்.
உலக சம்பியன்சிப் என அழைக்கப்படும் குறித்த தொடரின் லீக் ஆட்டமொன்றில் ராவ்னிக்கை எதிர்த்து ஆஸ்திரிய வீரர் டொமினிக் திம் பலப்பரீட்சை நடத்தினார். முதலாவது செற்றில் இருவரும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் அந்த செற் முடிவற்று இழுபறியாக நீடித்துச் சென்றது. ஒருவாறாக 7:6 என்ற அடிப்படையில் தட்டுத் தடுமாறி கைப்பற்றினார் மிலோஸ் ராவ்னிக். டொமினிக் முதல் பாதியில் காட்டிய போராட்டத் தன்மையை இரண்டாம் பாதியில் காட்டத் தவறினார். ராவ்னிக் பெரும் ஆதிக்கம் செலுத்தி 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து முடிவில் 2:0 என்ற நேர் செற் வெற்றியுடன் அரையிறுதிக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தினார். (ம)



## மத்தியின் தொடர்கள்

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு இடையில் தேசிய ரீதியில் மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், கரம், சதுரங்கம் ஆகிய தொடர்கள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
யாழ். மத்தியின் உள்ளரங்கிலேயே தொடர்கள் அனைத்தும் நடைபெறவுள்ளன. மேசைப் பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதியும், பூப்பந்தாட்டத் தொடர் டிசெம்பர் மாதம் 3ஆம் 4ஆம் திகதிகளிலும், கரம் தொடர் டிசெம்பர் மாதம் 10ஆம் 11ஆம் திகதிகளிலும், சதுரங்கத் தொடர் டிசெம்பர் மாதம் 17ஆம் 18ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன. (ம-23)



# நியூசிக்கு வாய்ப்பு அதிகம் பாக். மீண்டும் தடுமாற்றம்

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின்படி நியூசிலாந்து அணி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் கிறைஸ்ட்சேர்ச்சில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. 133 ஓட்டங்களில் பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டது. அதிகபட்சமாக மிஸ்பா 31 ஒட்டங்களையும், அஸ்லாம் 19 ஓட்டங்களையும், சபிக் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரான்ட்ஹோம் 6 இலக்குகளையும், சவுத்தி, போல்ட் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 104-3 என்றிருந்தது. ராவல் 55 ஓட்டங்களுடனும் நிக்கொல்ஸ் 29 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காகக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார் நிக்கொல்ஸ். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் நிக்கொல்ஸைப் பெற்றுவிட அனுமதிக்கவில்லை ஆமிர். பந்துவீச்சில் 6 இலக்குகளை அள்ளிய கிரான்ட்ஹோம் துடுப்பாட்டத்திலும் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்தார். அவர் 29 ஓட்டங்களைக் குவித்த நிலையில் சொகைல் கானால் வீழ்த்தப்பட்டார். அஸ்ரில், வற்லிங் இருவரையும் வீழ்த்தினார் ரகற் அலி. சவுத்தி, வாக்நெர் முறையே 22, 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் 200 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து.
பந்துவீச்சில் ரகற் அலி நான்கு இலக்குகளையும், மொகமட் ஆமிர், சொகைல் கான் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் கைப்பற்றினர்.
67 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையிலிருந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் மீண்டும் பலமான தடுமாற்றம் கண்டது. அஸ்லாம் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அசார் அலி, அசாம் இருவரும் சிறிதுநேரம் தாக்குப் பிடித்தனர். ஆனால் நீடிக்க இயலவில்லை. அசார் அலியை 31 ஓட்டங்களுடன் போல்ட் செய்தார் போல்ட். மத்திய வரிசையின் நம்பிக்கைகளான யுனிஸ் கான் 1 ஓட்டத்துடனும் மிஸ்பா 13 ஓட்டங்களுடனும் ஏமாற்றினர். அசாமை வீழ்த்தினார் வாக்நெர். சர்பிராஸ் அகமட், ஆமிர் இருவரும் பவிலியனுக்குத் திருப்பப்பட நாள் முடிவில் 129-7 என்ற நிலையில் பாகிஸ்தான் உள்ளது. (ம)


## இலங்கை – சிம்பாப்வே நாளை எதிர்த்து மோதல்

முத்தரப்புத் தொடரில் இலங்கை, சிம்பாப்வே அணிகள் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
சிம்பாப்வே, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நாளை நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை – சிம்பாப்வே அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இலங்கை அணி தான் களமிறங்கிய இரு ஆட்டங்களில் சிம்பாப்வேக்கு எதிராக வெற்றியைப் பெற்றுள்ள அதேநேரம், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தோல்வியடைந்துள்ளது. இதனால் அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணியைத் தீர்மானிக்கும் வகையில் இந்த ஆட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது எனக் கருதப்படுகிறது. சிம்பாப்வே அணி அரையிறுதிக்குத் தகுதிபெற வேண்டுமாயின் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கிரீமர் தெரிவித்துள்ளமையால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## இங்கிலாந்துத் தொடர்; அரையிறுதியில் முர்ரே

இங்கிலாந்து ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான அன்டி முர்ரே.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கு மட்டுமாக வருட இறுதியில் நடத்தப்படும் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லீக் ஆட்டமொன்றில் இங்கிலாந்தின் முர்ரேயை எதிர்த்து சுவிற்சர்லாந்தின் வாவ்ரிங்கா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:4 என்ற அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. அடுத்த செற்றும் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முர்ரேயின் வசமானது. முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீரரும் முர்ரேயின் போட்டியாளர் என்று கருதப்படுபவருமான ஜோகோவிக் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## மும்பை இந்தியன்ஸின் பயிற்சியாளராக மகேல

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராக மகேல ஜெயவர்தன நியமிக்கப்பட்டார்.
அடுத்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அணியின் நிர்வாகமும் தமது வீரர்கள், பயிற்சியாளர்கள் தொடர்பில்



தற்போதிருந்தே பரிசீலனை செய்து வருகின்றன. மும்பை இந்தியன்ஸ் அணி, மகேலவைத் தலைமைப் பயிற்சி யாளராக நியமித்தது. ரிக்கி பொண்டிங்கின் இடத்தையே மகேல பிரதியீடு செய்துள்ளார்.
மும்பையின் தலைவராக ரோகித் சர்மாவும், ஆலோசகராக சச்சினும் உள்ளனர். இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளரான மலிங்கவும் அந்த அணியில் உள்ளார். (ம)

# அஸ்வின் சகலதுறை அசத்தல் இந்தியா சிறப்பான ஆதிக்கம்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின்படி இந்திய அணி வலுவான ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் உள்ளது.

விசாகப்பட்டினத்தில் ஆட்டம் நடைபெறுகிறது. இந்த ஆடுகளம் இரண்டாம் நாளிலிருந்து சுழலுக்கு ஒத்துழைக்கும். இதனால் நாணயச்சுழற்சியில் வென்ற கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். 455 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது இந்தியாவின் இன்னிங்ஸ். அதிகபட்சமாக கோக்லி 167 ஓட்டங்களையும், புஜரா 119 ஓட்டங்களையும், அஸ்வின் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்டர்சன், மொயின் அலி இருவரும் தலா 3 இலக்குகளையும், ரசிட் 2 இலக்குகளையும், புரோட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 103-5 என்றிருந்தது. ஸ்ரோக்ஸ் 12 ஓட்டங்களுடனும், பரிஸ்ரௌவ் 12 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இருவரும் பதற்றமில்லாத ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆளுக்கொரு அரைச் சதமும் கடந்தனர். 53 ஓட்டங்களுடன் உமேஸ் யாதேவிடம் போல்ட் ஆனார் பரிஸ்ரௌவ். குறைந்த பட்சம் இலக்கு ஐந்து மீற்றருக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டிருக்கும். ஏனைய வீரர்களுக்கும் உதறலை ஏற்படுத் தவல்ல ஆட்டமிழப்பு அது. 70 ஓட்டங்களுடன் ஸ்ரோக்ஸை வீழ்த்தினார் அஸ்வின். ரசிட் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் புரோட், அன்டர்சன் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 255 ஓட்டங்களில் சுருண்டது இங்கிலாந்து.

பந்துவீச்சில் அஸ்வின் 5 இலக்குகளையும், சமி, யாதேவ், ஜடேயா, ஜெயன்ட் யாதேவ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

200 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 16 ஓட்டங்களிலேயே ஆரம்ப வீரரான விஜயை இழந்தது. ராகுல், புஜாரா இருவரும் முறையே 10, 01 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 40 ஓட்டங்களுக்கு முதல் மூன்று வீரர்களையும் இழந்த போதிலும் கோக்லி, ரகானே இணை இன்னிங்ஸை திறம்படக் கட்டமைத்தது. அரைச்சதம் கடந்தார் கோக்லி. நாள் முடிவில் இந்தியா 98-3 என்றுள்ளது. கோக்லி 56 ஓட்டங்களுடனும், ரகானே 22 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

வீடு வாடகைக்கு உண்டு
யாழ் நகர் கன்னாதிட்டியில் (சயன்ஸ் கோல் அருகில்) 4 அறைகள், சமையலறை, கோல், இணைந்த குளியலறை என்பவற்றுடன் மேல்மாடி வீடு மட்டும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 5642197 078 2722886

தேவை
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள (Travels & Courier) ரவல்ஸ் மற்றும் கூரியர் சேவை காரியாலயத்திற்கு அனுபவமுள்ளவர் (ஆண்) தேவைப்படுகிறார்.
075 0402086

Personal Class-கணினி
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2016, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker
TP:0779672038 ஆசிரியர்:KRC

அதிரடி விலை குறைப்பு!!
என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?
இன்று முதல்



அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் பிறிண்டிங் வேலைகளுக்குமான விலைகள் குறைக்கப்பட்டுள்ளன!
எமது அனைத்து வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களானது மொத்த விற்பனை விலையில் நேரடியாக இறக்குமதி செய்வதன் மூலம் இவ் விலைக்குறைப்பானது சாத்தியமாயிற்று என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.
3 வருட உத்தரவாதத்துடன்
ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை High Quality 190/- சதுர அடி
ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை High Quality 250/- சதுர அடி
ஒருபக்க ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை (Light Board) High Quality 490/- சதுர அடி
டிஜிற்றல் பனர் பிறிண்டிங் சதுர அடி 38/- இலிருந்து
4 Colour ID Card 100/-
Mug Print 350/- 450/- Mug 01க்கு
உங்கள் வேலை திருப்திகரமானதாக அமைய நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம்
ANDRA DIGITAL IMAGE
வடக்கில் அச்சுப் பதிப்பின் தனித்துவமான நிறுவனம்
021 221 7279 / 021 222 8929 / 077 7481696

மாத்தளை, வத்தளை, கந்தானை, ஜா-எல நீர் கொழும்பு, எஹெலியகொட, கொழும்பு கண்டி, அனுராதபுரம், தம்புள்ள.
தொழிற்சாலைகளுக்காக வயது 17-35 ஆண்/பெண்
- வேலை நேரத்தின் போது உணவு இலவசம்.
- பாதுகாப்பான தங்குமிடம்.
- சிங்களம் பேசுதல் அவசியம் இல்லை.
- தமிழ் காரியாலய உத்தியோகம்.
- நண்பர்கள், குழுக்கள், திருமணமானவர்கள் வரலாம்.
- நாள், கிழமை, மாத சம்பளம் பெறலாம்.
38000/-
வவுனியா 077 8177017 யாழ்ப்பாணம் 077 5052239

Job Vacancy 17-50 ஆண்/பெண்
வவுனியா/ யாழ்ப்பாணம் கொழும்பு
077 88 80 737 - 077 85 27 394

யாழ்ப்பாணம்/சாவகச்சேரி/ வவுனியா
Jaffna/Chawa./Vavuniya
077 6000 507 - 077 85 27 394

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள்.
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து......
செல்வோர்: யாழ், வன்னி, பிறமாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படிக்கிறார்கள்.
ஆரம்பம் 10.12.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதக்கடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

மணமக்கள் விபரத்துடன்
அருந்ததி
திருமண இதழ் 08
விற்பனையில்
50/-
அனைத்துக் கடைகளிலும் கிடைக்கும்
076 822 85 19
www.arunthathee.com

முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிளுக்கு குறைந்த தவணை கட்டணம் எம்மிடமே
நாள் ஒன்றிற்கு இலட்ச ரூபாவிற்கு
ரூ. 81/- முதல்
ஒரே நாளில் லீசிங் வசதி



011 5 411 411
SDB விரைவில் லீசிங்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது*
பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகளுக்கு 6 வருடம் வரையிலான லீசிங் வசதி
பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிளுக்கு 5 வருடம் வரையிலான லீசிங் வசதி
உத்தரவாதிகளின்றி லீசிங் வசதி பெற்றுக்கொள்ளலாம்
வாகன மதிப்பீடு (Valuation) உங்கள் இடத்திற்கே வந்து அங்ஙனமே செய்து தரப்படும்
SDB வங்கி
SDB வங்கி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.